# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

# ONLINE PROGRAMMES

## பி.ஏ.,(தமிழ்)

## முதலாமாண்டு - முதற்பருவம்

200113

# இக்கால இலக்கியம்

Author:

**Dr. S.GURUGNANAMBIGA,** *Assistant Professor of Tamil,*
*Avinachilingam institute for homescience and higher education for women, Coimbatore - 43*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V.Thiruveni,** *Assistant Professor in Tamil & Research Supervisor, PPR- Coordinator- All Tamil Programmes- DDE Directorate of Distance Education, Alagappa University- Karaikudi-630003, Tamilnadu.India.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

## பி.ஏ.,(தமிழ்)
## முதலாமாண்டு - முதற்பருவம்

## தாள் 137 13 - இக்கால இலக்கியம்

### பிரிவு - 1 : கவிதை

| | | |
|---|---|---|
| கூறு - 1 | : | பாரதியார் குயில்பாட்டு |
| கூறு - 2 | : | பாரதிதாசன் தமிழ் குறித்த கவிதைகள் |
| கூறு - 3 | : | கண்ணதாசன் - மாங்கனி |

### பிரிவு - 2 : புதுக்கவிதை

| | | |
|---|---|---|
| கூறு - 4 | : | புதுக்கவிதைகள் - கவிஞர்கள், மீரா - ஊசிகள், மு.மேத்தா - ஊர்வலம் |
| கூறு - 5 | : | இளம்பிறை - நீ எழுத மறுக்கும் எனதழகு. ஆ.வெண்ணிலா - யுத்தம்பற்றி. கவிஞர் சீராளன் ஜெயந்தன் - இடைவேளை. கவிஞர்பிருந்தாசாரதி - ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடம் |
| கூறு - 6 | : | தேனம்மைலட்சுமணன் - சூலும் சூலமும் அன்னப்பட்சி கவிதை - தங்கம்மூர்த்தி கவிதைகள் - என் பண்டிகையின்நாட்குறிப்பிலிருந்து. |
| கூறு - 7 | : | தமிழ் ஹைக்கூ ஆயிரம் - இரா. மோகன் |

### பிரிவு - 3 : உரைநடை, நாடகம், சிறுகதை

| | | |
|---|---|---|
| கூறு - 8 | : | கம்பர் - வ.சுப மாணிக்கனார் |
| கூறு - 9 | : | இன்னொரு காந்திக்காக - அய்க்கண். |
| கூறு - 10 | : | சிறுகதைகள் |
| கூறு - 11 | : | மாறுதடம் - பாரதிபாலன் |
| கூறு - 12 | : | திருஷ்டிப் பரிகாரம் - அகிலன் கண்ணன் |
| கூறு - 13 | : | காந்தியோடு பேசுவேன் - எஸ். இராமகிருஷ்ணன் |
| கூறு - 14 | : | புதினம் - அளம் : சு. தமிழ்ச்செல்வி |

# பிரிவு – 1 : கவிதை

## கூறு – 1 : பாரதியார் குயில்பாட்டு

1.1. முன்னுரை

1.2. குறிக்கோள்கள்

1.3. மகாகவி பாரதியார்

1.4. குயில்பாட்டு

1.4.1. குயில்பாட்டின் பாடுபொருள்

1.4.1.1. குயிலின் தனிமைத்துயர்

1.4.1.2. சோலையில் குரங்கொடு கொண்ட குயிலின் காதல்

1.4.1.3. காளையிடம் குயிலின் காதல்

1.4.1.4. கவிஞரின் சினம்

1.4.1.5. குயிலின் முற்பிறப்புக்கதை

1.4.1.6. சின்னக்குயிலின் கதை

1.4.1.6.1. மாமன் மகன் மாடன்

1.4.1.6.2. நெட்டைக்குரங்கன்

1.4.1.6.3. சோலையில் சேர இளவரசன்

1.4.1.7. இப்பிறப்பில் குயிலி

1.4.1.8. கனவு கலைந்தது

1.4.1.9. கவிஞரின் கவியாற்றல்

1.4.1.10. கவிஞரின் காதல் கற்பனை

1.4.1.11. கற்பனைப்பாத்திரங்கள்

1.4.1.12. காதல் வெற்றிக்குக் கற்பனை

1.4.1.13. குயில்பாட்டில் வேதாந்தக் கருத்துகள்

1.4.1.14. வேதாந்தப்பாடல்

1.4.1.15. குயில்பாட்டில் யோகம்

1.4.1.16. இருபிறப்புக் கதைகளில் பாத்திரங்கள்

1.5. தொகுத்துக் காண்போம்

1.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1.7. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1.8. மேலும் பயில்வதற்கான நூல்

## கூறு 1 : குயில்பாட்டு

### பாரதியார்

## 1.1. முன்னுரை

மகாகவி பாரதியின் படைப்புகளுள் கவிதைச் சிறப்பாலும் பொருளிலும் சிறந்து விளங்குவது குயில்பாட்டு. இதன் கண் வெளிப்படையாகச் சித்தரிக்கப்பட்டிருப்பது காதலுணர்வு என்ற போதிலும் உட்பொருளாக வேதாந்தம் ஒளிர்கின்றது. குயிலின் குரல், பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்து இன்றைய நாள் இலக்கியங்கள் வரை அனைத்திலும் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. பாரதியின் குயில்பாட்டில் காணும் உட்பொருளுக்கு அடிப்படை, அவர் வேத உபநிடதக் கருத்துக்களில் கொண்டிருந்த பற்றாகும். பாரதியின் குயில்பாட்டு கதைத் தொடருக்காகத் தோன்றிய எளிய கவிதையன்று; கருத்து, உட்பொருள், தத்துவம், வேதாந்தம் ஆகிய செய்திகளைக் கூற ஓர் ஊடகமாக அமைந்த படைப்பு.

## 1.2. குறிக்கோள்கள்

1. பாரதியின் குயில்பாட்டு வழி உலக அளவிலே காதலைப்பற்றியும், காதல் வாழ்க்கையின் இடையே வரக்கூடிய இன்னல்கள், இடையூறுகள்,

சோதனைகள் இவற்றைப்பற்றியும், உண்மைக் காதலின் தன்மையைப் பற்றியும் அறிந்து கொள்வீர்கள்.

2. அரசியல் கருத்துக்கள் மட்டுமின்றி, ஆழமான ஆன்மீகக் கருத்துக்களையும் படிக்கும்போதே பாரதியாரின் காலம் கடந்து நிற்கும் என்பதை புரிந்துகொள்வீர்கள்.

## 1.3. மகாகவி பாரதியார்

தமிழ்நாட்டுப் பெருங்கவிஞர்களுள் ஒருவர் சி.சுப்பிரமணியபாரதி. இவர் திருநெல்வேலி மாவட்டம், எட்டயபுரத்தில் 11.12.1882ம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னசாமி ஐயர், தாயார் பெயர் இலக்குமி அம்மையார். எட்டயபுரம் ஒரு பெரிய ஜமீன். அங்கு பல புலவர்கள் வாழ்ந்துவந்தார்கள். தமிழ்ப்புலவர்களிடையே பாரதியின் இளமைப்பருவம் வளர்ந்ததால், 1893ம் ஆண்டில், அவரது 11வது வயதில் 'பாரதி' என்ற பட்டம் பெற்றார்.

ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.பாரதி தனது தத்துவ தரிசனத்தை வெளியிட வசனகவிதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

தேசவிடுதலை, சமூகவிடுதலையைத் தமது களமாகக் கொண்டு பாடியவன். சுதேசமித்திரன், இந்தியா போன்ற இதழ்களில் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டார். பல்வேறு பாடல்களைப் பாடியவர் என்றாலும் பாஞ்சாலிசபதம், கண்ணன்பாட்டு, குயில்பாட்டு மூன்றும் முப்பெரும் பரிமாணம் கொண்டவை.

வேடிக்கைக் கதைகள், நவதந்திரக் கதைகள் போன்றவற்றையும், சின்ன சங்கரன் கதை, சந்திரிகையின் கதை, தத்துவச்சித்திரங்கள் (ஞானரதம்) நாடகங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் ஆகிய பல்வேறு இலக்கிய வகைகளை பனத்திருக்கிறார்.

1908-ம் ஆண்டில் பாரதியாரின் முதல் கவிதைநூல் 'ஸ்வதேச கீதங்கள்' என்ற தலைப்பில் வெளியானது. அடுத்த ஆண்டில் ஜன்மபூமி என்ற தலைப்பில்

இக்கால இலக்கியம் குறிப்புகள்

இரண்டாவது கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. 1912-ம் ஆண்டில் பகவத்கீதை மொழிபெயர்ப்பை வெளியிட்டார். 12.09.1921ம் ஆண்டு மறைந்தார். பாரதிக்குப் பிறகு பாரதி, மகாகவியாக உலக கவியாக நிமிர்ந்து நிற்கிறார். புதிதுபுதிதாக வரும் இலக்கிய ஆக்கங்களில் தலைமுறை, தலைமுறையாக பாரதி ஒளி பாய்ந்து கொண்டே இருக்கும்.

## 1.4. குயில்பாட்டு

பாரதியாரின் 'குயில்பாட்டு' கதைத் தொட்டுக்காகத் தோன்றிய எளிய கவிதையன்று. கருத்து, உட்பொருள், தத்துவம், வேதாந்தம் ஆகிய செய்திகளைக் கூற ஓர் ஊடகமாக அமைந்த படைப்பு. குயில்பாட்டு ஒரு கற்பனைப் படைப்பு, இதனை,

**"மாலை அழகின் மயக்கத்தால் உள்ளத்தே**
**தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி"(746 – 47)**

என்ற பாடலடிகள் தெளிவுறுத்துகிறது.

### 1.4.1. குயில்பாட்டின் பாடுபொருள்

காலைநேர இளஞ்சூரியன் கடலிடையே தன் கதிர்களை வீசி, அலைப்பரப்பை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறது. கடலின் அலைகள் வேதப் பொருளைப் பாடிக் கொண்டு கரையை வந்து தழுவுகின்றன. இத்தகைய காட்சிகள் நிறைந்த புதுவை நகரத்தின் மேற்கே, புட்கள் நிறைந்த ஒரு மாஞ்சோலை இருந்தது. அந்தச் சோலைக்குச் சென்ற பாரதியார், இளமை மிக்க குயில் இன்னிசைப் பாடலைப் பாடுகிறது. பாடலின் விந்தைகளைக் கண்டு, அந்தப் பாட்டில் சிந்தனையைப் பறிகொடுத்தார். இது பாரதியின் கனவில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். இதனைப் பாரதியார்,

**"பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்**
**நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேயான்"**

என்று குறிப்பிடுகிறார். அவர்தம் கனவு தொடரக் கவிதைத் தொடர்கிறது. குயில் பாடும் பாட்டின் இசையின் இனிமையிலே மயக்கம் கொண்டு குயிலைக் காதலிக்கத் தொடங்குகிறார். தன்னுடைய மனித உருவம் நீங்கிக் குயிலுருவம்

*Self -Instructional Material*

பெறமுடியாதா? அதனைக் காதலித்து மகிழ்வோடு வாடும் வாய்ப்புக் கிடைக்காதா? என்று எண்ணி ஏங்குகிறார். அப்போது குயில் துன்பங் கலந்த பாடலைப் பாடியது.



குறிப்புகள்

**1.4.1.1. குயிலின் தனிமைத்துயர்**

சோலையில் இருந்த பறவைகள் அனைத்தும் பறந்துவிட, குயில் மட்டும் தனித்து வாடியிருக்கிறது. இதனைக் கண்ட கவிஞர், காரணத்தை வினவுகிறார். "நான் மனிதர்களின் மொழி எல்லாம் அறியும் பேறு பெற்றேன். பாட்டில் நெஞ்சினைப் பறிகொடுத்தேன். இப்போது காதலை வேண்டிக் கரைகின்றேன் என்றது அந்தப் பெண்குயில்.

**"காதலை வேண்டிக் கரைகின்றேன் இல்லைஎனில்**

**காதலை வேண்டித் தவிக்கின்றேன்"**

என்று குயில் பதில் கூறியது. "சிறந்த அறிவும், பறவைகள் எல்லாம் விரும்பும் பாடும் திறமுடைய உனக்கு ஒரு காதலனுமா கிடைக்கவில்லை" என்று கவிஞர் கேட்டார். அதற்கு குயில் தன் துன்ப வாழ்வை வாழும் பொருட்டு அது துடிப்பதையும் எடுத்துக் கூறியது. அத்துடன் அவர்மீது தான் கொண்டிருந்த காதலையும் குறிப்பாகக் கூறியது.

கவிஞருக்குக் குயிலின்மீது அடங்காக்காதல் பிறந்துவிட்டது. அந்நேரத்தில் மற்றப்பறவைகள் எல்லாம் சோலைக்குவந்து விட்டன. காதலுக்குரிய தனிமை போய்விட்டது. அதனால் குயில் கவிஞரை மறுநாள் அவ்விடத்திற்கு மறக்காமல் வருமாறுகூறி மறைந்து விடுகிறது.

**"அன்போடு நீரிங்கே அடுத்தநாள் காநாளில்**

**வந்தருளல் வேண்டும், மறவாதீர், மேற்குலத்தீர்;**

**சிந்தை பறிகொண்டு செல்கின்றீர்! வாரீரேல்,**

**ஆவி தரியேன், அறிந்திருவீர், நான்காம் நாள்**

**பாவியிருந்த நான் நான்குநாள் பத்துயுகமாக் கழிப்பேன்;**

**சென்று வருவீர்"**

என்று மிகத் துயரத்துடன் கூறி குயில் விடை கொடுத்து அனுப்பியது.



குயில் கூறி அனுப்பிய பிறகு வீடு திரும்பிய கவிஞருக்கு அதனைப் பிரிந்திருப்பது இயலாமல் ஆனது. உறங்கவில்லை. காதலியைப் பிரிந்த துயர் வருந்த மறுநாளே சோலைக்குச் செல்கின்றார்.

### 1.4.1.2. சோலையில் குரங்கொடு கொண்ட குயிலின் காதல்

காதலியைப் பிரிந்த ஒருநாள் இரவுத் துயரமாக கழிந்தது. காதல் தனிமைத் துயர் விரைந்து செலுத்த, கவிஞர் குயிலைக் காணச் சென்றார். சோலையில் குயில் இருக்கும் இடம் தேடி அலைந்து வரும் போது; குயில் ஒரு ஆண்குரங்கொடு காதல் மொழி பேசிக் கொண்டு இருந்தது.

“காதல் காதல் காதல்” என்று முன்பு இசைந்த அதே பாட்டைப் பாடிக் குரங்கின் அழகைப் பாராட்டிக் கொண்டிருந்தது. குரங்கின் காதலை வேண்ட, அது கேட்ட குரங்கும் மகிழ்ச்சி தாங்காமல் கூத்தாடி நின்றது.

அதனைக் கண்ட கவிஞர் மிகுந்த துயர் கொண்டார். குயிலைக் கொல்லும் பொருட்டு, வாளைவீசினார். குரங்கும், குயிலும் தப்பி மறைந்தன. பிறபறவைகளும் மறைந்துவிட்டன. சோலை எங்கும் தேடியும் அகப்படவில்லை. கவிஞருக்கு வெட்கமும், துன்பமும் ஏற்பட, அவர் வீட்டிற்கு வந்து மூர்ச்சையுற்று வீழ்ந்தார். மூர்ச்சைத் தெளிந்து கண்விழித்துப் பார்த்த போது, நான்கு புறமும் நண்பர் சூழ்ந்து நின்று கேள்விக் கணைகளால் பாரதியை துளைத்து விட்டனர். நண்பர்களை அனுப்பிவிட்டு உறக்கம் கொண்டார் பாரதியார்.

### 1.4.1.3. காளையிடம் குயிலின் காதல்

மறுநாள் காலையில் மீண்டும் சோலையை நோக்கிச் சுய உணர்வின்றி நடந்து சென்றார். அப்போது மாமரத்தின் மீதிருந்த குயில் தனது கதையினைச் சொல்ல, ஒரு கிழக்காளை மாடு அதனை ஆவலுடன் கேட்டதனைக் கண்டார். இறுதியில் குயில் ‘காதல் காதல் காதல்’ என்று அதே பாட்டில் காளையைச் சொக்க வைத்து, காளையிடம் காதலை வேண்டிநின்றது. கவிஞருக்கு சினம் பெருக, வாளை உருவிக் குயிலும் மற்றப் பறவைகளும் பறந்து மறைந்தன.

### 1.4.1.4. கவிஞரின் சினம்

இக்கால இலக்கியம்

குறிப்புகள்

குயில் அவரை வரக்கூறிய நான்காம் நாள் வந்தது. குயிலால் தான் அடைந்த துன்பத்தினை நினைத்து மனம் வெதும்பினார். வானில் தாழ்வாகக்குயில் பறக்கக் கண்டு குயிலால் தான் அடைந்த துன்பத்தினை நினைத்து உள்ளம் வருந்தினார். வீட்டின் மாடத்திலே தனிமையில் இருந்து அமைதி தேடிக் கொண்டிருந்தார்.

வானில் தாழ்வாக குயில்பறக்க அதனைக் கண்டு பின்தொடந்து சென்றார். பழைய சோலைக்கு இருவரும் வந்தனர். குயில் தன் காதல் பாட்டை மீண்டும் பாடத் தொடங்கியது. அதுகேட்ட கவிஞர் கோபம் கொண்டு

**"நீசக் குயிலே! நிலையறியாப் பொய்மையே!**
**ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும்**
**எண்ணி நீ பாடும் இழிந்த புலைப்பாட்டை**
**நண்ணி இங்குக்கேட்ட நடத்திவந்தாய் போலுமென்ன"!.**

எனக் கேட்டார்.

அது கேட்ட குயில்,"ஐயனே! நீ சினங் கொண்டால் நான் இறந்து விடுவேன், குரங்கிடம் மாட்டினிடமும் நான் காதல் கொண்டேன் என்று என்மீது குற்றம் கூறுகின்றீர்; உண்மையில் நான் குற்றம் அற்றவன்" என்று சொல்லித் தன் கதையைக் கூறத் தொடங்கியது.

### 1.4.1.5. குயிலின் முற்பிறப்புக்கதை

பொதிய மலைக்கு அருகேயுள்ள சோலையில் இருந்து குயிலிடம், அங்கு வந்த முனிவர் உரைத்த குயிலின் முற்பிறப்புக் கதையினையே குயில் கவிஞரிடம் பின்வருமாறு கூறியது.

### 1.4.1.6. சின்னக் குயிலின் கதை

#### 1.4.1.6.1. மாமன் மகன் மாடன்

முந்தைய பிறவியில் முருகன் என்ற வேடர்குலத் தலைவன் மகளாகப் பிறந்தேன். சின்னக்குயிலி என்பது என்பெயர். என் மாமன் மகன் மாடன் என்பவன் என்னை மணக்க விரும்பினான். எனக்கு அவன் மீது விருப்பமில்லாமல் இருந்தும், அவன் வருத்தமுறக் கூடாது என்பதற்காக அவனை மணந்து கொள்ளச் சம்மதித்தேன்.

**1.4.1.6.2. நெட்டைக் குரங்கன்**

ஆனால் வேடர்குலத் தலைவனான மொட்டைப்புலியன் மகன் நெட்டைக் குரங்கனுக்கு என்னை திருமணம் செய்து கொடுக்க என் தந்தை ஒப்புதல் அளித்துவிட்டார். இதனை அறிந்ததும் என் மாமன் மகனான மாடன் ஓடோடி வந்து என்னைச் சினந்து சில வார்த்தைகள் சொன்னான். நானும் அன்பால் கொண்ட கருணையினால் அவன் சினம் தணியும்படியாகப் பேசினான்.

**1.4.1.6.3. சோலையில் சேர இளவரசன்**

நாள்கள் சில சென்ற பின்னர், நான் என் தோழியருடன் காட்டில் ஒரு மாலைப்பொழுதில் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு வந்த சேர இளவரசன் என்னை நோக்கினார். நானும் அவரைப் பார்த்தேன். எங்கள் உள்ளமிரண்டும் தம்முன் கலந்தன. நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி மகிழ்ந்திருந்தோம்.

அந்த சமயத்தில் அங்குவந்த நெட்டைக் குரங்கனுக்கும் மாடனுக்கும் நாட்கள் தழுவி நின்ற காட்சி சினத்தை மூட்டிடவே இருவரும் மன்னன் முதுகில் தங்கள் வாளைப் பாய்ச்சினர். மன்னவரும் தம் வாளால் அவர்கள் இருவரையும் வெட்டி வீழ்த்தியபின் சோர்வுற்று மண் மீது விழுந்தார். அவரை வாரி எடுத்து மடியிலிட்டு அழுது புலம்பிவேன்.

**“பெண்ணே! இனிநான் பிழைத்திடேன். சிக்கணத்தே**

**ஆவி துறப்பேன். அழுதொர் பயனில்லை**

**சாவிலே துன்பமில்லை. தையலே! இன்னுமும்நாம்**

**பூமியிலே தோன்றிடுவோம், பொன்னே! நினைக்கண்டு**

**காமுறுவேன், நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்**

**இன்னும் பிறவியுண்டு, மாதரசே இன்பமுண்டு,**

**நின்னுடன் வாழ்வினினி நேரும் பிறப்பினிலே''**

என்று கூறி முடிந்தார்.

### 1.4.1.7. இப்பிறப்பில் குயிலி

இப்பிறவியிலும் நான் விந்தை மலைச் சாரலில் வாழும் வேடர்குலத் தலைவன் மகளாகத்தான் பிறந்தேன். மாடன் செய்த மந்திரத்தினால் குயிலுருவம் வாய்க்கப் பெற்றேன். மாடனும், நெட்டைக்குரங்கனும் நான் மன்னனைச் சேரக் கூடாது என்று என்னைச் சுற்றி வருகின்றன.

என்னுடைய காதலர் தொண்டை வள நாட்டில் பிறந்துள்ளாராம். என் பாட்டைக் கேட்டு என்மீது காதல் கொள்வாராம். அப்போது மாயச்செய்கை பலசெய்து என்னைச் சந்தேகித்துப் பிரியச் செய்ய முயலுமாம். அதற்கு மேலுள்ளவற்றை நீயே கண்டுகொள்வாய் என்று கூறிவிட்டு அந்த முனிவர் காற்றில் மறைந்துவிட்டார். ஐயனே! எனக்கு இரங்கி அருள்புரிவீர்! இல்லையேல் உமது கையால் கொன்றிடுவீர்! என்று கூறிக் கவிஞர் கையில் வீழ்ந்தது.

குயிலின் சோகத்தைக் கேட்ட கவிஞருக்குக் குயிலைக் கொன்றுவிட மனம் வருமோ? அதன்மீது அளவிடற்கரிய அன்பு எழவே, ஆரத்தழுவி முத்தமிட்டார். குயில் மறைந்து அழகு பொருந்திய பெண் ஒருத்தி அங்கு நின்றாள்,"இவள் அழகை எப்படித் தமிழில் சொல்வேன்!" என்று கவிஞர் திகைக்கிறார்; சொல்ல முயல்கிறார். கவிதையாகிய பழத்தைப் பிழிந்து சாறு எடுத்து இசைநாட்டியம் என்றும் கலைகளின் சாரத்தை அதனோடு சேர்த்து இனிய அமிழ்தத்தையும் கலந்து காதல் என்னும் வெயிலில் உலர்த்திக் கட்டியாக்கி அதனால் செய்யப்பட்டதே அந்தப் பெண்ணின் மேனி என்கிறார். அவளைத் தழுவி முத்தமிட்டு, முத்தமிட்டு மேகப் பெருமயக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

### 1.4.1.8. கனவு கலைந்தது

அப்போது அந்தப் பெண்ணும் பக்கத்திலிருந்த சோலையும் கலைந்திடவே நிகழ்ந்த அனைத்தும் மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றியதொரு கற்பனையின் சூழ்ச்சி என்பதனைக் கண்டு கொண்டார். இது குயில் பாட்டின் கதைப் பொருளாகும்.

### 1.4.1.9. கவிஞரின் கவியாற்றல்

சாதாரண மனிதன், அறிவின் வாயிலாகவும் நகரப் புலவனோ உணர்ச்சியின் மூலமாகவும் அனுபவிக்கிறான். இதற்குக் காரணம் சாதாரண மனிதனிடம் இல்லாத ஆற்றல் புலவனைக் கவிதை. படைக்கத் தூண்டுகிறது. இது கவிஞர்களுக்கேயுரிய தனி இயல்பாகவும் ஆற்றலாகவும் இருக்கிறது.

கவிஞனுக்கிருக்கும் அந்த ஆற்றலைத்தான் "கற்பனை ஆற்றல்" என்கிறோம். ஒரு புலவனின் கற்பனை ஆற்றலை, அவனது படைப்புகளில் காணமுடியும். உவமைகளின் மூலமாக – வருணனைகளின் வழியாக – பாத்திரப்படைப்பின் வாயிலாக இக்கற்பனைத்திறன் காட்சி வழங்கிக் கொண்டிருக்கும்.

### 1.4.1.10. கவிஞரின் காதல் கற்பனை

குயில்பாட்டு, அடிப்படையில் கவிஞர் உள்ளத்தில் தோன்றிய காதல் கவிதை ஆகும். இதில் பேசப்படும் காதல் மனிதப் பிறவிகளுக்கிடையேயானதும், மனிதனுக்கும் பறவைகளுக்கும் இடையேயானதும், பறவைகளுக்கும் விலங்குகளுக்கு இடையேயானதுமாய்க் காட்டப்படுகிறது. மனிதர்களுக்கிடையிலான காதல் இயல்பானது. பிறவகைக் காதலோ கற்பனையின் விளைவு. அப்பாடல்களில் பாத்திரப் பெயர் சுட்டப்பெறாது என்னும் இலக்கணவிதிக்கு மாறாகப் பெயர்கள் சுட்டப்பட்டு வரும் நிலையானாலும் கற்பனை சார்ந்தது.



### 1.4.1.11. கற்பனைப் பாத்திரங்கள்

குயில் அல்லது சின்னக்குயிலி, சேரன்மகன், நெட்டைக் குரங்கன், மாடன், முனிவர், வீரமுருகன், மொட்டைப்புலியன் முதலிய பாத்திரங்கள் கற்பனையாகவே படைக்கப்பட்டுள்ளன.

### 1.4.1.12. காதல் வெற்றிக்குக் கற்பனை

ஆறறிவு படைத்த மனிதன் ஐந்தறிவுடைய குயிலைக் காதலித்ததையும், குயில் மனிதனையும், மாட்டையும், குரங்கையும் காதலித்ததையும் பாட, அவருடைய கற்பனையே காரணமாகும். மனிதப் பிறவியிலான காதல் நிகழாதவாறு தடையாக மனிதர்கள் இருந்ததையும், அந்தத்தடையானது பிறவிகள் தோறும் தொடர்வது என்பதையும், உண்மையான காதல் இப்பிறவியில் வெற்றி பெறாமல் போனாலும் மறுபிறவியிலாவது கைகூடக்கூடியது என்பதனையும் காட்டும் பொருட்டாக இருபிறப்புகளின் கதைகளைக் கூறி, இரண்டாவது பிறப்பில் காதலனும் காதலியும் கூடுவதாகக் கற்பனை செய்து பாடியுள்ளார் பாரதியார்.

### 1.4.1.13. குயில்பாட்டில் வேதாந்தக் கருத்துகள்

கவிதைக் சிறப்பாலும் பொருள் ஆழத்தாலும் சிறந்து விளங்கும் குயில்பாட்டு, அடிப்படையில் ஒரு காதல் பாட்டாகும். இதனைக் குறித்து அறிஞர் பெருமக்கள் மாறுபட்ட சிந்தனையுடையவதாய் விளங்குகின்றனர். குயில்பாட்டில் வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க இடம் இல்லை என்றும், அது கவிதை பற்றிய புனைவியல் கவிதை என்றும் சி.கனகசபாபதி குறிப்பிட்டு, வேதாந்தம் என்ற சொல்லை "ஒரு கொள்கை" என்ற பொருளிலேயே பாரதியார் பயன்படுத்தியுள்ளார். என்றும், ஆன்ற தமிழ்ப் புலவர்களை விரித்து உரைக்குமாறு பாரதியார் வேண்டிக் கொண்டது. வேதாந்த சமயக் கொள்கைகள் இல்லை', குயிலின் வாழ்க்கையில் உணரக் கூடிய ஒரு உயர்ந்த உண்மையையே ஆகும் என்று கு.சிவஞானம் குறிப்பிடுகிறார். குயில்பாட்டில் வேதாந்தப் பொருள் உள்ளது என்ற கருத்தினைச் சி.சுப்பிரமணியம் ஏற்றுக் கொண்டுள்ளார்.

### 1.4.1.14. வேதாந்தப்பாடல்

பாரதியின் குயில்பாட்டு, கற்பனை வளமிக்க ஒரு காதற்பாட்டு என்பது உண்மையாக இருந்தாலும், காதலைக் கூறுவதற்ககாக மட்டுமே அவர் இதனைப் படைத்திருப்பாரா? என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. "வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறிரோ" என்று கூறி இக்கவிதையை அவர் முடித்திருத்தலின், அவ்வாறு நினைத்தற்கும் அதில் இடம் உண்டு என்று பொருள் கொள்ள வைகிறது.

### 1.4.1.15. குயில்பாட்டில் யோகம்

ஜீவாத்மா தனது சுய உருவத்தையும், தன்மையையும், உணரக் கூடிய ஏதுக்களின் உதவியால் நன்கு முயன்று செயல்பட்டால், தனக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சிறப்பான இணைப்பை உணரமுடியும். உணர்ந்த போது அந்த இணைப்பில் இன்பத்தை இடையூறாது நுகர்ந்து நீடித்துக் கொண்டே இருக்க முடியும். இப்படி இருந்த ஆன்றோர்கள் பலருண்டு. முழுமையாக உணரும் வரையில் இவ்வுலக இன்ப, துன்பங்களை ஒன்றாகப் பாவித்து, அவற்றால் பாதிக்கப்படாமல் மேல் நோக்கி செல்லுங்கால் பேரின்பத்தை அடையலாம் என்பதை சான்றோர்களின் வரலாறு காட்டும் உண்மையாகும். இத்தகைய சான்றோர்கள் செயற்பாடுகளைக் கவனத்துடன் பார்த்தால், அவர்கள் ஒரு முனைப்பாட்டுடன் நடத்திய மனவேள்வி வெளிப்படும். இதையே யோகம் எனலாம். இந்த யோகம் தான் குயில்பாட்டின் உள்ளார்ந்த கருத்து. ஜீவர்கள் பிறவிப்பயனாகிய பேரின்பப் பெருவீடென்னும் பேற்றை அடைய முயல வேண்டும் என்பதைக் கூறுவதே குயில்பாட்டு.

கற்பனைக் கதையினூடனே, ஜீவான்மப்பரமான்மக் கல்வியின் இரகசியத்தையும் அதன் பலனாகிய ஜீவான்மபரமான்பப் பேரின்பத் திருமணம் என்கிற பேற்றையும் உணர்த்துதலே இக்கதைப்பாட்டின் நோக்கம் எனலாம். மாஞ்சோலைக்குள் புகுந்த பாரதியாரின் செவிகள் குயிலின் சோகத்தைக் கேட்கவும் கண்கள் குயிலைப் பார்க்கவும் செய்தன. அவர்தம் வெளிமனத்திலே கற்பனை விரிந்தது. அதே நேரத்தில் அதுவரை அவர் பெற்ற வேதாந்தப் பயிற்சியின் தாக்கமுற்ற உள்மனம் இயங்கிக் கற்பனைக்கு உயிரூட்டவே கவிதை மலர்ந்தது. வேதாந்தம் வடிவம் பெற்றது. குயில்பாட்டின் ஆரம்பத்திலேயே இந்நூல் ஆன்மீகம் பொதிந்த கவிதைக் கனவாக உருவாகியுள்ளது என்று புலப்படுகிறது.

குயில்பாட்டு பாரதியாரின் ஆன்மீக வாழ்வில் பெற்ற ஒரு நிறைவைக் காட்டுகிறது. பாரதியார் தம்முள்ளே ஆழ்ந்த பெருமாற்றம் நிகழ்ந்த, தம்மை மறந்த நிலையில் அடையாளமாகப் படைத்ததே குயில்பாட்டு.

### 1.4.1.16. இருபிறப்புக் கதைகளில் பாத்திரங்கள்

முற்பிறப்புக் கதையில் சின்னக் குயிலுக்கும் சேரமன்னன் மகனுக்கும் இடையிலான காதல் நிறைவேறாவண்ணம் தடையாக மாடனும் குரங்கனும் இருக்கின்றனர்.

பிறப்பிறப்பாகிய மாயைக் கதையிலும் குயிலுக்கும் கவிஞருக்கும் இடையிலான காதலுக்கும் இடையூராக மாடும் குரங்கும் இருக்கின்றன.

அகநிலையில் காணும் கதையில் இடம் பெறும் பாத்திரங்கள் ஆன்மா, ஆண்டவன், கன்மம், மாயை என்பன.

## 1.5. தொகுத்துக் காண்போம்

1. பாரதியின் குயில்பாட்டுவழி உலக அளவிலே காதலைப்பற்றியும், காதல் வாழ்க்கையின் இடையே வரக்கூடிய இன்னல்கள், இடையூறுகள், சோதனைகள் இவற்றைப்பற்றியும், உண்மைக் காதலின் தன்மையைப் பற்றியும் அறிந்து கொண்டீர்கள்.
2. அரசியல் கருத்துக்கள் மட்டுமின்றி, ஆழமான ஆன்மீகக் கருத்துக்களையும் படிக்கும்போதே பாரதியாரின் காலம் கடந்து நிற்கும் என்பதை புரிந்துகொண்டீர்கள்.
3. யோக அனுமதியில் வசப்பட்ட பாரதியின் அனுபவத்தை, சுரவேறுபாடற்ற குயிலின் பாட்டு வழியே தெரிந்துகொண்டீர்கள்.

## 1.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. குயில்பாட்டு எந்த இடத்தில் எழுதப்பட்டது ?

__________________________________________________

2. பாரதியாரின் முதல் கவிதை நூல் வெளியான ஆண்டு ?

__________________________________________________

3. சோலையில் இருந்த பறவைகள் அனைத்தும் பறந்துவிட எது மட்டும் தனித்திருந்தது ?

4. காதல் காதல் காதல் என்று பாடிய பாடலின் தொடக்கம்

5. குயிலின் முற்பிறப்புக் கதை பிறந்த இடம் எது ?

## 1.7. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. குயில்பாட்டு படிப்பதினால் கிடைக்கும் பயன்கள் இரண்டினைக் கூறுக.
2. மகாகவி பாரதியார் பற்றி குறிப்பு வரைக.
3. குயில்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வேதாந்தக் கருத்துக்களை எழுதுக.
4. கவிஞரிடம் குயில் நான்காம் நாள் வரச்சொல்லி வழியனுப்பும் வார்த்தைகள் யாவை ?
5. குயிலின் முற்பிறவியில் நிகழ்ந்தது யாது ?

## 1.8. மேலும் பயில்வதற்கான நூல்

1. ம.ரா.போ. குருசாமி (பதிப்.), பாரதி பாடல்கள் ஆய்வுப்பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ஏப்ரல் 1987

## கூறு – 2 : பாரதிதாசன் தமிழ் குறித்த கவிதைகள்

### தமிழின் இனிமை, இன்பத்தமிழ், தமிழ் உணவு, தமிழ்ப்பேறு

2.1. முன்னுரை

2.2. குறிக்கோள்கள்

2.3. பாரதிதாசன்

2.4. தமிழின் இனிமை

2.4.1. தமிழும், கவிஞரும் - உடலும், உயிரும்

2.4.2. அறிவினில் உறைகிற தமிழ்

2.4.3. விந்தை செய்யும் தமிழ்

2.4.4. உயிரை உணர்வை வளர்க்கும் தமிழ்

2.5. இன்பத்தமிழ்

2.5.1. உயிருக்கு நிகராகிய தமிழ்

2.6. தமிழ் உணவு

2.6.1. வானின் புதுமை

2.6.2. உவமை தரும் நற்றமிழ்

2.7. தமிழ்ப்பேறு

2.8. தொகுத்துக் காண்போம்

2.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

2.10. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

2.11. மேலும் பயில்வதற்கான நூல்



குறிப்புகள்

## கூறு 2 : பாரதிதாசன் தமிழ் குறித்த கவிதைகள்

## 2.1. முன்னுரை

உலக மொழிகளில் தொன்மையான பண்பாட்டுச் சிறப்புமிக்க மொழி தமிழ்மொழி. தமிழ்மொழியின் சிறப்பினை தமிழ்மக்கள் மட்டுமன்றி அனைவரும் உணர வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ் மொழி குறித்தும், மக்கள் குறித்தும், தமிழ்ச் சமூகத்தின் போற்றப்படக்கூடிய விருந்தோம்பல் பண்பு, தமிழர்களின் கலைகள், கடமைகள், தமிழரின் ஒற்றுமை ஆகியவற்றை தமது பாடல்களில் படைத்துள்ளார்.

## 2.2. குறிக்கோள்கள்

இக்கால இலக்கியம் குறிப்புகள்

1. பாரதிதாசன் தமிழ் மொழி மீதும், நாட்டின் மீதும், மக்கள் மீதும் கொண்டிருந்த உணர்வுப்பூர்வமான மதிப்பை புரிந்து கொள்வீர்கள்.
2. தமிழினத்தின் நெடுங்கால பாரம்பரியத்தினை உணர்ந்து கொள்வீர்கள்.
3. பாரதிதாசனின் கவிதை நடையில் வெளிப்படுகிற உணர்ச்சி வேகம், எளிமையான சொல்லாட்சி, ஆழமான பொருள், உயர்வர்ணனை ஆகியவற்றை விளங்கிக் கொள்வீர்கள்.

## 2.3. பாரதிதாசன்

1891, ஏப்ரல் 29 அன்று புதுவையில் கனகசபைக்கும், இலக்குமி அம்மாவுக்கும் பிறந்தவர் சுப்புரத்தினம். இளமையிலேயே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றவர். பாரதியார் மேல் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக பாரதிதாசன் ஆனவர். துறை தோறும் தமிழ் வளம் பெற பல வழிகளைக் காட்டியவர். எளிய தமிழைக் கவிதைக்கு பயன்படுத்தியவர். இவரது கவிதைகள் உள்ளத்தை தொடும் உணர்ச்சி ஓவியங்கள் தன் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்படுபவர். பல்வேறு கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், கதைகள் படைத்தவர். குடும்பவிளக்கு, இருண்டவீடு, எதிர்பாராத முத்தம், அழகின் சிரிப்பு, குறிஞ்சித்திட்டு, சஞ்சீவி பருவதத்தின் சாரல், சேர தாண்டவம், தமிழச்சியின் கத்தி, பாண்டியன் பரிசு, புரட்சிக்கவி, ஆகியவை இன்றளவும் தமிழ்ச் சமூகத்தில் இணையற்ற படைப்புகளாகக் கருதப்படுகின்றன.

## 2.4. தமிழின் இனிமை

தமிழை தன் உயிரினும் மேலாக நேசித்தவர் பாரதிதாசன். உலகில் மிகச்சுவையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கனியின் சுவை, கரும்பின் சாறு, மலரின் தேன், பாகின் சுவை, பசுவின் பால், தென்னையின் நீர் என்ற இவற்றை எல்லாம் விட உயிருக்கு இனிமையானது தமிழ்மொழி என்கிறார்.

*Self -Instructional Material*

**"கனிமயிடை ஏறிய சுளையும் - முற்றல்**

**கழையிடை ஏறிய சாறும்,**

**பனிமலர் ஏறிய தேனும், - காய்ச்சுப்**

**பாகிடை ஏறிய சுவையும்;**

**நனிபசு மொழியும் பாலும் - தென்னை**

**நல்கிய குளிரின நீரும்,**

**இனியன என்பேன் எனினும் - தமிழை**

**என்னுயிர் என்பேன் கண்டீர்!"**

### 2.4.1. தமிழும், கவிஞரும் - உடலும், உயிரும்

சோலையிலே எழுகின்ற வண்டினங்களின் ஒலியும், நீரோடையில் நீரின் சலசலப்பும், புல்லாங்குழலின் இனிய இசையும், வீனை நரம்பில் எழும் அமுத பண்ணும், குழந்தைகள் கொஞ்சிப்பேசும் மழலைப் பேச்சும், பெண்கள் கொஞ்சிடும் இதழிலின் வாய்ப்பும், இனிமையானவை. எனவே அதை தான் விரும்பினாலும், தன் உடலின் உயிராய் விளங்குவது தமிழே என்றே கவிஞர் கூறுகிறார்.

### 2.4.2. அறிவினில் உறைகிற தமிழ்

கண்ணோடு உறவாடும் அண்ணன் தம்பி, அக்கம்பக்கத்து உறவுகள், கருணை நிறைந்த அன்னை, எப்போதும் மறவாத தந்தை, குயில்போல் பேசிடும் அன்னை, அன்பை தொட்டி வளர்க்கும் பிள்ளை அனைவரும் அயலராகத் தெரியும் உள்ளம் வண்ணம் தமிழ்தன் அறிவில் உறைந்ததாக கூறுகிறார்.

**"பயிலுறும் அண்ணன் தம்பி, - அக்கம்**

**பக்கத் துறவின் முறையார்,**

**தயைமிகு உடையாள் அன்னை, - என்னைச்**

**சந்ததம் மறவாத் தந்தை,**

**குயில்போற் பேசிடும் மனையாள், - அன்பைக்**

**கொட்டி வளர்க்கும் பிள்ளை,**

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

*Self-Instructional Material*

**அயலவ ராகும் வண்ணம் - தமிழ் என்**

**அறிவினில் உறைதல் கண்டீர்!"**

### 2.4.3. விந்தை செய்யும் தமிழ்

நீலாச்சுடர் வீசும் வானத்தில் தோன்றும் குளிர் நிலவு, காலைச் சூரியன், கடலின்மேல் தோன்றும் ஒளி வெள்ளம், மாலையில் மலைகளில் கதிரவன் மறையும் இன்பக் காட்சி அனைத்தும் இயற்கையின் விந்தையான செயல்களே. இருப்பினும் தமிழின் விந்தையை வார்த்தைகளால், சொற்களால் எழுத முடியுமா? என்கிறார் கவிஞர்.

### 2.4.4. உயிரை உணர்வை வளர்க்கும் தமிழ்

சமைக்கப்பட்ட சோறும், பசு நெய்யில் செய்த, பல்வேறு கறிவகைகளும், நிகரற்ற தானியங்களும், கட்டித் தயிறும், மிளகு சாறும், சுவைதரும் கிழங்கும், நாவிற்கு இனித்திடும் அப்பமும், மனித உடலை வளர்ப்பன. ஆனால் உயிரையும் உணர்வையும் வளர்ப்பது தமிழே என்கிறார்.

**"செந்நெல் மாற்றிய சோறும் - பசுநெய்**

**தேக்கிய கறியின் வகையும்,**

**தன்னிகர் தானியம் முதிரை, - கட்டித்**

**தயிரோடு மிளகின் சாறும்,**

**நன்மது ரஞ்செய் கிழங்கு – காணில்**

**நாவிலி னித்திடும் அப்பம்,**

**உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை**

**உணர்வை வளர்ப்பது தமிழே"**

என்ற பாடலடிகள் தமிழானது உயிரையும் உணர்வையும் வளர்த்து மனிதனை உயிர்ப்பிப்பது என்ற பொருளை எடுத்துரைக்கின்றது.

## 2.5. இன்பத்தமிழ்

தமிழன் இனிமையை அடுக்கடுக்காகக் கூறிய கவிஞர் இன்பத் தமிழ். தமிழ் இனத்திற்கு செய்கிற இனிமைகளை எடுத்துரைக்கிறார்.

### 2.5.1. உயிருக்கு நிகராகிய தமிழ்

தமிழ் இளமைக்குப் பாலாக, உயர்வுக்கு வானாக, அறிவுக்குத் தோளாக, பிறவிக்குத் தாயாக விளங்குகிறது என்பதையும் எடுத்துரைக்கிறார்.

**"தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்தத்**

**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!**

**தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்**

**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!**

**தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்**

**தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!**

**தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்**

**தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்!**

உயிர்க்காக்கும் மருந்தினை அமுதம் என்று கூறுவார்கள். தமிழும் உயிரைக் காப்பதால் அத்தமிழுக்கும் அமுதென்று பெயர் இருப்பதாக கவிஞர் கூறுகிறார். அந்தத் தமிழ் உயிருக்கு நிகராக இருப்பதாகவும், சமூகத்தின் விளைவுக்கான நீராகவும், வாழ்வதற்கு நியமிக்கப்பட்ட ஊராகவும், உரிமை என்னும் பயிறுக்கான வேராக இருப்பதாகவும் புலவருக்கு வேலாகவும், அசதிக்கு ஊக்கம் தந்தத் தேனாகவும், கவிதைக்கு வைரத்தின் வானாகவும், உள்ளத்திலே எழுகின்ற தீயாக இருப்பதாகவும் கூறுகிறார். இத்தமிழுக்கு அழுது, நிலவு, மணம், மது, போன்ற பெயர்கள் பொருந்துவதாகக் கூறுகிறார்.

## 2.6. தமிழ் உணவு

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

தமிழைப் பருக பருக உயிரும் உணர்வும் ஒருசேர வழுப்பெறுவதைத் தமிழ் உணவு எடுத்துரைக்கிறது.

கவிஞர் ஒரு அந்த நேரத்து இருட்பொழுதில் குளிர்நிலாக் காய்கையில், ஆற்றுங்கரையில் காற்று வீசிட அங்கே அமர்ந்திருக்கிறார்.

வெம்மையில்லாத அப்பொழுதில், பலர் அங்கு வீற்றிருக்கின்றனர். அன்றாடத் தொல்லைகளை மறந்து அமர்ந்திருக்கின்றனர். பெண்களில் சிலர் தங்களின் கணவரின் அருகில் அமர்ந்திருக்கின்றனர். நண்பர்கள் ஒருபுறம் நாட்டின் நிலை பேசி கூடி இருந்தனர். குழந்தைகள் ஓடி விளையாடியும், மண்ணில் விளையாடியும், அருகிருந்தனர்.

**“நாட்டின் நிலைபேசிப் - பல**

**நண்பர்கள் கூடி இருந்தனர் ஓர்புறம்**

**ஓட்டம் பயின்றிடுவார் - நல்ல**

**ஒன்பது பத்துப் பிராயம் அடைந்தவர்;**

**கோட்டைப் பவுன் உருக்கிச் - செய்த**

**குத்துவிளக்கினைப் போன்ற குழந்தைகள்**

**ஆட்டநடை நடந்தே – மண்ணை**

**அள்ளுவர், வீழுவார் அம்புலி வேண்டுவர்;”**

### 2.6.1. வானின் புதுமை

ஓடுகிற நீரிலே நிலா ஒளியும் சேர்ந்தோட, மரங்களில் பறவைகள் பறந்து பறந்து அடங்கிய, நட்சத்திரக் கூட்டத்திடையே நிலவு ஒளிவீச அந்தி வானத்து அழகின் விந்தையை எடுத்துரைக்கிறார்.

### 2.6.2. உவமை தரும் நற்றமிழ்

அனைத்து மொழிகளிலும் இன்பம் தரும் அமுதமொழியாம் தமிழ்மொழியின் சிறப்பை கூறவிழைந்த கவிஞர், தமிழ்மொழி மட்டுமே உவதை தரும் இனமொழியாக இருப்பதை எடுத்துரைக்கிறார்.

அந்த பொன்மாலை நேரத்திலே, ஆற்றங்கரை ஓரத்தில், இயற்கையின் அழகினை கண்டு ரசித்துக் கொண்டிருக்கும் போதே அவரது செவிகளில் ஒரு பெண் பாடுகிற தெலுங்குப் பாடலொன்று கேட்கிறது. தமிழை நேசிக்கும் இவருக்கு முற்றும் தெலுங்கில் முடிந்ததால் இவருக்கு ஈர்ப்பில்லை. பிறகு வடக்கில் பேசும் பேச்சில் அவள் பாடுகிறாள். இதுவரை அவர் கண்ட இன்பக் காட்சிகள் கசக்கும் அளவுக்கு துன்பம் நிறைந்ததாக இப்பாடல் கேட்கிறது. இந்த பொருளற்ற பிறமொழிப் பாடல்களைக் கேட்டு வந்திருந்த பலர் புத்தமுதம் என்று கைத்தாளமிட்டு ரசித்தனர்.

இருள் நேரத்தில் சித்திரத்தின் அழகை ரசிக்க முடியாதது போல தமிழ்மக்கள், கருவுற்று தமிழ்ச்சொல் இருக்க இருள் நேரத்து ஓவியம் போல பிறமொழிகளை நேசிக்கும் அவலம் கண்டு துயருகிறார்.

**“பொருளற்ற பாட்டுக்களை – அங்குப்**

**புத்தமுதென்றனர்; கைத்தாளமிட்டனர்;**

**இருளுக்குள் சித்திரத்தின் - திறன்**

**ஏற்படுமோ இன்பம் வாய்த்திடக் கூடுமோ?**

**உருவற்றுப் போனதுண்டோ – மிக்க**

**உயர்வுற்ற தமிழ்மக்கள் உணர்வுற்ற நல்வாழ்வு?**

**கருவுற்றச் செந்தமிழ்ச்சொல் - ஒரு**

**கதியுற்றுப் போனதுண்டோ அடடா அந்த”**

தொடந்து ஒரு சங்கீத மேதை இந்துஸ்தானி பாடலை இசைக்கிறான். நம்மக்கள் அந்த பாட்டின் சுவையனைத்தையும் உணர்ந்தது போல வாய்

திறந்து நன்று நன்று என ஆர்பரித்துக் கொண்டிருந்தனர். அப்போது எங்கிருந்தோ தமிழில் பாடும் இனிய பாடலோசை கவிஞருக்குக் கேட்கிறது.



**“அஞ்சலை உன் ஆசை – என்னை**

**அப்புறம் இப்புறம் போகவிடாதடி**

**கொஞ்சம் இரங்கிடுவாய் - நல்ல**

**கோவைப் பழத்தினைப் போன்ற உதட்டினை**

**வஞ்சி, எனக்களிப்பாய்! – என்ற**

**வண்ணத் தமிழ்ப்பதம் பண்ணிற் கலந்தென்றன்**

**நெஞ்சையும் வானத்தையும் - குளிர்**

**நீரையும், நிலவையும் தமிழர் குலத்தையும்**

**ஒன்றெனச் செய்ததுவே.**

அப்பாடல் கேட்டதும் நெஞ்சம் குளிர்ந்து மகிழ்ச்சியுறச் செய்தது. மகிழ்வித்த தமிழ்நாட்டில் எங்கும் பல்கிப் பெருகி தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இன்பம் கொடுக்க வேண்டும் என்று கூறுகிறார்.

## 2.7. தமிழ்ப்பேறு

தமிழைப் படிப்புவதும், நேசிப்பதும், உணர்வதும், படைப்பதும், பரப்புவதும், வளர்ப்பதும், அனைத்தும் பெரும் பேறு என்பதை அனுபவித்து உணர்ந்து எழுதியவர் பாவேந்தர்.

கவிஞர் கவிதையை எழுத ஏழு எடுத்தபோது தன்னை எழுதுமாறு வான் கூறியது. ஓவியம் தங்களை ஓவியம் தீட்டுமாறு தாமரைப் பூக்களும் ஓடையும் கூறின.

கவிஞரின் கண்ணைக் கவர்ந்திட காடும், வயலும், மேகமும் போட்டியிட்டன. சித்திரம் வரையுமாறு மயிலுக்கு நிகருமான பெண்களெல்லாம் கூறினர்.

அத்தோடு சோலையின் குளிர்த் தென்றலும், தோகை மயிலும், மாலைத்திரும், மலையொத்த வீரரின் தோளும், தம்மை வரையுமாறு அழைக்கின்றன.

**“சோலை குளிர்தரு தென்றல் வரும், பசுந்**

**தோகை மயில் வரும் அன்னம் வரும்;**

**மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்**

**மாணிக்கப் பிரிதி காட்சித்தரும்;**

**வேலைச் சுமந்திடும் வீரரின் தோள்உயர்**

**வெற்பென்று சொல்லி வரைக எனும்**

**கோலங்கள் யாவும் மலைமலையாய் வந்து**

**கூவின என்னை!**

இவற்றிடையே துன்பங்களுக்கிடையில் தமிழ்நாட்டினில் தமிழ்மக்கள் தூங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். இக்காட்சி மனத்திலே இரக்கத்தை உண்டாக்கி உயிரில் கலந்ததாகக் கூறுகிறார்.

இன்பத்தமிழ்க் கல்வியை அனைவரும் கற்கும் நிலை வந்துவிட்டால் துன்பங்கள் நீங்கி சுகம் பெற்று, நெஞ்சில் தூய்மை உண்டாகி வீரம் பெறுவார்கள் என்றுரைக்கிறார்.

**“இன்பத் தமிழ் கல்வி, யாவரும் கற்றவர்**

**என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் -**

**துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில்**

**தூய்மை யுண்டாகிடும், வீரம் வரும்.**

## 2.8. தொகுத்துக் காண்போம்

- தமிழ்ச்சமூகத்தின் மீது பாரதிதாசன் கொண்டிருந்த ஈடுபாட்டினை அவரது பாடல்கள் வழி தெரிந்துகொண்டீர்கள்.

- உணர்வை வளர்க்கும் தமிழ்மொழியைப் பற்றி புரிந்துகொண்டீர்கள்.
- உயிரினும் மேலாக செம்மையாக விளங்குகிற தமிழின் உயர்வை அறிந்துகொண்டீர்கள்.

## 2.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. பாரதிதாசனின் இயற்பெயர் யாது ?

_______________________________________________

2. எதனைத் தனது உயிராகக் கொண்டவர் பாரதிதாசன் ?

_______________________________________________

3. உயிரை உணர்வை வளர்ப்பது எது ?

_______________________________________________

4. தமிழ் எதற்கு நிகரானது ?

_______________________________________________

5. துன்பங்கள் நீங்கி சுகம் பெற்று வாழ செய்ய வேண்டியது யாது ?

_______________________________________________

## 2.10. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. பாரதிதாசன் பற்றி சிறுகுறிப்பு வரைக
2. பாரதிதாசன் கூறும் இனியவை யாவை ?
3. பாரதிதாசன் எதனை அமிழ்தம் என்று கூருகிறார் ?
4. தமிழரின் தொன்மைச் சிறப்பு பற்றி பாரதிதாசன் கூறுவன எவை ?
5. பாரதிதாசன் இசைத்தமிழ் பற்றி கூறுவனவற்றை எழுதுக.

## 2.11. மேலும் பயில்வதற்கான நூல்

'பாரதிதாசன் கவிதைகள்' உமா பதிப்பகம், சென்னை.

# கூறு – 3

## கண்ணதாசன் - மாங்கனி

3.1. முன்னுரை

3.2. குறிக்கோள்கள்

3.3. கண்ணதாசன்

3.4. மாங்கனி கூறும் பொருள்

3.5. மாங்கனியில் கவி அனுபவம்

3.6. கதைமாந்தர்கள்

3.6.1. அடலேறு

3.6.1.1. அடலேறுவின் காதல்

3.6.2. மாங்கனி

3.6.2.1. தாயின் வற்புறுத்தலும் மகளின் திருமண மறுப்பும்

3.6.2.2. மாங்கனியின் கற்பு

3.6.2.3. போராட்டமும் முடிவும்

3.7. அடலேறு – மாங்கனியின் காதல் உணர்வு

3.8. காப்பியச்சிறப்பு

3.9. உவமைகள்

3.10. தொகுத்துக் காண்போம்

3.11. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

3.12. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

3.13. மேலும் பயில்வதற்கான நூல்

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

## கூறு - 3

### கண்ணதாசனின் மாங்கனி

### 3.1. முன்னுரை

மாங்கனி நாடகவடிவிலான குறுங்காவியம். வரலாற்றின் ஒரு பகுதியை எடுத்து கவிஞர் கண்ணதாசன், தனது கற்பனையையும், கவியனுபவத்தைம் சேர்த்துப் புதுவிதமாக மாங்கனியை படைத்திருக்கிறார். காதல் வாழ்வின் பிரிவுத் துயரத்தையும், காதலர் நிலையையும், சங்க இலக்கியம் தொட்டு தமிழ் இலக்கிய வகைமைகள் அனைத்தையும் தலைமைப் பாடுபொருளாகக் கொண்டு பாடியிருக்கின்றார்.

கவிஞர் கண்ணதாசனின் மாங்கனி அனைத்தையும் உள்ளடக்கி, தமிழ் வேந்தர்கள் மூவரைப் பற்றியும், வீரம் செறித்த பெருமைகளையும் எடுத்துரைத்து காதலர்களின் நுட்பமான மன உணர்வுகளை வடித்து அனைத்திற்கும் மேலாகி தமிழ் பெண்களின் கற்பு மாண்பையும் எடுத்துரைக்கின்றது.

### 3.2. குறிக்கோள்கள்

- தமிழக வரலாற்று நிகழ்வுகளின் பின்னணியையும், மூவேந்தர்களின் அரசியல் வாழ்க்கையையும் அறிந்து கொள்ளலாம்.
- காதலன் அறநிலையையும், மாங்கனி என்னும் கணிகையர் குலப்பெணணின் உயர்பண்பையும் தெரிந்து கொள்ளலாம்.
- இசை, நடனம், அழகியல் தன்மைகளையும் பல்வேறு வகையான உவமைகளின் சிறப்பினையும் உணர்ந்து மகிழலாம்.

### 3.3. கண்ணதாசன்

20-ஆம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களுள் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு ஒப்பற்ற கவிஞராக, பாடலாசிரியராகத் திகழ்ந்தவர் கவிஞர் கண்ணதாசன் அவர்கள். இவரது இயற்பெயர் முத்தையா் காரைக்குடி அருகே சிறுகூடல்பட்டி என்னும் ஊரில் 24.06.1927 அன்று பிறந்தவர். தந்தை

*Self -Instructional Material*

சாத்தப்பன். தாய் விசாலாட்சி. ஏட்டாம் வகுப்பு வரை படித்தவர். புத்தரிக்கை ஆசிரியர் பணிக்கு சென்றபோது வைத்துக் கொண்ட புனைப்பெயர் கண்ணதாசன்.

புல்வேறு கவிதைகள் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், கவிதை நாடகம், மொழிபெயர்ப்பு நூல்கள், சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், நாடகங்கள், உரைநடைநூல்கள், ஆகியவற்றை எழுதியுள்ளார். அவருடைய கவிதைகள் பல்வேறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. தென்றல்,திரையென மேதாவி, கண்ணதாசன், சண்டமாருதம், கடிதம் முதலான இதழ்களில் படைப்புகளை அளித்தவர்.

திராவிட இயக்கக் கவிஞராக அறிமுகமாகி, திரையிசைப் பாடலாசிரியராக வலம்வந்து, சமய நம்பிக்கையாளராக மாறி, மனிதத்தையும், சமூகத்தையும் தனது எழுத்துகளின் வழியாக உலகறியச் செய்த ஒப்பற்றக் கவிஞர் கண்ணதாசன். அக்டோபர் 17, 1981 ஆம் ஆண்டு அமரர் ஆனாலும் இவரது படைப்புகள் காலத்தை வென்று நிற்கும் தகைமையுடையன.

## 3.4. மாங்கனி கூறும் பொருள்

கல்லக்குடி போராட்டம் காரணமாக கவிஞர் கண்ணதாசன் திருச்சி மத்திய சிறையில் இருந்தபோது வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு 1954 இல் எழுதப்பட்ட குறுங்காவியம் மாங்கனி ஆகும். பழங்கதைகள் தற்காலச் சூழலுக்கேற்ப கவிஞரின் இலக்கியப் புலமையோடும் கற்பனைத்திறத்தோடும் படைக்கப்பட்டப் படைப்பாகும்.

மோரிய மன்னன் அறுகையோடு, மோகூர்க் குறுநில மன்னன் பாண்டியன் பழையன் என்பவன் பகைமை கொண்டதாகவும், அறுகைக்கு உதவியாகச் சேரன் செங்குட்டுவன். பழையன் மீது போர் தொடுத்ததாகவும் காணப்பட்ட ஒரு குறிப்பை வைத்து மாங்கனியைப் புனைந்ததாகக் கவிஞர் கண்ணதாசன் தம் நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். மேலும் இக்காவியத்தில் அமைச்சராக வரும் அழும்பில் வேளுக்கு ஒரு மகன் இருந்தாக வரலாற்றில் குறிக்கப்படவில்லை. ஆனால் கவிஞர் படைத்துள்ளார். அதேபோல, சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் செல்லும் இடங்களுக்கெல்லாம் கணிகையர்

சிலரும் அழைத்துச் செல்லப்படுவதுண்டு எனும் வரலாற்றுக் குறிப்பினைக் கொண்டு அதிலே ஒருத்தியாகக் இக்காவிய நாயகி மாங்கனி.



தென்னரசி, பொன்னரசி கவிஞர் படைத்தக் கற்பனைப் பாத்திரங்கள், காதல் சம்பவங்களைக் காவியத்தின் சுவைக்காக எழுதியிருக்கிறார். மாங்கனியில் அகப்பொருள், புறப்பொருள் எனும் இரண்டு பொருள்களும் இடம்பெற்றுள்ளன. இலக்கண வரம்பை மீறி உணர்ச்சி நிரம்பிய நகையுடன் எழுதப்பட்டுள்ளன. இந்தக் காவியத்தின் ஒரு பகுதி கவிஞர் நடத்திய தென்றல் எனும் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் முழுமையாக நூல்வடிவம் பெற்றது. “கண்ணதாசன் கவிதைகள்” முதல் தொகுதியில் மாங்கனி இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

சேரன் செங்குட்டுவன் வடக்கில் கனக விசயர்களை வென்று அவர்கள் தலையில் கண்ணகிக்கு கோயில் எழுப்ப கல்கொண்டு வந்து வஞ்சி நகரில் விழா எடுக்கிற வரலாற்று நிகழ்வோடு, பல்வேறு கற்பனை மாந்தர்கள் படைக்கப்பட்டு சுவைமிக்க காப்பியமாக உருப்பெற்றதே மாங்கனியின் சிறப்பாகும்.

சேரனுடைய அவையில் மாங்கனி என்கிற கணிகையர் குலப் பெண் நடனமங்கையாகத் திகழ்கிறாள். அவளுடைய அழகிலும், நடனத்திலும் மயங்கி அமைச்சர் அழும்பிலவேள் மகன் அடலேறு காதல் கொள்கிறாள். எப்போதும் மாங்கனியை நினைத்தவாறே மாளிகையில் அமர்ந்திருக்கிறான். மனம் முழுக்க மாங்கனி நிறைந்திருந்த ஒரு பொழுதில் மோகூர் மன்னன் பழையன் என்பவனுக்கு எதிராகப் போர்தொடுக்க வேண்டும் என்ற செய்தியை அமைச்சரும் தந்தையுமான அழும்பிலவேன் கூறுகிறான். அடலேறுவிற்கு போருக்குச் செல்ல வேண்டும் என்கிற கடமை. ஒருபுறம் இருந்தபோதும் தனிமையில் மாங்கனி இரவு நேரத்தில் இருக்கும் வேளையில் தன் காதலை வெளிப்படுத்திவிடுகிறாள். அக்காதலை ஏற்காது, அவனைத் திட்டியும், பழித்தும் பேசி மறுத்து விடுகிறாள். இருப்பினும் அடலேற்றின் உயர்பண்பினையும் பெருந்தன்மையையும் நினைத்து அவளிடம் தன் மனதையும் பறிகொடுத்துவிடுகிறாள்.



அடலேற்றின் தலைமையில் சேரர் படை மோகூருக்குச் செல்கிறது. ஆடல், பாடல்களாக மாங்கனியும் அவளுடன் ஐந்து பெண்களும் செல்கின்றனர்.

மோகூரின் வடக்குப் பகுதியில் தனித்தனியாகக் கூடம் அமைத்துத் தங்குகின்றனர். அன்று நள்ளிரவில் அடலேறு மாங்கனியைச் சந்தித்துப் பேசித் தனது கூடாரத்தை அடைகின்றான். அவ்வேளையில் மோகூர் மன்னன் தன் படைத்தலைவனான மலைமேனியை உளவறிந்துவருமாறு அனுப்புகிறான். மலைமேனி சேரர் படைகளைப் பார்க்கிறான். அதனருகில் மாங்கனியையும், மற்ற பெண்களையும் பார்க்கிறான். பார்த்த மாத்திரத்திலே மாங்கனியையும் மற்ற பெண்களையும் மலைமேனியின் ஆட்கள் காட்டிற்குத் தூக்கிச் சென்று விடுகிறார்கள்.

சேரர் படை வீரர்கள் பல படைகளைக் கடந்து பகைவர்களை அழித்து மோகூருக்கள் நுழைந்து, வெற்றி பெற்றுப் பெருமகிழ்ச்சியோடு அரண்மனைக்குள் நுழைய, நான் சரணம்' எனக் கூறிப் பழையன் பணிந்தான். அவன் பெண் மக்கள் இருவரும் கண்களில் நீர் சொரிய ஆங்கே வந்து நின்றனர். மூவரையும் படைத்தலைவன தளிவேல் சிறைப்படுத்தினர்.

மோகூர் நாட்டைக் கைப்பற்றிய பெருமிதத்துடன் அந்த நகரை வலம் வந்தான். அடலேறு அப்போது கட்டுப்பாடற்ற சில சேர வீரர்கள் அக்கிரமச் செயல்கள் செய்வதைப் பார்த்துக் கண்டித்தார் அடலேறு. தளிவேல் என்பவன் பழையன் மகள் பொன்னரசியின் கூந்தலை அறுத்துவிடுகிறான். தென்னரசி மட்டும் அவனை எதிர்த்து நின்றாள். அந்த நேரத்தில் அங்குவந்த அடலேறு, தளிவேலைக் கண்டித்து, அவனது வீரப்பதக்கங்களைப் பறித்தான்.

பின்னர் பழையன் மற்றும் மக்கள் இருவரையும் விடுவிக்கிறான். உடனே, பழையன் அடலேற்றை விருந்திற்கு அழைக்கிறான். அடலேறு அவ்விருந்தில் கலந்து கொள்கிறான். அப்போது பழையன் மகளிர் முக்கனியைக் கொண்டு வந்து படைக்கும் நேரத்தில், மாங்கனியைத் தொட்டு எடுக்கும் நேரத்தில், காட்டு வெளியில் தங்க வைத்துவிட்டு வந்த தன் காதலி மாங்கனி நினைவுக்கு வர விரைவாகப் புறப்பட்டு போய்விடுகின்றான். அவனது செயலை நினைத்துப் பழையனும் அவனது மகளிரும் மிகவும் வருத்தமுறுகிறார்கள்.

மாங்கனியைக் காணாதவனாக அடலேறு மிகவும் புலம்புகிறான். ஒன்றும் செய்வதறியாது திகைப்புற்று நிற்கிறான். இந்நிலையில் "தளிவேல்" அடலேறுவிற்குப் பகைவனாக மாறிவிடுகிறான். மாங்கனியை, சூரபதன்

என்பவனுக்கு விற்றுவிடுகிறான். மாங்கனியைச் சூரபதன் காவலுக்குட்படுத்திக் கொடுமைகள் பல நிகழ்த்துகிறான். இந்நிலையில் வெற்றிப் பெருமிதம் ஒரு பக்கம் இருந்தாலும், தன் காதலியைத் தொலைத்த சோகத்துடன் அடலேறு சேரநாடு திரும்புகிறான்.

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

சில நாள்கள் கழித்து, பழையனிடமிருந்து தன் மகள் தென்னரசியைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வேண்டி ஒலை வருகின்றது. மன்னன் விருப்பப்படியும் தன் தந்தையின் கட்டளையின் பேரிலும் திருமணத்திற்குச் சம்மதித்து அடலேறு மணம்புரிகிறான்.

பல இன்னல்களுக்கிடையேயும் தன் காதலனை மனத்தில் நிறுத்தி நாடி வருகிறாள் மாங்கனி சேரநாடு வந்தடைகிறாள். அடலேறுவிற்குத் திருமணம் நடந்து முடிந்துவிடுகிறது. கேள்விப்படுகிறாள். ஆராத்துயரில் மூழ்குகிறாள். தென்னரசியும் அடலேறுவும் இருக்கும் அறையின் அருகில் செல்கிறாள். அங்கு இருவரும் ஒன்றிப் போய் பேசி மகிழ்வதைப் பார்த்து" அத்தான் என்றாள் மாங்கனி அந்தக் குரலைக் கேட்ட அடலேறு மாங்கனி! மாங்கனி! என்று வெளியே ஓடுவருகிறான்.

மாங்கனி அங்கு நிற்காமல் துயரத்தோடு ஓடி, சுழன்று வரும் ஆற்றில் விழுகிறாள். அவளைக் காப்பாற்ற அடலேறும் விழ, அவ்விருவரையும் காப்பதற்காகத் தென்னரசியும் விழுந்து விடுகிறாள். இப்படி மூவரும் ஆற்றில் மூழ்கி இறந்து விடுகின்றனர். இக்கதையே மாங்கனி காப்பியம்.

### 3.5. மாங்கனியில் கவி அனுபவம்

மாங்கனி நாடக வடிவிலான குறுங்காவியம் வரலாற்றின் ஒரு பகுதியை எடுத்து கவிஞர். கண்ணதாசன் தனது கற்பனையையும், கவியனுபவத்தையும் சேர்த்து புதுவிதமாக மாங்கனியை படைத்திருக்கிறார். காதல் வாழ்வின்

**“மரத்தோடு மரமாக நின்றான்; தந்தை**
**வலுவோடு அழைத்திட்ட குரலுங்களோன்**
**சிரத்திடு மலர்பட்டுச் ‘சில்’ லென்றேறி**
**சிலையாக்க மூச்சின்றி நின்றான்மைந்தன்”**

*Self -Instructional Material*

நள்ளிரவு நேரத்தில் மாங்கனியைச் சந்தித்து தனது காதலை வெளிப்படுத்த எண்ணி அவளிடம் கூறுகிறான். அதைப் புரிந்துகொள்ளாத மாங்கனி மிகுந்த கோபத்தோடு திட்டிவிடுகிறாள்.





உண்மைக் காதல் தன் உள்ளம் முழுவதும் நிறைந்திடுக்க அடலேறு அவளிடம் கோபம் கொள்ளாமல் மன்னிப்பு கேட்கிற பெருந்தன்மைப் பண்பாலனாகவே இருக்கிறான். தான் விரும்பிய மாங்கனியின் மனதில் கோபத்தை வரவழைத்து விட்டேனே என்று ஏக்கத்துடன் தன்னுடைய படுக்கையறைக்குள் செல்கிறான்.

**'சிந்தித்துச் சிந்தித்து முடிவி லேதன்**

**சிந்தையினை அவளுக்குச் சொல்லித் தீர்க்க**

**முந்தித்தன் நிலை, காலம், புதிய வீடு**

**முற்றிலுமே மறந்தானாய்ப் போந்த தற்கும்,**

**சிந்தித்த வழியின்றி அவள்மு கத்தைத்**

**தீண்டியதும் மனத்தெண்ணி தைந்தான் பிள்ளை**

**சந்தித்த சுகப்பாடம் நினைவிருந்து**

**தடம் போடச் சிறுதுன்பம் பின்னி முக்கும்**

**பாறைக்கல் பள்ளத்தில் விழுந்தாற் போலப்**

**படுக்கையிலே அடலேறு வந்துவிழுந்தான்"**

என்ற அவனுடைய நிலையை எடுத்துரைக்கிறார்.

## 3.6. கதை மாந்தர்கள் :-

மாங்கனி காப்பியத்தின் தலைமை மாந்தர்களாக அடலேறுவும், மாங்கனியும் படைக்கப்பட்டிருக்கிறார்கள்.

### 3.6.1. அடலேறு

மாங்கனியின் மூலமாகவே அடலேறுவின் குணநலன்களை பேசவைக்கிறார் கவிஞர்.

**'ஆணழகன்! சிங்காரன்! அவனியெல்லாம்**
**அடக்கிவைத்த மாவீரன்! அறிவுத்தோட்டம்!**
**தேன்பொழியும் கருணைமனம்! வடகோ டன்னத்**
**திரண்டிருக்கும் உயர்தோளன்! அழியாச் செல்வம்**
**மானமிகும் மறக்குலத்தான் என்றாள்!"**

என்ற பாடலின் வழியாக நிகரற்ற வீரனின். பெருமைகளின் பேசுவதைப் போல் அடலேறுவின் பண்புநலன்களைக் கூறுகிறார். வீரம் நிறைந்த அடலேறு பிற பெண்களைக் கொடுமைப்படுத்தும் தந்நாட்டு வீரர்களையும் கண்டிக்கின்ற ஆண்மையாளனாகவும், தன் காதலியைக் காணாது அழுது துடித்துப் புலம்புகிற இடத்தில் உண்மையான காதல் வயப்பட்ட இளைஞனாகவும் காணப்படுகிறான். இறுதிவரை தான் நேசித்த காதலியை மறக்க இயலாதவனாக வாழ்ந்து காதலிக்காக உயிரை தியாகம் செய்பவனாக அடலேறு படைக்கப்பட்டிருக்கிறான்.

#### 3..6.1.1. அடலேறுவின் காதல்

மாங்கனி காப்பியத்தின் தலைவனாக அடலேறு படைக்கப்பட்டிருக்கிறான்.

**"அழும்பில்வேள் சேரர்தம் அமைச்ச னாவான்!**
**அவன் செல்வன் அடலேறு சேனை வீரன்!**
**செழுங்கொடியைக் கண்வாங்கி மனத்துட் போட்டு**
**சீரணிக்க முடியாமல் நின்றான் ஆங்கே!**



தன்னிகரில்லாத தலைவன் அடலேறு காவியத்தின் பெரும்பகுதியும் காதல் வயப்பட்ட படைப்பாகவே காணப்படுகிறான். மாங்கனி அவையில் ஆடற்கலை நிகழ்த்திவிட்டு சென்ற பிறகு அவள் பின்னாலேயே அவள் சென்ற

இடத்தைப் பார்த்துப் பார்த்து செல்கிறான். அவளது பாதத்தின் தடம் பார்த்து மகிழ்கிறான்.



**"போனவரின் பின்னாலே மெல்லப் போனான்!**

**புதுமனதின் முதற் கூச்சம் இழுக்கக் கண்டு**

**ஆனையசைந் தாடுதல்போல் முன்னும் பின்னும்**

**அசைந்தபடி நின்றதலால் தொடர்ந்தா னில்லை!**

சிந்திரத்தாள் அடிச்சுவட்டைத் தேடிப் பார்த்தான் தென்றலது போனதற்குச் சுவடு ஏது? கைத்திறத்தால் தரைதடவிப் பார்த்து அன்னாள் கால்பட்ட இடத்திலிளஞ் சூடுகண்டான்" என்று அடலேறுவின் காதல் செயல்பாட்டினைக் கவிஞர் அழகுபட எடுத்துரைக்கிறார். தன்னுடையவாள் வீரமும், தோள் வீரமும், காதல் போர்க்களத்தில் தோற்றுவிட்டதாக எண்ணுகிறான்.

**"குத்திடுவேல் வாளெல்லாம் களத்தி லேதான்**

**கோதையர்பால் துரும்பேதான்" என்றாள், போனான்."**

தன் சிந்தையில் மாங்கனியைத் தவிர மற்ற செயல்பாடுகளையெல்லாம் மறந்தவனாக மாறிப் போகிறான்.

**"மரம் பழாத**

**பழந்தின்னும் நினைவான அடலேறங்கே**

**பசியாத முடியாமல் சோலை புக்கான்.**

### 3.6.2. மாங்கனி

கணிகையர் குலத்தில் பிறந்தாலும், தன்னிகரில்லாத தலைவன் போலவே இளமையும், அழகும் நாணும் பொற்பும் பெற்றத் தலைவி காவிய நாயகி மாங்கனி ஆடல், பாடல், அழகு சிறந்த கலை மடந்தையாகத் திகழ்கிறாள்.

**'மின்வெட்டுக் கண்கட்ட மேவினாற்போல்**

**மென்பட்டுப் பூங்குழலி பூமிதொட்டுப்**

**பொன்கட்டிச் சிலைபோல ஊர்ந்து வந்தாள்'**

**என்றும்''**

**'கொலைவாளுக்கு உறைபோல விழிவாளுக்கு இமை**

**சிலையோடும் சமமாக விளையாடும் புருவம்**

**சிறுவானப் பிறைமீது அலைமோதும் அழகு'**

என்றும் மாங்கனியின் அழகு பேசப்படுகிறது.

**'விரிக்காத தோகைமயில்! வண்டுவந்து**

**மடக்காத வெள்ளைமலர்! நிலவுகண்டு**

**சிரிக்காத அல்லிமுகம்! செகத்தில் யாரும்**

**தீண்டாத இளமை நலம்; பருவஞானம்!'**

என்று சேரமன்னன் மாங்கனியைப் பற்றியும் அவளது இளமை அழகையும் பற்றிப் பேசுவதாக காணமுடிகிறது.

இவ்வாறு அனைவராலும் மாங்கனியின் அழகு நலன்கள் பேசப்படுவதைக் காணலாம்.

### 3.6.2.1. தாயின் வற்புறுத்தலும் மகளின் திருமண மறுப்பும்

மாங்கனி தன்னைப் போலவே நடனப்பெண்ணாக மட்டுமே இருந்துவிடக் கூடாது என்பதால் தன்குலத்து ஆடவன் ஒருவனை மணக்க வற்புறுத்துகிறாள் அவள் தாய். ஆனால் தனக்குப் பிடிக்காத ஒருவனை எப்படி மணப்பது என்று மாங்கனி தன் தாயைப் பார்த்துக் கேட்கிறாள்.

**'கற்சிலையோ அம்மா நான்; கயவன் அந்தக்**

**காமுகனுக் கென் நெஞ்சத்தைத் தத்தம் செய்ய?**

**பொற்கிளியை வானரத்தின் மடியில் போடப்**

**பொருந்தியதோ உன்னுள்ளம் போதும் போதும்"**

என்று தான் விரும்பாத ஆடவனை வற்புறுத்தி மணக்கச் செய்யும் போக்கினைக் கண்டிப்பதை, மாங்கனி மூலம் வெளிப்படுத்துகிறார் கண்ணதாசன்.

தன்மேல் காதல் கொண்ட அடலேறு, இரவில் தனியாக இருக்கும் தன்னிடம் வந்து காதலைத் தெரிவிக்க வரும் நேரத்தில், அவனைப் பார்த்து,

**‘திறந்திருந்த வீட்டிற்குள் ஓசையின்றித்**

**திருடனைப் போல் நுழைந்தீரே! தென்னர்தானோ?**

**மானத்தை இக்கோதை மறவாள்! போம் போம;”**

என்று உள்மனத்தில் அவனைக் காதலித்தாலும், திட்டிப் பழித்துப் பேசி அனுப்பிவிடுபவளாகக் காணப்படுகிறாள்.

**‘நள்ளிரவு! தாசமனை! இளம்பெண்ணுக்கும்**

**நறு மலர்ப் பஞ்சணையருகோர் காளைவந்து**

**மெல்லமுகந் தொடுவதுதான் உங்கள் ஏட்டில்**

**வீரர்கள் பெண்கேட்க வரும் செய்தியா?”**

என்று தான் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டுப் பெண் கேட்கவே வந்தேன் என்று சொன்ன அடலேறுவைப் பார்த்துக் கோபப்படுகிறாள். கள்ளமனத்தோடு எம்குலமக்கள் வாழ்ந்தது பழையகாலம் இப்போதில்லை என்பதை மறந்துவிட்டீர்களா? என்று தன் குடும்ப குலத்தொழிலின் இழிநிலையை உடைத்தெறிபவளாகக் காணப்படுகிறாள் மாங்கனி. அதே நேரத்தில் அடலேறு நடந்து கொண்ட பெருந்தன்மையினை நினைத்து அவன் மீது காதல் கொள்பவளாகவும் இருக்கிறாள்.

### 3.6.2.2. மாங்கனியின் கற்பு

‘தாசிகுலம்’ என்பது தொடர்ந்து அனுபவித்துவரும் கொடுமையாக இல்லாமல் மாற்றிக் காட்டுவோம் என்று போராடத் துடிக்கும் ஒரு பெண்ணின் மனவேதனையில் கற்பொழுக்கத்துடன் மாங்கனியைப் படைக்க நினைத்துள்ளார் கவிஞர் கண்ணதாசன்.



**குறிப்புகள்**

மாங்கனி காவியத்திலும் 'கற்பு' பற்றிய சிந்தனைகளைப் பல இடங்களில் பரவ விதைத்திருக்கிறார்.

**'மண்ணான தாசிகுலம் பிறப்பாலன்றி**

**மடிதொடர்ந்து வரும என்று நினைக்கலாமோ?**

என்று தனக்குப் பிடிக்காத ஒருவனை மணக்க வற்புறுத்திய தாயின் வறுபுறுத்தலை எதிர்த்துப் பேசுகிறாள் மாங்கனி.

மாங்கனியின் மீது காதல் கொண்ட அடலேறு நள்ளிரவில் வீடுதேடி வருகிறான். அந்த நேரத்தில் அவனை எதிர்பார்க்ககாத மாங்கனி,

**'தீங்கு நினை வுற்றீரோ அமைச்சர் பிள்ளை,**

**தேவடியாள் குலந்தான் நான்; குணத்தில் அல்ல!**

என்று பேசுவதன் மூலம், கற்பின் சிந்தனையை மாங்கனியின் கோபத்திலும், அதனைப் பற்றிச் சிந்திக்கச் செய்கிறார் கவிஞர்.

தாசிமனை என்று நினைத்து, எந்த நேரத்திலும் சென்று பேசலாம் என்று வருவது வீரமகளுக்கு அழகா? என்று அடலேறுவைப் பார்த்து கோபமாகக் கேட்டாள் மாங்கனி.

**கள்ளமனம் எம்குலத்தில் பழைய சொத்து**

**காளையதைக் கொண்டுவரல் நன்றேயல்ல!**

என்று, தான் பெண் கேட்கவே வந்தேன் என்று சொன்ன அடலேறுவைப் பார்த்துப் பேசுவளாகவும், மாங்கனி உருவாக்கப்பட்டிருக்கிறாள்.

அதே நேரத்தில், அமைச்சர் மகன் படம் எடுக்கும் நாகம் போல் வந்திருந்து தன்னைக் கெடுத்துவிட்டிருந்தால் என்ன செய்திருக்க முடியும்? நீதி கிடைத்திருக்கும். ஆனால் அழிந்துவிடும் கற்பினை யார் தருவார்? என்ற சிந்தனை வரிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் கற்பின் மேன்மையை உணர்ந்தவர்கள் என்பதையும், பெண்மையைப் போற்றுபவர்கள் என்பதையும் கவிஞரின் கவிதைகள் மூலம் நம்மால் உணர முடிகிறது. மோகூர் நாட்டின் மீது போர்த் தொடுத்துச்

சென்ற அடலேறுவும் மாங்கனியும், அந்நகரின் எல்லையில் தனித்தனியே கூடாரம் அமைத்துத் தங்குகின்றன. நள்ளிரவில் மாங்கனியும் அடலேறும் கொள்ளைப் பெருமயக்கத்தில் குடமதுவைக் கிண்ணத்தில் கொட்டிக் குடிப்பது போல, பிரிய மனமில்லாமல் பேசிக் கொண்டிருந்த பொழுது விடிகிறது. இதனைப் பற்றி சொல்கின்ற கவிதை அடிகளில்,

**அடுத்தார் குடித்தார் அல்லும் மெல அகன்று**

**விடியும் வரைக்கும் விலகவில்லை தங்களிரு**

**மெய்யும் துயிலவிலை! அனாலும் அவ்விரவு**

**களங்கப் படவுமிலை! கட்டழகர் தென்னரன்றோ!**

என்று காதலிருவரும் கற்புடன் இருந்தனர் என்பதை கவிஞர் அழகாக எடுத்தியம்புவதைக் காணலாம். மாங்கனியும் அடலேறும் மகிழ்ந்து பிரிக்கின்றனர். அந்த பிரிவில் கூட,

**அடைந்த நன் மார்பை விட்டுக்**

**கள்ளியின் நடையில் அந்தக்**

**களங்கமில் கன்னி சென்றாள்!**

என்று மாங்கனியின் சிறப்புப் பேசப்படுகிறது.

சேரர் படை மோகூரை வளைத்துவிடுகிற சூழலில், கட்டுப்பாடற்ற சில சேர வீரர்கள் கண்டவரைக் கைதொட்டு இழுத்து, அக்கிரமச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அப்பொழுது, பாண்டிய நாட்டுப் பெண்கள் சிலர் அந்த வீரர்கள் சிலரை வெட்டுகின்றனர். இதனைப் பற்றிச் சொல்ல நினைத்து, கவியரசர்,

**தட்டுப் பாடானாலும் கற்பை விற்கச்**

**சம்மதியார் நற்குலத்திற் பிறந்த மக்கள்!**

என்று பாண்டிய நாட்டுப் பெண்களின் கற்பின் சிறப்பினைக் குறிப்பிடுகிறார்..

சேரரின் படை பாண்டியனின் மோகூர் எல்லையில் தங்குகிறது. அந்தப் படைகளின் எண்ணிக்கையைப் பற்றி உளவறிய வருகின்றான். பழையனின் படைத்தலைவன் மலைமேனி என்பவன். அப்பொழுது அங்கிருந்த மாங்கனி மற்றும் பிற மகளிரைப் பார்த்தவுடன் அட்டூழியங்களைச் செய்கின்றான். பல பெண்கள் மயங்கி வீழ்கின்றனர். மாங்கனியைத் தொட்டு இழுக்க வந்த மலைமேனியின் தலையில் ஒரு பலகையால் அடித்து அவனைச் செயல் இழக்கச் செய்கிறாள்.

**சறுக்காத பாதத்தாள் உயிரே யன்றித்**

**தடங்கற்பைப் பலிகொள்ள இசையா ளானாள்!**

என்று மாங்கனியின் கற்புத்திறம் கவிஞரால் பேசப்படுகின்றனர்.

மலைமேனியை வீழ்த்திவிட்டுப் போராடிப் பிறகு தப்பித்துச் செல்கிறாள் மாங்கனி போராடி ஓடும்போது பள்ளமொன்றில் விழுந்து விடுகிறாள். நெற்றி, பிளந்து போகுமளவிற்கு காயமுறுகின்றாள். ஆனாலும் கற்பை இழக்காதவளாய் பெருமிதம் கொள்கிறாள். இதனை,

**“தாசி மகள் என்றாலும் கற்புக் காக்கும்**

**தமிழ்மகள் சேரமகள் முர்ச்சையாக”**

என்று கவிஞர் தமிழ்ப் பெண்களின் கற்பின் மேன்மையை உயர்வாகச் சுட்டுகிறார். மாங்கனியையும் மற்றும் நான்கு பெண்களையும் மலைமேனி ஆட்கள் சிறையிலிட்டுள்ளனர். நினைவு திரும்பிய மாங்கனி, மற்ற நால்வரையும் பார்க்கின்றாள்.

**“பெண்ணமுத நால்வரையுங் கண்டாள்; வாயிற்**

**பேச்சின்றி முகம்பார்த்தாள் கற்பின செல்வி”.**

என்று பேச்சிழந்த நிலையிலும் தன்னைச் சார்ந்தவர்களைப் பார்த்து ஆறுதல்படும் மாங்கனியின் படைத்திருப்பதை அறிய முடிகிறது.

மலைமேனி எனும் மிருகத்திடமிருந்து மீட்டுத் தனிவேலன் என்னும் சேரநாட்டு வீரனிடம் அகப்படுகிறாள் மாங்கனி. தனிவேலனும் மாங்கனியை வைத்துப் பொன்னைப் பெற்றுவிட விரும்பி 'சூரபதன்' என்பவனிடம் விற்று விடுகிறான். கோலைகாரச் சூரபதன் 'என்ன கொடுமை செய்வானோ?' என்று மாங்கனியும் ஏங்கி இருக்கிறாள். இதனை வெளிப்படுத்த விரும்பிய கவியரசு கண்ணதாசன்,

**"விலைமாது விலையானாள்; வேங்கை வாயில்**

**கலைமானாய் அடைப்பட்டாள்; கற்பும் இந்நாள்"**

என்று மாங்கனியின் பாத்திரப் படைப்பைப் பேச நினைக்கும் போதெல்லாம், கற்பின் திறத்தைப் பற்றிப் பேசுவதைக் காணலாம். இவ்வாறு மாங்கனியில் மகளிரின் கற்பு பற்றிய சிந்தனைகளைக் கவியரசு; கண்ணதாசன் உரக்க வெளிப்படுத்திச் செல்வதைக் காண முடிகிறது.

### 3.6.2.3. போராட்டமும் முடிவும்

மலைமேனி எனும் கொடூரன் தன்னை மானபங்கம் செய்ய முயற்சி செய்த போது அவனை எதிர்த்துப், போராடி வீழ்த்தித் தப்பித்து ஓடிவரும் பெண்ணாகக் காட்சியளிக்கிறாள். பெண்குலமே காணாத துன்பத்தைக் காதலுக்காகப் படுபவளாக மாங்கனி படைக்கப் பட்டிருக்கிறாள். தன் காதலன் இன்னொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான் என்பதை அறிந்த மாங்கனி, தனிமைக்குள் உடல்வேக நிற்கிறாள். தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேகமாக ஓடி மறையும் துன்பப் பாத்திரப்படைப்பாக இறுதியில் படைக்கப்பட்டிருக்கிறாள். நடன மங்கையாகத் தொடங்கி, அமைதியாக முடியும் மாங்கனியின் கதை இணையில்லாச் சேரநாட்டுக் காதல் கதை என்பதை நினைவுறுத்துகின்றது.

## 3.7. அடலேறு - மாங்கனியின் காதல் உணர்வு

மாங்கனி குறுங்காவியம் முழுவதிலும் காதலின் வெளிப்பாடுகளைப் பல நிலைகளில் உணர்த்தியுள்ளார் கண்ணதாசன்.

**'தலையிருக்கும் பாரத்தை இறக்கி வைக்க**

**வழியிருக்குஞ் சாலைதனில், ஆனால் காதல்**

**குலையிருக்கும் நெஞ்சத்தின் பாரமொன்றும்**

**குறையா தென்று! அரற்றினான் கொற்றவீரன்"**

என்று, மாங்கனியின் கண் சுழற்சியால் அகப்பட்ட அடலேறுவின் காதல் வளர்ந்து தனிமையில் முதன்முதலில் சந்திக்க முயல்கின்றனர்.

**'மாங்கனி" என்றான் வீரன்; மாங்கனி காதல் மீறித்**

**'தாங்குவீர்" என்றாள்! தாங்க, தளிர்க்கொடி சுற்றிக் கொண்டாள்,**

**'நிங்கிடேன்' என்றாள் மெல்ல**

என்று, காதலில் அகப்பட்டவர்களின் சந்திப்புப் பற்றிப் பேசுகிறார் கவிஞர் கண்ணதாசன். மேலும் காதல் வெள்ளத்தில் சிக்கிச் சிதறுண்டு தத்தளித்த அடலேறுவின் மனத்தை,

**'பாறைக்கல் பள்ளத்தில் விழுந்தாற்போலப்**

**படுக்கையில் அடலேறு வந்து வீழ்ந்தான்**

**சிரத்துடு மலர்ப்பட்டுச் 'சில்' லென்றேறி**

**சிலையாக மூச்சின்றி நின்றான் மைந்தன்!"**

என்று, காதல் வயப்பட்ட மனத்தை நம் கண்முன் நிறுத்துகிறார் கவிஞர்.

காதலர்கள் இருவரும் பேச ஆரம்பித்துவிட்டால், நேரம் ஆனதைப் பற்றிக் கவலையே படமாட்டார்கள். அதே நேரத்தில் பிரிய வேண்டிய கட்டாயமான பகல் நேரம் அரும்புகிறது. பிரிய மனமில்லாதவர்களாய் இருக்கின்றனர்.

**'அடுத்தார் குடித்தார் அகன்றுவிட மனமின்றி**

**அடுத்தார் குடித்தார் அல்லும் மெல அகன்று**

**விடியும் வரைக்கும் விலகவில்லை தங்களிரு**

**மெய்யும் துயில விலை!□**

என்று மாங்கனி- அடலேறு பிரிவின் துன்பத்தைப் பற்றிப் பேசுகிறது காவியம். மாங்கனியை விட்டு இறுதியாகப் பிரியப் போகும் அடலேறுவின் நிலையைப் பற்றிப் பேச நினைத்த கவிஞர்,

**பேச்சினை முடிக்கமுன்னே**

**பிறிதொரு முத்தம் வைத்தப்**

**பெருஞ்சுவை எடுத்துக் கொண்டான்**

என்று, இனி 'இதுபோல் சுகம்பெறுதல் முடியாது' என்பதை இக்கவிதை அடிவரிகளில் நமக்கு முன்னதாகவே உணர்த்துகிறார். இவ்வாறு கவிஞர் கண்ணதாசன் மாங்கனி காவியம் முழுவதிலும் காதல் உணர்வை மிகவும் சிறப்பாகக் கவிதைப் படுத்தியிருக்கிறார்.

## 3.8. காப்பியச் சிறப்பு

மாங்கனியின் பல சிறப்பு வாய்ந்த உவமைகள் கையாளப்பட்டுள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களின் தாக்கமும் காணப்படுகின்றன. தமிழ்மொழியின் சிறப்புக் கூறுகளும் கூறப் பட்டுள்ளன. இவை காப்பியத்தின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

## 3.9. உவமைகள்

உவமை எனப்படுவது கவிஞன் தான் கூறக் கருதிய பொருளைத் தக்க ஒப்புமைக் கொண்டு உணரச் செய்யக் கையாளும் உத்தியாகும். உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவன் உயர்ந்தவனாகின்றான் என்பதைப் போல உயர்ந்த உவமைகள் சிறந்த படைப்புகளுக்குக் காரணமாகிறது.

மாங்கனி காவியம் முழுவதும் 108 உவமைகளைக் கையாண்டுள்ளனர். ஒரு பொருளின் தன்மையினைப் பறைசாற்றவும், ஆடவர், பெண்டிரின் அழகினைப் பற்றி விளக்கிடவும், கதை மாந்தர் சிலரின் இன்ப, துன்பங்களை

வெளிப்படுத்தவும், இயற்கை எழிலை வெளிக் கொணரவும் என உவமைகள் மாங்கனியில் மிளிர்கின்றன.

**"காற்றுக்கு முருங்கை மரம் ஆடல்போலும்**

**கடலுக்குள் இயற்கைமடி அசைத்தல் போலும்**

**நாற்றுக்குள் இளங்காற்று நடித்தல் போலும்**

**நல்லோர்தம் அவைக்கண்ணே நடனமிட்டாள்".**

என மாங்கனியின் நடனச் சிறப்பினை உவமைகள் மூலம் விளக்குகிறார் கவியரசு கண்ணதாசன் விரலுக்குச் செங்காந்தளும், அவளது வடிவ அழகிற்குப் பொன்கட்டிச் சிலையும், சிரிப்பும் முல்லைப் பூவும் உவமையாக, பெண்கள் நடந்து செல்வதைப் பசுக்கூட்டங்கள் நடப்பது போல என உவமைகளை நிரப்பி மாங்கனியைப் படைத்திருக்கிறார். கவிஞர்

**ஆடவரைப் பற்றிக் குறிப்பிடும் போது**

**நடையினிலே ஆடவர் சிம்மம் போலும்**

என்றும் உறுதிவாய்ந்த உடம்பிற்கு 'மலையை' போல என உவமையாகவும், மலைமேனி வீரரெல்லாம் திரண்டு வந்து என்றும் மாங்கனியில் பயன்படுத்தியிருப்பது புலனாகிறது. இழிவான செயல்களைச் செய்பவர்களை நாய்க்கு ஒப்பிட்டுப் பேசுவதைக் காணலாம்.

தெருவிலுள்ள நாய் போல் இழுக்கச் செய்வேன் என்று பெண்களை அவமானப்படுத்தும் சில வீரர்களைச் சாடுகிறார். போர்க் காலங்களில் நடனமாடுவதற்கும், பாட்டுப் பாடுவதற்கும் மங்கையை அழைத்துவரும் வீரனுக்கும் பறவையை உவமைப்படுத்தி, அப்படிப்பட்ட பெண்கள் வேண்டாம் என்று சொல்வது போல

**நடையிலே வாத்துப் போலும்**

**நயக்குரல் காகம் போலும்**

எனும் கவிதை அடிகளில் உவமைகளைப் பயன்படுத்தியிருப்பதை அறியலாம். அடலேறும், மாங்கனியும் ஒன்றிப் போய் காதல் மொழி பேசி மகிழ்கின்றனர். இதனை

**மறுவொன்றும் இல்லாத தந்தப் பேழை**

**வைரத்துப் புதைந்துள்ள தன்மை போலும்**

என்று உவமையின் மூலம் ஒருவரோடு ஒருவர் கொஞ்சி மகிழும் தன்மையை விளக்குகிறார் கவிஞர். மாங்கனியைப் பிரிந்து வந்த ஏக்கத்திலேயே அடலேறு தன் அறையில் உள்ள கட்டிலின் மீது விழுகிறான். இது

**"பாறைக்கல் பள்ளத்தில் விழுந்தாற்போலப்**

**படுக்கையிலே அடலேறு வீழ்ந்தான்"**

என்று உவமிக்கப்பட்டுள்ளது.

கொலைகாரக் கொடு மனதுடையவனாக பாதகன் மலைமேனி மங்கையரை அடையச் செல்கின்ற தன்மை "புறா பிடிக்கப் போவான் போலவும்" என்று உவமிக்கப்படுகிறது.

மாங்கனியின் நடன அழகில் மயங்கி மனத்தைப் பறிகொடுத்து நின்றான் அடலேறு. இந்நிலை,'அப்போதே பிறந்தவன் போல் விழித்தான்' என்று உவமிக்கப்பட்டுள்ளது. இதுபோல காப்பியம் முழுமையிலும் கற்பிற்கு, கலைக்கு, அழகுக்கு என உவமைகளின் அணிவகுப்பு நடத்தி மானுடச் சாதியின் மகத்துவத்தைக் காப்பிய நிலையில் அமைத்துள்ளார் கவியரசு கண்ணதாசன்.

## 3.10. தொகுத்துக் காண்போம்

- புதுக்கவிதை வடிவில் காப்பிய இலக்கணத்தைப் பொருத்திப் பார்ப்பது குறித்து தெரிந்துகொண்டீர்கள்.
- கற்பனை அனுபவத்தை மொழிச் செறிவுடன் அமைப்பது குறித்து புரிந்துகொண்டீர்கள்.

➢ இசை, நடனம், கலை போன்ற அழகியல் தன்மைகளைப் புரிந்துகொண்டீர்கள்.

**3.11. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்**

1. மாங்கனியின் ஆசிரியர் யார் ?

______________________________

2. மாங்கனி காவியம் எழுந்த சூழல் ?

______________________________

3. கவிஞர் கண்ணதாசனின் இரண்டு படைப்புகள் கூறுக.

______________________________

4. மாங்கனியின் காதலன் யார் ?

______________________________

5. மாங்கனியில் இடம்பெறும் சேர அரசன் பெயர் குறிப்பிடுக.

______________________________

## 3.12. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. மாங்கனியின் அழகினைக் கண்ணதாசன் எவ்வாறு அறிமுகம் செய்கிறார்?
2. மாங்கனியின் ஆடல் அழகினைக் கவிஞர் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
3. காதல் பற்றிய கவிஞர் கண்ணதாசனின் கருத்துக்களுக்குச் சான்று தருக.
4. கவியரசு கண்னதாசனின் மொழிப்பற்றுக்குச் சான்று தருக.
5. மாங்கனியில் பயிலும் சில உவமைகளை எடுத்துரைக்க.

## 3.13. மேலும் பயில்வதற்கான நூல்

1. மாங்கனி – கவிஞர் கண்ணதாசன் - கண்ணதாசன் பதிப்பகம் - பதிப்பு 2017

# பிரிவு – 2 : புதுக்கவிதை

## கூறு - 4 : புதுக்கவிதைகள் - கவிஞர்கள், மீரா – ஊசிகள், மு.மேத்தா – ஊர்வலம்



குறிப்புகள்

4.1. முன்னுரை

4.2. குறிக்கோள்கள்

4.3. கவிஞர் மீரா

4.4. ஊசிகள்

4.4.1. வேகம்

4.4.2. தமிழ்ப்பற்று

4.4.3. சுரண்டலாமா?

4.4.4. வறுமையே வெளியேறு

4.4.5. மேயர் மகன் தோட்டி மகனுக்குக் கூறியது

4.4.6. காதலோ காதல்

4.4.7. பழக்கம் பொல்லாதது

4.4.8. வயிற்றுப்பா(ட்)டு

4.4.9. ப(ா)ட்டி மன்றம்

4.4.10. ஆனை மாதிரி

4.4.11. பொறாமை

4.5. ஊர்வலம்

4.5.1. மீண்டும் நான் வாழ்ந்து பார்க்கிறேன்

4.5.2. அரசியலின் நிலையற்ற பண்பு

4.5.2.1. கோடும், கோலமும்

4.5.2.2. அரசியல்

4.5.2.3. முன்னும் பின்னும்

4.5.2.4. பொருளாதாரம் முதல் தேதி

4.5.2.5. புயலுக்கு முன்

4.5.2.6. நிலா, வானம், நட்சத்திரம்

4.5.2.7. துணை

4.5.2.8. எழுத்துக்கள்

4.5.2.9. சுதந்திர சிந்தனைகள்

4.5.2.10. ஒரு தலைவனின் மரணம்

4.5.2.11. கங்கா கடிதம் எழுதுகிறான்

4.6. தொகுத்துக் காண்போம்

4.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

4.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

4.9. மேலும் பயில்வதற்கான நூல்

## புதுக்கவிதைகள்

### ஊசிகள்

### - கவிஞர் மீரா

## 4.1. முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேலை நாட்டு இலக்கியத் தாக்கத்தால் தமிழில் தோன்றிய புதிய இலக்கிய வடிவம் புதுக்கவிதை. புதுக்கவிதை வரவால் தமிழில் ஏற்கனவே இருந்த இலக்கண வரம்புடை கவிதைகள் “மரபுக் கவிதைகள்” என்று அழைக்கப்பட்டன. மரபுக்கவிதையில்

செய்யுள் உறுப்புக்கள் அனைத்தும் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால் புதுக்கவிதைக்கு இவை எதுவும் தேவையில்லை. கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படுவது புதுக்கவிதை. இத்தகைய புதுக்கவிதைக்கு இலக்கணக் கட்டுப்பாடு எதுவும் இல்லை என்பதைக் கவிஞர் மு. மேத்தா கூறுகிறார்.

செய்யுள் இலக்கணத்தைத் தவிர்ப்பதால் புதுக்கவிதைத் தன் அனைத்துச் சக்திகளையும் முழுமையாக வெளிப்படுத்தும் வலிமையைப் பெறுகின்றன என்பதை

**"யாப்புடைத்த கவிதை**
**அணையுடைத்த காவிரி**
**முகில்டைத்த மாமழை**
**முரட்டுத் தோலுரித்த**
**பலாச் சுளை"**

என்று மேத்தா விளக்குகின்றார்.

பாரதியார், ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், வல்லிக்கண்ணன், சிற்பி, மீரா, மேத்தா, அப்துல் ரகுமான், தமிழன்பன், வைரமுத்து தமிழ்நாடன் ஆகியோர் தமிழ்ப் புதுக்கவிதை உலகத்தில் தடம்பதித்தவர்கள் ஆவார்.

## 4.2. குறிக்கோள்கள்

- இலக்கிய வகைமைகளில் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகப் படைக்கப்படுகிற புதுக்கவிதைகள் கொண்டுள்ள பாடுபொருள், உத்தி, கற்பனை, ஆகியவை குறித்து இப்பாடத்தில் அறிந்து கொள்வீர்கள்.
- சமுதாயத்தை பிரதிபலிக்கிற வகையில் அமைந்திருக்கிற கவிதைகள் வழியாக சமகால நடப்பியலைப் புரிந்து கொள்வீர்கள். .
- எளிமையான வடிவம் கொண்டிருக்கும் கவிதைகள் படிப்போருக்கு எளிதாகும் வண்ணம் பொருள் விளங்கிக் கொள்வீர்கள்

## 4.3. கவிஞர் மீரா

நடையில் எளிமையும்,கருத்தில் வலிமையும் கொண்டு தமிழ்க்கவிதை மரபின் தனக்கெனத் தனி இடத்தை வகித்திருப்பவர் கவிஞர் மீரா அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கையில் 10.10.1938 இல் பிறந்தார். பெற்றோர் மீனாட்சி சுந்தரம் - இலக்குமி அம்மாள்.

மரபுக்கவிதை, வசனக்கவிதை, புதுக்கவிதையின் சாதனைகள் செய்தவர். பல்வேறு இலக்கிய இதழ்களின் ஆசிரியர் மதுரை தியாகராசர் கல்லூாயில் தமிழ்ப் போராசிரியாகப் பணியைத் தொடங்கி, முதல்வர் பொறுப்பு வரை உயர்ந்து ஒய்வு பெற்றவர். இயற்பெயர் மீ.ராசேந்திரன். இவர், இராசேந்திரன் கவிதைகள், மூன்றில் ஆறும், கனவுகள், கற்பனைகள், காகிதங்கள், ஊசிகள், கோடையும் வசந்தமும், குக்கூட ஆகிய கவிதைநூல்களையும், உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார்.

## 4.4. ஊசிகள்

### 4.4.1. வேகம்

அரசியல், சமூகச் சிந்தனைகளைத் தனது கவிதைகளில் பதிவு செய்தவர்.கட்சி விட்டு கட்சி மாறும் இன்றைய அரசியல்வாதிகளை இவரது வேகம் கவிதை மிக இயல்பாக படம் பிடித்துக் காட்டுகிறது.

**எங்கள் ஊர் எம்.எல்.ஏ**

**ஏழுமாதத்தில்**

**எட்டுத் தடவை**

**கட்சி மாறினார்**

**மின்னல் வேகம்**

**என்ன வேகம்?**

**இன்னும் எழுபது**

**கட்சி இருந்தால்**

**இன்னும் வேகம்**

**காட்டி இருப்பார்......**

**என்ன தேசம்?**

**இந்த தேசம்?**

கட்சி விட்டு கட்சி தாவுவதையும், நோக்கமில்லாத இன்றைய அரசியலின் யதார்த்தப் போக்கையும் வேகம் கவிதை எடுத்துரைக்கிறது.

**4.4.2. தமிழ்ப் பற்று**

மொழிப்பற்றில் மிஞ்சி இருப்பதாகக் கூறிக் கொள்ளும் அறிஞர்களும், மொழியின் வழியே எழுத்துத் திருத்தத்தை கொடுக்க நினைக்கிற அளவு சமூகத் திருத்தத்தைக் கொண்டுவர முடிவதில்லை என்பதைத் தமிழ்ப்பற்று கவிதை கூறுகிறது.

**தேவ பாஷையில்**

**தேர்ச்சி மிக்க**

**சாஸ்திரி ஒருவர்**

**சபையில் சொன்னார்;**

**"ஜாதி வேண்டும்"**

**"ஜாதி வேண்டும்;"**

**உடனே சீறி**

**ஒருதமிழ் மறவர்**

**ஓங்கிக் கத்தினார்;**

**ஓய் ஓய், இனிநீர்**

**ஜாதி வேண்டும்**

**என்றால் பொறுமையாய்**



**குறிப்புகள்**

**இருக்க முடியாது என்னால்**

**சரியாய்ச்**

**சாதி வேண்டும்**

**என்றே சாற்றும்.''**

**4.4.3. சுரண்டலாமா?**

சமூகத்தின் ஏற்றத் தாழ்வினையும், தாழ்ந்து போன மக்கள் மேன்மேலும் சுரண்டப்படுவதையும், சுரண்டலாமா கவிதை கூறுகிறது.

**விழித்துப் பார்த்தேன்**

**விரலை மெதுவாய்க்**

**கடித்தொரு பாச்சை**

**கால்வாங்கியது.**

**பதைத்துக் கேட்டேன்;**

**"பாவப் பூச்சியே!**

**கட்டை விரல் ஏன்**

**தட்டுப் படாமல்**

**போனதுன் கண்ணில்?**

**மெலிந்திருக்கின்ற**

**சுண்டு விரலைச்**

**சுரண்டலாமா?**

**சுரண்டலாமா?**

**சுரண்டலாமா?''**

**4.4.4. வறுமையே வெளியேறு**

தலைவர்கள் மேடையில் ஒரு வாழ்வும், நடப்பில் நேர்மாறான வாழ்வும் வாழ்வதை, மேடையில் வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற தலைவர் திருமணப்

பந்தியில் பசியோடு உணவருந்திய ஏழையை உதைத்து வெளியே தள்ளியதில் உணர்த்துகிறது.



**எட்டு மாதமாய்**
**எங்கள் தலைவர்**
**தெருவில் நின்று**
**செழிக்கச் செய்தார்**
**முழக்கம்....**
**வறுமை**
**வெளியே றிற்றா**
**விரைவாய்....?**
**நேற்று**
**செட்டியார் வீட்டுத்**
**திருமணப் பந்தியில்**
**எதுவும் பேசாது**
**எங்கள் தலைவர்**
**எட்டி உதைத்தார்....**
**வறுமை,**
**வேக வேகமாய்**
**வெளியேறிற்று**
**பரட்டைத் தலையும்**
**எலும்பும் தோலும்**
**கிழிந்த தந்தையுமாக!**

### 4.4.5. மேயர் மகன் தோட்டி மகனுக்குக் கூறியது

உயர்பதவியில் இருப்பவர்கள் ஊரையே கொள்ளையடிக்கும் செய்தியை மேயர் மகன் தோட்டி மகனுக்குச் கூறியது கவிதை எடுத்துரைக்கிறது.

**குப்பா! குப்பா!**

**உன்னைப் பெற்ற தந்தைக்கு**

**உன்னைத்தானே**

**அடிக்கத் தெரியும்**

**என்னைப் பெற்ற தந்தைக்கு**

**இந்த ஊரையே**

**அடிக்கத் தெரியும்**

**இப்போ தேனும்**

**ஓப்புக் கொள்ளேன்**

**என்றன் தந்தை**

**தானே பெரியவர்.....**

**வணக்கத்திற்குரியவர்....**

### 4.4.6. காதலோ காதல்

மலிந்து போன இன்றைய காதலின் தன்மையைக் கீழ்க்கண்ட கவிதை எடுத்துக் கூறுகிறது.

**காதல் என்ன**

**கத்தரிக் காயா?**

**என்ற தொடர்கதை**

**'இரவில்' எழுதிய**

**வாணிமணாளன்**

**பகலில்**

**வாரச் சந்தையில்**
**கிலோ விலை ரூபாய்**
**இரண்டெனக் கேட்டதும்**
**அயர்ந்தார்; கண்களை**
**அகலத் திறந்தார்,…..**
**காய்கறிக் காரன்**
**கடுப்பில் கேட்டான்**
**'அத்தனை மலிவாய்**
**அள்ளிக் கொள்ள**
**கத்தரிக்காய் என்ன**
**காதலா….?'**

### 4.4.7. பழக்கம் பொல்லாதது

அடுத்தவர் பணத்தை சுரண்டுவதைக் கொள்கையாகக் கொண்ட அமைச்சரின் பழக்கம், பதவியை இழந்த பிறகும் தொடர்வதை பழக்கம் பொல்லாது கவிதை எடுத்துரைக்கிறது.

**ஆரா வமுதன்**
**அமைச்சர் பதவியை**
**இழந்து வருந்தி**
**இருந்த ஓர்இரவில்**
**அருகில் தூங்கிய**
**ஆசை மனைவியைச்**
**சும்மா சும்மா**
**சுரண்டலானார்;**
**அம்மாகேட்டார் ஆத்திரத்தில்;**
**"ஏன்தான் உங்களுக்கு**

**இன்னும் அந்தப்**

**பொல்லாப் பழக்கம்**

**போகவில்லையோ? …..**

### 4.4.8. வயிற்றுப் பா(ட்)டு

வயிற்றுப் பாட்டுக்காக வருணிக்கிற புலவரின் வறுமையை வயிற்றுப் பாடு கவிதை எடுத்துரைக்கிறது.

**என்னை யாரோ**

**என்று நினைத்துப்**

**புலவன் ஒருவன்**

**புகழத் தொடங்கினான்;**

**'நீண்ட கண்கள்**

**கூரிய நாசி**

**அகன்ற நெற்றி**

**அழகிய பற்கள்**

**வயிரத் தோள்கள்**

**மலைபோல் மார்பு,**

**தொடர விடாமல்**

**இடையில் பாய்ந்தேன்;**

**'ஓகே உனக்கு**

**ஒட்டிய வயிறு**

**போலும்…..'**

### 4.4.9. ப(ா)ட்டி மன்றம்

எல்லா நிலைகளிலும் எழுகிற குழப்பத்தையும், சந்தேகத்தையும் பட்டிமன்றம் என்னும் கவிதை கூறுகிறது.

பாட்டி செத்த பத்தாம் வினாடி

பெரிய குழப்பம்-

பிணத்தை

எரிப்பதா புதைப்பதா என்று

உள்ளூர்ப் புலவர் ஓடி வந்தார்

பட்டிமன்றம் வைத்துப்

பார்த்தால் என்ன என்று



### 4.4.10. ஆனை மாதிரி

பதவி ஆசையை எடுத்துரைப்பதாக ஆனை மாதிரி கவிதை அமைந்திருக்கிறது.

அப்பு சாமியின்

அப்பா

ஆனை மாதிரி!

இருந்த போது

எம்.பி.பதவி….

இறந்த போது

சிவலோக பதவி….

அப்பு சாமியின்

அப்பா

ஆனை மாதிரி!

### 4.4.11. பொறாமை

பொறாமை உணர்வு நன்மையைக் கருதி தோன்றினாலும் முடிவது தீமையில் என்பதை பொறாமை கவிதை எடுத்துக் கூறுகிறது.

ஓ! ஓ! செல்வம்

உடைய பெரியீர்!

உங்க ளால்தாம்

பாரி ஆக

முடியவில்லையே…..

அதுகளேனும்

நக்கல்

பாரி ஆகிப்

போனால் என்ன?

புழுங்கி ஏன்நீர்

பொறாமைப் படுகிறீர்?

## 4.5. ஊர்வலம்

### மு.மேத்தா

முகமது மேத்தா, கவிஞர் மு.மேத்தாவாக, கவிதை உலகில் வலம் வருபவர். வளமான கற்பனை, எளிய நடை, எளிய சொல்லாட்சி, மனித உணர்வுகளின் படப்பிடிப்புகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தவர்.

1945, செப்டம்பர் 5, பெரியகுளத்தில் பிறந்தவர். புதுக்கவிதை,சிறுகதை, நாவல், கட்டுரைகள் படைத்தவர். முதற்கவிதைத் தொகுப்பு ‘கண்ணீர்ப் பூக்கள்’. இவருடைய நூல்களுள்,‘ஊர்வலம்’ தமிழக அரசின் முதற் பரிசினைப் பெற்றது. இவரது ‘சோழ நிலா’ என்னும் வரலாற்று நாவல், ஆனந்த விகடன் இதழ் நிகழ்த்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. திரைப்படத் துறையிலும் பல்வேறு பாடல்கள் எழுதியவர்.

### 4.5.1. மீண்டும் நான் வாழ்ந்து பார்க்கிறேன்

தோல்விகளில் இருந்து மட்டுமே வெற்றிகள் பிறக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் தோல்விகளைக் கடந்து தான் வெற்றிகளை அடைய முடியும். அதனை மீண்டும் நான் வாழ்ந்து பார்க்கிறேன் கவிதையின் மூலமாகக் கூறுகிறார்.

மீண்டும் நான்

வாழ்ந்து பார்க்கிறேன்

எனக்கு

வயதாகி விடவில்லை

கைவரை வந்து

காணாமற் போகும்

வெற்றிகளே!

என்

கால்களில் தளையாய்

கனத்துக் கிடக்கிற

தோல்விகளே!

மலைகளில் ஏறித்

திரும்பியவனை

சமவெளியில்

உருள வைத்த

சரளைக் கற்களே!

மீண்டும் நான்

வாழ்ந்து பார்க்கிறேன்

எனக்கு

வயதாகி விடவில்லை!

4.5.2. அரசியலின் நிலையற்ற பண்பு

மாறிக்கொண்டேயிருக்கும் அரசியல் தனக்கேற்ற எல்லையை வருத்துக் கொண்டிருக்கும் அரசியல் வாதிகளின் இயல்பையும், அரசியல் குறிக்கு இலக்காகி பலியாகும் நிலையையும் கீழ்க்கண்ட கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

**4.5.2.1. கோடும், கோலமும்**

**ஜனநாயகம் பரவாயில்லை**

**எப்போதும்**

**ஒரு கோட்டுக்கு**

**உட்பட்டே இருக்கும்**

**தாண்டத் தாண்டக்**

**கோடுகளைத்**

**தள்ளிப் போட்டுக்**

**கொண்டால் -**

**ஜனநாயகம் பரவாயில்லை**

**எப்போதும்**

**ஒரு கோட்டுக்கு**

**உட்பட்டே இருக்கும்**

**4.5.2.2. அரசியல்**

**ஒன்றின்மேல் ஒன்றைக்**

**குறிபார்த்து எறிந்து**

**குண்டு விளையாடினோம்**

**கோலி விளையாடினோம்**

**இன்று**

**எவரைவரோ வந்து**

**ஏறிந்து விளையாட**

**நாமேகுண்டானோம்!**

**4.5.2.3. முன்னும் பின்னும்**

**ஓர் ஊர்வலத்தில்**

**நான் காணமற் போனேன்.**

**என்னைத் தேடி**

**கண்டு கொண்ட போது**

**எனக்காக ஓர்**

**ஊர்வலம் போனது**

**இறுதி ஊர்வலம் - அது**

**இறுதி ஊர்வலம்!**

**4.5.2.4. பொருளாதாரம் முதல் தேதி**

பணத்திற்கு நிரந்தர முகவரியும் கிடையாது. நிரந்தரத் தன்மையும் கிடையாது. சம்பளம் வாங்கிய அன்றே முழுப்பணமும் கரைந்து போவதையும், எதிர்பார்த்துக் காத்திருக்கும் தாயின் தேடலையும் 'முதல் தேதி' கூறுகிறது.

**என்னுடைய சம்பள நாளில்**

**எண்ணி வாங்குகிற**

**பளபளக்கும் நோட்டுகளில்**

**எவரெவர் முகமோ**

**தெரியும் -**

**என் முகத்தைத்**

தவிர!

இந்த

மணியார்டர் பாரத்தில்

நான் எழுதப் போகும்

தொகையை

உற்றுப் பார்க்கின்றன –

தொலை தூரத்து

கிராமத்தில்

ஒரு தாயின்

தளர்ந்த விழிகள்!

**4.5.2.5. புயலுக்கு முன்**

அ□ம்சையில் சுதந்திரம் பெற்றோம். ஆயினும் ஏழ்மையில் இருந்து விடுபடமுடியவில்லை. அதனால் ஏழ்மையை விரட்ட, சுதந்திரத்தை அனுபவிக்க வழிகாட்டியாக கீழ்க்கண்ட கவிதை வழிகாட்டுகிறது.

இந்தியா என்பது அறுபது கோடி

ஏழை மனங்களில் எழுதிய கனவு

இந்தியா என்பது கங்கை காவிரி

இணைந்து நடக்கிற நடைகளின் அழகு!

பச்சை வயல்களும்

பனிமலை நதிகளும்

மட்டுமல்ல

பசித்த வயிறுகளும் தான்

பாரதமாகும்!

இந்தியாவின்

வாழ்க்கைப் பயணத்தில் இதுவரை

வழிப்போக்கர்களாகவே இருந்தோம்

எதையோ தொலைத்துவிட்ட

ஏக்க உணர்வோடு

இறுதிவரை தேடிச் செல்கிற

தேசாந்திரிகளாய்த் திரிந்தோம்

சொந்த மண்ணிலேயே

அன்னியர்போல் உணர்ந்தோம்!

முணுமுணுப்புகள்

முழக்கங்களாகட்டும்!

பெருமூச்சுகள்

புயலாக மாறட்டும்!

**4.5.2.6. நிலா, வானம், நட்சத்திரம்**

கவிஞர்களின் கற்பனை சுவை மிகுந்தது. வானவீதியைப் பார்க்கிற கவிஞருக்கு வெள்ளைவீதியாய் தெரிகிறது.சிவப்பு விளக்கு வீதியில் கற்பனையை செலுத்திகிற கவிஞர், அங்கிருந்து வானவீதியைப் பார்ப்பதாகவும், அதன் பிரதிபலிப்பு வானில் தெரிவதாகவும் கூறுகிறார்.

சிவப்பு விளக்கு

வீதியில்

வென்று கொண்

டிருந்தவன்

அண்ணாந்து

பார்த்தார்

ஆகாயத்தில்

ஒரு

வெள்ளை விளக்கு

வீதி!

குலுக்கி மினுக்கிக்

கண்சிமிட்டிக்

கூப்பிடும்

கூட்டத்தில்

ஒருத்தி மட்டும்

ஊமையாய்

உருண்டு

திரண்டு!

### 4.5.2.7. துணை

நெடுந்துணையாக உடன் வரும் நிழலைக் கூறுகையில்,

உச்சி வெயில்

தலை கொளுத்தும்

பகல் வேளை

ஒரே நிழல்

வழி தேடும்

**கடுங் கோடை**

**நடை ஓட்டம்**

**இடம் பிடிக்கும்**

**அவசரத்தில்**

**நான் நடந்தால்**

**தொடர்ந்து வரும்**

**எனது நிழல்!**

என்று கூறுகிறார்.

### 4.5.2.8. எழுத்துக்கள்

எழுத்து சிலருடைய கைகளில் உருவாகும்போது, அது அவருடைய முகவரியாக மாறுவதை,

**என்னையே நான்**

**கண்டு கொள்ள உதவும்**

**கண்ணாடி!**

**என்னை**

**அறியாதவர்க்கு**

**அறிமுகப்படுத்தும்!**

**புகைப்படம்**

**சில சமயம்**

**அலைநீரில் நிழல்**

**ஒருசில**

**சமயங்களில்**

**கற்களில் என்**

**சிலை வார்ப்பு!**

**முகம் திருப்பிக் கொள்ளும்**

**பகைவரிடமும்**

**எனக்காக வாதாடும்**

**இன்னொரு**

**முகம்…..**

**சிலருக்கு வெறும்**

**நகம்?**

**எனக்கு**

**முகம்!**

என்ற கவிதை எடுத்துரைக்கிறது.

**4.5.2.9. சுதந்திர சிந்தனைகள்**

இயற்கை வளங்களும், செழிப்பும் நிறைந்த இந்திய மண்ணில் இயற்கையின் சீரழிவு, வன்முறை,ஏழை,பணக்காரன் என்ற பேதம் போன்றவை இம்மண்ணை அழித்துக்கொண்டிருக்கின்றன என்ற உண்மையை கீழ்க்கண்ட கவிதை எடுத்துரைக்கிறது.

**அன்றொரு நாள்**

**அடிமைப் புழுக்களாய்**

**ஆங்கிலத்தின் கைதிகளாய்**

**விடியாத இருட்டுக்கு வருந்தினராய்….**

**எண்ணத்தில் சிந்தனையில்**

**ஏற்பட்ட நோய்களினால்**

மண்ணை அழகு வைத்த மனிதர்களாய்

தலையை நிமிர்த்தாமல்

தலைவிதியை நொந்தவராய்

துப்பாக்கிச் சேவகராய்

துறைத்தனத்தின் ஏவலராய

ஒப்பாரிப் பாடலுக்கு

உரை எழுத வந்தவராய்

வாழ்ந்திருந்த நாட்கள் -

வளர்ந்திருந்த சோகங்கள்

தாழ்ந்திருந்த தேசத்தின் தவங்கள் -

இவையெல்லாம்

முடிந்து சுதந்திரமாய் மூச்சு விட முடிந்த

தங்க நிமிடத்தைத் தரிசித்து இப்போது

ஆண்டுகள் முப்பது ஆகிறது! தேசத்தின்

கண்கள் விழித்துக் கால் நூற்றாண்டோடியது

கால் நூற்றாண்டோடிக் கழிந்தாலும்

பாரதமோ

கால்கள் தடுமாறிக் கண்ணிருண்டு நிற்கிறது!

வானத்தை நரை முடியாய்

வருகின்ற இமயமலை

நாணத்தை ஏந்தி

நடைபயிலும் கங்கைநதி

அலைச்சேலை கட்டிக்கொண்டு
ஆடுகின்ற முக்கடல்கள்
என்ன இருந்தென்ன —
என்ன இருந்தென்ன
எங்களது கண்களுக்கு
வயிறே தெரிகிறது — எங்கள்
வாழ்வே எரிகிறது!
எங்கள்
பாரத தேசத்தின்
பச்சைக் கனவுகள்
அந்த
ஓலைக் குடிசைகளின்
உள்ளே துயில்கின்றன.
தூங்கும் கனவுகளின்
தொட்டிலிலே வாருங்கள்
தாயின் தலைநிமிர் - ஒரு
தாலாட்டு பாடுங்கள்!
ஒரு குடிசையில்
தீபம்
எரியாவிட்டாலும்
இந்திய தேசமே
இருண்டு போய்விடும்!

குறிப்புகள்

கோபுரத்தின் நிழலுக்குக்
குடைபிடிக்கும் காரியத்தைக்
காபந்து செய்வதற்குக்
கணக்கற்றோர் உள்ளார்கள்.
குடிசைகளின் வெய்யிலுக்குக்
குடைபிடிக்க வாருங்கள்!
குண்டு மழை பொழிந்து
குருதி நதி பெருக்கித்
திண்டாடும் உலகத்தின்
தேம்பலுக்குத் தீர்வுண்டா?
இருண்டு கிடக்கும்
இந்த பூமிக்கு
மீண்டும் ஒரு
வைகறைப் பொழுது வருமா?
எனக்கு நம்பிக்கை இருக்கிறது!
மறுபடியும் ஒரு
மகாத்மாவருவான் - அவன்
ஹிம்சையை உபதேசிப்பானோ
அஹிம்சையை உபதேசிப்பானோ
எனக்குத் தெரியாது!
ஆனால்
அவன் பாதங்கள்

பட்ட இடத்தில்

பாவங்கள் கழுவப்படும் - அவனது

கைத்தடி ஓசையில்

சத்தியம் கண்விழிக்கும்!

பூபாளக் கனவுகளில்

புதிய யுகம் புலர்ந்து எழும்!

எனக்கு நம்பிக்கை இருக்கிறது..

மறுபடியும் ஒரு

மகாத்மாவருவான் - அவன்

ஹிம்சையை உபதேசிப்பானோ

அஹிம்சையை உபதேசிப்பானோ

எனக்குத் தெரியாது!

ஆனால் -

இருண்டு கிடக்கும்

இந்த பூமியின் வாசலுக்கு

மீண்டும் ஒரு

வைகறைப் பொழுது

வரவிருக்கிறது!

4.5.2.10. ஒரு தலைவனின் மரணம்

பேரம் பேசும் அரசியல் சந்தையில்

நீ மட்டும்

பதவிகளை

வழங்குபவளாகவே இருந்தாய்

வாங்குபவனாக இருந்ததில்லை!

உன் சொந்தகளுக்கு அர்த்தம் காண

அகராதிகளைத் தேட வேண்டியதில்லை

உன் மௌனங்களுக்குப் பொருள் கூற

அகராதிகரோ இல்லை!

எங்களால் புரிந்துகொள்ள முடிந்த

ஒரே மௌனம் -

உன் இந்தி மௌனம் மட்டும் தான்!

உன் ஒவ்வொரு மௌனமும்

எங்களால் பேசப்பட்டது.

உன் கடைசி மௌனம் தான்

எங்களை

உவமைகளாக்கி விட்டது!

4.5.2.11. கங்கா கடிதம் எழுதுகிறாள்

வால்காவின் வளர்ப்பு மகளே!

சோவியத் பூமியே! சோசலிகத்தின் தாய்வீடே!

கருப்பு மேகம்தான் மழைதரும் என்பார்கள்

உலகில்

சிவப்பு மேகமே மழை பொழியும்

அதிசயத்தைச் செய்தவள் நீ..

நாங்களோ

கன்னியாகுமரியில் கால்விரல் பதித்துக்
காஷ்மீரக் கந்தலுக்கு ரோஜாப்பூச் சூட்டுகிற
இந்தியத் தாயின் இளைய புதல்வர்கள்!
எங்களிடம்
இதயமும் உண்டு இமயப்போல் நிமிர்கிற
இதயமும் உண்டு
கங்கையும் உண்டு கங்கை போல் நீள்கிற
கைகளும் உண்டு!
இந்தியத் தாயும் சோவியத் அன்னையும்
கவந்தவர்கள் தான்.
சிறுமை கண்டு சீரியதால்- நீ
சினந்து சிவந்தாய்
எளிமை கண்டு இரங்கியதால் - நாங்கள்
நாணிச் சிவந்தோம்!
நீ
எங்கள் வாழ்விலும் தாழ்விலும்
சமபங்கு கொண்ட சமத்துவ நண்பன்
ஆரியப்பட்டா வெற்றி ஆரவாரத்திலும்
நெஞ்சைப் பிழியும்
நிலக்கரிச் சுரங்க விபத்தின் அழு குரலிலும்
உன் குரல் ஒன்றாகவே ஒலித்தது – உன்
அன்புக் கரங்கள் தாம் எமக்கு
ஆதரவாய் நீண்டன.

## 4.6. தொகுத்துக் காண்போம்

- தமிழ் உலகில் புதுக்கவிதைகள் குறித்து அறிந்து கொண்டீர்கள்
- சமூக நடப்புகளை கவிதைகள் வழி புரிந்து கொண்டீர்கள்
- கவிதையின் அழகியலை உணர்ந்து கொண்டீர்கள்

## 4.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. ஊர்வலம் நூலின் ஆசிரியர்?

______________________________

2. மீரா- பெயரின் விரிவாக்கம் யாது?

______________________________

3. மு. மேத்தாவின் இயற்பெயர்?

______________________________

4. புதுக்கவிதைக்கு இலக்கணம் தேவையா என்பதைக் குறிப்பிடுக.

______________________________

5. கவிஞர் மேத்தாவின் கவிதைக்கு ஒரு சான்று தருக.

______________________________

## 4.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. இந்தியாவின் நிலையைக் கவிஞர் மு.மேத்தா எவ்வாறு எடுத்துரைக்கிறார்?
2. மீரா-குறிப்பு வரைக.
3. புதுக்கவிஞர்கள் பெயர்களைக் குறிப்பிடுக?
4. மு. மேத்தாவின் கவிதைக் காதலை விளக்குக?
5. புதுக்கவிதைகளின் எளிமைத்தன்மைக்குச் சான்று தந்து விளக்குக?

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

## 4.9. மேலும் பயில்வதற்கான நூல்கள்

கவிஞர் மீரா – ஊசிகள் - அன்னம் பதிப்பகம், சிவகங்கை.

கவிஞர் மு. மேத்தா - ஊர்வலம் - ர**ஹ்**மத் பதிப்பகம்.

தமிழவன் தமிழ்க்கவிதையும், மொழிதல் கோட்பாடும், காவ்யா பதிப்பகம், பெங்களூர், 1992.

## கூறு – 5

இளம்பிறை – **நீ எழுத மறுக்கும் எனதழகு**. ஆ.வெண்ணிலா – **யுத்தம்பற்றி.** கவிஞர் சீராளன் ஜெயந்தன்- **இடைவேளை**. கவிஞர்பிருந்தாசாரதி – **ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடம்**

5.1. முன்னுரை

5.2. குறிக்கோள்கள்

5.3. இளம்பிறை

- 5.3.1. நீ எழுத மறுக்கும் எனதழகு
- 5.3.2. சில்க்ஸ்மிதா என்ற விஜயலெட்சுமிக்காக
- 5.3.3. நாட்டுப்புறப்பாடல்கள்
- 5.3.4. ஆ. வெண்ணிலா
- 5.3.5. யுத்தம் பற்றி

5.4. இடைவேளை – சீராளன் ஜெயந்தன்

- 5.4.1. சீராளன் ஜெயந்தன்

5.5. ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் - கவிஞர் பிருந்தா சாரதி

- 5.5.1. கவிஞர் பிருந்தா சாரதி

5.5.2. ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம்

5.5.2.1. வானவில் விற்பவன்

5.5.2.2. அந்நியமாதல்

5.5.2.3. கூடல் தேசம்

5.5.2.4. வினையெச்சம்

5.6. தொகுத்துக் காண்போம்

5.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

5.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

5.9. மேலும் பயில்வதற்கான நூல்

## கூறு – 5

## 5.1. முன்னுரை

சமூக நடப்புகளைப் பல்வேறு வடிவங்களில் உணர்வுப் பூர்வமாகப் படைக்கும் கவிஞர்கள் பலர் இருக்கின்றனர். ஒருவர் சமகாலப் பதிவுகளைத் தங்கள் கவிதைகளின் வழியாக வழங்கி வருகிறார்கள். அந்த வகையில் கவிஞர் இளம்பிறை, ஆ. வெண்ணிலா, கவிஞர் சீராளன் ஜெயந்தன், கவிஞர் பிருந்தாசாரதி ஆகியோருடைய கவிதைகள் இப்பகுதியில் இடம் பெற்றிருக்கின்றன.

## 5.2. குறிக்கோள்கள்

- சமூக நடப்பியலைப் பதிவுச் செய்யும் கவிதைகள் பற்றி அறிந்து கொள்வீர்கள்.
- பெண்ணியம் கவிஞர்களின் கவி மொழியின் வழி உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள்
- மரபுக் கவிதைக்கும், புதுக்கவிதைக்குமான வேறுபாடுகளைத் தெரிந்து கொள்வீர்கள்

இக்கால இலக்கியம்

குறிப்புகள்

## 5.3. இளம்பிறை

தற்கால கவிதை இலக்கியத்தில் கவிஞர் இளம்பிறையின் கவிதைகள் தனிச்சிறப்பு பெறுபவையாக இருக்கின்றன. சமூகத்தின் நடப்பியல்களை, அவலங்களை உண்மையின் போக்குக் குறையாமல் கவிதை இலக்கியமாகப் படைப்பவர் கவிஞர் இளம்பிறை. இவருடைய இயற்பெயர் க. பஞ்சவர்ணம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சாட்டியக்குடி இவரது சொந்த ஊர் ஆகும். அரசுப் பள்ளி ஆசிரியராக அண்மையில் சென்னையில் பணிபுரிந்து வருகின்றார். இதற்கிடையில் இவரது எழுத்து கவிதைப் பணியினைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றார்.

இவருடைய எழுத்துப்பணி 1988 இல் தொடங்கிறது. இளம்பிறை பலவிதங்களில் முக்கியம் வாய்ந்தவர். கிராமத்தின் அணுக்களில் ஆன வெள்ளந்தி மனது எதிர்க்கொள்ளும் வஞ்சம், போட்டி, ஏழ்மை, பொறாமை, என்று எல்லாருமே தணிக்கை செயல்பாட்டால் மிகவும் நேர்மையான கவிதையாகின்றன. அவர் உழைப்பில் … கவிஞர் இளம்பிறை தமிழுக்குக் கிடைத்த அபூர்வமான கவிஞர் ஆவார்.

இளவேனில் பாடல்கள் - 1988

மவுனக்கூடு - 1993

நிசப்தம் - 1998

நீ எழுத மறுக்கும் எனதழகு – 2007

ஆகிய கவிதைத் தொகுப்புகளை இவர் வெளியிட்டுள்ளார்.

முதல் மனுஷி (2002) எனும் சிறுகதைத் தொகுப்பையும் பதிப்பித்துள்ளார். மேலும் நாட்டுபுறப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

கிராமத்தில் பிறந்த இவர் வட்டார வழக்குச் சுவையுடன் எழுதுவதில் சிறப்பிடம் பெற்றவர். திருவாரூர் அருகே சாட்டியக் குடி என்னும் ஊரில்

பிறந்தவர்.இளவேனில் பாடல்கள், மௌனக் கூடு, நிசப்தம், முதல் மனுசி,நீ எழுத மறுக்கும் எனதழகு ஆகிய கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டவர்.



### 5.3.1. நீ எழுத மறுக்கும் எனதழகு

இளம்பிறையின் காதல் கவிதைகள், வலியும், சணமும் மிக்கவை இஷ்ட தேவதைகளின் வாழ்த்துகளையும், துஷ்ட தேவதையின் சாபங்களையும் இணைத்தே பெற்றிருக்கிறது. காதல்

**"இறந்த பின்பும்**

**ஓரே குழியில் புதைபட வேண்டும்"**

**என்றெல்லாம்**

**பேசிக்கொண்டவர்கள் தாம்**

**காலம்**

**கற்றுத் தந்திருக்கிறது பார்த்தாயா?**

**பார்த்தும் எது குறித்தும்**

**பேசாமல் பிரிவதற்கு**

காலந்தோறும் காதல், தனி மனிதர்களுக்கு இழப்பையும், இலக்கியத்திற்குச் செழுமையையும் அளித்து வருகிறது. இளம்பிறை அதற்கு இன்னொரு சாட்சியம்.

கிராமத்து உணர்வுகளையும், காதலையும் தவிர உலகின் பல்வேறு பக்கங்களையும் இளம்பிறை தொட்டுச் செல்கிறார்.

### 5.3.2. சில்க்ஸ்மிதா என்ற விஜயலெட்சுமிக்காக

இக் கவிதையில்,

**நான் அழுகிறேன் சுமிதா,**

**உன்னோடு ஆடியவரெல்லாம்**

"குடும்பம்... குழந்தை" யென
கௌரவப் பிரஜைகளாய்...
நீ மட்டும் ஏன் பெண்ணே
மண்ணோடு?
என ஆற்றாமையோடு புலம்புகிறார்.
இரவின் வாயில்...
புகைந்து கொண்டிருக்கும்
"சிகரெட்" நான் என்றும்
கண்களுக்குத் துணிவில்லை
மனம்
அண்ணாந்து பார்க்கிறது.
அவமானங்களால்
விரட்டப்பட்ட இடங்களை என்றும்
உதிர்ந்து கொண்டிருக்கும்
தன் இறகுகளை
பூச்சிகள் இழுத்துச் செல்வதைப்
பார்த்துக் கொண்டிருக்கும் பறவைக்கு என்றும்
மனக்காயங்களோடு
புகார் கொடுத்துச் சென்ற பெண்களை
உடற்காயங்களோடு
வெளியே எறிந்த காவல் நிலையங்கள்
பேய் மழையில் நடுங்கி

**ஒதுங்க வர மாட்டேன்**

**உங்கள் கௌரவத்தின்**

**தாழ்வாரத்தில் என்னும்**

நுண்ணிய கவிதை உணர்வுகளை உண்மையான எழுத்தின் வடிக்கும் இளம்பிறை, பாராட்டத்தக்கவர். யாளி, களம், திருப்பூர் தமிழ்ச்சங்கம் விருதுகளும் கவிஞர்கள் தின விருதும் பெற்றவர். திரைப்பட பாடலும் எழுதி வருகிறார்.

**இரவின் மடிமுழுவதும்**

**உதிரும் கவிகள்**

**பொங்கிப் பிரசவிக்கும்**

**ஒத்தச் சொல்லில்**

என்கிறார், இளம்பிறை.

### 5.3.3. நாட்டுபுறப் பாடல்கள்

நாட்டுபுறப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

**சேறு அரித்து**

**சிவந்திருக்கும் கருங்கால்கள்**

**சோற்றுப் பஞ்சத்தால்**

**சுருங்கிவிட்ட வயிறு.**

**“எண்ணெய் தடவு” என்**

**எப்போதும் முடிபறக்கும்**

**இருவிழிகள் ‘சாப்பாடு’ என**

**குழிக்குள் விழுந்திருக்கும்.**

**கண்ணக் குழியல்ல**

கண்ணமே குழியாய்

பல்லோடு பதிந்திருக்கும்

கறுத்த உதடுகள்

வாய்ப்புண்ணாய் வெடித்திருக்கும்.

கவர்ச்சிக்கல்ல

இல்லாத காரணத்தால்

சட்டை கிழிந்திருக்கும்

இழுத்துப் போர்த்த எண்ணி

சேலையும் தோற்றிருக்கும்.

வீட்டிற்குள் வெயிலடிக்கும்

வெந்து மனந்தவிக்கும்

பிள்ளை அழுதிருக்கும்

பேச்சற்று வாய்தவிக்கும்

சொல்லமுடியாத சோகத்தால் கண்கள்

சக்தியற்று நீர் வடிக்கும்.

எனது அழகுகள் எல்லாம்

இதுவரை தெரிந்ததில்லை

உன் எழுத்து விழிகளுக்கு

என் வாழ்க்கைக்குள் வந்ததில்லை

உனது கேமராக்கள்.

குறைந்த பட்சம்

அழகிப் போட்டிகள் நடத்தி

**என்னைப் பழித்துக்காட்டாமல்**

**இருக்கக் கூட**

**நினைப்பதில்லை நீங்கள்.**



செயற்கையான அழகில், சிக்கித் தம்மை அழகின் வடிவமாகவே காட்டத் துடிக்கும் பல பெண்களின் மத்தியில் வறுமையின் பிடியில், வயிற்றுப் பாட்டிற்கு அன்றாடம் தவிக்கும் அவலக் குரலில் மறக்கப்பட்ட இன்றைய அழகு யதார்த்தமாய் வெளிப்படுகிறது.

## 5.3. யுத்தம் பற்றி - ஆ. வெண்ணிலா

### 5.3.4. ஆ. வெண்ணிலா

தமிழகத்தில் பெண்ணிய எழுத்தாளர்களில் தனக்கென்ற சிறப்பான அடையாளத்தைப் பெற்றவர் ஆ.வெண்ணிலா அவர்கள். திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் பிறந்தவர்.

சிறந்த படைப்பாளி என்ற விருதினைச் சென்னை புத்தகக் கண்காட்சி; நெய்வேலி புத்தகக் கண்காட்சிகளில் பெற்றவர்.

சிற்பி அறக்கட்டளை விருதும், கவிப்பேரரசு கவிஞர் தின விருது, ஏலாதி விருது, தமுசெ விருது என 2005 விருதுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

நீரில் அலையும் முகம், ஆதியில் சொற்கள் இருந்தன. கனவைப் போல் ஒரு மரணம், ஆகிய மூன்று கவிதைத் தொகுப்புகளும் பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில் என்ற சிறுகதைத் தொகுப்பும், கனவிருந்த கூடு என்ற காதல் கடிதங்களின் தொகுப்பும், பெண் எழுத்தாளர்கள் வாழ்க்கை பற்றிய ஆவணத்தொகுப்பாக, மீதமிருக்கும் சொற்கள் என்ற தொகுப்பும் இவருடைய நவீன இலக்கியம் மீதான தேடலை எடுத்துரைக்கின்றன.

5.3.5. யுத்தம் பற்றி

யுத்தம் பற்றி எனக்குத்
தெரிந்திருக்க
நியாயமில்லை தான்
ஆண்டுகளின்
புள்ளி விவரங்களாக்கப்பட்டு
பாட புத்தங்களில்
யுத்தங்கள் வந்த பிறகே
பிறந்துள்ளேன் நான்.
விமானம் பறப்பதை
அருகில் பார்க்கவே
25 வருடங்கள் பிடித்த எனக்கு
வெடிகுண்டு வீசும்
விமானங்கள் பற்றிக்
கற்பனை செய்ய முடியவில்லை.
எட்டுக்கு எப்படி
இருட்டறையில் வாழ்ந்து
பழகியுள்ள என்னால்
ஒரளவுக்கு
பதுங்கு குழிகளின்
அனுபவம் உணர முடிகிறது.

வரலாறு பல்வேறு போர்களை உரைத்திருந்தாலும், கேட்பதற்கும் உணர்வதற்குமான வேறுபாடுகள் நிறையவே இருக்கின்றன. யுத்தத்தை பற்றி வெறும் செய்தியாக மட்டுமே கேள்வியுற்ற அனுபவத்தை மையப்படுத்தி யுத்தக் களத்தில் பெறாத அனுபவங்களோடு இணைத்துக் கவிதையைப் படைத்திருக்கிறார்.

## 5.4. இடைவேளை - சீராளன் ஜெயந்தன்

### 5.4.1. சீராளன் ஜெயந்தன்

மிகச்சிறந்த எழுத்தாளுமை ஜெயந்தன் அவர்களுள் ஒருவர். அன்றாட வாழ்வின் நிகழ்வுகளை அரசியலை, அறிவியலை எளிமையோடும் கவிதையழகோடும் படைத்துவருபவர். மின்புறாக் கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பையும், காயம் என்ற சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டவர்.

**“முதுகில் உருண்டு**

**நதியில் விழுந்து கலயம்**

**சாம்பலாய்க் கரைந்தார்**

**கையில் தாங்கி**

**நீந்தச் சொன்ன தந்தை”**

என்ற கவிதை உலகை நீத்த தந்தைக்கு இறுதிக் கடன் செய்து அஞ்சலியைச் செலுத்துவதைப் பேசும் அதே நேரம், இதே கண்ணீர் தனக்கு நீச்சல் பழகச் செய்த நினைவுகளையும் அலையாட வைத்துவிடுகிறது. சீராளன் ஜெயந்தணின் தந்தையான ஜெயந்தன் சிறுகதைகள் மற்றும் நாடகத்தில் குறிப்பிடத் தக்கத் தடயங்களை விட்டுச் சென்றார். இவர் கவிதை வடிவத்தை விரும்பி எடுத்துக் கொண்டிருக்கிறார். முதல் தொகுப்பில் அரும்பி நிற்கும், கவிதைகள், உணர்ச்சிகளைக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு வெளிப்பட்டிருப்பதே அசலான தேர்ச்சியாக இருக்கிறது.

## 5.5. ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம் - கவிஞர் பிருந்தா சாரதி

### 5.5.1 கவிஞர் பிருந்தா சாரதி

பிருந்தா சாரதி என்று அழைக்கப்படுகிற ந.சுப்பிரமணியன் ஓர் இந்திய திரைப்பட இயக்கங்களின் வசன கர்த்தா ஆவார் இயக்குநர் லிங்குசாமியோடு இணைந்து பணியாற்றியவர். தெளிந்த மொழி, குளிர்ந்த சொற்கள் செறிவான சிந்தனை, துல்லியமான வடிவத்தோடு கவிதைகளை எழுதக் கூடியவர். முதல் கவிதைத் தொகுதி நடைவண்டி 1992 இல் வெளிவந்தது.

1965 இல் கும்பகோணத்தில் பிறந்தவர். பெற்றோர் சுபநாராயணன், ருக்மணி ஆவார். மதுரை மாவட்டம் மேலூர் அருகே சண்முகநாதபுரம் இவரது பூர்வீகம் ஆகும். ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடம் 2016 ஆம் ஆண்டுக்கான “ஜெயந்தன் படைப்பிலக்கிய”, விருதைப் பெற்றது. இவரது பிற கவிதை நூல்கள், பறவைகள் நிழல், எண்ணும் எழுத்தும், மீன்கள் உறங்கும் குளம்.

### 5.5.2. ஞாயிற்றுக் கிழமை பள்ளிக்கூடம்

#### 5.5.2.1. வானவில் விற்பவன்

இவருடைய அரசியல் உணர்வுக்கும், கற்பனை அறிவிற்கும் சான்று பகர்கிற முதல் கவிதை வானவில் விற்பவன்

**சாப்பாட்டுக்கடை தேடி**

**அலைந்து கொண்டிருந்தான்**

**வானவில் விற்பவன் ஒருவன்**

**வானவிற்களை வாங்கிக் கொண்டு**

**பண்ட மாற்றாக**

**சாப்பாடு கொடுப்பவர் எவரும்**

**நகரில் தடை வைத்திருக்கவில்லை.**

**அன்று முழுக்க ஒரு வானவில்கூட விற்காத்தால்**

காசு எதுவும் அவன் கையில் இல்லை.

அலுத்து களைத்த அவன்

கைவசம் இருந்த வானவிற்களை

இலவசமாக

யாருக்காவது கொடுத்துவிட்டு

தன் இருப்பிடம் திரும்பும்

முடிவில் இருந்தபோது

வழியில் பார்த்தான்

பள்ளிச்சிறுமி ஒருத்தியை

தன் வானவிற்களைக் அவனிடம் தொடுத்து

உன் தோழிகளுடன்

இதை வைத்து விளையாடு என்றான்.

வாய் கொள்ளாச் சிரிப்புடன்

வாங்கிய சிறுமி

தன் தோள் பையைத் திறந்து

தின்பண்டங்களை எடுத்து

அவனிடம் நீட்டி

என்னிடம் காசு எதுவும் இல்லை

இவற்றை வாங்கிக் கொள்வாயா

என்று பரிதாபமாகக் கேட்டாள்.

சந்தை பற்றி எதுவும் அறியாமல்

வியாபாரம் செய்ய வந்த தனக்கு

தேவதையாய் உதவிய அவளுக்கு
நன்றி கூறி அத் தின்பண்டங்களை
வாங்கி உண்டான்.
வானவிற்களை
இடுப்பில் கட்டிக் கொண்டு
வீட்டை நோக்கிப்
பரவசத்தோடு பறந்து சென்றாள் சிறுமி.
கடவுளின் தேசத்தில்
பங்குச் சந்தையின் மதிப்பு
கிடுகிடு என்று உயரத் தொடங்கியது.

காயத்திற்கு மருந்திடுகிறமனதைத் தேடுவதே மனித வாழ்வின் நெடும்பயணமாக இருக்கிறது. அதனை

ஒரு காயப்பட்ட பறவையைக் கண்டேன்
என் உடைந்த இதயத்திற்கு
ஆறுதல் தேடி
ஆலய நிழலுக்குச் சென்றபோது
வலியில் கடிக்கும்
அதன் இறக்கைக்கு ஒத்தடம் தந்தேன்
என் வலி மறந்து
என்னை அறியாமல் சிந்திய
ஒரு துளி கண்ணீர்
மருந்தானது அதற்கு.

உள நீங்கியதும்

பாடத் தொடங்கியது பறவை

அந்த கீதம் மருந்தானது.

என் உடைந்த இதயத்திற்கு

குணமான பின்

பறந்து விடுவேன் பறவை

என நான் பயந்த போது

அது சொன்னாது;

"பறத்தல் என் இயற்கை

அதற்காகப்

பறந்து கொண்டே

இருக்க முடியுமா?

தரை இறங்கும் போதெல்லாம்

உன் தோளிலேயே வந்து

அமர்வேன்" என்று

பறவைவே....

எனக்கான மருந்தை உன்னிடமும்

உனக்கான மருந்தை என்னிடமும்

ஒப்படைத்திருக்கிறது இயற்கை.

உன் சிறகசைப்பில் நான் இருப்பேன்

என் இதயத்துடிப்பில் நீ இருப்பாய்

என் மருந்து நீ

உன் மருந்து நான்.



குறிப்புகள்

### 5.5.2.2. அந்நியமாதல்

சமூகத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனக்குத் தானே தனிமைப்பட்டு நிற்கும் நிலைகளை வெட்டப்பட்ட ஆட்டுத்தலையோடு ஒப்பிடப்பட்டு அந்நியமாதல் கவிதை கூறப்படுகிறது.

**வெட்டப்பட்ட ஆட்டுத்தலை**

**வெறித்துப் பார்க்கிறது**

**தோலுரித்துத்**

**தொங்கவிடப்பட்டிருக்கும்**

**தன் உடலை**

காதலின் மையப் புள்ளியே அன்பின் பரிமாற்றத்தில், இருக்கிறது என்பதை கூடல் தேசம் கூறுகிறது.

### 5.5.2.3. கூடல் தேசம்

**ஒருவருக்கொருவர்**

**படகாவோம்**

**காதல் கடலைக் கடக்க**

**ஒருவருக்கொருவர்**

**துடுப்பாவோம்**

**கரை தொடாமல் பயணிக்க.**

### 5.5.2.4. வினையெச்சம்

முதுமையின் நினைவுகளை, வினையெச்சம் கவிதை முழுமையான உணர்வுப்புரிதலோடு கூறுகிறது.



**முதுமையின் கட்டலில் முடங்கி**

**நகர முடியாமல்**

வீட்டுத் திண்ணையில்

வெறித்த பார்வையுடன்

கிடக்கும் இக்கணத்தில்

எடை போட்டுப் பார்க்கிறேன்

என் வாழ்க்கையை.

சாப்பாட்டில்

உப்பில்லாமல் போனதற்காக

மனைவி மேல் தட்டை வீசி

எறிந்த கை என்னுடையது

என் வாய்க்கு

எட்டுவதில்லை அது இப்போது.

அவன் தான்

உணவூட்டுகிறாள்

முதுமையில்

இன்னொரு தாய் மாறி.

பொதுத் தேர்வில்

தோல்வி அடைந்து

அவமானத்தால் அதை

மறைத்த

பெரியவனை

எட்டிமிதித்த கால்

அசைக்க முடியாதபடி

மறத்துவிட்டது
அவன்தான் அவ்வப்போது
தைலம் தடவுகிறான்
மூட்டுகளுக்கு.
எப்போதும்
எங்காவது சண்டைபோட்டு
பிரச்சனைகளை
வீடுவரை அழைத்துவரும்
சின்னவனைப்
பிரம்பால் விளாசிய முற்றத்தில்
கால் தடுமாறி விழுந்து
அடிப்பட்டுவிட்டேன்
ஊன்றுகோல் இடறி
அவன்தான் வாங்கி வந்தான்
உலோக நடைப்பயிற்சி சாதனம் ஒன்றை.
வாய்ச்சொல் எவ்வளவு
வலிதரும் என்பதை
என் மகளிடம் தான் அறிந்தேன்
ஒரு நாள் அவளுக்கு யாரோ
காதல் கடிதம் கொடுத்ததை அறிந்து
கடுமையாகத் திட்டியபோது
அந்த நாக்கு

இப்போது குழறுகிறது.

சொற்களை

கூழாங்கல் போல்

உருட்டி

பேசாமல் இருந்தாலும்

தேவைகள் அறிந்து

நடந்து கொள்கிறாள்

அவ்வப்போது இங்கு வரும்போது

காலத்தின் குருதி

நரம்புகளில்

சீராக ஓடியபோது

அதுவே நிரந்தரம்

என்று

கட்டளைச் சொற்களால்

என்னை அறிவித்துக் கொண்டேன்

இப்போது வெள்ளம் விடிந்துவிட்டது

சிறு துளிகள் கசிகின்றன

வழியோரமாய்.

கட்டிலில் கிடக்கிறேன்

வினைப் பயனை சுமந்தபடி

வினையெச்சமாய்

பழைய நினைவுகள்.



குறிப்புகள்

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

*Self -Instructional Material*

## 5.6. தொகுத்துக்காண்போம்

- புதுக்கவிதைக்குக் கையாளும் பொருளைப் புரிந்து கொண்டீர்கள்.
- புதுக்கவிதை எளிமையை தெரிந்து கொண்டீர்கள்.
- புதுக்கவிதைக்கான அழகியலை உணர்ந்து கொண்டீர்களி.

## 5.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. 'நீ எழுத மறுக்கும் எனதழகு' கவிதையில் கூறப்படும் பொருள்?

   ______________________________

2. யுத்தம் பற்றி கவிதையை எழுதியவர் யார்?

   ______________________________

3. இடைவேளை என்ற கவிதைத் தலைப்பு உரைக்கும் கருத்து யாது?

   ______________________________

## 5.8. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. கவிஞர் இளம்பிறையின் கவிதைகளின் வெளிப்படும் சமூக நடப்பியலை எடுத்துரைக்க.
2. 'யுத்தம் பற்றி' கவிதை எதனைப் பற்றி கூறுகிறது.
3. கவிஞர் சீராளன் ஜெயந்தனின் கவிதைகளைப் பற்றிக் கூறுக.
4. 'ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்' கவிதைச் சான்றுகள் தந்து விளக்குக.

## 5.9. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. ஆ-மார்க்ஸ் "ஏதுகவிதை" ராதா பதிப்பகம், புதுக்கோட்டை 1984.
2. "நீ எழுத மறுக்கும் எனதழகு" இளம்பிறை பதிப்பகம், பொன்னி வெளியீடு.

3. ‘‘மின்புறா கவிதைகள்’’ சீராளன் ஜெயந்தன் மெய்ப்பொருள் வெளியீடு.

4. ‘‘ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக் கூடம்’’ பிருந்தாசாரதி டிஸ்கவரி புக் பேலஸ்.



## கூறு – 6 தேனம்மைலட்சுமணன் - சூலும் சூலமும் அன்னப்பட்சி கவிதை - தங்கம்மூர்த்தி கவிதைகள் - என் பண்டிகையின்நாட்குறிப்பிலிருந்து.

6.1. முன்னுரை

6.2. குறிக்கோள்கள்

6.3. தேனம்மை லெஷ்மணன்

6.3.1. சூலும் சூலமும்

6.4. எம்பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து – தங்கம் மூர்த்தி கவிதைகள்

6.4.1. தங்கம் மூர்த்தி

6.4.2. என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து

6.5. தொகுத்துக் காண்போம்

6.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

6.7. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

6.8. மேலும் பயில்வதற்கான நூல்

## கூறு – 6

### 6.1. முன்னுரை

பெண்ணியப் பறவையை உலகெங்கும் பரவலாக, படைப்புகளாக வழங்கி வருகின்றனர். அந்தவகையில் கவிஞர் தேனம்மை லட்சுமணன்

கவிதைகளும், பெண்ணின் வறுமை நிலையை தங்கம் மூர்த்தி கவிதைகளும் எடுத்துரைக்கின்றன.

## 6.2. குறிக்கோள்கள்

- கவிதையின் புதிய பார்வையைப் புரிந்து கொள்வீர்கள்.
- சமூகத்தின் படைப்பாளர்களுக்கான பங்களிப்பினை தெரிந்து கொள்வீர்கள்.
- நவீன இலக்கியத்தின் வளர்ச்சியான அறிந்து கொள்வீர்கள்.

## 6.3. தேனம்மை லெஷ்மணன்

தேனம்மை லெஷ்மணன் கவிஞர், எழுத்தாளர், வலைப்பதிவர், சுதந்திரப் பத்திரிகையாளர். சாதனை அரசிகள், கங்கா, அன்னப் பட்சி, பெண்பூக்கள், சிவப்புப் பட்டுக்கயறு ஆகிய ஐந்து நூல்களின் ஆசிரியர். நான்காம் உலகத் தமிழ் கருத்தரங்கத்தில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

இவருடைய கவிதைகள் ஆங்கிலத்திலும் கன்னடத்திலும் மொழிபெயர்கப்பட்டுள்ளன. சுகி என்ற கன்னடப் பத்திரிகையில் இவரது கவிதையின் மொழிபெயர்ப்பு வெளியாகி உள்ளது.

அன்ன பட்சி நூலுக்காக “அரிமாசக்தி” விருது பெற்றவர்

### 6.3.1. சூலும் சூலமும்

**அவளது அழுகையாலும் புலம்பலாலும்**

**நிலைந்திருந்தது அந்த வீடு**

**தொட்டித் தண்ணீர் கசிந்து**

**ஊறிக்கிடக்கும் புல்தரையாய்**

**மொதும்பி இருந்தது அவளது தலையணை**

**சமையல் மேடையின் தாளிதத்தெறிப்புக்களாய்**

**தரையெங்கும் சிதறிப் பொறிந்து கிடந்தன**

அவளது கண்ணீர்ப் பூக்களின் உப்பு இதழ்கள்.
உலாவரும் கண்ணீர் கதிர்களோடு
தன்சவத்தைத் தானே சுற்றியபடி இருந்தாள் அவள்.
ஓசையற்று ஓலித்துக் கொண்டே
இருந்தன அவளது ஓலங்கள் கேட்பாறற்று.
தனது பிலாக்கணத்தைத் தானே பாடிக்கொண்டு
முடையத் தொடங்கி விடுவாள்
அவ்வப்போது பச்சை ஓலைக் கீற்றுக்களை
சிவப்புப் பட்டால் போர்த்திக் கிடக்கும்
தனது ப்ரேதம் செல்லும் வழியில்
சிவப்பு மார்ந்து விரித்துப் பார்த்துக் கொள்வாள்.
யாருக்குமே கேட்காமல் அவள்
அழுது முடிக்கும் போதெல்லாம்
ஒரு சூலம் முளைக்கும் அவளது ஞானக்கண்ணாய்
எடுத்து வயிற்றிலே செருகிக் கொள்வாள்.
ஏன் சூலுற்றீர்கள் எனப் பெற்றவரை நினைத்து
ஏன் சூலுறவைத்தாய் எனக் கொண்டவனை நினைத்து
என் சூலில் ஏன் பிறந்தீர்கள் என
சூல் கொண்டவர்களை நினைத்து
வயிற்றுப் புண் வேக்காளமாகி
நெஞ்சையும் வாயையும் தாக்கும்வரை
சூலத்தால் குத்தியே மீளாத நரகினில்

**தன்னையே தள்ளிடுவாள்.**

**இந்திய சூலத்தின் ரத்தத்தில்**

**எலுமிச்சையை மாட்டி நிலை நிறுத்திய பின்**

**தொடர்வாள் தன் கடமைகளை.**

**கருவறைக்குள் சக்தி பீடமாய் நிலைநிறுத்தப்பட்டு**

**திருவிழாவின் ஒரு நாளில் மட்டும் தேரோடும்**

**அவளுக்குப் புரிகிறது சக்தியின் பேரெழில் சக்தியை**

**ஒருநாள்கூட யாராலும் தாங்கமுடிவதில்லை**

என்று ஒவ்வொரு பெண்ணும் மகளாக, மனைவியாக, தாயாக பெண்மையோடு, போற்றப்படுவதை விட நிராகரிப்புகளைச் சுமப்பதே அதிகமாக இருப்பதால், அதுவே அவளது காயங்களுக்கும் காயமாகி விடுகிறது.

## 6.4. எம்பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து - தங்கம் மூர்த்தி கவிதைகள்

### 6.4.1 தங்கம் மூர்த்தி

தங்கம் மூர்த்தி தமிழ்நாட்டிலுள்ள புதுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு தமிழ்க் கவிஞர் ஆவார். இவர் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கி அருகே உள்ள சுப்பிரமணியபுரம் என்னும் ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர் கே.கே.தங்கம், தாய் ஜெயலட்சுமி ஆவார். ஆகஸ்டு 19, 1964 ஆம் ஆண்டு கவிஞர் தங்கம் மூர்த்தி பிறந்தார்.

தங்கம் மூர்த்தி சுமார் 10 க்கும் மேற்பட்ட கவிதை நூல்களைப் படைத்த பெருமைமிக்கவர் ஆவார். சிறந்த இலக்கியவாதி மற்றும் கல்வியாளர் என்ற நிலையிலும் இவர் அரும்பணியாற்றி வருகின்றார். இவரது கவிதைகள் இலக்கியம் மற்றும் பட்டிமன்ற மேடைகளில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டு வருகின்றன. அத்தகைய சிறப்பு மிக்க கவிதைகளைப் படைத்தவர் ஆவார். பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் இவரது கவிதை நூல்கள்

மலையாளம், இந்தி, பிரெஞ்சு, மலாய், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பெருமைப்படுத்தப்பட்டுள்ளது.



கவிதை வெளியினிலே, பெய்யெனப் பெய்த மழை, முதலில் பூத்த ரோஜா, தங்கம் மூர்த்தியின் கவிதைகள், மழையின் கையெழுத்து, கவிதையில் நனைந்த காற்று என பல கவிதைகளை வெளியிட்டுள்ளார்.

தங்கம் மூர்த்தி பல்வேறு விருதுகளை கவிதைகளுக்காகப் பெற்று தனக்கென்று தனியிடத்தை பெற்றுவருகின்றார். இவர் கவிஞர் சிற்பி விருது, கவிக்கோ விருது, செல்வன் காக்கி விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்ற பெருமைமிக்கவராவார்.

மத்திய அரசின் தேசிய நல்லாசிரியர் விருது, மாநில அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர் ஆவார்.

சமீபத்தில் வெளியாகியுள்ள அவரின் நான்காம் தொகுப்பு “என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து”ஒரு பண்டிகைநாளில் ஒரு தந்தையின் மனநிலையை எவ்வாறெல்லாம் இருக்கும் எனக் காட்டியுள்ளார்.

### 6.4.2. என் பண்டிகையின் நாட்குறிப்பிலிருந்து

இன்றைக்கு பெண்கள் பணி புரியாத துறைகளே இல்லை என்னும் அளவிற்கு எல்லாத் துறைகளிலும் வளர்ந்திருக்கிறார்கள். பணிபுரிவதை வைத்துக் கொண்டு “வளர்ச்சி” என்று முடிவுக்கு வர முடியாது. குடும்பமும், சமூகம் ஏற்றத் தாழ்வுகளோடு இருக்கும் இன்றைய சமூக சூழல் கவிதைப் பின்னனியாக இருக்கின்றது.

**கவிதை எழுதுவீங்களாமே!**

**என்னைப் பற்றியும்**

**எழுதுவீங்களா……**

**வாரம் இருமுறை**

**என் வாகனத்திற்கு**

**பெட்ரோல் நிரப்பும் பெண்**

கேட்டாள்.

எழுதலாம்.....

பள்ளிச் சீருடை

நிறத்திலேயே

ஒரு

பள்ளிச்சீருடை...

புத்தகப்பை

தாங்கும் தோளில்

ஒரு

பணப்பை.

மேயும்

கண்களைத்

தவிர்த்தபடி”

வேலைக் கவனம்.

தேநீர்

சிகரெட்

அட்டையென

இருக்கும்

இடத்தை விட்டு

அடிக்கடி

அகன்று விட முடியாமை.

வகுப்பறையில்

அமர வைக்கத் தவறி

நெருப்பறையில்

நிற்க வைத்த

**வறுமை.**

**ஒருநாள்**

**விடுமுறை எடுத்தாலும்**

**திணறிப் போகும்**

**குடும்ப வாகனம்.**

**எழுதிக் கொண்டிருக்கும் போதே**

**அலங்காரமற்ற**

**அவளிடம் போய்**

**அடைக்கலமானது**

**என் கவிதை.**

**பெட்ரோல் எரிச்சலால்**

**சிவந்திருந்தன**

**அவளது கண்கள்.**

**அழுதிருந்ததால்**

**சிவந்திருந்தது**

**என் கவிதை.**

பல்வேறு கனவுகளைச் சுமந்துக் கொண்டிருக்கும் இளம் பெண்களை வறுமை வாட்டும் போதும், அதில் இருந்து காத்துக் கொள்ளச் செல்கின்ற அலுவல் சூழலின் அவசர அவலங்களையும் கவிதை பொருள் எடுத்துக் கூறுகின்றது.

## 6.5. தொகுத்துக்காண்போம்

- சமூகத்தில் படைப்பாளர்களுக்கான பங்களிப்பினை தெரிந்து கொண்டீர்கள்.
- கவிதையின் புதிய பார்வையை அறிந்து கொண்டீர்கள்.
- நவீன இலக்கியத்தின் வளர்ச்சியினை புரிந்து கொண்டீர்கள்.

**6.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்**

1. தேனம்மை லட்சமணன் படைப்புகள் வெளிவந்த இதழ்கள் இரண்டினைக் கூறுக.

______________________________

2. 'சகி' என்ற பத்திரிகை எம்மொழிப் பத்திரிகை.

______________________________

3. 'என் பண்டிகையின்' நாட்குறிப்பிலிருந்து கவிதைத் தொகுப்பு ஆசிரியர் யார்?

______________________________

6.7. **பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்**

1. சூலம் என்பது என்ன?
2. தங்க மூர்த்தி கவிதை வழி வறுமையை எடுத்துரைக்க?
3. சூலும் சூலமும் கவிதைத் தலைப்பினை ஆராய்க.
4. நவீனக் கவிதைகளின் சமகாலப் பதிவுகள் சமூக மாற்றத்திற்கு தீர்வளிக்குமா?
5. பெண்ணிய நோக்கில் தேனம்மை லட்சமணன், தங்கம் மூர்த்தி கவிதைகளின் பொருள் கூறுக.

**6.8. மேலும் பயில்வதற்கான நூல்கள்**

1. டாக்டர். மு. வரதராசன் சாகித்ய அகாடமி வெளியீடு, டெல்லி-2010.

## கூறு - 7

## தமிழ் ஹைக்கூ ஆயிரம் -

இரா.மோகன் (தொகுப்பு) - **முதல் பத்து கவிதைகள்**



7.1. முன்னுரை

7.2. குறிக்கோள்கள்

7.3. இரா.மோகன்

7.3.1. கவிஞர் தமிழன்பன்- சூரியப்பிறைகள்

7.3.2. அமுதபாரதி

7.3.3. எ.மு. ராஜன்

7.3.4. செ. வெற்றிவேல்

7.3.5. கவிஞர் இதய கீதா

7.3.6. சு. முரளிதரன்

7.3.7. அவைநாயகன்

7.3.8. செ. செந்தில்குமார்

7.3.9. பரிமளமுத்து

7.3.10. கழனியூரன்

7.4. தொகுத்துக்காண்போம்

7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

7.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

7.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்



## கூறு - 7

## தமிழ் ஹைக்கூ ஆயிரம் - இரா. மோகன்

### 7.1. முன்னுரை

மின்னல் வேக விரைவு உலகம் தனது அவசர நிலைக்கு ஏற்ப இலக்கியங்களையும் வடிவமைத்துக் கொண்டது. தொழில் வளர்ச்சியும் இயந்திரப் பொறிகளின் வளர்ச்சியும் மக்களின் இலக்கிய வடிவங்களை வடிவமைக்க வல்லதாக உள்ளது. இத்தகு சூழலில் காலத்திற்கு ஏற்ப கவிதைகளும் தனது வடிவத்தின் அளவைச் சுருக்கிச் செரிவாக்கிக் கொண்டன. இந்த விதத்தில் ஹைக்கூ என்னும் கவிதை வடிவம் இலக்கிய உலகத்திற்குப் புது வரவுகளாகத் தோற்றம் கொண்டுள்ளன.

இக்கவிதையின் பெயரை “ஹொக்கு” என்று பாரதியார் தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஐ௸ கூ ஸ்ரீ ஐக்கூ; ஐ – கடுகு; கூ - உலகம் கடுகு போல் சிறிய கவிதை வடிவில் உலகளாவிய கருத்துகளைச் செறிவுடன் செறித்து வைக்கச் செம்பு போல் இடந்தரும் கவிதை வடிவே ஹைக்கூ என்னும் பொருள் கொள்வர்.

மூன்றடிகள் கொண்டிருக்க வேண்டும். மூன்றடிகளும் முறையே 5-7-5 என்னும் அசைகளைக் கொண்டிருக்க வேண்டும். மூன்றாவது அடி ஒரு திருப்பத்தினை உடையதாக இருக்க வேண்டும் என்று வரையறைகளை உடையது.

## 7.2. குறிக்கோள்கள்

- 20ஆம் நூற்றாண்டின் கவிதை வளர்ச்சியை அறிந்து கொள்வீர்கள்.
- ஹைக்கூ அமைப்பினை புரிந்து கொள்வீர்கள்
- தமிழ் ஹைக்கூ கவிதைகளை தெரிந்து கொள்வீர்கள்.

## 7.3. இரா.மோகன்

‘மு.வ’ வின் செல்லப் பிள்ளை’ எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப்பெறும் இரா.மோகன். 10.12.1949 இல் மதுரையில் பிறந்தவர். பெற்றோர்; இராமமூர்த்தி, இராசலட்சுமி. 1.11.1976-இல் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ் துறையில் சேர்ந்த விரிவுரையாளர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்தப் போராசிரியர், ஆட்சிக்குழு உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளில் 34 ஆண்டு காலம் பணியாற்றியுள்ளார். இவர்தம் நெறிகாட்டுதலில் 30 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

இலக்கிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகப் பேராசிரியர் மோகன், சிங்கப்பூர் (6முறை), மலேசியா (3முறை), அமெரிக்கா (3முறை) ஆஸ்திரேலியா, இலங்கை, ஆகிய நாடுகளுக்குப் பயணம் சென்றுள்ளார். அமெரிக்கத் தமிழ் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து இவருக்குத் ‘தமிழர் சுடர்’ (2002) என்ற விருதினை வழங்கியுள்ளன. இவர்12.06.2019 இல் மறைந்தார்.

### 7.3.1. கவிஞர் தமிழன்பன்- சூரியப்பிறைகள்

கவிஞர் தமிழன்பன் எழுதிய சூரியப்பிறைகள் தொகுப்பு நறுக்குத் தெறித்தாற் போன்ற ஹைக்கூ கவிதைகளை வெளியிட்டிருக்கின்றன.

**மன்மதச் சாம்பலில்;**
**மறைந்து கிடந்தது ஒரு கங்கு**
**சிவன் எரிந்தான்.**

**நாளையும்**
**வர ஆசை சூரியனுக்கு –**
**சாளரத்தில் புன்னகைக்கும் பரிமாற**

**ஜீவ யாத்திரையில்.**
**ஆன்மாவின் கைவிளக்கு**
**மரணம்.**

**பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு**
**முத்தமிட்டுச் சொன்னது பூமி**
**ஓன்பது முறை எழுந்தவனல்லவா நீ!**

**ஓட்டுப் போட்டுவிட்டுத்**
**திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டது.**
**தனது கல்லறையில் வேறொரு பிணம்.**

படித்து முடிக்கவில்லை
பாட நூலை – விளக்கு
கறுத்து விட்டது.

பயம்
ஊர்ந்து கொண்டிருக்கும் - இது
பாம்பு போன தடம்.

சிலம்பை
உடைத்து என்ன பயன்?
அரியணையிலும் அந்தக் கொல்லன்.
ஆகாயமும் அழகு
பூமியும் அழகு – ஆம்
என் கையில் ரொட்டித் துண்டு.

ரோஜாவை
ரசிக்கும் பார்வையைத் துடைத்துக் கொள்
மிதிபட்ட புல்லின் ரத்தம்.

### 7.3.2. அமுதபாரதி

யார்?

அந்தக் காட்டில்

எந்த மூங்கில்
புல்லாங்குழல்

இடிமின்னல்

ஏழையரின் உலில்
வியர்வையின் மின்னல்
இடிகளோ நெஞ்சில்...

இளமை

முதிர்ந்தால் என்ன?
இன்னும் இளமையிருக்கு
கண்களில்!

வெற்றி

முன்னால் நீண்டது முள்;
சோர்வுற்ற எனக்காக
பின்னால் முகிழ்த்தது பூ.

அந்தஸ்து

ஆணியில் தொங்குகிறது
அவளது மதிப்பு –
சட்டையாக!

நரை

நாட்பட நாட்படச்
சாயம் வெளுக்கும்-
மயிர்க் கம்பிகள்!

**அழகு**

**தலைவிரி கோலத்தை**

**யார் அழகில்லை என்பது?**

**மரத்தைப் பார்!**

**பேதங்கள்**

**எல்லா ரத்தமும் சிவப்பு**

**இதிலும்**

**எத்தனை 'கருப்பு!'**

**நலம்**

**'என்ன, நலந்தானே?'**

**'நல்ல நலம்!'**

**'நலம் சிரித்துக் கொண்டிருக்கு – தனியே!'**

**தத்துவம்**

**குட்டிச் சுவர்தான்**

**அதன் தலையிலும் ஓர்**

**அற்புத இளஞ்செடி!**

### 7.3.3. எ.மு. ராஜன்

எ.மு ராஜனின் 'பாரதப்போர்' தொகுப்பில் வெளிவந்த ஹைக்கூ கவிதைகளில் சமூகநடப்பியல் உள்ளது உள்ளபடியே நாட்டுநடப்பினை எடுத்துரைக்கிறது.

**மகாத்மா நூலகத்தில்**

**கோட்சேயின் புத்தகம்**

பசு என்ன செய்யும்
வழிப்பறி செய்கின்றன
வைக்கோல் கன்றுகள்.
நம்நாட்டில் அதிகம் விளைவது
தானியம் அல்ல
மானியம் தான்!

இயற்கையிலேயே இங்கு
மேடு பள்ளம்
இமயம் முதல் குமரி வரை.

பஞ்சாயத்துத் தேர்தலில் கூட
தோற்றுப் போவார்கள்
'பஞ்ச' பாண்டவர்கள்.

கிருஷ்ணா உனக்கு ஒரே ஓட்டு
எனக்கு வேண்டும்
உனது படைகளே!

அனைத்துலகம் சுற்றி
அமைச்சர் தெரிந்து கொண்டார்
'இந்தியா ஏழை நாடு'.

'தவறு செய்தாயா
பலகை மேல் ஏறு'
மேடை மீது நிற்பது யார்?

வெளிநாட்டில் ராமன்
உள்ளூரில் ராவணன்
அனுமன் எங்கே?

புரியாத மொழியில் கேள்வி
புரியும் மொழியில் விடை…
புன்னகை.

காதல் வெற்றி!
இருவரும்…ஒரே சமாதியில்

7.3.4. செ. வெற்றிவேல்

ஆபத்து

திருந்தாத உள்ளங்கள்
திருந்தாத சட்டங்கள்
நாட்டுக்கு ஆபத்து!

வர்க்கங்கள்!

உரிமையைக் கேட்பவன்

தொழிலாளி! உழைப்பைக்

கேட்பவன் முதலாளி

கிடைக்காது... கிடைக்காது

தவம் செய்தாலும்

கிடைக்காதது தாயிடம்

குடித்த பால்!

ஞானம்

தேடாமல் கிடைப்பது

ஞானம்! தேடி

அலைவது ஆசை!

படி.... உணரு...

படிக்கப் படிக்க

அறிவு! உணர

உணர ஞானம்!

வெற்றி

உனக்குள் ஒளிந்திருக்கின்றது

சக்தி! நீ ஓய்ந்திருந்தால்

கிடைக்காது வெற்றி!

கற்றுக்கொள்

எல்லாக் கலைகளையும்

கற்றுக்கொள் பயன்தரும்

ஒன்றிவேனும் ஒளி வீசு!

ஜொலிக்கும்

தன்னம்பிக்கை வளர்ந்து

தன்னறிவு உயர்ந்தால்

தனித்தன்மை ஜொலிக்கும்!

புண்ணியம்

புண்ணியம் வேண்டும்

அது நல்ல

எண்ணங்களின் சேர்க்கை!

மனிதன்

நிகழ்வுகாலத்தில் புலம்புவான்

எதிர்காலத்திற்கு ஏங்குவான்

இறந்த காலமே இனிமையென்பான்!

### 7.3.5. கவிஞர் இதய கீதா

கவிஞர் இதய கீதா எழுதிய ‘தீயின் பிணம்’ ஹைகூ தொகுப்பின் கவிதைகள் இதோ.

பார்த்துச் செல்லுங்கள்!

பாதையெங்கும்

அவள் சுவடுகள்

பசி... பசி...

எங்கே

அந்த குயில்?

அழகான பூக்கள்

நடுங்காமல் பறிக்கும்,

விழிகள்!

எப்படித் தின்னலாம்?

தட்டு நிறைய

இரக்கம்.

7.3.6. சு. முரளிதரன்

கூடையைக் கனக்க

கனக்கச் சுமந்து சென்றார்கள்

உள்ளே இந்த தேசம்.

ஆயுள் முழுவதும் அந்த

ஏழைக்காகவே வாழ்ந்திருந்தது

இதயம்.

மணமகளின் அங்கக்குறை

நிவர்த்தி செய்யப்பட்டு விட்டதே!

தங்கம்.

அடைபட்ட கைதிகளுக்கு

அவ்வப்போது மரண தண்டனை
தீக்குச்சிகள்

பஸ் விபத்தில் மிஞ்சியது
ஒருயிர் மட்டும் தான்!
புத்தகம்.

ஆயிரத்துக்கு முயன்று நூறு
அதிகமாகக் கிடைத்து விட்டது
இப்போ இலக்கு இரண்டாயிரம்.

ஏய்! யாரங்கே ஆற்றில்
பாலைக் கொட்டி விட்டு ஓலமிடுவது
நீர்வீழ்ச்சி.

சில்லறை விலையில்
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்
சிகரெட் பாக்கெட்டுகள்.

தோலைச் சுவைத்து
கோலம் போட்டு வளர்ந்தது
தேமல்.

குறிப்புகள்

கோடி கோடி வார்த்தைகள்

நாவுமில்லை இதழ்களுமில்லை

உன்னிரண்டு கண்கள்! -

கூடைக்குள் தேசம்

7.3.7. அவைநாயகன்

வரவேற்பறையில் ரோஜா

உள்ளே –

மனங்களில் கள்ளி….!

ஆராய்ச்சி மணி அடித்த மாடுகள்

அரண்மனைத் தட்டில் -

பிரியாணி ….!

கடலில் வலைவீசும் மீனவன்

கரையில் மீன்கொத்தி –

முதலாளி ….!

கந்தல் போர்த்த உடல்

நெய்யும் தறியில் -

காஞ்சிப்பட்டு ….!

அவசர அர்ச்சுனன்
தேருக்கடியில்
கீதை….!

கண்காட்சியில் மரங்களில் மனிதர்கள்
காணும் மனிதரில் -
மரங்கள்….!

மின் விசிறியை நிறுத்து
உதிரப் போகிறது
தும்பியின் சிறகு….!

மதியக் காக்கையே மன்னித்து விடு
வேறு அலுவலகத்தில் -
நாளை நான்….!

காலடியில் சிகரம்
இருக்கிறதே –
இன்னொரு கால்….!

வெளியே கிளம்ப முடியாது

தயாராகவில்லை –

முகமூடி….! - சூரியச் செதில்கள் (1988)

7.3.8. செ. செந்தில்குமார்

சிரித்தது நீ!

எனக்குள் எப்படி

இறக்கைகள்?

வருஷக் கணக்காய்

காத்து நிற்கிறான் -

ஆறடியில் அடங்கிப் போக.

இருட்டுக்கும்

கண்கள் உண்டா?

ஆழகான மின்மினிகள்.

வரவேற்பா?

வழியனுப்பா?

தலையசைக்கும் மரம்.

காதலில் வெற்றி.

இருவருக்கும் கல்யாணம் -

தனித்தனியே.

வேட்டைக்காரன்
பறவையைச் சுட்டான் -
காயம் என் மனதில்.

புல்லும்
பூப் பூக்குமா? –
அட….. பனித்துளிகள்

இரவு முழுவதும்
குளத்து நீரில் மூழ்கியும்
நனையாத நிலா
.

மனிதர்களிடம்
தேடுகிறேன்
மனிதனை.

அரைத்த கைக்கு
எதிர்ப்பு காட்டியது
மருதாணி.

\- நனையாத நிலா (1990)

### 7.3.9. பரிமளமுத்து

கவலை

வெட்ட வெட்ட

வளரும் நீ என்ன

விரல் நகமா?

காத்திருக்கும் கன்னிகள்

கார்த்திகைத் தீபங்களேற்றி

மார்கழிக் கோலங்களிட்டு பாவம்

தை மட்டும் வருவதேயில்லை.

தமிழர்கள்

வெட்டினால் என்ன?

விறகாக்கி எரித்தால் என்ன?

ஆணிவேரோ ஆழத்தில்.

சாதனை

வானத்தில் ராக்கெட்

வட்டமிடும் 'இன்சாட்' இங்கு

வயல்வெளிகளில் பவர் கட்.

நடப்பு

அடுத்த மாதம் அயல்நாட்டில்

மருத்துவச் சோதனை இம்மாதம்

ஜனாதிபதி பதவியேற்பு

சந்தர்ப்பம்

நிமிடங்களில் தவறவிட்டு

யுகங்களில் வாழ்க்கையைத் தேடினால்

என்ன மிஞ்சும்?

தேர்தல்கள்

பலர் கையில்

என்றும் திருவோடு சிலர்

மட்டும் ‘திரு’ வினோடு

மிச்சம்

தேர்தல் முடிந்தது

தலைவர்கள் பதவியேற்றனர் விரலில்

கரும்புள்ளியோடு நாங்கள்.

சாதிப்பிரச்சினை

சிலரின் குளிருக்கு

பலர் இங்கே விறகாகும்

சமுதாய நெருப்பு.

இன்றைய கல்வி

முதுகில் புத்தகக் கட்டுகள்

மூளையில் திணிக்கும் பாடத்திட்டங்கள்

முதுமையடைந்த மழலைகள்.

- இலையுதிர் காலம் நிரந்தரமல்ல

(1990)

7.3.10. கழனியூரன்

யாராவது குடை பிடியுங்களேன்

மழையில் நனைகிறதே

சோளக்காட்டு பொம்மை….

ஆக்ஸிஜன் பூச்செண்டு தர

புகைப்போக்கி மலர்வளையம் வைக்க

வளர்கிறது விஞ்ஞானம்.

அன்புடைமை அதிகாரத்தை

ஆசிரியர் கற்பிக்கிறார்

கையில் பிரம்புடன்….

பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறான்
பூட்ஸ் கால்களால்
புற்களை மிதித்துக் கொண்டு

உதை படும் பந்து
வதை படும் மனிதன்
வாழ்க்கை விளையாட்டு

காலாவதியான லாட்டரிச் சீட்டுகள்
வாக்களித்து விட்டு
வீடு திரும்பும் மக்கள்.

ஒரு கன்னத்தில் அடித்தான்
மறு கன்னத்தைக் காட்டினேன்
அங்கும் அறைந்தான்.

நேற்று வரை தூற்றியவர்கள்
நாளை முதல் போற்றுவார்கள்
இன்று அவன் இறந்துவிட்டான்.

எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றன
தென்னை மரங்கள்

**இன்று பௌர்ணமி.**

**பளபளப்பாகக் கட்சிக் கொடிகள்**

**நைந்து கிழிந்து**

**தேசியக் கொடி.... - நட்சத்திர விழிகள் (1990)**

புதுக்கவிதையின் சுருங்கிய வடிவம். புதுக்கவிதையில் இடம்பெற்றிருப்பது போலவே ை□க்கூ கவிதைகளிலும் எல்லா பொருண்மைகளிலும் படைக்க முடியும்.

விமர்சன நோக்கில் நேருக்கு நேராக நின்று துணிவாக கேட்கிற தன்மையை எளிமையான ை□க்கூ கவிதையிலிருந்து பெறமுடியும்.

இன்றைய சமூக அவலங்களை மெல்ல நகைச்சுவையோடும், கூர்மையான அங்கதச் சுவையோடும் அடையாளம் காணுவதில் ை□க்கூ கவிதைகள் முன்னிற்கின்றன.

வாசகன் மனோபாவத்திற்கு ஏற்ப அர்த்தங்களைத் தருவதாகவும், புது விளக்கங்களைத் தோற்றுவிப்பதாகவும் ை□க்கூ கவிதைகள் உள்ளன.

கவிஞர்களிடம் உயிர்ப்பையும், கலைஞர்களிடம் வரவேற்பையும், விமர்சகர்களிடம் பாதிப்பையும், ஆய்வாளர்களிடம் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது ஹைக்கூ.

## 7.4. தொகுத்துக்காண்போம்

- ஹைக்கூ கட்டமைப்பினை புரிந்து கொண்டீர்கள்.
- ஹைக்கூ இலக்கியத்தை அறிந்து கொண்டீர்கள்.
- ஹைக்கூ கவிதையின் எளிமையை தெரிந்து கொண்டீர்கள்.

## 7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. ‘ஹைக்கூ’ எத்தகைய வடிவம் உடையது.

_______________________________________________

2. தமிழில் ‘ஹைக்கூ’ என்பதன் பொருள் யாது?

_______________________________________________

3. ஹைக்கூ கவிதைக்கு இலக்கணம் உண்டா.

_______________________________________________

4. ‘பேதங்கள்’ தலைப்பில் ஹைக்கூ கவிதை எழுதுக.

_______________________________________________

5. ஹைக்கூ கவிதைக்கு சான்று தருக.

_______________________________________________

## 7.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. கவிஞர் இரா. மோகன் பற்றி குறிப்பு வரைக.
2. ‘சூரியப்பிரைகள்’ தொகுப்பு கவிதைகளை எடுத்துரைக்க.
3. கவிஞர் அமுதபாரதியின் ஹைக்கூ கவிதைகளை விளக்குக.
4. இதயகீதாவின் ‘தீயின் பிணம்’ கவிதைத் தொகுப்பு எப்பொருளைக் கூறுகிறது.
5. ஹைக்கூவின் சிறப்புகளை விவரிக்க.

## 7.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. ஏழைதாசன், ஹைக்கூ-100, நவம்பர் 1999.
2. கணையாழி, ஹைக்கூ சிறப்பிதழ், 1991.
3. இனிய ஹைக்கூ, கவிதை இதழ், மு. முருகேஷ்.

# பிரிவு – 3 :

## உரைநடை, நாடகம், சிறுகதை

## கூறு 8 : கம்பர்

### - வ.சுப மாணிக்கனார்

8.1. முன்னுரை

8.2. குறிக்கோள்கள்

8.3. வ.சுப மாணிக்கனார்

8.4. வ.சுப மாணிக்கனாரின கம்பர்

8.4.1. முழுப்பார்வை

8.4.1.1. முழுப்பார்வையின் ஒரு பயன்

8.4.2. துண்டுப்பார்வை

8.4.3. தனிப்பார்வை

8.4.4. பொருந்தா நயம்

8.4.5. உலகப்பார்வை

8.5. காப்பியக் களங்கள்

8.5.1. பரதனும் இராமனும்

8.6. புலவன் பார்வை

8.7. காப்பியத் தூய்மை

8.8. இராமாயணக் காப்பியம்

8.9. காப்பிய நேர்மை

8.10. பெண்களின் செல்வாக்கு

8.11. தொகுத்துக் காண்போம்

8.12. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

8.13. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

8.14. மேலும் பயில்வதற்கான நூல்

## கம்பர்

**வ.சுப மாணிக்கனார்**

## 8.1. முன்னுரை

20 ஆம் நூற்றாண்டில் தமிழுக்குத் தகும் உயர்வளித்த பெரும் புலமையாளர்கள் பலர். அவருள் முன்வரிசையருள் ஒருவராய் முன்மொழியத் தக்கவர் வ.சுப மாணிக்கனார். பழந்தமிழுக்கு மணிமுடியாகத் திகழும் தொல்காப்பியத்தில் புதுமை கண்டவர். புதுமைக்கவி பாரதியிடத்தும், பழமையின் மரபு வேர்களை கண்டு காட்டிய சிறப்பும் அவருக்கு உண்டு. எழுத்தில் தனி நடை, தனிச் சுவை காட்டியவர் மாணிக்கனார். பழமை ஊற்றமும், புதுமை நாட்டமும் கொண்டிருந்த மாணிக்கனார் பாட்டுத்திறன் படைத்தவராகவும் விளங்கினார். சங்க நூல்களின் மீதான அவரின் பார்வை கம்ப மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது. தனி வீறு மிக்கது.

## 8.2. குறிக்கோள்கள்

- கம்ப காப்பிய ஆராய்ச்சியை அறிந்துகொள்வீர்கள்
- காப்பியத்தின் வேறு இடங்களில் வரும் நிகழ்வுகளில் காப்பியப் புலவன் இழைத்துக் கொடுத்த சொற்களை தரம் கண்டுகொள்வீர்கள்.
- கம்ப காவியத்தின் ஒவ்வொரு துளியையும் இலக்கிய நயத்தோடு உணர்ந்துகொள்வீர்கள்.



## 8.3. வ.சுப மாணிக்கனார்

வ.சுப மாணிக்கம் புதுக்கோட்டை மாவட்டம், மேலைச்சிவபுரியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் இனத்தில், வ.சுப்பிரமணியன் செட்டியார் –

தெய்வானை ஆச்சி அவர்களுக்கு ஐந்தாவது மகனாக 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் தேதியன்று பிறந்தார். இவருடைய இயற்பெயர் அண்ணாமலை. எந்தச் சிலம்பு ? என்ற கேள்வியின் மூலம் சிலம்பு பற்றிய முந்தைய ஆய்வுகளை அசைத்துப் பார்த்தவர். உரையிலும் எழுத்திலும் தனக்கென்ற நிகரற்ற நடையையும் சுவையையும் கொண்டவர்.



## 8.4. வ.சுப மாணிக்கனாரின் கம்பர்

"காப்பியப் பார்வை" என்ற தலைப்பில் இன்றும்,'காப்பியக் களங்கள்' என்ற தலைப்பில் நாளையும்,'காப்பிய நேர்மை' என்ற தலைப்பின் நாளை நின்றும் பேசுவதென என் பொழிவுகளை வகுத்துக் கொண்டுள்ளேன் என்பது வ.சுப.மா.வின் கூற்று. காப்பியப் பார்வை என்னும் தலைப்பு பொதுவாக இருந்தாலும் கம்பர் பெருமானின் இராமாயணக் காப்பியமே இங்கு ஆராய்வதற்கு உரியது.

### 8.4.1. முழுப்பார்வை

திறனாய்வு என்பது ஒப்பாய்வன்று, உள்ளாய்வு, புறனாய்வன்று, அகனாய்வு இராமாயணப் பெருகாப்பியம் வடிக்க முனைந்த கம்பர் தன் காப்பியத்தில் என்னென்ன கூறுகள் எவ்வாறு எவ்விடத்து அமைய வேண்டுமென்று கருதினார்.

ஒரு காப்பியத்துக்கு முதலாவது காண வேண்டுவது தன்மைநெறி என்னும் தனிநெறி. அதன் பின் ஒப்புமை நெறி கடைப்பிடிப்பது ஓரளவு சில உண்மை காண உதவும்.

#### 8.4.1.1. முழுப்பார்வையின் ஒரு பயன்

பொதுவாகவே கம்பர் தன் பாத்திரங்களை மிகப் பேசவிடும் போக்குடையவர். ஒரு பாத்திரம் எவ்வளவு கருத்துக்களைச் சொல்ல இயலுகிறதோ அவ்வளவையும் சொல்லிவிடச் செய்பவர். பேசாப் பாத்திரங்கள் அவர்தம் காப்பியத்துச் சிலவே; பேச்சுக் குறைந்த இடங்களும் சிலவே; பேசச் செய்யாத இடமும் சிலவினும் சிலவே அச்சிலவிடங்களில் இது ஒன்று. அயோத்தியா காண்டம் மந்திரப் படலத்தைப் பாருங்கள். தயரதன் மந்திரிகளை

**இக்கால இலக்கியம் குறிப்புகள்**

அழைத்துத் துறவு நாடும் தன் கருத்தைப் பலபட மொழிகின்றான். கேட்ட மந்திரிகள் மன்னன் ஆட்சியையும், மகன் சிறப்பையும் பற்றிப் பாராட்டுகின்றனர். மந்திரி அழைக்க வந்த இராமன் முன்னும் தயரதன் முடிசூடுவது குறித்துப் பலவாறு பேசுகின்றான். இவ்வாறு அறுபத்தொன்பது செய்யுட்கள் நடக்கின்றன. ஆனால் இராமன் மறுமொழியாக ஒரு பாடலேனும் இல்லை. ஒரு சொல்லேனும் உண்டா? தந்தை உரை செய, மகன் ஏதாவது உரை செய்தானா? தந்தை வேண்டுகோளை கேட்ட போது, கடனிதென உணர்ந்தான்; நீதி எனக்கென நினைத்தான்; அங்ஙனம் கடமையை உணர்த்தும் நீதியை நினைந்தவளவில் அக்கட்டளையை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலை வணங்கி நின்றான். மெய்ப்பாட்டளவில் இப்பாடலை முடித்துக் கொண்டார் கம்பர்.

### 8.4.2. துண்டுப்பார்வை

இலக்கியம் பல வகைப்படும். வகைக்கேற்ற உணர்ச்சி முகிழ்க்க வேண்டும். சிறுகதை படிப்பார்க்குச் சிறு கதையுணர்வும், புதினம் படிப்பார்க்குப் புதினவுணர்வும் நாடகம் படிப்பார்க்குக் காப்பியவுணர்வும் தோன்ற வேண்டும்.

### 8.4.3. தனிப்பார்வை

இராமாயணம் சொல்தோறும், தொடர்தோறும், பெயர்தோறும், வினைதோறும் மிக்க சுவை பொதிந்தது. 'வருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன்' என்ற பாராட்டு கம்பனுக்கே தரும். சீனித்துளிகளும் இனிக்குமாப் போல் அவன் பாடலின் ஒரு சீரும் கவிச்சுவை தருவது. 'சுட்டது குரங்குளரி, சூறையாடிடக் கெட்டது கொடிநகர்' என்று இராவணன் நேரா இலங்கைக்கு நேர்ந்த அழிவைக் கொதித்துப் பேசுகின்றான். கேவலம் ஒரு குரங்கு நெருப்பு வைக்க அழிந்தது எது தெரியுமா? ஏதோ ஒரு நகரம் அன்று, தலைநகரம் என்பதைக் காட்டுவதற்காக,கொடி நகர் என்று கூறுகின்றான். நெருப்பு நகரை மட்டுமன்று, உயிர் கொடுத்துக் காக்க வேண்டிய கொடியையும் சேர்த்து எரித்தது என்பது குறிப்பு.

இலங்கை எரியூட்டு படலத்தின் முதற் செய்யுளிலேயே 'கொடியையும் பற்றி விதானம் கொளுத்தி' என்று தொடங்குகிறார் கம்பர். கெட்டது கொடிநகர் என்ற தொடரில் கொடி என்ற ஒரு தீர் அடையால் தலைநகர் என்பதை

அறிவிப்பதோடு, கொடியும் கெட்டது என்பதனைஅறிவித்து விடுகின்றார் புலவர். கொடியும் கெட்டது என்பதனை அறிவித்து விடுகின்றார் புலவர். இதனை இராவணனது சீற்றப் பெருக்கத்திற்கு உரிய காரணம் தெளிவாகின்றது. அனுமன் இலங்கையில் வைத்த நெருப்பு செல்லாத இடமெல்லாம் சென்று பரந்து இராவணன் மனைபுக்கது உயர்தீ என்று பாடுவர் புலவர். இத்தகைய அழிவெல்லாம் செய்து தீயைக் கொடுந்தீ என்று அடையிட்டுக் கூறாது உயர்தீ என்று கூறினார். அது கற்பு வெளிப்பாடாதலின்.

**கோணகர் முழுவதும் நினது கொற்றமும்**

**சானகி யெனும் பெயர் உலகின் நம்முனை**

**ஆனவள் கற்பினால் வெந்த நல்லதோர்**

**வானரம் கட்டதென் னுணர்தல் மாட்டியோ.**

என்று வீடணன் அனுமன் வைத்த தீயைக் கற்புத் தீயாகக் காண்கின்றான். மதுரையை அழித்த தீயை 'கற்பு வண்ண' என்று இளங்கோவும் எடுத்துக் காட்டுவர். 'உயர்தீ' என்று நெருப்புக்குக் கொடுத்த ஒருசீர் அடையால் கம்பர் கருத்துத் தெளிவாகிறது.

### 8.4.4. பொருந்தா நயம்

இராமாயணம் நயமலிந்த தனிச் செய்யுட்களால் நிரம்பியது எனினும், அந்நயத்தை முழுமையின் கூறாகக் காண்பது காப்பிய இனிமையாகும். 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்' என்பது கொண்டு இராமாயணத்துக்குக் கண்டபடி சொன்னயம் பார்ப்பது சுவையற்ற ஒரு வழக்காகிவிட்டது. இராமனை நாடு துறந்த காடேகச் சொல்ல வந்த கைகேயி,

**பூழிவெங் கானம் நண்ணிப்**

**புண்ணியத் துறைகள் ஆடி**

**ஏழிரண் டாண்டின் வாவென்**

**றேவினன் அரசன் என்றாள்,**

என்பது கம்பர் பாடல். பதினான்கு என்று கூறாது 'ஏழிரண்டு' என்று கூறியதற்கு, வனத்திற்குப் பதினான்கு ஆண்டுகள் போக வேண்டும் என்று மொழிந்தால் பதினான்கு என்ற பெருந்தொகையை கேட்டவுடன் இராமன் மறுத்துவிடுவானாம்; குறுந்தொகையாகத் தோன்றுவதற்காக ஏழிரண்டு என்று கைகேயி மொழிந்தாளாம். இவ்வாறு இத்தொகைச் சொல்லுக்கு ஒரு நயம் உரைபேர். அது கருத்தாயின் ஈரேழ் என்றல்லவா இன்னும் சுருக்கமாகச் சொல்லியிருக்க வேண்டும்?

உலகம் எல்லாவற்றையும் பரதனுக்கு ஆளக் கொடு; தாழிருஞ் சடைகள் தாங்கு; தாங்கவரும் தவமேற்கொள்ளு; பூமி வெங்கானம் நண்ணு; புண்ணியத் துறைகள் ஆடு என்று ஒன்றின் ஒன்று மிகுதியாகக் கேட்கும் இராமன் பதினான்கு என்றால் பயந்தா இருந்து வருவான்? போக மறுத்தா விடுவான்? மேலும் கைகேயி தனிசொற்கேட்டுத் தீயவையாவினும் சிறந்த தீயாளாகிய பின் கணவனுக்கே இரக்கமில்லாத அரக்கியாகிய பின் நளினமாகச் சொல்வாள் என்று எதிர் பார்க்கலாமா? வரத்தின் வெறி குடித்த அவளுக்குச் சொன்னெறி யாதும் தெரியாது. 'தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்' எனவும்,'கொன்னுழல் கூற்றம் என்னும் பெயரினிற் கொடுமை பூண்டாள்' எனவும் கம்பரே சித்தரித்தப் பின்னர், அக்கூற்றச்சி வாயிலிருந்து கேட்பவன் மனம் நோவக் கூடாதே என்று 'ஏழிரண்டு' என்றும் அடக்கச் சொல் பிறந்தது என்பது பொருத்தமா?

கூனியின் சூழ் வினைக்குப் பின் கைகேசியின் நற்குணம் முற்றும் மாறிவிட்டது. 'மரந்தான் என்னும் நெஞ்சனள் நாணாள் வசை பாராள்' எனவும், கேயத்து அரசன் பெற்ற நஞ்சு' எனவும் 'கேடு சூழ் மாகயத்தி' எனவும் அவள் திரிகுணத்தைப் புலவர் எடுத்துக் காட்டுவர்

**8.4.5. உலகப்பார்வை**

தயரதன் இறந்து கிடக்கின்றான். பரத சத்துருக்களை கேதய நாட்டில் பாட்டன் வீட்டில் உள்ளனர். இராம இலக்குவர் வனம் சென்றுவிட்டனர். கடன் செய்வதற்கு உரிய மக்களில் ஒருவர்கூடப் பக்கத்தில் இல்லை. ஈமக் கடன் செய்வதைத் தள்ளிப்போடலாம். அரசுக் கடன் செய்வதைத் தள்ளிப்போட முடியுமா?

அரசில்லாமல் நாடு ஒரு கணமும் ஓடாது. 'உறங்குமாயினும் மன்னன் தன்ஒளி கறங்கு தொண்டிரை வையகம் காக்கும்' எனபா் சிந்தாமணித் தேவா்.

கி.பி 17 ஆம் நூற்றாண்டில் சோழன் இராசாதிராசன் போர்க்களத்தே உயிர் துறந்த போது, அங்கேயே அக்கணமே முடிசூடப் பெற்றான் அவன் தம்பி இராசேந்திர தேவன். ஆட்சி இடையறவின்றி இயங்கிற்று. இந்த அரிய வரலாற்று முறையை,'தொப்பையிற் பொரு களத்திலெ முடிகவித்தவன்? என்று குறிப்பா் பரணிச் செயங்கொண்டார்.

அமெரிக்கப் பெருநாட்டின் தலைவன் கென்னடியார் சுடப்பட்டு உயிர் நீத்தவுடனே, துணைத் தலைவன் சான்சனரல் வாறூந்தி தன்னிலேயே அரசத் தலையை யேற்றதை நம் காலத்தில் கண்டிருக்கிறோம். தலைவன் துணைத்தலைவன் என்ற பதவிகள் அமைப்பது ஏற்றுக்கு? அரசியக்கம் ஒரு கணமும் அற்றுப் போகாது நிகழவேண்டும் என்பதற்காக அன்றோ? ஆதலின் தயரத மன்னன் இறந்த நிலையில் மக்கள் நால்வரும் ஊரில் இல்லாத நிலையில்; அயோத்தியாட்சியை யார் இயக்குவது? புலவா்தான் இயக்குவான் புலவனுடைய கற்பனைதான் இயக்க முடியும் இல்லாத நல்லதை இட்டு நிரப்ப வல்லவன் புலவன்.

## 8.5. காப்பியக் களங்கள்

### 8.5.1. பரதனும் இராமனும்

பரதனுக்கும், இராமனுக்கும் பலத்த சொற்போர் நிகழ்கின்றது. கற்பு நீங்கிய மகளிரைக் காட்டிலும் பொறுமை நீங்கிய தவத்தைக் காட்டிலும், அருள் நீங்கிய அறத்தைக் காட்டிலும் முறை நீங்கிய மரபு கொடியது எனவும், அறத்தைக் கொன்று தின்றுவிட்டு அரசு ஆள்வேனா எனவும் சினக்கின்றான் பரதன். அரசு நின்னுடையது ஆள்க என்று இராமன் மொழிந்த போது 'என்னதாகில் யான் இன்று தந்தெனன்; மன்ன போந்து நீ மகுடஞ்சூடு' என்று மடக்குகின்றான் பரதன். ஒருவா்க்கொருவா் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அண்ணன் சொல்லுக்கு மறுமொழி பேசக் கூடாதே என்று இக்கருத்தில் பரதன் அடங்கி இருப்பதாகவும் இல்லை. பரதன் துணிவைப் பாா்த்தான் வசிட்டன். இராமனை நோக்கி 'என் ஆணை; நீ திரும்பச் சென்று அரசாள்'— என்று

கட்டளை இட்டான். அண்ணன் வேண்டுகோளைத் தம்பி மறுக்கும் களம் இது முனிவர்களையே காக்கப் பிறந்த இராமன், வசிட்டன் கட்டளையைப் புறக்கணிக்கும் களம் இது. ‘முன்னே பணிந்த தாய்தந்தையரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றுவதாக வந்தேன். நீரோ பின்வாங்கும்படி கட்டளை இடுகின்றீர்.செய்யத் தக்கதைச் சொல்மன்’ என்று இராமன் வசிட்டனையும் குற்றம்படப் பேசுகின்றான். யார் இப்போது யார்க்குச் சொல்வது? யார் சொல்லையும் எவரும் கேட்க முடியாத அறக்களம் இது.

**முனிவனும் உரைப்பதோர் முறைமை கண்டிலம்**
**இனியென இருந்தனன் இளைய மைந்தனும்**
**அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடுறான்**
**பனிபடர் காடுடன் படர்தல் மெய்யென்றான்.**

இராமன் உறுதி கண்டபின் வசிட்ட முனிவனும் வாளா இருந்தான். இராமனும் மேற்பேசவில்லை. பரதன் யாரும் அஞ்சும் ஒரு முடிவுக்கு வந்தான். இதுவரை முன்னிலையாகப் பேசியவன் இப்போது முன்னிலைப் புறமொழியாகப் பேசத் தொடங்கினான். ‘இதுதான் போக்கென்றால், நாடுகிடக்க; வேண்டுவார் அதனை ஆண்டு கொள்ளட்டும். நான் இராமனுடன் காட்டில் வாழ்வேன். இது உறுதி என்று முடித்தான் பரதன்.

### 8.6. புலவன் பார்வை

காப்பியப் படைப்பில் உள்ள ஓர் அமைப்பை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். இவ்வமைப்பை எந்தக் காப்பியம் படித்தாலும் நினைத்துக் கொள்ளுங்கள். காப்பியம் படைக்கும் புலவன் முழுக்கதையையும் கருத்திற் கொண்டு எழுதுகின்றான். பின் வருவனவற்றை நன்றாகத் தெரிந்து கொண்டுதான் முன்பகுதிகளை எழுதுகின்றான். அவனுக்குப் பின்முன் என்பன இல்லை. ஏன்? எழுதிய அனைத்தையும் திரும்பத் திரும்பப் பார்த்திருப்பான்; முன்பின் ஒட்டமும் பாத்திரப் பேச்சும் கவிக் கூற்றும் பெருமுரணாகாதவாறு ஒழுங்கு செய்திருப்பான்; முழுப் பக்குவமே அவன் புலமை நோக்கம் புலவன் படைத்த தடத்திலேயே நாம் சென்று பார்க்க வேண்டும். ‘தீயவை யாவினும் சிறந்த

தீயாள்' எனவும்,'இன்னுயிர் உண்ணும் பெரியன்னாள்' எனவும் கவிஞரே கைகேயியை வைதாலும், அவள் ஒழுக்கத்தை அவர் குற்றங் கூறியதில்லை. 'தீண்டலும் உணர்ந்த அத்தெய்வக் கற்பினாள்' என்று பாராட்டப்படுகின்றார் கம்பர்.

பின் விளையப் போவதைத் தெரிந்த கம்பர் தான்' தெய்வக் கற்பினாள்' என்று பாராட்டுகின்றார். கோசலைக்கும், சுமித்திரைக்கும் கூட இத்தெய்வப் பாராட்டு மொழியவில்லை. தீயமந்தரை இவ்வுரை செப்பலும் தேவி தூய சிந்தையும் திரிந்தது' என்று கைகேயியின் சார்பாகப் பேசுகின்றார் கம்பர். அவள் சிந்தை திரிந்ததற்கு மந்தரை வெளிப்பட்ட காரணமாக இருந்தாலும் மறைமுகக் காரணங்கள் இரண்டு உள. அவை தேவர் பெற்ற வரம் அந்தணர் இயற்றிய அருந்தவம் என்பர் கம்பர்.

கைகேயி இயல்பிற் கொடியவள் இல்லை. அரக்கர் பாவமும் அல்லர் இயற்றிய அறமும் அவளைக் கொடியவள் ஆக்கின. கோவலன் ஊழ்வினைக்குப் பாண்டியன் பலியானது போல, அரக்கர் அழிவுக்குக் கைகேயி பலிப்படுகின்றாள். இவ்வுண்மை தெரிந்தவர்கள் அவளைக் கொண்டாடாவிட்டாலும் குறை கூறார்கள். பரதன் அரசேற்க மறுத்த பின், திரிந்த அவள் சிந்தை தூயதாகிவிட்டது. இராமனை அழைத்துவரப் பரதன் சென்றபோது கைகேசியும் உடன் செல்லவில்லையா? 'இடரிலா முகத்தாளை அறிந்திலையேல் இந்நின்றாள் என்னை ஈன்றாள்' என்று பரதன் கைகேயியைப் பரதன் குகனுக்கு அறிமுகப் படுத்தும்போது அடக்கமாக அவள் இருக்க வில்லையா? இராமயணப் பாத்திரங்களில் சிறந்த ஆண் பாத்திரம் இராமன். சிறந்த பெண் பாத்திரம் சீதை. இவ்விருவரும் கைகேயியை ஒருபோதும் குறைக் கூறியதில்லை. 'சிறக்கும் மாமியார் மூவர்க்கும் சீதை ஆண்டு இறக்கின்றாள் தொழுதாள்' என்று செய்தி சொல்லுமாறு அனுமனை அசோகவனத்து வேண்டுகின்றாள் சீதை.

**கைகயன் தணயை முந்தக்**

**காலுறப் பணிந்து மற்றை**

**பொய்குழல் இருவர் தாளும்**

**முறைமையின் வணங்குஞ் செங்கண்**

**ஐயனை அவர்கள் தாமும்**

**அன்புறத் தழுவித் தத்தஞ்**

**செய்யதா மரைக்கண் நீரான்**

**மஞ்சனத் தொழிலுஞ் செய்தார்.**

வனவாழ்வு கழித்து அயோத்திக்கு மீண்ட இராமன் முதற்கண் எத்தாயைப் பணிந்தான்? கேகய மன்னன் மகளாகிய கைகேயியைத் தாளில் வீழ்ந்து வணங்கினான். ஏனை இரு தாயாரையும் அஃதாவது தன்னைக் கருச் சுமந்து பெற்ற கோசலையையும், பதினாறு ஆண்டும் தன்னைக் காத்த இலக்குவனைப் பெற்ற சுமத்திரையையும் இரண்டாவதாக வணங்கினான். காப்பியத் தோற்றத்துக்குக் காரணமான கைகேயி நல்லாள் யாரினும் சிறப்புப் பெறும் களம் இது.

மகன்மேற் காதலால் பெற்றோரிடை நடக்கும் இப்போர்க் களத்தை எங்ஙனம் முடிப்பது? இடையே யார் புகுந்து முடிப்பது? கைகேயி அரண்மனையில், யாருமில்லாச் சூழ்நிலையில் அன்றோ இப்போராட்டம் நடக்கக் காண்கிறோம். தயரதன் கூடவந்த மன்னர்களும் வாயிலில் வணங்கி நின்று விட்டார்கள். யாரும் அவனுடன் உள்ளே செல்லவில்லை. பிறர் யாரும் இல்லாத் தனிக்களம் இது; கங்குற் களம் இது - சூழ்நிலையில் தனிமையால் தயரதன் - எப்படிப்பட்ட தயரதன்யானைப் படையை உடைய மன்னர் குழாம் தன் காலில் விழப்பெற்ற தயரதப் பேரரசன் இப்போது கைகேயியின் கால்மேல் முந்தி விழ்ந்தான். ஊடற்கால வீழ்ச்சி இன்ப வீழ்ச்சி. இவ்வீழ்ச்சியோ துன்ப வீழ்ச்சி. தயரதனின் அவலப் பெருக்கத்தையும் உயிர்த் துடிப்பையும் கண்டு கொண்டிருந்த கைகேயி கேட்ட வரத்தை இனி கைவிட்டு விட்டேன் எனவும், இது என் அரண்மனைக்குள் நடந்தது ஆதலின் ஒன்றும் நடவாதது போல் காட்டி இராமனுக்கு முடிசூட்டுவாள் எனவும் மனம் மாறிக் கூறி முடித்தாள் என்று வைத்துக் கொள்வோம். இங்ஙனம் முடிப்பது உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டு தான். ஆனால் காப்பியம் நடக்குமா? இராமாயணக் காப்பியமே தோன்றி இருக்க முடியுமா? ‘தூய்மொழி மடமான்

இரக்கம் இன்மையன்றோ இன்று இவ்வுலகங்கள் இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றவே' என்று ஒளிக்காமல் உண்மையை உடன்பட்டார் கம்பர். கைகேயியின் கொடுமை இக்களத்து வென்றிராவிட்டால், இராமன் புகழ் குடத்து விளக்குப் போல் கோசல நாட்டளவில் அடைபட்டுக் கிடக்கும். கைகேயி இராமனை அயோத்தியினின்று போகர் செய்தாள். அதனால் அவன் புகழ் எங்கும் பரவியது. வாழ்க்கை நீண்டது. காப்பியத்துக்கு வேண்டும் நீட்டிப்பு கிடைத்தது.



## 8.7. காப்பியத் தூய்மை

இராமனுக்கு வெற்றித் தூய்மையைக் காட்டிலும் இன்னொரு பெருந்தூய்மை உண்டு. ஒருவன் இறங்குங்காலத்து எண்ணியிருந்த எண்ணம் எதுவோ அதனை மறு பிறப்பில் எய்துவான் என்பது ஒரு சமயக் கோப்பாடு. 'புண்ணியா உன்னடி என் மனத்தே விழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்' என நாவுக்கரசரும் ,'எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கே ஏதும் நானுன்னை நினைக்க மாட்டேன். அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்' எனப் பெரியாழ்வாரும் கடவுளை வேண்டுதெல் காண்க.

**உயிரோடு வேவேன் உணர்வொழி காலத்து**
**வெயில்விளங் தமயத்து விளங்கித் தோன்றிய**
**சாது சக்கரன் தனையான் ஊட்டிய**
**காலம் போல்வதோர் கனாமயக் குன்றேன்**
**ஆங்கதன் பயனே ஆருயிர் மருந்தாய்**
**ஈங்கிப் பாத்திரம் என்கைப் புகுந்தது,**

என்று மணிமேகலைப் பகுதியில் உயிர் போகுங் காலத்து விருந்து நினைவு வந்தனால் அமுதசுரபி மணிமேகலைக்கு மறுப்பிறப்பில் கிடைத்தது என்று அறிகின்றோம். சாகும்போது உள்ள எண்ணம் மீண்டும் பிறக்கும் போது தோன்றும் எனின், சீதை எண்ணத்தோடு இராவணன் மாண்டான் எனின், காப்பியம் தூய்மையாகுமோ? காப்பியத் தலைவிக்குத் தீயவனிடத்திலிருந்து விடுதலை

இல்லையா? இராவணன் சீதை நினைவு இன்றியே ளேருக்குப் போனான் என்று அமைப்பது காப்பியக் கடன். அக்கடமையை மறவாது வரிய இடத்துத் திறம்படப் பாடினார் கம்பர். சீதையை விடுதலை செய்வதற்காகவே மண்போதரிக் களத்தை அமைத்து இராவணனைத் தூய்மையாக்கினார்.

**கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை**

**மனச்சிறையிற் கரந்த காதல்**

**உள்ளிருக்கும் எனக்கருதி உடலடபுகுந்து**

**தடவியதோ ஒருவன் வாளி,**

என்பது மண்டோதரியின் முடிவுப் புலம்பல் இராவணன் உடலை இராகவன் அம்பு இவ்வளவு ஏன் துளைத்தது? சீதைக் காதலெண்ண அக்காமுகன் நெஞ்சில் இன்னும் எங்காவது நட்புக் கொண்டிருக்கின்றதோ என்று காணத் துளைத்தது போலும். இதனால் மூன்று நலங்கள் உண்டாகின்றன. சீதை விடுதலை பெறுகின்றாள். இராவணன் வீரனாயின்றான். இராகவன் வீரனைக் கொல்கின்றாள். இராம காப்பியம் கற்புக் காப்பியமாகவும்; வீரக்காப்பியமாகவும் உயர்கின்றது. காப்பியக்கம்பர் தீயவனையும், தூயவனாக்கிக் காப்பியத் தலைவனையும் தலைவியையும் உயர்த்துகின்றார்.

'ஒருவன்வாளி' என்ற இறுதித் தொடர் புதுக்குறிப்புக் காட்டுவது ஒப்பற்ற வன்மையான அம்பு என்பது பொருள். வல்வின் ஓரி என்பது போல 'வன்' என்பது வாளிக்கு அடை, ஏனை அம்புகள் உடலைத் தான் துளைக்கும். இராமன் விடுத்த அம்போ இராவணன்தான் உடலுக்குட் புகுந்து, அகத்தையும் துளைத்துக் காதலெண்ணத்தையும் தடவிப் பார்த்தது என்பதனால், 'வன்வாளி' எனப் பாராட்டப்பெற்றது. இவ்விடத்து இத்தொடருக்கு ஒப்பற்ற ஒருவனது அம்பு எனப் பொருள் கூறல் கவியுள்ளம் ஆகாது. 'அகரத்தின் முன் லகரம் ணகரமாகத் திரியும்' சிலவிடங்கள் உள. 'நன்வாயாடுதல் வென்வேலான்', குன்று, 'வென்வேற்கிள்ளி' என்று ஆட்சிகளைக்காண்க.

## 8.8. இராமாயணக் காப்பியம்



'கற்றனைத்து ஊறும் அறிவு' என்றார் வள்ளுவர், பிறவகை இலக்கியங்களைக் கற்பதனால் ஊறும் அறிவினைக் காட்டிலும் காப்பியத்தைக் கற்பதனால் ஊறும். அறிவு மிகுதியாகும். ஏனை இலக்கியங்கட்கு உலகத்தின் ஒவ்வொரு துறையே பொருள். காப்பிய இலத்தியத்திற்கு உலகமே பொருள். காப்பியன் உலகத்தை வளர்த்து எழுதுகின்றான். ஆதலின் காப்பியக் கல்விதரும் அறிவு பரந்தது வற்றாதது, சிந்தனையை வளர்ப்பது கல்வியின் பயன் என்ன? காலந்தோறும் கருத்து வேறுபடுகின்றது எழுதும் கைதோறும் கருத்து வேறுபடுகின்றது. கல்வியின் முதலான, மெய்யான பயன் ஒன்றுதான் அதுவே அறிவென்னும் சிந்தனைச் செல்வம். அச்செல்வத்தைக் காப்பியம் போல் பிறிதொன்று தருவதில்லை. அதுவும் கம்பரின் காப்பியத்தில் கிடைப்பது போல வேறொரு காப்பியத்தில் விரிவாகவும், வெளிப்படையாகவும். கிடைப்பதில்லை.

தமிழ்க் காப்பிய வரலாற்றில் இராமாயணத்துக்கு ஒருதனிச் சிறப்பு உண்டு. சங்க இலக்கியத்துக்கும், சங்கப் பின் இலக்கியத்துக்கும் சிலப்பதிகாரம் இலக்கியப் பாலமாக விளங்குவது போல, இராமாயணமும் இடைக் கால முன் இலக்கியத்துக்கும், இடைக்காலப் பின் இலக்கியத்துக்கும் ஒரு பாலமாக நிற்கின்றது. ஓசையாலும் சொல்வளத்தாலும் கற்பனையாலும் உணர்ச்சியாலும் ஓட்டத்தாலும் இராமாயணம் தமிழ் நிலத்து ஒரு வழிக்கல். கம்பர் தமக்கு முன் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, பெரியபுராணம் முதலான காப்பியங்களின் வனப்புக்களை வடிவமைத்துக் கொண்டும், தம் மதி நுட்பத்தால் நுண்ணிய பல வனப்புக்களைப் படைத்துக் கொண்டும் உவமையில்லா ஒரு பெருங்காப்பியத்தை ஆக்கினார்; 'பின்னொரு புதிய காப்பியத் தோற்றத்துக்கு இடமில்லாதபடி இராமாயணத்தை காப்பிய எல்லைக் கல்லாக துறுத்தினார்.

விரிவிலும் செறிவிலும் கம்பருக்கு இணை யார்? இராமாயணத்தில் பல படலங்கள் தனித்தனி நூல் எனத் தரும் சிறப்புடையன. செகப்பிரியரின் நாடகங்கள் அனைத்தையும் தொகுத்தால் இராமாயணத்தின் பாதியளவு தானே இருக்கும். பால காண்டத்தில், தாடகைவதைப் படலம், அகலிகைப் படலம், மிதிலைப்படலம், கார்முகப் படலம், அயோத்தியா காண்டத்தில் மந்தரை

சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம்; நகர் நீங்கு படலம், பள்ளியடைப் படலம், குகப் படலம், ஆரணிய காண்டத்தில் சூர்ப்பனகைப்படலம், மாரீசன் வதைப்படலம், சடாயு உயிர்நீத்த படலம்; கிட்கிந்தா காண்டத்தில் மராமரப் படலம், வாலி வதைப் படலம், கிட்கிந்தைப்படலம்; சுந்தரகாண்டத்தில் ஊர்தேடு படலம், காட்சிப்படலம், நிந்தனைப் படலம், உருக்காட்டுப் படலம், சூளாமணிப் படலம், பிணி வீட்டுப் படலம், யுத்த காண்டத்தில் மந்திரப் படலம், இரணியன் வதைப் படலம், வீடணன் அடைக்கலப் படலம், அங்கதன் தூதுப் படலம், முதற்போர்ப் படலம், கும்பகருணன் வதைப் படலம், நாதபாசப் படலம், பிராட்டி களங்கள் படலம், மாயா சீதைப் படலம், இந்திரசித்துவதைப் படலம், இராவணன் வதைப் படலம், மீட்சிப் படலம், எனவரும் ஒவ்வொரு படலமும் ஒரு நாடகமாம் தகுதியுடையது.

நிகரற்ற, நிறைந்த, பரந்த ஒரு காப்பியம் ஆதலின் இராமாயணம் எத்துணைத் தலைப்புகளிலும் பேசுவதற்கு இடங்கொடுக்கின்றது என்று தேய்ந்து இறுதல் என்ற நூற் குற்றம் இன்றி ‘புணர்ந்தாற் புணருந் தொறும் போதும் பின்னும் புதிதாய்… வளர்கின்றதே’ என்ற திருக்கோவைப்பாடி பாட்டுக்குப் பாட்டு, பலத்துக்குப் படலம், காண்டத்துக்குக் காண்டம் கருத்துயர்வைக் காண்கின்றோம். ஒரு கட்டுரை எழுதியபின், இன்னொரு கட்டுரைக்குப் பலர்பால் கருத்து இருப்பதில்லை. ஒரு சில கட்டுரை எழுதியோர் மேலும் எழுதும் கட்டுரைகளில் முன்னவை திரும்பத் திரும்ப வரக் காண்கிறோம். இதற்குச் சிந்தனை வறுமையே காரணம்; சிந்தனைச் செல்வம் பயக்கும் காப்பியங்களை முறையோடு படியாமை காரணம். பதினாயிரம் பாடல்கள் பாடிய பின்னரும் கம்பநாடருக்கு கருத்து போதவில்லை; தொட்ட இடம் எல்லாம் ஊற்றுக் கண்களையே காண்கிறோம். கம்பரின் கருத்து வளர்த்துக்கு ஒரு பெருங் காரணம் சிந்தனைத் தொடர்பு அல்லது தொடர்புச் சிந்தனை. எவற்றை, எவற்றை, எத்துணை, எத்துணை ஒழுங்கு கூட்டி இணைத்து அறாது சிந்திக்க முடியுமோ அவ்வளவு சிந்தித்தவர் கம்பர். இவர்தம் சிந்தனை முழுப் பார்வையினாற்றான் விளங்கும்.

## 8.9. காப்பிய நேர்மை

காப்பிய நடப்புக்காக இனியவற்றையும் புலவன் தழுவிப் பாடினாலும், மன்னாயத்துக்கு வண்மையை வடித்துக் காட்டுதல் அவன் கடமை; யார் தீமை செய்தாலும் அதனைச் சுட்டிக்காட்டுதல் அவன் பொறுப்பு பாத்திரத்தின் மேற்பெரும்பற்று வைத்து அறக் கடமையை அவன் புறக்கணித்தல் கூடாது. புல பாத்திரங்களைத் தனித்தனி ஆராய்ந்து, கம்பர் நேர்மையை நாம் காணலாம். அங்ஙனம் காணப்புகுதல் மிக விரிவாகும் என்று அஞ்சி ஒரு பாத்திரத்தை மட்டும் கொண்டு காப்பிய நேர்மையைப் புலப்படுத்த முயல்கின்றேன்.

## 8.10. பெண்களின் செல்வாக்கு

இராமன் தன்னேரில்லாத தலைவன் என்பதைப் பல நிலையிலிருந்து கண்டோம். ஆனால் இராமன் எக்குற்றமும் இல்லாதவன் என்று சொல்ல முடியுமா? இந்த வினா வீம்பானது என்று எண்ண வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இராமனாயினும் காப்பியத்துள் ஒரு பாத்திரமே என்று கொண்டு ஆராய வேண்டும். ஒரு காப்பியம் நீளமாக இயங்க வேண்டும் என்றார் அது தலைமைப் பாத்திரத்தின் குணத்தாலும் இயங்கும்,குற்றத்தாலும் இயங்கும். இருவகை நிலையுமின்றிக் காப்பியத்துக்கு நீளம் வாராது. தன் பெறாத இராமாயணப் பெற்றதாகக் கொண்டு பேரன்பு காட்டிய கைகேயி மனம் திரிந்த காரணத்தாலும், முக்கோடி வாழ்நாளும் பெருவரமாக பெற்ற இராவணன் என்பவன் இராமனின் மனைவியை நயந்த காரணத்தாலும் காப்பியம் நோட்டோட்டம் பெறுவதாயிற்று. இராமாயண நிகழ்ச்சிகளில் இராமன் எவ்வாறு நடந்தான்? அவன் நடந்த முறை கம்பன் மனத்து எப்படிப்பட்டது? இராமனிடம் குற்றம் கண்டக்காலும் கம்பர் அதனைச் சுட்டக் கூடாது என்று சும்மா இருந்தனரா? எல்லாப் பாத்திரத்திலும் இராமபாத்திரத்தை மட்டும் காப்பிய நேர்மை என்ற தலைப்பில் ஏன் பேச நினைக்கின்றேன் என்றால், தலைமை ஒப்பில்லா இப்பாத்திரத்தையே விடாது அலசிக் கம்பர் நேர்மை காட்டுகிறார் எனில், வேறு பாத்திரங்கள் அவர்க்கு விலக்காகுமா என்று தெரிவிப்பதற்குத்தான்.

தசரதன் விழுந்தும், மன்றாடியும் கைகேயி தான் கேட்ட வரத்தை மீட்டுக் கொள்ளவில்லை உய்யேன் தங்காய் உன் அபயம் என் உயிரென்று

அடைக்கலமாகக் கணவன் பணிந்தபோதும், இது அதிகாரமா, அறமா என்று மனைவி வினவினாளேயன்றி அதை விட்டு, இரக்கம் இல்லையாதலால் இராமன் வனப்புக வேண்டியதாயிற்று. தசரதன் மனைவி கைகேயி அவன் சொல்லைக் கேட்கவில்லை இராமன் மனைவி சீதையும் அவன் சொல்லைக் கேட்கவில்லை. தாய் தந்தையின் ஆணைப்படி வனஞ்சென்று வருவேன். அதுவரை நீ வருந்தாதே எனவும், சூடும் மேகம் உடைய காடு நின் திருவடிப்போதுக்கு நல்லதன்று எனவும் பக்குவமாகக் கூறிய இராமனுக்கு,'நின்பிரிவுனும் சுடுமோ பெருங்காடு' என்றாள் சீதை. அவனை மேலும் பேச விடாது மாவுரி தரித்து வந்து கையைப் பிடித்துக் கொண்டாள். 'வரவேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றவையே; நீ கூட வந்தால் எல்லையற்ற இடர் தருவாய்' என்று வெளிப்படையாக மொழிந்தான் இராமன்.

**கொற்ற வன்னது கூறலும் கோகிலம்**
**செற்ற தன்ன குதலையள் சீறுவாள்**
**உற்று நின்ற துயரமி தொன்றுமே**
**எற்று றந்தபின் இன்பங்கொ லாம் என்றாள்.**

நான் உடன் வருவது ஒன்றே உங்கட்குத் துன்பம் என்னை விட்டுச் சென்று விட்டால் உங்கட்கு எல்லாம் இன்பம் என்று ஊடலும் ஐயமும்படச் சீதை மொழியவே,' பிறிதோர் மாற்றம் பெருந்தகை பேசலன்' என்று கம்பர் நாகரிகமாக இக்களத்தை முடிக்கின்றார். தன்னேரில் லாத்தலைவள் வேண்டுகோள் பலிக்காத இடம் இது என்று தெரிந்து கொள்ளுங்கள். தயரதன் சொல்லும், இராமன் சொல்லும் தத்தம் மனைவியரிடத்துச் செல்லும்படி ஆகாமையால் இராம காப்பியம் விரிக்கின்றது.

காப்பியம் இடையறாது நீளநீளச் சொல்ல வேண்டும் எனின், இடையிடையே குற்றக் களங்கள் அமைதல் வேண்டும். கைகேயியின் இரக்கமின்மை காப்பியத் தலைவனான இராமனை முடிதுறந்து, நாடுதுறந்து, மனைவியோடு காடேகச் செய்தது. அவள் இரக்கமின்மைக்குக் காப்பிய வேகம் அவ்வளவே அதற்கு மேலும் காப்பியம் வளர வேண்டும். எனின் பிறிதொரு புதுக்காரணம் வேண்டும். அக்காரணந்தான் சீதை பொன்மானைப் பிடித்துத்தர

வேண்டும் என்று வலியுறுத்தியது. இராமாணயக் காப்பியம் ஒருவகையால் நோக்கின் பெண் இயக்கக் காப்பியம்; பெண்ணின் சிறுமையால் தாழ்ந்து பெண்ணின் பெருமையில் உயர்ந்த காப்பியம். கூனி, கைகேசி, சீதை, சூர்ப்பனகை என்ற நாற்பெண்களாலும் தொடர்ந்து நீளும் ஒரு காப்பியம். கைகேசியால் தயரதனும் சீதையால் இராமனும் சூர்ப்பணகையால் இராவணனும் நிலைதடுமாறியதைப் புலப்படுத்தும் ஆடவர்தம் அவலக் காப்பியம் என்று இராமாயணத்தை நோக்கலாம்.

## 8.11. தொகுத்துக் காண்போம்

- வ. சுப. மாணிக்காரின் தமிழ்ப் புலமையை அறிந்து கொண்டீர்கள்.
- கம்பரின் கவிஆளுமையை புரிந்து கொண்டீர்கள்.
- கம்பரின் காப்பிய இலக்கியத்தைத் தெரிந்து கொண்டீர்கள்

## 8.12. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. வ. சுப. மாணிக்கனா் பிறந்த ஊர் எது?

_______________

2. எந்தச் சிலம்பு? என்ற கேள்வியில் வ. சுப. மாணிக்கனாா் மேற்கொண்ட ஆய்வு எது?

_______________

3. மாணிக்கனாரின் சொல் நேர்த்தி எத்தகையது.

_______________

4. கம்பா் பற்றிய காப்பியப் பாா்வைக்கு சான்று தருக.

_______________

5. கம்பன் படைத்த கைகேயி எத்தகையவன்?

_______________

**இக்கால இலக்கியம்**

**குறிப்புகள்**

## 8.13. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. இராமாயணக் காப்பியச் சிறப்பினை எடுத்துரைக்க.
2. பரதனும், இராமனும் பற்றி எடுத்துரைக்க.
3. இராமாயணத்தின் தனிப் பார்வையை எடுத்துக் கூறுக.
4. கம்பர் படைக்கும் பெண்ணின் செல்வாக்கு குறித்து விளக்குக.
5. காப்பியத் தூய்மைக்கு ஒரு சான்று தருக.

## 8.14. மேலும் பயில்வதற்கான நூல்

1. 20ஆம் நூற்றாண்டு தமிழ் உரைநடை-கௌரா பதிப்பகம், சென்னை-2017.

# கூறு – 9

### இன்னொரு காந்திக்காக - அய்க்கண்.

9.1. முன்னுரை

9.2. குறிக்கோள்கள்

9.3. அய்க்கண்

9.4. கதைமாந்தர்கள்

9.5. கதைக்கரு

- 9.5.1. தலைப்பு பொருத்தம்
- 9.5.2. கதை சுருக்கம்
- 9.5.3. நாடகத்தின் தொடக்கம்
- 9.5.4. நாடகத்தின் வளர்ச்சி
- 9.5.5. நாடகத்தின் வீழ்ச்சி
- 9.5.6. நாடகத்தின் உச்சகட்டம்

9.5.7. தொகுத்துக் காண்போம்

9.5.8. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

9.5.9. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

9.5.10. மேலும் பயில்வதற்கான நூல்



## கூறு – 9

### இன்னொரு காந்திக்காக - அய்க்கண்

## 9.1. முன்னுரை

இந்தியாவின் எதிர்காலம் கிராமங்களில் தான் உள்ளது என்று முன்மொழிந்த தேசப்பிதா மகாத்மா காந்தியின் சத்திய சாயலில் கோட்டையூர் என்ற கிராமத்தில் கருப்பையா என்றொரு உத்தமன் வளர்கிறான். கருப்பையா காந்திய பாதையில் உருவாக்கிடும் உத்தமங்களும் காந்திக்கும் இன்னல்களும் நாடகத்தின் போக்கில் இயல்பாக எடுத்துரைக்கப்பட்ட விதம் வாசகர்களிடையே காந்தியக் கொள்கைகளை விழிப்புணர்வுடன் விவரிப்பதாக அமைந்துள்ளது.

## 9.2. குறிக்கோள்கள்

- நாடக அமைப்பினை புரிந்துகொள்வீர்கள்.
- காந்திய சிந்தனைகளை அறிந்துகொள்வீர்கள்.
- கிராமங்களின் உன்னதத்தை உணர்ந்துகொள்வீர்கள்.

## 9.3. அய்க்கண்

## 9.4. கதைமாந்தர்கள்

**வ.எண் கதைமாந்தர்கள் பாத்திரம்**

1. கருப்பையா நாடகத்தின் தலைமகன், காந்தியவான், மீண்டும் ஒரு காந்தியாக ஆகச்சிறந்தவன்

| | | |
|---|---|---|
| 2. | மாணிக்கம் ஐயர் | கருப்பையாவின் ஆசிரியர், தந்தையுமானவர் |
| 3. | வெள்ளைச்சாமி | கருப்பையாவின் தந்தை (கூலித்தொழிலாளி) |
| 4. | ராமாயி | கருப்பையாவின் தாய் |
| 5. | சுப்பையா | ஊர் அம்பலக்காரர் |
| 6. | லெட்சுமி | கருப்பையாவின் மனைவி |
| 7. | கௌரி, நளினி | லெட்சுமியின் தோழியர் |
| 8. | சிவனேசன் | கருப்பையாவின் நண்பர் |
| 9. | இராமசாமி | அமைச்சர், கருப்பையாவுடன் படித்தவன் |

## 9.5. கதைக்கரு

காந்தியமும் நேர்மையுமே செதுக்கும் என்று வாழ்ந்து காட்டிய மகாத்மாவின் பாதையில் பயணிக்கும் அல்லது பயணிக்க முயலும் இன்னோரு காந்தியாக எதிர்பார்க்கப்படும் கருப்பையாவின் வாழ்வியல் திருப்பங்கள் இந்நாடகத்தின் கதைக்கருவாக அமைகின்றது.

### 9.5.1. தலைப்புப் பொருத்தம்

இன்னோரு காந்தியாக வாழ நினைக்கும் கருப்பையா கதாபாத்திரம் சந்திக்க நேரிடும் இன்பங்களும் துன்பங்களும் நாடகத்தில் பெரிதும் எடுத்தாளப்பட்டுள்ளதால் இன்னோரு காந்திக்காக என்ற தலைப்பு நாடகத்திற்கு பொருந்தி நிற்கின்றது.

### 9.5.2. கதை சுருக்கம்

கோட்டையூர் கிராமத்தில் எஸ்எஸ்எல்சி தேர்வில் முதல் மாணவன் கருப்பையா தான் மாணிக்கம் ஐயாவின் அறிவுரையின பேரில் கல்லூரியில் சேர்ந்து படிக்கிறான் ராமசாமி என்றொரு மாணவன் படிப்பதை விட்டு மாணவர்களைத் திரட்டிப் போராட்டம் என்று திசை திருப்புகிறான் கருப்பையா இதனை எதிர்த்ததால் ராமசாமியின் மாணவக் கூட்டத்தால் தாக்கப்பட்டபோதும் கொள்கையைக் கைவிடாமல்நின்று பார்ப்போரை வியப்படையச் செய்கிறான்.

படிப்பு முடிந்ததும் அரசுப் பணியில் கிளர்க்காக அமர்கிறான். லஞ்சம் வாங்கும் ஊழியர்களுக்கு மத்தியில் லஞ்சம் தவிர்த்துப் பணிகளைச் செய்யும் கருப்பையாவின் மீது மற்ற ஊழியர்கள் வெறுப்பை உமிழ்கின்றன உடன் படித்த ராமசாமி அமைச்சராகிறான் தனக்குச் சாதகமான சான்றிதழில் கையெழுத்திட கருப்பையா மறுத்ததால் இராமசாமி தன்னுடைய அதிகார பலத்தால் கருப்பையாவை பணியிடை நீக்கம் செய்கிறான். மீண்டும் கருப்பையா தன்னுடைய கிராமத்திற்கே வருகிறான். இன்னொரு காந்திக்காக நேர்மையுடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்........

### 9.5.3. நாடகத்தின் தொடக்கம்

கருப்பையாவின் கோட்டையூர் கிராமத்தில் எஸ்.எஸ்.எல்.சி படித்த தேர்ச்சி பெற்ற முதல் மாணவனாக கருப்பையா திகழ்கிறான். கருப்பையா தன்னுடைய ஆசிரியர் மாணிக்கத்தின் உதவியுடனும் சமூக நீதி அடிப்படையில் அரசு வழங்கும் இட ஒதுக்கீட்டின் உதவியுடனும் கல்லூரிப் படிப்பை நகரத்தில் மேற்கொள்கிறான். நகர வாழ்கை கருப்பையாவின் அமைதியை உருக்குலைக்கும் வண்ணம் அமைகின்றது. நேர்மையற்ற ஊழல் நிறைந்த சமூகத்தை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

### 9.5.4. நாடகத்தின் வளர்ச்சி

கல்லூாயீல் இராசாமியின் தலைமையில் மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி வகுப்புகளைப் புறக்கணித்துப் போராட்டம் செய்ய மாணவர்கள் கூடி ஆலோசித்தனர். கருப்பையா இப்போராட்ட முடிவில் உடன்பாடாமல் கல்லூரிக்குள் நுழைய முயலும்பொழுது சக மாணவர்களால் தாக்கப்பட்ட போதும் தன் கொள்கையை விடாமல் கல்லூரிக்குள் நுழைந்து விடுகிறான். கருப்பையா இப்படியாக உண்மைக்கு உற்றவனாக படிப்பை முடித்து அரசு அலுவலகத்தில் கிளர்க்காக பணிநியமனம் பெறுகிறான்.

### 9.5.5. நாடகத்தின் வீழ்ச்சி

அலுவலகத்தில் சக பணியாளர்கள் அனைவருக்கும் கருப்பையாவின் கடமை, கட்டுப்பாடு, நேர்மை என்று பணிபுரியும் விதத்தைக் கண்டு வெறுப்பு

உண்டாகியது. அலுவலகத்தின் முதல்நிலை அலுவலரிடம் கருப்பையாவை பணி இடமாற்றம் செய்ய வேண்டி நிற்கும் அளவு பிரச்சனை பெரிதானது. ஆனால் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் கருப்பையாவின் சேவையைக் கொண்டாடினர். கருப்பையாவிற்கு லெட்சுமி என்ற பெண்ணுடன் திருமணம் நடந்து முடிந்ததும் கணவனும் மனைவியும் நகரத்திற்கு குடி வந்தனர். லெட்சுமியின் தோழிகளான (அண்டை வீட்டினர்) நளினி மற்றும் கௌரியின் தவறான ஆசைகாட்டலின் பேரில் லெட்சுமிக்குப் பொருளாசை வருகின்றது டீவி போன்ற ஆடம்பர பொருட்களை கருப்பையாவிற்கு தெரியாமலேயே இன்ஸ்டால்மெண்டில் வாங்கிப் பணம் செலுத்த கருப்பையாவிடம் கூறுகிறாள். லெட்சுமி மகளிற்கு பொருள் சேர்க்க வேண்டுமென்று கருப்பையாவை லஞ்சம் வாங்கும்படியும் எடுத்துரைக்கிறாள்.

### 9.5.6. நாடகத்தின் உச்சகட்டம்

லஞ்சம் வாங்காமல் இன்ஸ்டால்மெண்ட் தொகையைச் செலுத்த கருப்பையா அலுவலகப் பணி முடிந்ததும் இரவு வரை கணக்கராக பகுதி நேர பணியாளியாக கடையில் உழைக்கிறான். இராமசாமி அமைச்சரனதும் தனக்குச் சாதகமாக கருப்பையா கையெழுத்திட மறுத்ததால் பணி நீக்கம் செய்கிறான். நேர்மையாக உழைத்த கருப்பையா இந்த அநீதியை எதிர்க்கச் சக அலுவலர்களை அழைத்த பொழுது கருப்பையாவுடன் இணையாமல் இராமசாமிக்குச் சாதகமாக நின்றனர். வெறுத்துபோன கருப்பையா தன மனைவியிற்கு அரசு வேலையை ஏற்பாடு செய்து விட்டு தன்னுடைய கிராமத்திற்கே இன்னொரு காந்தியை எதிர்பார்த்து சென்றுவிடுகிறான்.

### 9.5.7. தொகுத்துக் காண்போம்

- மண்ணில் காந்திகள் உருவாகும் முன்னமே கோட்சேக்கள் குழி தோண்டி விடுகின்றனர் என்ற சமூக உண்மையைப் புரிந்துகொண்டீர்கள்.
- தடைகளைத் தகர்த்து இன்னொரு காந்தி வருவான் என்கிற நாடகக்கருவினை அறிந்து கொண்டீர்கள்.
- நாடக அமைப்பினை தெரிந்துகொண்டீர்கள்.

### 9.5.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

1. இன்னொரு காந்திக்காக நாடகத்தின் ஆசிரியர் யார்?

______________________________

2. இன்னொரு காந்திக்காக நாடகத்தின் கதைமாந்தர்கள்.

______________________________

3. நாடகக் கருவினை எடுத்தெழுதுக.

______________________________

4. தலைப்புப் பொருத்தத்தை விளக்குக.

______________________________

5. நாடகத்தின் கதைக்கருவினைக் குறிப்பிடுக.

______________________________

### 9.5.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. இலக்கிய வகைமையில் நாடகம் பற்றிக் கூறுக.

2. 'அய்க்கண்' பற்றி குறிப்பு வரைக.

3. இன்னொரு காந்திக்காக வெளிப்படுத்தும் காந்தியும் சிந்தனைகளை வெளிப்படுத்துக.

4. நாகத்தின் கதைச் சுருக்கத்தை விரிவாக எழுதுக.

5. நாடகத்தின் மாந்தர்களை விளக்குக.

### 9.5.9. மேலும் பயில்வதற்கான நூல்

1. ஞானி தமிழ் நவீன நாடகம்-உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-1985.

## கூறு – 10 சிறுகதைகள்

புதுமைப்பித்தன் - **பொன்னகரம்,** ஜெயகாந்தன்- **தமிழச்சி** , இராஜம்கிருஷ்ணன் - **களம்,** பிரபஞ்சன் - **இரண்டு நண்பர்களின் கதை**, வண்ணதாசன் - **பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும்.**

10.1. முன்னுரை

10.2. குறிக்கோள்கள்

10.3. சிறுகதை அமைப்பு

10.4. சிறுகதையின் தோற்றம்

10.5. சிறுகதையின் வளர்ச்சி

10.6. புதுமைப்பித்தன்

10.7. பிறப்பும் வளர்ப்பும்

10.7.1. படைப்புகள்

10.7.1.1. சிறுகதைகள்

10.8. பொன்னகரம் கதைக்கரு

**தமிழச்சி - : ஜெயகாந்தன்**

10.8.1. ஜெயகாந்தன்

10.9. தலைப்புப் பொருத்தம்

10.10.. கதை மாந்தர்கள்

10.11.. கதைச் சுருக்கம்

10.12. சிறுகதை உத்திகள்

10.12.1. இரட்டைக்கிளவி

10.12.2. வசைச்சொல்

10.12.3. வினா விடை உத்தி

10.12.4. எள்ளல்

12.5 களம்- இராஜம்கிருஷ்ணன்

10.13. இரண்டு நண்பர்களின் கதை - பிரபஞ்சன்

10.14. வண்ணதாசன் - பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும்

10.16. வண்ணதாசன்

10.17. தொகுத்துக்காண்போம்

10.18. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

10.19. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

10.20. மேலும் பயில்வதற்கான நூல்கள்

# கூறு – 10

# சிறுகதைகள்

## 10.1. முன்னுரை

நூறு ஆண்டுகளுக்கு முன் எட்கர் ஆலன்போ அமெரிக்காவில் சிறுகதை எழுதத் தொடங்கினார். அவர் விதைத்த வித்து நன்றாக வளர்ந்து உலகம் முழுவதும் பரந்து இன்று ஆலமரமாக விரிந்துள்ளது. மேலை நாட்டாரின் தொடர்பால், தமிழிலும் இச்சிறுகதை இலக்கியம் தோன்றி வளர்ந்து, நிலையான வாழ்வு பெற்று வருகின்றது.

## 10.2. குறிக்கோள்கள்

- சிறுகதையின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து தெரிந்து கொள்வீர்கள்.
- படைப்பாளர்கள் பற்றி அறிந்து கொள்வீர்கள்.

குறிப்புகள்

- சிறுகதைகள் வழி அறியலாகும் சமூக நிலையினை உணர்ந்து கொள்வீர்கள்.

## 10.3. சிறுகதை அமைப்பு

குதிரைப்பந்தயம் போன்று சிறுகதையின் தொடக்கமும், முடிவும், விரைவும், சுவையும் மிக்கதாக விளங்க வேண்டும். இத்தகைய சிறுகதை, அரைமணியிலிருந்து இரண்டரை மணி நேரத்துக்குள் படித்து முடிக்கக்கூடிய அமைப்புடையதாகவும் இருக்க வேண்டும். சிறுகதையின் அளவு மிகச்சிறியதாகவும் இருக்கலாம், பெரியதாகவும் இருக்கலாம்.

கதாப்பாத்திரங்கள் ஒன்றோ பலவோ இருக்கலாம். கதை நடக்கும் காலம் கூட ஐந்து நிமிடமோ, ஒரு நாளோ, ஒன்பது ஆண்டுகளோ இருக்கலாம். ஆனால் கதையைப் படித்து முடித்த பின்பு ஓர் உணர்ச்சி மட்டும் படிப்பவர் நெஞ்சில் நிறைய வேண்டும். எழுதி முடித்த கதைக்கு முன்னேயும், பின்னேயும் உள்ள எழுதாத கதைகள் படிப்போரின் உள்ளத்தில் விரிய வேண்டும் என்பர் அகிலன். கதை என்பது ஒரு சம்பவமாக இருக்கலாம். ஒரு மனோபாவமாக இருக்கலாம்; ஓர் உள்ளப் போராட்டமாக இருக்கலாம். அது ஏதாவது ஒன்றாக இருக்கும் வரையில் சிறுகதை பிறக்கும். இரண்டாகவோ அதிகமாகவோ இருந்தால் சிறுகதை பிறக்காது எனக்கூறுவார் க.நா. சுப்பிரமணியம்.

## 10.4. சிறுகதையின் தோற்றம்

தமிழில் சிறுகதைகள், இவ்விருபதாம் நூற்றாண்டில் தான் தோன்றின. ஆயினும் பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய பரமார்த்த குரு கதையும் வீராசாமிச் செட்டியார் இயற்றிய விநோதரசமஞ்சரியும், தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்த பஞ்சதந்திரக் கதைகளும் சிறுகதைகளின் தொகுப்புகளே. ஆனால் இவைகனைத்தும் சிறுகதையின் இலக்கணம் வாய்ந்தன என்று கூறுதல் இயலாது; சிறுகதையின் தோற்றத்தின் அடிப்படையில் அமைந்தன எனலாம்..

இருபதாம் நூற்றாண்டில் பத்திரிக்கைகள் பொதுமக்களின் வரவேற்புக்கு உள்ளாகிய போது சிறுகதைகள் எழுதிப் பலர் முனைந்தனர். பாரதியார்,

தாகூரின் கதைகளை மொழி பெயர்ந்தார். மாதவையா, பல சிறுகதைகளை எழுதினார். அவை குசிகர் குட்டி கதைகள் என்று தொகுக்கப்பட்டுள்ளன. வ.வே.சு. ஐயர் சிறுகதை படைப்பதில் வல்லவரானார். சிறுகதை தமிழகத்தில் வாழ்வு பெற்றது.

## 10.5. சிறுகதையின் வளர்ச்சி

வ.வே.சு ஐயர் எழுதிய கதைகள் மங்கையர்க்கரசியின் காதல் என்னும் நூலாக வெளிவந்தது. இத்தொகுப்பில் எட்டுக்கதைகள் இருக்கின்றன. இக்கதைகளில் குளத்தங்கரை அரசமரம் என்பது மிகச்சிறந்த சிறுகதை. இதனை படிக்கும் போது இத்தகைய உணர்ச்சி மிக்க சிறுகதையும் தமிழில் எழுத முடியுமா? என்ற வியப்பு ஏற்படுகின்றது. இதனை ஓர் உணர்ச்சி மயமான காதல் கதை - சோகக்கதை என்று புகழ்வார் க.நா. சுப்பிரமணியம்.

தமிழில் சிறுகதை வளர்ச்சி பெற்றுள்ளது என்றால் அதற்குக் காரணம் மணிக்கொடி என்னும் இதழே. இந்த இதழ் 1939 இல் தொடங்கி 3 ஆண்டுகள் நடைபெற்றது. அப்போது இவ்இதழில் சிறுகதைகள் பல வெளிவந்தன. அவைகளைப் படைத்தவர்கள் புதுமைப்பித்தன். கு.ப. ராஜகோபாலன், மௌனி, பி.எஸ். ராமையா, கு.அழகிரிசாமி, க.நா.சுப்பிரமணியன், சி.க.செல்லப்பா முதலியோர் ஆவார். அவர்களை மணிக்கொடிப் பரம்பரை என்றே குறிப்பிடுவர்.

## 10.6. புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தனைச் சிறுகதை மன்னன், தென்னாட்டு மாப்ஸான் என்று புகழ்வர். இவருடைய சிறுகதைகளில் ஆழமும், சிந்தனைத் துடிப்பும் காணப்படும். நடை, சம்மட்டியின் அடியைப் போலவும், சாட்டையின் வீச்சைப் போலவும் வேகமாக இருக்கும். ஆனால் புரிந்து கொள்வது சற்றுக் கடினமாகும். புராண இதிகாசக்கதைகள் மிகுதியாகக் கலந்து வரும். அவை இக்கால உலகை எடுத்துக்காட்டாகவே பயன்படுத்தப்படும்.

## 10.7. பிறப்பும் வளர்ப்பும்

1906-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் சொக்கலிங்கம் பிள்ளைக்கும் பர்வதம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். பிறந்த ஊர் திருநெல்வேலி.

பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் விருதாச்சலம் ஆகும். புதுமைப்பித்தன் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். தொடக்கக்கல்வியைச் செஞ்சி, திண்டிவனம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் பயின்றார். தாசில்தாராகப் பணி புரிந்த அவர் தந்தை ஓய்வு பெற்றமையால் 1918-இல் அவரது சொந்த ஊரான திருநெல்வேலிக்குத் திரும்பினார். பின்பு நெல்லை இந்துக் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் (டீ.யு.) பெற்றார்.

புதுமைப்பித்தன் பத்திரிக்கைப் பணியில் தொடர்ந்து இருந்து வந்தாலும் அதிலிருந்து திரைப்படத் துறையில் புகுந்தார். 1946-ஆம் ஆண்டு அவ்வையார் படத்திற்கு வசனம் எழுதினார். இவர் திரைப்படத் துறையிலும் ஆர்வம் அதிகம் செலுத்தினார். ஜெமினி நிறுவனத்தின் அவ்வை மற்றும் காமவல்லி படங்களில் பணிபுரிந்தார். எம்.கே.தியாகராஜ் பாகவதரின் ராஜமுத்தி திரைப்படத்திற்கு வசனம் எழுதுவதற்காகப் புனேவில் சில மாதங்கள் வாழ்ந்தார். அங்கு அவர் கடுமையான காச நோய்க்கு ஆளாகி மே-5, 1948-இல் காலமானார்.

### 10.7.1. படைப்புகள்

அவர் தம் வாழ்க்கையில் அனுபவித்த வறுமை, நிராசை, நம்பிக்கை, வறட்சி ஆகியவற்றை தம் கதைகளில் அப்படியே பதிவு செய்துள்ளார். இவரது முதல் படைப்பானது "குலோப்ஜான் காதல்" காந்தி இதழில் 1933-இல் வெளிவந்தது. 1934-லிருந்து மணிக்கொடியில் இவரது படைப்புகள் பிராமாகத் துவங்கின. மணிக்கொடியில் வெளிவந்த இவரது முதல் சிறுகதை ஆத்தங்கரைப் பிள்ளையார். இந்த காலகட்டத்தில் அவர் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். தன் 15 ஆண்டு கால அளவிலேயே அவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், 15 கவிதைகள், சில நாடகங்கள், புத்தக விமர்சனங்களை எழுதிக் குவித்தார். அவரது எழுத்துக்கள் அவரைப் புரட்சி எழுத்தாளராக அடையாளம் காட்டின.

#### 10.7.1.1. சிறுகதைகள்

புதுமைப்பித்தனின் சிறுகதைகள்தான் அவருக்கு எழுத்துலகில் தனி இடத்தை அளித்தன. அவர் எழுதியதாகக் கணிக்கப்படும் 108 சிறுகதைகளில் 48 மட்டுமே அவர் காலத்திலேயே வெளியாகின. அவரது சிறுகதைகள்

மணிக்கொடி, கலைமகள், ஜோதி, சுதந்திர சங்கு, ஊழியன், தமிழ்மணி, தினமணி ஆண்டு மலர், நந்தன் ஆகிய பத்திரிக்கையில் பிரசுரமாயின.



புதுமைப்பித்தன் சிறுகதை எழுத்தாளர் மட்டும் அல்லர். புதினங்கள், அரசியல் கட்டுரைகள், கதைகள், நாடகங்கள், திரை உரையாடல்கள், கவிதைகள், மொழிபெயர்ப்புக் கதைகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள் எனப் பலவற்றைப் படைத்தவர்.

## 10.8. பொன்னகரம் கதைக்கரு

புதுமைப்பித்தன் காதல், சாவு, வறுமை, காமம், பசி, பயம், சிறுமை, சீரழிவு, சோகம், குழப்பம், கொந்தளிப்பு, மந்திரம், புராணம், என்று பலவற்றைக் கதைக் கருவாக எடுத்துக் கொண்டுள்ளார். அவர் எடுத்தாண்ட கதைக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு அக்கதைகளை,

- தனிமனித உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள்
- தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள்
- சமுதாயச் சிக்கலை மையமிட்ட கதைகள்
- காதலைக் கருவாகக் கொண்டவை.
- நகர வாழ்கையின் போலித் தன்மைகளை வெளிகாட்டும் கதைகள்.

புதுமைப்பித்தன் கதைகளில் ‘கற்பு’ என்ற கருத்தாக்கத்தைப் பேசும் பொன்னகரமும், இராமன் கொடுத்த சாபவிமோசனத்தைத் தேவையில்லை என்று தூக்கியெறிந்து விட்டு மீண்டும் தன்னைக் கல்லாக்கிக் கொண்ட அகலிகையைப் பற்றிப் பேசப்படும் சாபவிமோசனமும் பலரால் அதிகம் விமரிசிக்கப்பட்டவையாகும். பொன்னகரம் என்ற இடத்தைப் பற்றிக் கூறுகையில் “பொன்னகரம் என்ற இந்த திவ்வியப் பிரதேசத்தைத் தரிசிக்க வேண்டுமானால், சிறுதூரலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக்குழம்புகள், சாலையோரமாக முனிசிபல் தங்கை – அல்ல. யமுனை, தானே கறுப்பாக இருக்கும்? அதுதான்

பிறகு ஓர் இரும்புவேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக்கூடுகள். ஆமாம், வசிப்பதற்குதான்.

தண்ணீர் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை – சாதாரண எண்ணெய் விளக்கு அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ணபட்சத்தில்) ஏற்றி வைத்தால் போதாதா? என்று வறுமையில் வாடுபவர்களின் இருப்பிடத்தை வர்ணிக்கின்றார். மேலும், அவ்விடத்தில் உள்ள ஆரோக்கியக்குறைபாடுகளை,'ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது, பாக்டீரியா விஷக்கிருமிகள் காலரா இத்தியாகி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன: எப்படியாவது உயிர்வாழ வேண்டும் என்று ஆசையிருந்தால் எல்லாம் நடக்கும்"- என்று வறுமையாளர்களின் வாழிடத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.கேலி, கிண்டல் அங்கத்துடன் சமுதாயச் சிக்கல்களை எடுத்துரைத்தார். இவரது கதையிலே கல்லும் உயிர் பெற்று வரும். தொன்மக் கதைகளையும் ஆய்வுக்கு உட்படுத்தியதைச் சாபவிமோசனம், அகலிகை கதைகள் புலப்படுத்தும். கடவுள் மனிதனிடம் சிக்கினால் படும்பாட்டைக் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் எடுத்துரைக்கும். ஒருநாள் கழிந்தது, கபாடபுரம், கயிற்றரவு முதலானவை. இவரது படைப்புகள். தமிழ்நாட்டின் மாப்பபஸான் என்னும், சிறுகதை மன்னன் என்றும் போற்றப்படுகின்றார்.

பொன்னகரத்தில் வாழ்பவர்கள் வறுமையின் மடியில் சிக்கித் தவிப்பவர்கள். 'அது வேற உலகம் ஐயா, அதன் தர்மமும் வேறு' என்று அந்நகரை விவரிக்கும் பதுமைப்பித்தன், சொந்தமாகக் குதிரைவண்டி வைத்திருக்கும் முருகேசன், அவன் மனைவி அம்மாளு, முருகேசனின் தாயார், தம்பி, குதிரை ஆக ஐவர் உள்ள ஏழ்மைக் குடும்பத்தை அக்கதையில் காட்டியுள்ளார்.

ஒருநாள் குடிபோதையில் அடிபட்டுப் பேச்சு மூச்சின்றிக் கிடக்கிறான் குதிரை வண்டிக்காரன் முருகேசன். அவனுக்கு நிறைவு வந்தவுடன் பால் கஞ்சி கேட்கிறான். மில் கூலியான் அம்மாளுவுக்குக் கூலியோட இன்னும் இரண்டு நாட்கள் இருக்கின்றன. வீட்டில் காசில்லை.

தண்ணீர் எடுக்கச் செல்கிறாள் அம்மாளு, சந்திற்குப் பக்கத்தில் ஒருவன் அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருப்பவன் - நிற்கிறான். அவனோடு இருளில் மறைகிறாள். "அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்து விட்டாள்" ஆம். புருசனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்".

"என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இது தான் ஐயா பொன்னகரம்" என்று கதையை முடித்துள்ளார் புதுமைப்பித்தன்.

இக்கதையில் பொன்னகரத்தில் கற்பு படும் பாட்டை எரிமலையாகக் கொட்டுகிறார். ஒரு பக்கம் கற்பு, கற்பு என்று கூக்குரலிடும் பணக்காரச் சமுதாயம், மறுபக்கம் வறுமையின் கோரப் பிடியில் சிக்கி நாள்தோறும் வாழ்வுக்குப் போராடும் சமூகம், பொருளாதாரம் என்ற கருவிதான் 'கற்பை' நிர்ணயிருப்பது சுமூகமாக வாழ்பவர்களுக்குக் கற்பு ஒரு பெரிய விஷயம். வறுமையின் பிடியில் இருப்பவர்களுக்குக் கற்பு பெரிய விஷயமல்ல. இதைத்தான் இக்கதை வழி புதுமைப்பித்தன் சூசகமாக உணர்த்தியிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

## தமிழச்சி

**- ஜெயகாந்தன்**

### 10.8.1. ஜெயகாந்தன்

இன்றைய இலக்கிய உலகில் புரட்சியாளராகத் திகழ்பவர். இவருடைய கதைகளில் குடிசை வாழ் மக்கள் காவியத் தலைவர்கள் ஆகின்றனர். பேச்சுமொழி, இலக்கிய மொழி ஆகின்றது. யதார்த்தவாதம், இவருடைய கதைகளில் அடிப்படை. இவர் எழுதிய யாருக்காக அழுதாள்? எனும் கதை பலராலும் பாராட்டப்படுவது.

ஜெயகாந்தன் ஏப்ரல் 24, 1934-ஆம் ஆண்டு கடலூர் மாவட்டத்திலுள்ள மஞ்சக்குப்பம் என்னும் ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர் தண்டபாணிப் பிள்ளை, மகாலட்சுமி அம்மாள் ஆவார். ஒரு வேளாண் குடும்பத்தைச் சாந்தவராவார். பள்ளிப்படிப்பில் ஈடுபாடு இல்லாத இவர் உலகியல் அனுபவம் பெறவேண்டும் என்பதற்காக வீட்டை விட்டு வெளியேறி விழுப்புரம் சென்றார்.

அவரது மாமா ஜெயகாந்தனை பொதுவுடைமைக் கோட்பாடுகளுக்கும், பாரதியின் எழுத்துக்களுக்கும் அறிமுகப்படுத்தினார்.



இவர் ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். இந்திய அரசின் இலக்கியத்திற்கான உயர்ந்த விருதான "ஞான பீட" விருதைப் பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர். இவருடைய படைப்பிலக்கியக்களம் சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், திரைப்படங்கள் என பரந்து இருக்கின்றது.

இவரது இலக்கிய வாழ்க்கை 1950-களில் தொடங்கியது. சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்ற ஏடுகளில் இவரது படைப்புகள் வெளியாயின. படைப்புகளுக்குப் புகழும் அங்கீகாரமும் கிடைத்தன. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவராகப் போற்றப் பெற்றார்.

விருதுகள்

சாகித்திய அகாடமி விருது

2002-ம் ஆண்டு ஞான பீட விருது

2009-ம் ஆண்டின் இலக்கியத்துறைக்கான பத்மபூஷன் விருது

ரஷ்ய விருது

ஜெயகாந்தன் 08.04.2015 அன்று இரவு உடல்நலக்குறைவினால் இயற்கை எய்தினார்.

## 10.9. தலைப்புப் பொருத்தம்

கதை சொல்வது மரபு ரீதியான ஒன்றாகும். மனிதன் தன் அனுபவங்களை அடுத்தவர்க்கும் அடுத்த தலைமுறையினக்கும் சொல்கிறான். இத்தகைய இலக்கியப்பணியை ஜெயகாந்தன் திறம்பட நிகழ்த்தியுள்ளார். அவர் எழுதிய தமிழச்சி என்ற தொன்மைச் சிறுகதையைப் பற்றி இங்கு காண்போம்.

தமிழச்சி காப்பிய காலத்தில் வீர மங்கையாகத் திகழ்ந்த கண்ணகியின் பண்புநலனை மையமாகக் கொண்டு ஜெயகாந்தன் நவீனகால கண்ணகியைப்

படைத்துள்ளார். எந்தக் காலத்திலும் பெண்கள் தங்களுக்கு ஏற்படக்கூடிய அநீதிகளை எதிர்த்து துணிந்து செயல்படுபவர்களாகப் பற்றி கண்ணகி என்ற தொன்மத்தின் வாயிலாக தமிழச்சி சிறுகதையின் தலைப்புப் பொருத்தம் அமைகிறது.

### 10.10. கதை மாந்தர்கள்

இளங்கோ, நாரதன், தேவேந்திரன், இந்திரன், கண்ணகி, சுதர்சனம் பிள்ளை ஆகியோர் ஆவர்.

### 10.11. கதைச் சுருக்கம்

தமிழச்சி சிறுகதை தொடக்கத்தில் படைப்பாளியின் கதை கூறும் உத்தியில் தொடங்கி, பின்பு கதைமாந்தர்களின் உரையாடல் உத்தி கையாளப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. சிறுகதைத் தொடக்கம் முதலில் தேவலோகத்தில் ஆரம்பமாகிறது. தேவலோகத்தில் இருக்கும் இந்திரன், தேவேந்திரன் இருக்கும் அவையில் நாரதர் பூலோகத்தில் வாழக்கூடிய மக்களின் வீரமில்லாதத் தன்மை, பெண்கள் கற்பில்லாதத் தன்மை, நீதி நேர்மை அனைத்துமில்லாத தற்கெட்ட மக்களாக வாழ்வதாக இளங்கோவடிகளை நோக்கி பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். அதனைக் கேட்டு இளங்கோ அழுதவாறு இது வீண் அவதூறு. தமிழ்நாட்டு மக்கள் அறம் மிக்கவர்கள். அவர்களின் நற்பண்பின் மீது கொண்ட பொறாமையால் நாரதர் பொய்யுரைப்பதாக தேவலோக அவையில் வாதிடுகின்றார். அவருக்கு துணைநிற்கும் விதமாக கண்ணகியும் நீதிதவறிய பாண்டிய மன்னனைத் தன் கற்புநெறியால் தண்டித்தாகவும், மதுரை முழுவதும் தன் கற்புநெறியால் அநீதியை எதிர்த்து வெற்றி கொண்டதாகவும் உரைக்கின்றாள். மேலும் தமிழர் மீது பொய் உரைக்கும் நாரதரைத் தண்டிக்க வேண்டுகிறாள். இதனால் நாரதன் இருவரையும் பூலோகத்திற்குச் சென்று தங்கள் இலட்சிய பூமியைக் கண்டுவரும்படி கூறுகிறார். அவ்வாறே கண்ணகி, இளங்கோ மதுரை நகரத்திற்கு விரைகின்றனர். அப்போது வைகை நதி தன் புண்ணிய தன்மையை இழந்து காணப்படுகிறது.

நகரில் ரயில் போன்ற போக்குவரத்து வசதி காணப்படுகிறது. பெண்கள் விபச்சாரம் மேற்கொண்டு வருவதைக் கண்டு போலீஸ் வசைபாடுவதைக் கண்ட

இளங்கோவும், கண்ணகியும் மனம் நொந்து செல்லக்கூடிய வேளையில் போலீஸின் பல்வேறு வசைச்சொற்களைக் கேட்டு தாங்கிக் கொள்ள இயலாமல் இளங்கோ போலீஸை ஒரு அடியில் வீழ்த்தினார். பின்பு மதுரை நகருக்குள் சென்ற போது அவர்களுக்கு ஆதரவாக சுதர்சனம் பிள்ளை அடைக்கலம் தருகிறார்.

இரவு வேளையில் வைகையின் கரைக்கு இளங்கோ செல்ல முற்படும் போது விலை மகளிர் அவரை தன்னுடைய ஆசைக்கு இணங்கும்படி பல மகளிர் இளங்கோவை வழி மறித்தனர். இதனால் அவர் மனக்குமுறலும் கண்ணீரோடு அவ்வீதியை விட்டு வெளியேறுகிறார். கண்ணகிக்கு அடைக்கலம் தந்த சுதர்சனம் பிள்ளையின் தகாத செயலைப் பொறுத்துக் கொள்ள முடியாது அவனைக் கொலை செய்த பத்தினித் தன்மை உடையவாளாகக் கண்ணகி படைக்கப் பட்டிருக்கிறாள்.

## 10.12. சிறுகதை உத்திகள்

ஜெயகாந்தனின் தமிழச்சி சிறுகதை பல்வேறு உத்திகளை உள்ளடக்கி உள்ளது.

### 10.12.1. இரட்டைக்கிளவி

பிரித்தால் பொருள் தராத சொற்களை இரட்டைக் கிளவி என்பர். அவ்வாறு ஜெயகாந்தன் தன் சிறுகதையில்,

**இளங்கோ பற்களை நெறு நெறு வெனக் கடிக்கிறார்.**

**ஆற்றுப் பாலத்தின் மீது ரயில் வண்டி கட கடத்து ஓடின.**

என்னும் இவ்வடிகள் மூலமாகக் காணலாம்.

### 10.12.2. வசைச்சொல்

வசைச்சொல் என்பது ஒருவரை திட்டுவதற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய சொல்லாகும். ஜெயகாந்தன்,

ஏ ஆயி! பொழுது விடிஞ்சப்புறமுமா வியாபாரம்? சீ, ஊரையே நாறடிக்குதுங்களே, கழுதைங்க! என்று சலித்துக் கொண்டே அவர்களருகே வருகிறான் போலீஸ்காரன் என்ற வரிகள் மூலமாக அறியலாம்.

### 10.12.3. வினா விடை உத்தி

ஒருவர் கேட்கும் வினாவிற்கு விடையளிக்கும் விதமாக அமைவது வினா விடை உத்தியாகும். இதனை,

**பெரிய மனிதர் கண்ணகியை ஏற இறங்கப் பார்த்தார்.**

**ஒன் பேரு என்னம்மா?**

**கண்ணகி!**

**அட, நல்ல தமிழ்ப் பெயராயிருக்கே?**

என்னும் இவ்வரிகளின் மூலமாக படைப்பாளி வினா விடை உத்தியைப் பயன்படுத்தியிருத்தை அறிய முடிகிறது.

### 10.12.4. எள்ளல்

ஜெயகாந்தன் சமூக அவலங்களை எள்ளல் தொனியோடு எடுத்துக் கையாண்டுள்ளார். இளங்கோவடிகளை விலைமாந்தர்கள் தன்னிடம் வருமாறு அழைக்கும் போது,

**கலீர் என்ற சிரிப்பொலி!**

**என்னாங்க, பார்க்கிறீங்க?**

**அவசரப்படாதேடி! அவர் நோட்டம் பார்த்துத்தான் வருவாரு!**

**பார்த்தது போதும், வாங்க.**

என்ற இவ்வரிகள் மூலமாக பரத்தைத் தொழில் செய்யும் மகளிர் சிறிதும் மனக்கலக்கம் இல்லாமல் பெண்களை எள்ளி நகையாடும் விதமாகப் படைத்திருப்பதைக் காணமுடிகிறது.



**குறிப்புகள்**

இக்கால இலக்கியம்

குறிப்புகள்

ஜெயகாந்தன் தமிழச்சி என்ற சிறுகதை வாயிலாக காப்பிய காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் வீரம், ஒழுக்கம். இக்காலத்தில் சமூகச் சீர்கேடுகள் பல அடைந்திருப்பதை தன் கற்பனை நயத்திற்கு ஏற்ப வடித்துள்ளதை இங்கு அறிய முடிகின்றது.

### 10.12.5 களம்- இராஜம்கிருஷ்ணன்

**முன்னுரை**

சிறுகதை உலகில் சிறகடித்து பறந்த இராஜம் கிருஷ்ணன் சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படக்கூடிய அவலநிலையைக் கண்டு களம் என்ற சிறுகதையைப் படைத்துள்ளார். இச்சிறுகதை பெண்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகள், வன்கொடுமை, வரதட்சணை, பெண்ணுக்கு பெண்ணே எதிரியாக விளங்கும் தன்மையை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**களம் கதைச் சுருக்கம்**

தமிழ்ல் ‘களம்’ என்பதற்கு போர்க்களம் என்றும் பொருள் உண்டு. அது போல பெண்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை இவ்வுலகம் பல்வேறு போராட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது. கதைத் தலைவி ஆனந்தி முதுகலைப்பட்டம் பெற்றதோடு ஆசிரியர் பயிற்சியும் பெற்று ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறான். மேலும் பெண்கள் மறுமலர்ச்சி உரிமைக் கடிகம் ஒன்றை நடத்தி வருகிறான். இவளது கணவன் சந்திரன் வங்கியில் பணிபுரிந்து வருகிறான். இருவரும் ‘சாதி மறுப்பு’ திருமணம் செய்து கொண்டு தனியாகக் குடித்தனம் மேற்கொண்டிருந்தனர். ஆனந்தியின் மீது பொறாமை உணர்வு காரணமாகச் சரளாதேவி அவளது பணியிலிருந்து பணியிடை நீக்கம் செய்ய காரணமாக இருந்தாள். பெண்ணின் வளர்ச்சியைக் கண்டு பெண்ணே பொறாமைப் படும் எண்ணம் கொண்டவளாகச் சரளாதேவி விளங்குகிறாள். இதனை எதிர்த்து ஆனந்தி தனது உரிமைக்காகப் போராடுகிறாள். பானு என்ற பெண் தனக்கு வேலை வேண்டும் என்பதற்காக

*Self -Instructional Material*

ஆனந்தியின் சிறிய பரிசு வேண்டி வருகிறாள். இருப்பினும் தன்னால் பானுவுக்கு உதவ இயலாத நிலையில் வெறுமையுற்றுத் திகழ்கிறாள். சந்திரன் தம்பி பாபு ஆனந்தி நடத்தும் பெண் உரிமைக் கழகத்திற்கு ஆதரவாக பேசக்கூடிய இயல்பு உடையவன். அவனும் வங்கியில் பணிபுரிகிறான். அவனுக்கு திருமணம் முடிவாகிறது. அப்பெண்ணுக்கு முப்பது சவரன் நகை வரதட்சணையாகப் பேசப்பட்டுள்ளதை அறிந்த ஆனந்தி படிந்தவர்களது மனதில் படிந்திருக்கும் இந்த வரதட்சணைப் பற்றிய நிலையை முற்றிலும் மாற்றுவதற்கு பல போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என நினைக்கும் போது அவளது கணவன் சந்திரன் அவளுக்கு ஆதரவாக துணைநிற்பவனாகக் கதை முடிவுறுகிறது.

**கதை மாந்தர்கள்**

ஆனந்தி, சந்திரன், பானு, சரளாதேவி. பாபு, ஜோதிபாலா, சுக்கு, கிறிஸ்டி. போன்றோர்.

**கதைத் தொடக்கம்**

அதிகாலை நேர வருணனையைவிவரிக்கும் விதமாக களம் சிறுகதைத் தொடக்கம் அமைந்துள்ளது. இதனை,

“நச நசவென்று தூற்றலும். அடக்கமான கொசுவலையும், உடம்பு அசதியும் படுக்கையை விட்டு எழுந்திரிக்கத் தூண்டுதலாக இல்லை” என்று கூறுகிறது.

**கதைக்கரு**

களம் சிறுகதையின் கதைக் கருவானது பெண்களின் வாழ்வில் ஏற்படக்கூடிய போராட்டம், அவலம், கொடுமை, வன்கொடுமை, சித்திரவதை, மரணம் இவற்றை மையப்படுத்தியும், வரதட்சனை மட்டுமே ஒரு பெண்ணின் திருமணம் நிர்ணயிக்கப்படுவதை சாடுவதாவும் இக்கதைக்கரு அமைந்துள்ளது.

**இரட்டைக்கிளவி**

இச் சிறுகதையின் படைப்பாளி இரட்டைக்கிளவிச் சொற்களைப் பயன்படுத்தி உள்ளார், இதனை,

“வொட லொடத்த பஸ்ஸில், நிற்கவும் இடமின்றிச் சிறையிருந்த பிறகு”.



இவ்வரி மூலமாக அறியலாம்.

**உரையாடல் உத்தி**

களம் சிறுகதையானது ஆனந்தியும் சந்திரனும் உரையாடுகின்ற பாணியில் அமைந்துள்ளது, இதனை,

**“பாபுவுமா ஒப்பினாரு? எப்படி எப்படி?”**

**எப்படின்னா, ஆசை.... அறிவிலிகள், முட்டாள்கள்.**

இத்தகைய உரையாடல் மூலமாக சிறுகதையின் வளர்ச்சிக்கு உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**உவமை**

ஆனந்தி தன்னுடைய நம்பிக்கையை இழந்து இருக்கக் கூடிய தன்மையைக் காற்றடைத்த பலூனிலிருந்து ஊசியால் குத்திக் காற்று வெளியேறுவதைப் போல் மனம் நம்பிக்கை குறைந்து வாடுவதாக உவமைப் படுத்தியுள்ளார். இதனை,

**“அவருக்கு காற்றடைத்த பலூனில் ஊசியைக் குத்தி விட்டாற்**

**போல் நம்பிக்கை தொய்ந்து விழுகிறது”.**

இவ்வரிகள் வாயிலாக அறிய முடிகிறது.

## 10.13 இரண்டு நண்பர்களின் கதை- பிரபஞ்சன்

**கதை மாந்தர்கள் :-**



- செல்வம் என்ற தமிழ்ச் செல்வன்
- மாடன்

- கோபி
- லட்சுமி
- சங்கரி

**கதைச்சுருக்கம்**

ஒருவன் செல்வம். மற்றொருவன் மாடன். இருவரும் பூம்பொழில் நாட்டில்,சுந்தர சோழன் தெருவில் பக்கத்துத் பக்கத்து வீட்டில் பிறந்தவர்கள் ஒன்றாகவே பள்ளிக்கூடம் போவார்கள். பள்ளி செல்லும் வழியில் மாந்தோப்பு இருந்தது. காவலும் இருந்தது. இருப்பினும் செல்வம் தோட்டக்காரன் இல்லாத பொழுதுகளை அறிந்திருந்தான். பத்து காயையோ பழங்களையோ பறிக்காமல் வாரான்.

மாடனோ இதுபோன்ற காரியங்களில் இறங்கும் வீரன் அல்ல. நியாயம் கேட்பவனும் அல்ல. தோட்டக்காரன் ஒரு பையனை மரத்தில் கட்டிவைத்து அடித்ததைப் பார்த்து கதிகலங்கியவன் மாடன்.

செல்வம் பிறனின் மதிய உணவுகளைத் திருடி உண்ணும் பழக்கமுடையவன். இதனால் ஒரு நாள் தகராறு ஏற்படவே, தகராறிட்ட பையனின் மீது கல் எறிந்தவன் செல்வன். பயமறியாதவன். ஒரு நாள் மாடனின் உணவையும் உண்டான், ஆனால் மாடனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஓர் நாள் பள்ளிக்குச் செல்லாமல் எரியும் வெயில் புளியம் தோப்பில் நின்றபடி, செல்வம் அறைகூவல் விடுவித்தான். நான் இனி பள்ளிக்கூடம் வருவதாக இல்லை. என்னடா □பெரிய படிப்பு, அவனவன் கேள்வி கேட்கிறான். தெரியலைன்னா, பெஞ்சு மேல நிக்கச் சொல்றான், எந்த நாய் தேசத்தைச் ஜெயிச்சா என்ன, தோத்தா என்ன, நான் ஜெயிக்கறேன்டான்னு□ கூறினான். செல்வம் சொன்னதை அனைத்து பையன்களும் ஆமோதித்தனர். இருப்பினும் அப்பாக்கள், உதைகள், தெரு, ஊர் என பயமுறுத்தல்கள் என்ன படிக்கிறோம், எதற்காகப் படிக்கிறோம் என்ற பத்து வருடத்தில் செல்வம் ஒரு விஸ்வரூபமாக எடுத்து நின்றான். மாடன் பிரமித்து நின்றான்.

இரவு நேரத்தில் காடாவிளக்கு வெளிச்சத்தில் துப்பட்டி, வேட்டி, துண்டு, சேலைகள் கொண்ட ஏல வியாபாரம் செய்து கொண்டிருந்தார் செல்வத்தின் அப்பா. எடுபிடிக்கு ஆள் வைத்தால் பணம் செலவாகும் என எண்ணி, தன் மகனையே வேலை வாங்கினார். இரவானால் செல்வம் தன் தந்தையுடன் வேலை பார்த்தான். வாரக் கடைசியான போது செல்வம் தன் தந்தையிடம் கூலி கேட்டான். உனக்கு தான் சாப்பாடு போட்டேனே என்றார் அப்பா. அது உன் கடமை. ஏழு இரவுக்கான கூலியை எடுத்துவை என்றான்.

சில ஆண்டுகள் சென்றதும் செல்வத்தின் கண்டுப்பிடிப்புகள் மாறின. உலக நிலம் அனைவருக்கும் சமம். அது இயற்கை கொடுத்த தனம். அளவுக்கு அதிகமாக நிலம் வைத்திருப்பவனிடம் இருந்து மண்ணைத் தன்னிடம், தன் வளமாக மாற்றுவதற்கு திட்டம் தீட்டினான்.

இதற்கிடையில், ஓர் இயக்கம் தொடங்கப்பட்டு, நாக்கை மட்டுமே நம்பி இயக்கத்தை நடத்தி வந்தனர். அவ்வியக்கத்தில் செல்வன் இணைந்து தடுமாறியும் பின்னர் உயர்ந்தான். சிறை சென்று தியாகியானான். வேழ நாட்டு ஆட்சியைப் பிடித்தான். புறம்போக்கு நிலம், ஏழைகள், பேச்சற்றவர்கள் விதவைகள் அனைவரின் நிலத்தையும் அபகரித்தான். எதிர்த்தவர்களை இயக்க ஆட்களைக் கொண்டு அடக்கினான். மணல் திருடி நகரை உருவாக்கினான்.

செல்வத்தின் உயர்வை கண்டு, அண்ணாந்து, கழுத்து சுளுக்கிய மாடன் செல்வத்தின் பார்வையை விட்டு அகலாமல் அரசு ஊழியனாக அமர்ந்தான். பிறகு செல்வனின் பி.ஏ வாக ஆனான்.

செல்வம் தன் மூன்று மாளிகைகளில் ஒன்றில் வரலட்சுமியும், ஒன்றில் ஷீலாவும் ஒன்றை அரசியலுக்குமாக வைத்தான். வரலட்சுமி கடவுள் பக்தி மயமாகவும் தன் கணவனின் புகழ், செல்வம், ஆயுள் மேலோங்கப் பிரார்த்தனைகள் மேற்கொண்டான் மாடன் பக்தி பிரயாணத்திற்கும், கோயில் வரலாறு அறியவும் தன்னை மகிழ்ச்சியுடன் உட்படுத்தி பணிபுரிந்தான். செல்வம் பக்திக்குப் பதிலாக இயற்கையை வேண்டினான். புது மாளிகையை வாங்கி அதைத் தோட்டக்காரன் பெயரில் வாங்கினான். அதைக் கேள்வி கேட்டால் அவன் கூறும் பதிலே அனைவரின் பதிலாக இருந்தது. மாடன் அனைத்து காரியங்களுக்கும் முன் நின்றான்.

ஓர் நாள் இயக்கத்தின் முக்கியப்புள்ளி கோபி மாடனைக் காண வந்தார். மாடன் மிகவும் மரியாதை கோபியிடம் கொண்டிருந்தார். கோபி மாடனிடம் தன் மனைவி லட்சுமியிடம் தலைவர் (செல்வம்) கண்டு பேசி, தன்னுடன் வீட்டிற்கு அழைத்துச் சென்று உனக்கு சொந்த வீடு, வாசல் தருகிறேன் எனக்கூறி தவறாக நடந்து கொண்டுள்ளார் எனவும், லட்சுமி அவரைத் தள்ளி விட்டு ஓடிவந்துவிட்டாள் எனவும் கூறி, வரவிருக்கும் மாநாட்டில் இதைப் பற்றிக் கேட்பேன் என கோபி கூறினார். மாடன் நீர் எங்களுக்கெல்லாம் சீனியர் உன் விருப்பம் போல் செய்வீர் என்றான்.

அதே போல மாநாட்டில் கோபி எழுந்து நின்றான். தலைவர் என்ன? என்றார். உடனே சிலர் என்னடா? என்றார். கணக்கு என்றார் கோபி. அடுத்த மாநாட்டில் வைக்கப்படும் என்று கூறினார் தலைவர்.

இதற்கிடையில், கோபி அறியாமலேயே அவர் வாசல் வரை வந்திருந்தார். துணி கிழிந்திருந்தது. உடல் வலித்தது. கோபி வெளியில் தள்ளப்பட்டார். போலிசார் அவரை கலாட்டாவா பண்ற நாயே என்றார். மறுநாள் அவர் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்டதாகத் தந்தி வந்தது.

மாடன் வேதனைக் கொண்டான். லட்சுமியின் கதையை நினைத்தான். பிறகு மாடன் - சங்கரி திருமணம் நடந்தது. தலைவரின் தலைமையில் நடத்தி முடித்தான். தலைவர் இரண்டு 10,000 ரூபாய் கட்டை இருவரின் கையில் வைத்தார். சங்கரி கிராமத்துப் பெண். அவள் நாளிதழ் படித்து வந்தாள். ஓர் நாள் இயக்கத்தில் பெண்கள் வராததன் குறை கேட்டாள். மாடன் அதைத் தலைவரிடம் கூறினார். செல்வம், அவள் சரியாகக் கூறினாள். அவளையே ஒரு கூட்டம் தொடங்கி தலைவியாக்கி விடலாம் என்றான். இதுபற்றிப் பேச உன் வீட்டிற்கு வருகிறேன் என்றான்.

மாடன் மகிழ்ந்தான். வீட்டில் விருந்து நடந்தது. செல்வம் தன் விருப்பத்தை கூறினான். தான் பெண் குழுத் தலைவனாகவும் சங்கரி தலைவி எனவும் கூறினான். சங்கரி மறுத்தாள். பின் ஏற்றாள். விருந்து முடிந்தது. செல்வம் வெற்றிலை கேட்கவே மாடன் வாங்கச் சென்றான். செல்வம் சங்கரியை அழைத்து கையைப் பிடித்து இந்த முட்டாளுடன் இருப்பதை விட என்னுடன் வா என

அழைக்கச் சங்கரி திட்டி வெளியேற்றினாள். மாடன் நடந்ததை அறிந்து, அந்த நாயை செருப்பாலடி என்றான். பிறகு ஓசூர் மாநாட்டில் மாடன் எழுந்து கணக்கு எனக் கேட்க மறுகணம் மாடன் சாக்கடையில் கிடந்தான். போலிசார் சிறுநீர் கழித்தபடி, கூட்டத்தில் கலாட்டா பண்ணலாமா நாயே என்றார். சொறி நாய் ஒன்று மாடனை விசித்திரமாகப் பார்த்தது.

**கதைக்கரு**

இரண்டு நண்பர்கள் இருக்கின்றனர். இருவரும் வேறுவேறான குணமுடையவர்கள். செல்வம், மாடன் இருவரும் சிறுவயது தொட்டு நண்பர்கள். இருப்பினும் செல்வன் சற்றே அனைத்திலும் துணிந்தவன்.

செல்வம் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி தன் வாழ்வில் புதிதுபுதிதாய் கண்டுபிடிப்புகளுடன் வளர்கிறான். சொத்து, பணம், நிலம், பெண், ஆட்சி அதிகாரம் என உயர்கிறான். மானுடம் தன் நிலையைத் தக்க வைத்தவனாய் செல்வத்துடன் இணைந்து பி ஏ ஆகிறான்.

கோபி என்ற இயக்கத்தின் முக்கியப்புள்ளிக்கு ஏற்பட்ட நிலை மிகவும் மோசமாகிறது. மாடன் வருத்தம் கொள்கிறான்.

கடைசியில் மாடனுக்கு கோபியன் நிலையே ஏற்படுகிறது. தன் மனைவியிடம் தவறாக நடக்க முயன்ற தன் நண்பனைத் தட்டிக் கேட்கச் சென்றவன் சாக்கடையில் வீசப்பட்டான்.

'இருவரும் நண்பர்களாக இருப்பினும் குணத்தால் ஒத்தவர்கள் அல்ல". இக்கால அரசியல் காட்சிகளை அப்படியே காணமுடிகிறது. இருவரும் நண்பர்களாயும் பணமும் அதிகாரமும் இருவரையும் பிரிக்கிறது என்பது இக்கதையின் கருவாக அமைகிறது.

**தலைப்புப் பொருத்தம்**

இரண்டு நண்பர்கள் செல்வம் மற்றும் மாடன் இருவரும் குணத்தால் ஒருவன் வீரமானவன், ஒருவன் பயம் நிறைந்தவன்.

செல்வம் (தமிழ்ச் செல்வன்) அதிகாரியாக உயர்கிறான். மாடன் செல்வத்தின் பி. ஏ வாக இருக்கிறான்.

செல்வனின் அதிகாரம் அவனின் நட்பை முறிக்கிறது. செல்வனின் தவறுகளைக் கண்டு காணாதவனாக இருக்கும் மாடன், இறுதியில் தானும் காணாதவனாக எண்ணப்பட்டு வீழ்கிறான்.

இரண்டு நண்பர்களுள் ஒருவன் அதிகாரம் கொண்டாலும் மற்றொருவன் வீழ்ந்தே மடிவான் என்பது கூறப்படுகிறது. ஆட்சி, அதிகாரம், நண்பர்கள், உற்றார், உறவினர், மனைவி, குழந்தை என அனைவரையும் பிரித்துவிடும் என்பது தெரிய வருகிறது.

செல்வன் தலைவனாகவே அனைத்து மக்களுக்கும் தென்பட்டான். மாடனின் நண்பனாக அல்ல. தலைப்பாக அமைந்த ‘இரண்டு நண்பர்களின் கதை” மாடன் மற்றும் செல்வத்தின் கதையைக் கூறுவதாக அமைகிறது.

## 10.14. - பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும்

**-வண்ணதாசன்**

வங்கித்துறையில் பணியாற்றினாலும் கிட்டத்தட்ட 40 ஆண்டு காலமாக தமிழ்ப்படைப்புலகிற்கு சிறுகதைகளையும், கவிதைகளையும் படைத்து வருபவர். இயற்பெயர் கல்யாணசுந்தரம். தந்தையார் தி.க. சிவசங்கரன், தமிழ் இலக்கிய உலகத்தில் மிகச்சிறந்த இலக்கியவாதியாகவும், திறனாய்வாளராகவும் பெயர் பெற்றவர்.

வண்ணதாசன் 22.08.1946-இல் பிறந்தவர். இவருடைய சகோதரர் கணபதியிடமிருந்து இலக்கிய ஆர்வத்தையும், படிப்பார்வத்தையும் கற்றுக்கொண்டவர். கல்யாணசுந்தரம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் எழுதும் போது கல்யாண் ஜீ என்று புனைப்பெயரை கொண்டார். வண்ணதாசன், வண்ணநிலவன், கலாபிரியா, விக்ரமாதித்தன், ஆகிய நான்கு நவீனத் தமிழ்ப் படைப்பாளிகளும் தாமிரபரணி கரையைச் சேர்ந்தவர்கள். ஒருவருக்கொருவர் படைப்பாற்றலை ஊக்கப்படுத்தியும், வளர்த்தும் வந்திருக்கின்றனர். கல்யாண்ஜீ

தொடக்க காலத்தில் எழுதிய மரபுக்கவிதைகளும், சந்தக்கவிதைகளும் கண்ணதாசன், தாமரை ஆகிய பத்திரிக்கைகளில் வெளியாகியுள்ளன. கிட்டத்தட்ட 130-க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.

கதைகளில் அதிகாரத்தை விட யதார்த்த அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். ஆழ்மன ஓட்டங்களை புறத் தகவல்கள் மூலம் சித்தரிப்பவர். 2016-ஆம் ஆண்டு விஷ்ணுபுரம் வழங்கப்பட்டது மற்றும் தமிழக அரசின் கலைமாமணி விருதும் பெற்ற எழுத்தாளர். 2016-ஆம் ஆண்டு இவருடைய சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

**பற்பசைக்குழாயும் நாவல்பழங்களும் கதாப்பாத்திரங்கள்**

1. ஈஸ்வரி-தன் குடும்பத்திற்காக உழைப்பவள்
2. ஈஸ்வரியின் கணவன்
3. சுனில்
4. சுனில் அம்மா, அப்பா
5. நாவல் பழம் விற்கும் பெண்
6. கணக்காட்டுச் சாய்பு- நாவல்பழம் விற்பவர்
7. அரைஞான் கயிறு விற்கும் இளைஞன்
8. அண்ணாச்சி சுந்தரம்- ஓய்வு பெற்ற அலுவலர்
9. படையாச்சி தாத்தா

**கதைச்சுருக்கம்**

ஈஸ்வரி தன் குடும்பத்திற்காக படும் கஷ்டங்களும் பற்பசைக்குழாய் போல ஈஸ்வரியின் வாழ்க்கை உள்ளது. அதை புரிந்து கொள்ளும் கணவன். ஓய்வு பெற்ற அலுவலர் செய்யும் வேலை களையும் வீடு வீடாகச் சென்று பொருட்களை விற்பனைச் செய்யும் வியாபாரிகளின் துயரங்களையும் இக்கதை எடுத்துரைக்கிறது. தூத்துகுடி மாவட்டத்தில் வல்லநாடு என்னும் ஊரில் நடக்கும்

நிகழ்வாக இக்கதை சித்தரிக்கப்படுகிறது. பழைமையான காலச் சுவடுகள் பற்றியும் இக்கதையில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் படும் துயரங்களை எடுத்துரைப்பதாக இக்கதை அமைகிறது.



**பற்பசைக்குழாயும் நாவல்பழங்களும்**

**தலைப்புப் பொருத்தம்**

ஒரு மனிதன் தனது வாழ்வின் பற்பசைக்குழாயைப் போல பயன்படுத்தப்படுகிறான். பிதுக்கிப் பிதுக்கி பயன்படுத்திய பிறகு தூக்கி எரியப்படுகிறார்கள். நாவல் பழங்களும் கிட்டத்தட்ட பயன்படுத்திவிட்டு கொட்டையை எரிகிறோம். எனவே பற்பசைக்குழாயும் நாவல் பழங்களும் என்னும் தலைப்பு பொருத்தமுடையது.

**சமுதாயக்கருத்து**

மனித வாழ்க்கை என்பது பற்பசைக்குழாய் போல. பற்பசைக்குழாயை பயன்படுத்தும்வரை பயன்படுத்திவிட்டு தூக்கி எறிகிறோம். அதை போல மனிதனையும் பற்பசைக்குழாய் பற்பசைகுழாய் போல ஒருவரை பயன்படுத்தும்வரை பயன்படுத்திவிட்டு பின் தூக்கி எறிகின்றனர். பற்பசைக்குழாயுடன் ஈஸ்வரியின் வாழ்வு ஒப்பிடக் கூடியது ஈஸ்வரி தனது வாழ்வில் தனது குடும்பத்திற்காக படும் துயரங்களை இக் கதை மூலம் அறியலாம். யதார்த்தமான அழகுடன் மொட்டைமாடியின் வருணனையைக் கூறுகிறது.

“ஆண்கள் கவிதை எழுதுவதை அனைவரும் ரசித்தனர். காலத்திற்கும் வைத்துப் போற்றினர். பெண்கல்வி இரண்டாவது இடத்திலேயே வைத்திருந்தனர். குறிப்பாக பெண்களாலேயே பெண்கல்வி இரண்டாவதாகப் பார்க்கப்பட்டது”.

புறப்பட வேண்டியதுதான்.

செருப்புப் போட வேண்டியதுதான் பாக்கி. அந்த நேரம் பார்த்து ‘நவ்வாப் பழம்’ என்று சத்தம் கேட்டது. நாவல் பழம் விற்கிறவர்களுக்கு உலகம் முழுவதும்

ஒரே மாதிரிக்குரல்கள் போல. அந்தந்தப்பழம் அப்படியொரு குரலை எல்லோர்க்கும் கொடுத்து விடும் என்று தோன்றியது.

தலையில் இருக்கிற நார்ப்பெட்டி, நார்ப்பெட்டி உள் விலாவில் இருக்கிற நாவல் பழக் கறை, கருத்த பழைய காலத்து இரும்பு உழக்கு, பழத்தை அளந்து போடுகிற அந்த மனுஷியின் உறுதியான விரல்கள், "உங்ககிட்ட கூடுதலா விலை சொல்லி நாங்க என்ன மச்சுவீடாம்மா கட்டப் போகிறோம்!" என்ற பேச்சு எல்லாமே இருபது முப்பது வருஷத்துக்கு முன்னே பெயர்ந்து வந்து, இந்த தினத்துடன் அப்பிக்கொண்டது போல இருக்கிறது.

களக்காட்டுச் சாய்பு ஒருத்தர்தான் எங்கள் வாசலில் நாவல் பழம் கொண்டு வந்து விற்பார். ஓவ்வொன்றுக்கும் ஒரு ஸீசன் இருப்பதுபோல நவ்வாப் பழத்துக்கும் ஒரு ஸீசன் உண்டல்லவா? சாய்புவை ஆவணி புரட்டாசியில் மட்டும்தான் பார்க்கலாம். நாவல் பழம் விற்றே ஒருவன் காலம் தள்ளிவிட முடியுமா? தெரியவில்லை. ஆனால் அப்படித்தான் நிறைய விஷயம் இருக்கிறது. வெறும் அரைஞாண் கயிறு விற்றுக் கொண்டே மேம்பாலத்துக்குக் கீழ், கண்ணம்மன் கோவில் தெரு முக்கில் அல்லது எஸ்.ஆர்.எஸ். கடையிலிருந்து சாலைக் குமாரசாமி கோயில் தூரத்துக்குள் நிற்கிற அந்த இளைஞனின் ஞாபகம், இரண்டு வருஷத்திற்கு முன் நசிருதீன் ஷா திரைப்படம் ஒன்றைப் பார்க்கும்போது வந்தது. 'இருப்பத்தஞ்சுகாசு' என்பதை 'இருபத் தஞ்ச்....காஸ்' என்று உச்சரிக்கிற குரலும் கொடிகொடியாக இடதுகையில் தொங்குகிற பட்டுக் கயிறுகளுமாக வாழ்க்கையைக் கழித்து விடுகிற அவனைவிட நான் என்ன பெரிதாகக் கிழித்திருக்கப் போகிறேன் என்று தெரியவில்லை. கிழிப்பதற்கு அப்படியொன்றும்... சொல்லப்போனால் நிஜத்தில் ஒன்றுமில்லை என்பது வேறு இருக்கிறது.

"ஒருத்தி நவ்வாப் பழம் விற்றுவிடக் கூடாது. பனங்கிழங்கு விற்றுவிடக் கூடாது. உடனே ஒரே தவ்வாத் தவ்வி, எங்க ஊரு எங்க ஊருன்னு போய் உட்கார்ந்துக்கிட வேண்டியது. ரூபாயை எடுத்துக் கொடுங்க. அவளை அனுப்பட்டும். நாலு இடத்துக்கும் போயி அவவிற்கணும். நம்ம வீட்டு நடையிலேயே கால்படி நவ்வாப் பழத்துக்குக் காத்துக் கிடந்தால் போதுமா?"

“கூட ஒரு கால் படிவேணும்னா வாங்கேன். பிள்ளைகள் செழிப்பாகத் திங்கட்டும்.” எனக்கு அடுத்த வருடம் உலகத்தில் நாவல் பழங்கள் இருக்குமா என்று சந்தேகம் வந்துவிட்டது. இப்படி நிறையச் சந்தேகங்கள் வந்துகொண்டே இருக்கிறது.

பசலிக் கொடி இருக்குமா என்று சந்தேகம் வந்து ரொம்ப நாளாகிவிட்டது. அரசடிப் பாலத்தெரு வாய்க்காலே சாக்கடை மாதிரி ஆகிவிட்டபிறகு, அதிலும் சிமெண்ட் தளம் வேறு போட்டுவிட்டார்கள் - தாமரைப் பூக்களும், மீன்களும் எப்படி மிஞ்சும்? வாய்க்காலே இல்லாவிட்டால் படையாச்சித் தாத்தா எப்படி மீன் பிடிப்பார்? எப்படி எனக்குத் தூண்டில் கட்டிக்கொடுப்பார்? இது ‘உபயோகி தூக்கிஎறி’ காலமாகிவிட்டது. இன்னும் கொஞ்ச காலம் போனால் ஐம்பத்தி ஐந்து வயது ஆகிவிட்டது அல்லவா என்று அலுவலகம் தூக்கி எறியும், மெத்தென்று நாலைந்து உதிர்ந்த ரோஜா இதழ்கள், தேய்ந்து ஓடாகிப் போன சம்பிரதாயப் புகழ்ச்சிகள், “அண்ணாச்சி சுந்தரம் ஓய்வு பெற்றாலும், அவர் விட்டுச் சென்றிருக்கிற நிர்வாகச் சுவடுகள் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் கணிப்பொறிச் சந்ததியினருக்குக் கூட முன் உதாரணங்களை அடக்கியது.” என்று பிசுபிசுப்புடன் வீட்டு வாசலில் கிடப்பேன்.

அப்புறம் ரேஷன் வாங்கவும், பால் கவர் வாங்கவும், மின்கட்டணம் கட்டவும் கொஞ்ச காலம். வழிவிடு முருகா அல்லது வரசித்தி விநாயகர் என்று ஏதேனும் ஒரு கோவில் பட்டர் மாத்திரம் எதிரே வந்தால் சிரிப்பார். மருந்துக் கடைப் பையன் போய் நிற்கிறதற்கு முன்னாலே மாத்திரையை எடுத்து வைத்துவிடுவான். இந்த ஊரில் உட்கார்த்தி வைத்து மேளம் அடித்துக் கொண்டு போவதையே பார்த்துப் பார்த்து நாற்காலியில் தனியாக உட்கார்வதைக் கூட வெறுக்கத் தோன்றும். வல்ல நாட்டுப் பொத்தை தாண்டினால் ஒரு மண்டபம் இடிந்து கிடக்கும். அதில் உட்கார்ந்திருக்கிற கிழட்டுக் கழுகின் ஞாபகம் வரும். அது ரொம்ப காலமாகவே அங்கே இருக்கிறது. முனிசிபல் தண்ணீர் டாங்கின் கீழ் சிமெண்ட் பெஞ்சில் ஒருத்தர் உட்கார்ந்திருப்பாரே, அவரையும் யாராவது உபயோகித்துவிட்டுத்தான் எறிந்திருக்க வேண்டும். ஒருத்தர் மாற்றி ஒருத்தரைப் பிதுக்கிப் பிதுக்கி உபயோகித்துக் கொண்டே இருக்கிறோம்.

“இதைத் திங்கறதுக்கே நாதி இருக்காது. இன்னொரு கால் படிஎன்னத்துக்கு?”என்றுசொல்கிற இவளைப் பார்க்கும்போதும் நசுங்கின **பற்பசைக் குழாய் மாதிரித்தான்** இருக்கிறது. நான்தான் அதிகமாகநசுக்கியிருக்கவேண்டும். சட்டென்றுஅவள் மீதுஒருஅனுதாபம் வந்தது. அவளுக்குஆறுதலாகஎன்னவாவதுசொல்லவேண்டும் போல இருந்தது. “நீசொல்கிறதும் சரிதான்.”என்றுசொன்னேன். அவ்வளவுதான் முடிந்தது. ஆனால் எல்லாம் சொல்லிவிட்டதுபோலவும் இருந்தது.

“கிளம்பினதுதான் கிளம்பினோம். அப்படியே போய்விட்டு வந்துடுவோம். இந்த ஊருக்கு வந்து மூணு மாசத்துக்கு அப்புறம் இன்றைக்குத்தான் முகூர்த்தம் வாய்த்திருக்கிறது. நாலு வருஷம் அடுத்தடுத்த வீட்டில் இருந்துவிட்டு எட்டிக்கூடப் பார்க்காமல் இருந்தால் நல்லா இருக்காது. என்னை விட நீதான் ரொம்பக் கசிஞ்சுக்கிட்டு இருந்தே. உனக்கு வரணும்னு தோணலையா?”

அவளுக்குத் தோன்றவில்லை என்றுதான் படுகிறது. கொஞ்ச நாளாவே எங்கேயும் போக வேண்டும்; யாரையும் பார்க்க வேண்டும் அவள் சொல்லவே சொல்லாதது ஆச்சரியமாக இருந்தது. இது ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் என்பதை விடத் துக்கப்பட வேண்டிய விஷயம் என்று பட்டது. ஒவ்வொரு கதவாக அவளாகவே சாத்திக் கொள்வது போல இருந்தது. அவளுக்கு எந்தக் கதவையும் நான் திறந்து விடாதது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை, எந்தக் கதவையும் நான் பூட்டவில்லை என்பதும்! இதுவெல்லாம் அடுத்தவர் திறந்து பூட்டுகிறகாரியமா என்ன? நாற்பது நாற்பத்தைந்து எல்லாம் ஒருவயதுஎன்றுஎப்படிச் சொல்லமுடியும்? கொஞ்சம் நிறைய முடி கொட்டியிருக்கிறது. சதைபோட்டதனால் வளர்த்தி கம்மியாகத் தெரிகிறது. குண்டெல்லாம் ஒன்றுமில்லை. சொல்லப்போனால் சிரிப்பு முன்னைவிட, கன்னச்சதை திரள நேர்த்தியாகத்தான் இருக்கிறது.

“வா, போவோம்.” என்று தோளில் கை வைத்துச் சொன்னேன். அவளை எங்கேயாவது சற்றுத் தொட்டுக் கொண்டு இதைச் சொல்வது சரியாக இருக்கும் என்று தோன்றியது. சுண்டு விரலையாவது பிடித்துக்கொள்ள வேண்டும். பிடித்தபடி

இதைச் சொல்ல வேண்டும். பைத்தியக்காரத்தனம்தான். அதற்குப் பஞ்சமா என்ன உலகத்தில்!

பிள்ளைகளிடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது நான் இப்படித் தோளில் கை வைத்தது அவளுக்குக் கூச்சமாகவும், சந்தோசமாகவும் இருந்திருக்க வேண்டும். □என்ன?□ என்று செருப்பைப் போட்டுக் கொண்டே குனிந்தான். □நல்ல கூத்து போங்க!□ என்று நடை இறங்கும் போது சிரித்தாள். மூன்றாவது வீட்டுக் கோலத்தைப் பாத்து, □எவ்வளவு நல்லா இருக்கு!□ என்று பாராட்டினாள். □என்ன தாத்தா, சாப்பிட வரலாமா?□ என்று ஒற்றை ஆளாகச் சமையல் பண்ணிக்கொண்டிருந்த வாட்ச்மேன் தாத்தாவைப் பற்றி விசாரித்தாள்.

ஈயப்பானையில் உலை வைத்துக்கொண்டு, அடுப்பை ஊதிக் கொண்டிருந்த அவருடைய முகம் திரும்பி இவளைப் பார்த்து உடனே ஒன்றும் சிரித்துவிடவில்லை. மறுபடியும் கடுகடுவென்று அடுப்பை ஊதுவதற்குக் குனிந்தது.

□அவர் அழகு அழகா விசிறி எல்லாம் செய்வார் தெரியுமா?□ என்று கேட்டதற்கு, உதட்டைப் பிதுக்கினேன்.

□எல்லாத்துக்கும் தலையை அசைக்க வேண்டியது அல்லது உதட்டைப் பிசுக்க வேண்டியது. நாலு வார்த்தை கலகலன்னு உண்டு, இல்லைன்னு பேசினால் என்ன! அபராதம் யாரும் போட்டாங்க என்றால் நான் சொல்லிகிடதேன்.□

ஈஸ்வரி மீண்டும் ஈஸ்வரி ஆகிவிட்டது மாதிரி இருந்தது.

மாநகராட்சி குப்பை கொட்டுமிடம். எருக்கலஞ்செடி, நீர்க்கருவைப் புதர், ஒரு சத்துணவுக் கூடம் எல்லாம் தாண்டி ஒரு வழியாக அந்தக் காலணியில் அவர்கள் கட்டியிருந்த வீட்டையும் கண்டுபிடித்து விட்டோம்.

□ஈஸ்வரி அத்தை!□ என்று சொல்லிக் கொண்டு, இரண்டு பையன்களும் மாடியில் இருந்து ஓடி வந்தார்கள். □என்ன ஸார், அபூர்வமாக இருக்கு!□ என்று சிரித்துக் கொண்டே பக்கவாட்டில் இருந்த படிக்கட்டு வழியாக அவர் இறங்கி வந்தார். கையில் ஒரு பெரிய நூல்கண்டு இருந்தது.

□என்ன தினகரியம்மா. எப்படி இருக்கீங்க?□என்று நேராக ஈஸ்வரியிடம் போனார்.

‘குண்டாக இருக்கேன்!’ஈஸ்வரி சிரித்தாள்.

அவர் பலமாகச் சிரித்தார். சிரிப்புத்தான் அவர் அழகு.

‘எவ்வளவு நாளாச்சுப்பா, இந்தச் சிரிப்பைக் கேட்டு!”ஈஸ்வரி சொல்லி, அதற்கும் அவர் சிரித்தார். மேல் சடடையற்ற உடம்புடன், கைலியைத் தளரவிட்டுக் கொண்டு, சிறுபையன் போல நூல்கண்டும், கையுமாக அவர் சிரிக்கும்போது அவருடைய முகம் சொல்லமுடியாத அழகாகிக் கொண்டு போனது.

‘அடேயப்பா!” என்று சொல்லிக் கொண்டே, சுனில் அம்மா இறங்கிக் கொண்டிருக்க, உரு பக்கத்து முடியும் சேலைத்தலைப்பும் காற்றில் அலைந்தது. அகலமான நெருங்கிய பற்களுடன் சிரிப்பு முகம் முழுவதும் பெருகியது. விட்டுக் கொண்டிருந்த பட்டம் மார்போடு இருக்க; பட்டத்தின் வால் படபடத்தது. மொட்டை மாடிக்கு மேற்பகுதியின் காற்றோட்டம் தளர்ந்து படிகளின் வழியாக இறங்கி அருகில் வர வர, பறந்த சிகையும், சேலையும் படிந்து அடங்கியது போல அகன்று சிரிப்பும் கனத்த உதடுகளில் திரும்பிவந்து அமர்ந்தது.

‘என்ன, பட்டம் விடுறீர்களா?” கேட்கும்போது சொல்ல முடியாத ஒரு பரவசத்தை நான் அடைந்திருப்படுதுபோல இருந்தது. குரல் கணகணவென்று அதிர்ந்து பட்டாம்பூச்சி சியகு மாதிரி அசைந்து கொண்டே போனது.

‘அதுதான் இவரைக் கட்டிக்கிட்ட அன்றைக்கே விட்டுட்டேனே!” என்று சொன்னதும், அவர் ஓவென்று அதற்கும் சிரித்தார். ‘சிரிப்பைப் பாரேன்!” என்று அவரை அடிக்கிறது

போல காகிதப் பட்டத்தை ஓங்கிக்கொண்டே ஈஸ்வரியின் கையைப் பிடிக்கும் போது ‘எப்பவும் தான் வீட்டுக்குள்ளேயே அடைத்து கிடக்கிறோமே. மேலே காற்றடிக்குளன்றால் எல்லோரும் மேலே இருப்போமே.” என்று ஈஸ்வரி சொன்னாள்.

‘நீங்க வேப்ப மரத்தடியிலே உட்காந்ததுக்கு உண்டான வாடகை பாக்கி அப்படியே இருக்கு!” என்று அவர் சொல்லிவிட்டு, அதற்கும் சிரித்தார். முன்பு இருந்த ஊரில் அவர்கள் வீட்டுப்பக்கம் மாத்திரம் குடை மாதிரி ஒரு பெரிய வேப்ப மரம் சாய்ந்திருக்கும். ஈஸ்வரிக்னு அந்த வேப்ப மரம் பிடிக்கும். தேடித் தேடி எப்போதுமே அந்த நிழலில்தான் உட்கார்வான்.

‘உங்க ஊர்க்காரங்களை நம்ப முடியாதுப்பா. காற்றுக்குக்கூட வாடகை கேட்பீங்க!” என்று சொல்லிக் கொண்டே ஈஸ்வரி மேலே போனாள்.

‘நம்ம ரெண்டுபேரும் பட்டம் விடலாமா, அத்தை?” ன்று அம்மா கையில் இருந்த காற்றாடியை வாங்கிக் கொண்டே, சுனில் போனான். சுனில் என்னைத் தாண்டித்தான் போக வேண்டும். போக விடாமல் மச்சுப் படிக்கும் கைகளுக்கும் இடையில் அமுக்கினபோது, சுனில் வரித்துக் கொண்டே திமிறினான். சுனில் சிரிப்பு, கன்னத்துக் குழி எல்லாம் அம்மா ஜாடை.

‘எங்கடா ஓடுகிற?” என்று மேலும் நெருங்கி, நெகிழ விட்டதும், அவன் **ஈஸ்வரியின்** பக்கம் போய், அவளையும் முந்தி மொட்டை மாடிக்கு ஓடினான்.

மொட்டை மாடி அழகாகவே இருந்தது. யாராலும் மொட்டை மாடிகளை வெறுக்க முடியும் என்று தோன்றவில்லை, சிறியதோ, பெரியதோ அது அடைசலும் புழுக்கமும் அற்ற திறந்த வெளியில் நம்மை நிறுத்தி விடுகிறது. நிச்சயம் காற்று இருக்கும். பளிச்சென்று நம்மைச் சுற்றி வானம் வெள்ளையும் நீலமுமாக இறங்கும். இடம் வலம் எங்கு திரும்பினாலும் மேலாக இருப்பது நம்மை என்னவோ செய்யாமல் இராது. மொட்டைமாடியில் வைத்து யாராவது கோபப்பட்டிருக்க முடியும் என்று தோன்றவில்லை. மேலும்,மழையும் வெயிலும் அடித்து இந்தத் தள செங்கல்களுக்கு நேர்ந்திருக்கிறதை உற்றுப் பார்த்ததாலே எல்லாம் புரிந்து விடவும் கூடும்.

சாற்று பாசி பிடித்த சுண்ணாம்பு விட்டு ஆற்றிய இந்தச் சிவப்பு சதுரங்களில் இருந்து கற்றுக்கொள்வதைவிட என்னிடமிருந்து கற்றுக்கொள்ள எதுவுமிருக்கும் என்பது வேடிக்கை. பழைய ரேடியோ ஏரியல்கள் எல்லாம் என்ன ஆகியிருக்கும்? ஏரியல்களுக்குக் கட்டின மூங்கில் கழிகள் இற்றுப் போய் இன்னும் பழைய வீடுகளில் அனாதியாக நிற்கும்தானே! ஒரு ஆந்தை அல்லது மீன்கொத்தியாவது உட்காரும் அல்லவா அதில். கங்கைகொண்டான் சப்ரிஜிஸ்டிரார் ஆப்ஸில் புரட்டின ரேடியோ வாங்கி ஏரியல் கட்டினதும் மறந்தா போகும்? ரேடியோவை ஜெசுமணி ஸார் வீட்டுக்குக் கொடுத்தோம். ஜெசுமணி ஸார் இறந்து போய்விட்டதாகச் சொல்கிறார்கள். அவரெல்லாம் கூட இறந்துபோக முடியுமா என்ன?

“அப்புறம் உங்கள் கவிதையை ஏதவது ஒலிப்பரப்பினார்கள்? “ சப்தத்தில் திடுக்கிட்டு எல்லாம் கலைந்து திரும்பியபோது சுனில் அம்மா, தட்டில் தின்பண்டங்களுடன் நின்று கொண்டிருந்தார்கள். காதோரம் முடியை ஒதுக்கிக் கொண்டார்கள். அது அவசியம் போலவும் இருந்தது. அவசியமற்றும் இருந்தது.

கோகுலமும் குழல் ஒலியும்

கோபியரும் கண்ணனுமாய் ஆகும்

ஒருகாதல் அட்டவணை எனக்கில்லை”

என்னுடை கவிதையின் முதல் வரிகளை மீண்டும் சுனில் அம்மாவால் சொல்ல முடிந்தது.

“அந்த காஸெட் இன்னும் நாங்க வச்சிருக்கோம்!” என்று சொல்வதைக் கேட்கச் சந்தோஷமாக இருந்தது. நான் கவிதைகள் எழுதுவேன் என்றும், ஒலிப்பரப்பாகியிருக்கின்றன என்றும் ஈஸ்வரி ஒரு தகவல்போலச் சொல்ல, வெகு காலத்துக்கு முந்திய அந்தக் கவிதை நோட்டுடன் அவர்கள் வீட்டு வேப்ப மரத்தடியில் உட்கார்ந்து வாசிக்க, அதைப் பதிவு செய்த நல்ல தினம் ஞாபகம் இருக்கிறது. கவிதையின் ஏற்ற இறக்கங்களைவிட நாங்கள் முன்பின்னாகப் பேசிய பேச்சுக்களும், நாற்காலி நகர்த்துவது, செருமித் தொண்டையைச் சரி செய்து கொள்வது, ‘மாமா எழுதியதாப்பா?” என்று சுனில் கேட்பது, தெருவில் சென்ற கார் ஹார்ன் சப்தம் “யார் வீட்டிலேயோ உப்புமா கிண்டுறாங்க!” என்கிற ஸாரின் குரலும் அதைத் தொடர்ந்த சிரிப்பும் அதில் பதிவாகி இருந்தன.

“அதைப் போய் இன்னும் வச்சுகிட்டு!” என்று சுனில் அம்மாவைப் பார்க்கத் திரும்பியபோது, இவ்வளவு நேரம் வேறு எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்த என் முகம் திரும்பக் காத்துருந்ததுபோல ஒரு முகம் அவர்களிடம் இருந்தது. முகங்களின் பிரத்யேக அழகுகள், அதன் மீதான வசீகரங்களை எல்லாம் தாண்டின மனநிலைக்கு வந்துவிட்ட பிறகும் கூட, அந்த முகம் அழகாக இருப்பதுபோலத் தோன்றியது. தொலைந்து போன வருடங்களின் அனுபவங்களை எல்லாம் சலித்தெடுத்து வைத்துக்கொண்டு, அப்படி மிஞ்சினவற்றை எனக்கு

எதிர் வருகிறவர்களிடம் பொருத்திப் பார்த்துக் கொள்வது போலிருந்தது. கடைசிவரை இது இப்படித்தான் இருக்கும் என்று தோன்றியது.

“நீங்க இங்கே வந்தது பி.எட். படிக்கப் போகிறதாகச் சொன்னீங்க, இல்லையா?” சுனில் அம்மா முகத்தைப் பார்த்தேன்.

“பசங்க படிச்சாச் சரிதாங்க!” எல்லாவற்றையும் தூர விலக்கி வைத்து விடுகிற சவுகரியமான சிரிப்புடன், தின்பண்டத் தட்டுடன் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

“குடிப்பதற்கு ஏதவது கொண்டுவர்றேன்”. என்று சுனில் அம்மா திரும்புப்போது “ஹோ” என்று ஒரு கூச்சல் கேட்டது, சுனில், ஸார், ஈஸ்வரி மூன்று பேரின் குரல்களின் திரளாக எவ்விய அதில் ஈஸ்வரி விடுகிற பட்டம் காற்றில் சரசரவென்று ஏறுவதற்கான சந்தோஷம் வெடித்தது.

“அடேயப்பா.... என்று குஷி!” சுனில் அம்மா திரும்பினார்கள்.

திரும்பும்போதே அவர்களுக்கும் சந்தோஷம் தொற்றியிருந்தது. கண்ணில் ஈரம் பூசி ஜொலித்தது. முன் சிகை அலைந்தது. அவர்களிடம் எதையாவது சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

“புறப்படும்போது நவாப் பழம் வாங்கினோம்!” என்று சொன்னேன்.

**தொகுத்துக்காண்போம்**

- சிறுகதையின் தோற்றமும், வளர்ச்சியும் குறித்து அறிந்து கொண்டீர்கள்.
- படைப்பாளர்கள் பற்றி தெரிந்து கொண்டீர்கள்.
- சிறுகதைகள் வழி அறியலாகும் சமூக நிலையினை உணர்ந்து கொண்டீர்கள்.

**முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்**

1. பொன்னரகம் கதையின் ஆசிரியர் யார்?

2. பொன்னகரத்தின் பெண் பாத்திரத்தின் பெயரினைக் குறிப்பிடுக.



3. புதுமைப்பித்தன் எழுதிய கதைகள் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

குறிப்புகள்

4. ஜெயகாந்தன் பற்றிக் குறிப்பு வரைக.

5. இராஜம்கிருஷ்ணனின் படைப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

**பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்**

1. புதுமைப்பித்தனின் படைப்புகள் எத்தகைய பார்வையைக் கொண்டவை?
2. ‘பொன்னரகத்தின்’ வாழ்வியல் சூழல் பற்றி விளக்குக.
3. பிரபஞ்சன் குறிப்பு வரைக.
4. ‘களம்’ வழி அறியலாகும் சமூகப் பின்புலத்தினை எடுத்துரைக்க.
5. பற்பசைக்குழாயும், நாவற்பழங்களும் கதைத் தலைப்புப் பொருத்தி ஆய்க.

**மேலும் பயில்வதற்கான நூல்கள்**

1. “தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது” சி.சு. செல்லப்பா காலச்சுவடு 2007.

2. இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள், இராஜம் கிருஷ்ணன், சீதைப்பதிப்பகம்,திருவல்லிக்கேணி

சென்னை-600005.

## கூறு – 11

**மாறுதடம் - பாரதிபாலன்**

11.1. முன்னுரை

11.2. குறிக்கோள்

11.3. பாரதிபாலன்

11.4. கதை மாந்தர்கள்

11.5. கதைச் சுருக்கம்

11.6. கதைக்கரு

11.7. தலைப்புப் பொருத்தம்

11.8. தொகுத்துக்காண்போம்

11.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

11.10. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

11.11. மேலும் பயில்வதற்கான நூல்கள்

# மாறுதடம்

## - பாரதிபாலன்

### முன்னுரை

பல்வேறு தளங்களை பொருளாகக் கொண்டு படைக்கப்படுகின்ற சிறுகதை ஆசிரியர்களுள் பாரதிபாலன் எழுத்தின் சிந்தனை வேறுபட்ட கண்ணோட்டத்தை உடையது.

### குறிக்கோள்

- நவீன சிறுகதைப் பற்றி தெரிந்து கொள்வீர்கள்

➢ கதைப் பொருண்மைத் தேர்வினை அறிந்து கொள்வீர்கள்

➢ கதைக்கான உத்திகளைப் புரிந்து கொள்வீர்கள்.

## 11.1. பாரதிபாலன்

தமிழ் நவீனப் புனைவில் வாழ்வின் ஆதாரங்களை இழந்துவிடாமல், பண்பாட்டு கிளை முறிந்து விடாமல் மக்கள் மொழியில் படைப்பவர் பாரதிபாலன். 5 சிறுகதைதொகுதிகள், மூன்றுநாவல்கள், மூன்றுதொகுப்பு நூல்கள், கல்வியியல் தொடர்பான 40-க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர். 2018-ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் பாரதியார் விருதைப் பெற்ற எழுத்தாளர் சமூகப்பிரச்சினைகளைச் சொல்வதே இவர் புதினங்களின் கருவாகஅமைந்திருக்கின்றது.

## 11.2. கதை மாந்தர்கள்

. அப்பச்சி

. அப்பனு

. முத்துக்காளை

. வாசல் காவலாளி (Appartment Watchman)

## 11.3. கதைச் சுருக்கம்

உயர்ந்து எழும்பிய மார்பும், உழைப்பால் உரமேறிய உடம்பும், உடல் முழுக்கச் சேறும் ஆறு மணியிலிருந்து உழைத்த வடுவும் உடையவர் அப்பச்சி. உத்தரவுப்படி உழைத்து நிமிர்பவர் கொடுக்கிற கூலியைக் குனிந்து வாங்கிக் கைகூப்புபவர்: ஒரு மரக்காலோ இரண்டு மரக்காலோ வாங்கக் கூடியக் கூலியிலிருந்து கூடுதல் குறைச்சல் என்று குரல் கொடுக்கமாட்டார். குடியானவர்கள் குரல் கேட்டதும் தலைப்பாகையை அவிழ்த்து இருப்பில் கட்டி நிற்பது என்பது அவரது பழக்கமாகிவிட்டது. அவர்களுடைய மண்ணை உழுது கடமையாக எண்ணுபவர். அவர்கள் போடுவதே உரம் என்பது அவருக்கு வேதமாகப் படிந்து விட்டது. எதையும் ஏன் என்று கேட்கத் தோன்றவில்லை அவருக்கு. அப்பச்சி களத்துமேட்டுச் சரிவில் புதருக்கு அருகே நடந்து வருகையில் அப்பனு உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவன் ஊரை விட்டு ஒரு மைல்

தூரம் வந்து கிழக்கே நோக்கி அமர்ந்து தனிமையில் இனிமையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அப்பச்சி அவனுக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்தார். "உடம்பு மீறி, மனசு மீறி, சேற்றில் கால் வைக்க வேண்டும். அறுக்கிற காலத்தில் விதை விழ வேண்டும். அறுக்கிற காலத்தில் அரிவாளுடன் ஆள் நிற்க வேண்டும். இதுதான் பாடம், என்று தலைமுறையாய் மாறாமல் நெஞ்சில் நிற்கிற பாடம்! எங்க காலம் போச்சுய்யா, இனி நீங்கதான் கருத்தா இருந்து பிழைக்கிற வழியப் பார்க்கணும். நாலு இடத்துக்குப் போயி மனுஷமக்களைப் பழகி முன்னேறப் பார்க்கணும்." என்று பழைய காலக்கதைச் சொல்லி அப்பனுவை உபதேசித்தார்.

பின்பு சென்னையில் அரசு உத்தியோகத்திலிருக்கும் முத்துக்காளையைப் பற்றிப் பேசலானார். அவன் "தலைமைச் செயலகத்தில் வேலை பார்ப்பதால் ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் வேலை வாங்கிக் கொடுப்பான் என்ற அவநம்பிக்கை அப்பச்சிக்கு, கிராமத்திலுள்ள இளவட்டங்கள் தன்னைப் போல ஆட்டுப் புழுக்கையிலும் மாட்டுச் சாணியிலும் மாட்டிக் கிடக்க வேண்டாம் எனும் எண்ணத்திலும் முத்துக்காளை மூலமாக அவர்களுக்கு அரசாங்க வேலை வாங்கிக் கொடுக்க வேண்டும் எனும் எண்ணத்திலும் அப்பனுவிடம் முத்துக்காளையைப் போய் சந்திக்கச் சொல்லி பலமுறை கேட்டிருக்கிறார். ஆனால் அப்போதெல்லாம் அவன் கண்டுகொண்டதில்லை.

அப்பனு, 'கஷ்டப்படாமல் கட்டையைச் சாய்க்க வேண்டும் என்ற கவலை தாண்டி, இந்த 70 வயதில் இவரால் இப்படி கூட யோசிக்க முடியுமா?' என்ற யோசனையில் ஆழ்ந்திருக்க அப்பச்சியை அவன் முழுசாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்தான். புழுங்கிப் புழுங்கிப் பூத்துப்போன அவருடைய மனத்தின் ஆவல் புரிந்தது அவனுக்குப் பழைய காலம் எப்படியோ! இனியாவது குடியிருப்புப் பகுதியைத் தாண்டி மனிதர்களுடன் சகசமாய் இருக்க வேண்டும். வெள்ளாடை உடுத்தி வீதியில் நிமிர்ந்து நடக்க வேண்டும் என்ற அப்பச்சியின் ஆசை அவனுக்கும் புரிந்தது.

அரசாங்க வேலை கிடைத்தவர்கள் எல்லாரும் வேலையில்லாதவர்களுக்கு உதவுவார்கள் என்று வீண் நம்பிக்கை கொள்கிறார் அப்பச்சி. முத்துக்காளை மேல் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார் அவர் குடியானவர்களின் வீடுகளில் இருப்பது போலவே கழிப்பறைகள் முத்துக்காளையிடம் கட்டச் சொல்ல வேண்டும் என்றும், ஊரிலுள்ள பெண்கள் வெளியில் இருப்பதற்குச் சிரமப்படுகிறார்கள் என்றும் ஆதங்கப்படுகிறார்.

அப்பனுவிடம், முத்துக்காளையை இந்த முறையாவது போய்ப் பார்க்கச் செல்கிறார் அப்பச்சி. அவருடைய அழுக்கு வேட்டியிலிருந்த பெரிய முடிச்சை அவிழ்த்து வெற்றிலையும், புகையிலையும் வைத்திருப்பதுடன் எட்டு ஒன்பது மடிப்புகளுடன் கூடிய நைந்து சக்கையாய் போன காகிதத் துண்டினை எடுத்து அப்பனுவிடம் நீட்டினார். அதில் முத்துக்காளையின் முகவரி எழுதியிருந்தது. ஆனால் அந்தக் காகிதம் காற்றில் கரைந்து விடுவது போலிருந்தது. எழுத்தும் சரியாகத் தெரியவில்லை அவனுக்கு. தன்னிடம் வேறு இருப்பதாகக் கூறினான் அப்பனு.

சென்னைக்கு வந்து சேர்ந்தான் அப்பனு. வந்த அன்று இரவு முழுக்க தூக்கமில்லாமல் அப்பச்சியையே ஏமாற்றாமல் முத்துக்காளையைச் சென்று பார்ப்பதற்கு மறுநாள் தயாரானான். ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று முத்துக்காளையின் முகவரியை வைத்து வீடு தேடி கண்டுபிடிக்க ஒரு மணி நேரம் ஆயிற்று. அடுக்குமாடிக் குடியிருப்பின் வாசலில் காவலாளிடம் ‘முத்துக்காளை’ என்று பெயர் சொன்னதும் ‘கதவு எண்’ கேட்டார் ‘18பி’ என்றான் அப்பனு. அது அப்பார்ட்மென்ட் எண் என்று கூறினார் காவலாளி, அப்பனுக்கு கதவு எண் தெரியாது. மீண்டும் முத்துக்காளைன்னு… என்றவுடன் ‘முத்துக்காளை’ என்று இங்கு யாரும் இல்லை என்று கூறினார் காவலாளி “செக்ரெட்டரியேட்டில் வேலை பார்க்கிறார்” என்றவுடன், இருக்கிறார் என்றும் ஆனால் அவர் பெயர் முத்துக்காளை இல்லை என்றும் கூறினார். ஆனால் முத்துக்காளையின் வேறு பெயரை காவலாளி மறந்துவிடுகிறார். எதற்கும் 2-வது மாடியில் போய் பார்க்கச் சொல்கிறார்.

ஆவலோடு சென்று அழைப்பு மணியை அமர்த்தியவுடன் ‘யெஸ்’ என்று கதவைத் திறந்தவுடன் அவருடைய முகத்தோற்றத்தை வைத்து அவர்தான் முத்துக்காளை என்பதைப் புரிந்து கொண்டான். காட்டுப்பட்டியிலிருந்து வருவதாகக் கூறியவுடன் அப்பச்சியைப் பற்றிக் கேட்பான் என்றும் மிகுந்த மகிழ்ச்சியடைவார் என்றும் எதிர்பார்த்தான் அப்பனு ஆனால் எந்தவொரு

ஆச்சரியமும் காட்டாமல் மிகச் சாதாரணமாக 'ம்…' என்றான். அப்பச்சிக்குப் பிரியங்களைப் பங்கிட்டுக் கொள்ள வேறு மனிதர்களே கிடைக்கவில்லை போலும். அப்பச்சி கண்டிப்பாக உங்களைப் பார்த்து வரச் சொன்னார் என்று கூறியும் எந்தவொரு மகிழ்ச்சியும் அவன் கண்களில் தென்படவில்லை என்ன விசயம் என்றுதான் கேட்டான். அப்பனுவிற்கு மனமே இல்லை. மனமில்லாத ஒன்றை மீட்க முயற்சிப்பதாகவும், எதையோ தொட நினைத்து எதையோ அறுத்து விட்டாற் போல இருப்பதாகவும், தவறுதலாய்த் தப்பி வந்துவிட்டது போல இருந்ததாகவும் நினைத்துக் கொண்டான். அப்பச்சி சொல்லச் சொன்ன எதையும் அவன் சொல்லவும் இல்லை, சொல்ல தோன்றவுமில்லை.

திருவல்லிக்கேணியில் பெரிய தெருப் பக்கம் மேன்சனில் ஒரு நண்பருடன் இருப்பதாகவும் வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருப்பதாகவும் கூறினான். முத்துக்காளை அதைக் கண்டு கொள்ளாது 'நல்லது' என்று கூறி மேசையிலிருந்து எதையோ தேடிக்கொண்டிருந்தான். அப்பனுவுக்கு அங்கு நிற்கவே பிடிக்காமல் கிளம்பப் போகும் தருவாயில் ஒரு அழகான பெண் ஒருத்தி அறையிலுள்ளிலிருந்து வந்தாள். அந்தப் பெண்ணின் தோற்றத்தில் அவள் தனது மண்வாகு இல்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிந்தது. பின் அப்பனு அங்கு நிற்கவில்லை கீழே வந்து காவலாளி பார்த்த விவரத்தைக் கேட்க அவன் பார்க்கவில்லை என்று மறைத்தான், ஏனெனில் பார்த்தும் பயனில்லாதது போலிருந்தது.

ஒரு முறை ஊருக்கு வந்த பின்பு அப்பச்சியை முகம் கொடுத்துப் பார்க்க முடியாமல் பார்த்தான். முத்துக்காளையைச் சந்தித்து வேலை சம்பந்தமானவற்றைப் பேசியதாகவும் அவர் ஏற்பாடு செய்யலாமென்று கூறியதாகவும் அப்பச்சியைத் திருப்திப்படுத்தினான். அப்பச்சிக்கு இதைக் கேட்டவுடன் மனம் நிறைந்து, மண்வெட்டியை எடுத்து பாத்திகட்டிக் கொண்டிருந்தார். தண்ணீர் வேகமாய்ப் பாய்ந்து பாத்தியை உடைத்துக் கொண்டு, களை படர்ந்திருக்கின்ற புதரை நோக்கி ஓடிக்கொண்ருக்கிறது என்பது அப்பச்சிக்குத் தெரியவில்லை. எல்லாருக்கும் வேலை கிடைத்துவிடும், எல்லாம் பச்சைப் பசேலென்று படரப்போகிறது என்ற அளவில்லா மகிழ்ச்சியிலிருக்கிறார்.

பெரும் நம்பிக்கை வைத்திருந்த முத்துக்காளையும் தண்ணீர் பாயாமலிருக்க பாத்திகட்டிக் கொண்டதும், தடம்மாறிப் போயிற்று என்பதை அறியாமல் மகிழ்ச்சியுடன் வேலை பார்க்கிறார் அப்பச்சி.

## 11.4. கதைக்கரு

முத்துக்காளை அரசாங்க வேலை செய்வதால், அவன் பிறந்த கிராமத்தாருக்கும் வேலைக்கு ஏற்பாடு செய்வான் என்று அவன் மீது அளவில்லா நம்பிக்கை வைத்திருந்தது வீணாயிற்று. அப்பச்சி முத்துக்காளை மீது எல்லையற்ற அன்பும் பாசமும் நம்பிக்கையும் வைத்திருந்தார்.

எவ்வளவு ஏழையாகப் பிறந்திருந்தாலும் நல்ல வேலை கிடைத்து பணம் நிறைய சம்பாதித்து உயர்ந்த நிலையை அடையும் போது பிறந்த இடமும், வாழ்ந்த சூழலும், அன்பும் பாசமும் மறந்துவிடக் கூடும். அப்படிப் பட்டணத்தில்  வேலை பார்க்கக் கூடிய மனிதர்களில் 25 சதவீதம் மட்டுமே சொந்த ஊருக்கும் அங்குள்ள மக்களுக்கும் நல்லது செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள் மற்றவரெல்லாம் முத்துக்காளையைப் போல பெயர் மாற்றியது மட்டுமல்லாமல் அவன் சென்று கொண்டிருந்த தடமே மாறிவிட்டான்.

யாரும் முத்துக்காளையைப் போல ஆகிவிடக் கூடாது என்பதும், ஒருவர் மீதும் அப்பச்சியைப் போல அதீத அன்பும் பாசமும் காட்டிவிடக் கூடாது என்பதும் மாறுதடம் என்ற கதைக்குக் கதைக்கருவாக அமைகிறது.

## 11.5. தலைப்புப் பொருத்தம்

முத்துக்காளை பழையவற்றை நினைவுபடுத்தி எல்லாருக்கும் உதவி செய்வான் என்பது வீண் கனவு என்று அப்பனுவுக்கு மட்டுமே தெரிந்த உண்மை அவன் பாதை மாறிவிட்டான். எல்லாவற்றிலிருந்தும் தடம் மாறிவிட்டான். மேலும், அப்பச்சி உண்மை அறியாமல் வயலெல்லாம் பசுமை படரட்டும் என நினைத்து விளைநிலத்துக்குப்  போக வேண்டிய தண்ணீரை களை நிலத்துக்கும் பாய்ச்ச விட்டார். அந்தத் தண்ணீர் தடம் மாறி வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதும் அப்பச்சிக்குத் தெரியவில்லை. இந்த இரண்டு காரணங்களாலும் இக்கதைக்கு ‘மாறுதடம்’ என்ற தலைப்பு பொருத்தமாக அமைகிறது.

‘மாறுதடம்’ என்னும் இக்கதையில் பாரதிபாலன் அவர்கள் முத்துக்காளையின் வாழ்க்கையே தடம் மாறியதும், தான் கட்டிய பாத்தியை அடித்துக் கொண்டு தண்ணீர் களை படர்ந்திருக்கிற புதரை நோக்கி தடம்

மாறியதும் அப்பச்சிக்குத் தெரியவில்லை என்பதை இக்கதையின் உட்கருத்தாகக் கூறியிருக்கிறார்.



**தொகுத்துக்காண்போம்**

- நவீன சிறுகதைப் பற்றி தெரிந்து கொண்டீர்கள்
- கதைப் பொருண்மைத் தேர்வினை அறிந்து கொண்டீர்கள்
- கதைக்கான உத்திகளைப் புரிந்து கொண்டீர்கள்.

**முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்**

1. 'மாறுதடம்' கதையின் ஆசிரியர் யார்?

   ______________________________

2. 'மாறுதடம்' என்பதன் பொருள் என்ன?

   ______________________________

3. 'மாறுதடம்' கதையின் கதாபாத்திரத்தைக் கூறுக.

   ______________________________

**பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்**

1. நவீன சிறுகதைகள் பற்றி விளக்கி எழுதுக.
2. 'மாறுதடம்' கதைக் கருவினை விளக்குக.
3. கதையின் தலைப்புப் பொருத்தத்தினை விளக்குக.

**மேலும் பயில்வதற்கான நூல்கள்**

1. டாக்டர் தமிழண்ணல், ஏரக வெளியீடு, மதுரை-2005.

# பிரிவு 4 : புனைகதை

**கூறு 12** அகிலன் கண்ணன் - **திருஷ்டி பரிகாரம்**

அம்பை - **ஒரு வீட்டின் மூலையில் சமையலறை**

12.1. முன்னுரை

12.2. குறிக்கோள்

12.3. அகிலன் கண்ணன்

12.4. கதைமாந்தர்கள்

12.5. கதைச்சுருக்கம்

12.6. கதைக்கரு

12.7. தலைப்புப் பொருத்தம்

**வீட்டின் மூலையில் சமையலறை**

**- அம்பை**

12.8. அம்பை

12.9. வீட்டின் மூலையில் ஒரு சமயலறை சிறுகதையின் நோக்கும் போக்கும்

12.10. கதைச் சுருக்கம்

12.11. கதைக்கரு

## 12.1. முன்னுரை

நடந்த நிகழ்வுகளை மையமாகக் கொண்டே அவற்றை ஒட்டியே கற்பனை கலந்து புனையப் பெறுவன புனை கதைகள் ஆகும். இவை, வருணனைப் பாங்கில் அமையும். படைப்பாளனே முன்னின்று கதாபாத்திரங்களின் உணர்வையும், செயலையும் நடைபெறும் செயல்களையும் எடுத்துரைப்பதாக எழுதப்படுகிறது.

## 12.2. குறிக்கோள்

- கதைப் பொருள், நிகழ்வுப் பின்னல், கதை சொல்லலும் முறையினை அறிந்து கொள்வீர்கள்
- சிறுகதை உத்திகள் குறித்துத் தெரிந்து கொள்வீர்கள்
- புதின உத்திகள் குறித்துப் புரிந்து கொள்வீர்கள்
- சமூக கதைகள் பற்றி உணர்ந்து கொள்வீர்கள்

### கூறு 12 : திருஷ்டிப் பரிகாரம் - அகிலன் கண்ணன்

## 12.3. அகிலன் கண்ணன்

எழுத்தாளர் அகிலனின் மகன் அகிலன் கண்ணன். தமிழகஎழுத்தாளரும்,பதிப்பாளரும் ஆவார். அகில இந்தியஅளவில் சிறந்தபதிப்பாளர் விருதுபெற்றவர். 'நெஞ்சோடு'சிறுகதைத் தொகுப்பிற்கு லில்லி தெய்வசிகாமணி விருதுபெற்றவர். சிறுகதைகளுக்காக இலக்கியச் சிந்தனைப் பரிசுகளைப் பெற்றவர். சிறுவர் சிறுகதைத் தொகுப்பு 'பட்டாம்பூச்சி'க்காக பாரத ஸ்டேட் பாங்க் இலக்கியப் பரிசைப்பெற்றவர். 'சுட்டும் விழிச்சுடர்'என்னும் இந்நூல் இவரது மூன்றாவது சிறுகதைத் தொகுப்பின் எட்டாவது நூலாகும்.

## 12.4. கதைமாந்தர்கள்

கணவன்

மனைவி

வங்கிஉதவிமேலாளர்

திருஷ்டிப் பூசணிக்காய் வியாபாரி

சிறுவன்

ஹோட்டல் முதலாளி

## 12.5. கதைச்சுருக்கம்

பூதலூர் கிராமத்துக்காரன், வேலைகிடைத்துத் தஞ்சாவூரில் சிலகாலம் இருந்தான். பின்னர் இடமாற்றம் காரணமாகச் சென்னைக்குவந்தான். நீவங்கியில் வேலைபுரிகிறான். மனைவியுடன் ஸ்டோர் வீட்டில் வாடகைக்குத் தங்கியிருக்கிறான். 'வெஹிக்கிள் லோன்' போட்டு 'கைனடிக் ஹோண்டா' வாங்கி மனைவியைச் சொகுசாய்ப் பின்னால் அமரவைத்துத் தோளில் கைபோட்டுக் கொள்ளச் சொல்லி சென்னையையே சுற்றுகிறான்.

இவனுக்குச் சென்னைக்கு வந்த பிறகு, பார்ப்பவை எல்லாம் புதிதாகத் தோன்றியது. கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்த பின்பு நகர வாழ்க்கைக்கு ஏற்ப நடந்து கொள்ள அவனால் இயலவில்லை. எதைப் பார்த்தாலும் "நம்மபூதலூரில் இப்படி இல்லையே என மனைவியிடம் வியப்பாகக் கூறுகிறான்.

விஸ்தாரமாய் வானம் பார்த்தத் திண்ணை கண்ட வீட்டில் இருந்துவிட்டு வீட்டுக்குள் முற்றத்தின் வழியே சூரியனையும், நிலாவையும் வரவேற்றவன், சென்னையில் லாட்ஜ் போல் வரிசையில் நெருப்புப் பெட்டியை அடுக்கி வைத்தது போல் உள்ள அறைகளையே வீடு என்று உணரக் கூசுகிறான். பசுமையைக் காணக் கிடைக்காமல் மூடிய கதவுகளையும், ஸ்க்ரீன் துணிகளையும் கொண்ட வீடுகளில் மனிதர்கள் இருப்பதும், வாழ்வதும் தொலைக்காட்சியின் ஒலிகளே சுவாசமாய்ப் புலப்படக் கண்டான்.

ஆனால் இவன் மனைவி அப்படியல்ல. "இப்படி அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பார்த்துப் புலம்பாதீங்க. வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்கப் பழகுங்க. எதுவும் நிரந்தரமில்லை. அந்தந்தத்தருணங்களே அர்த்தமுள்ளவை' என்றுதன் கணவனுக்குச் சொல்கிறாள்.

இவனுடைய எண்ணங்களில், பாத்திரத்தில் எண்ணெயோ தண்ணீரோ நிரப்பியது போல எப்பொழுதுமே வேண்டாத் தகவல்களும், கற்பனைக் கனவுகளும் நிரம்பியிருக்கும். அவன் நிதர்சன நடப்புலகுக்குப் படியிறங்கி வருவதற்குச் சிரமமான காரியமாகும். எதிரே செல்லும் வண்டியில் பூசணிக்காய்கள் நிரம்பியிருப்பதைப் பார்த்து, நகர மக்கள் அவற்றை எத்தனை நாட்களுக்குள்

சாப்பிட்டு முடிப்பார்கள்? என்று சந்தேகம். இவன் இதற்கு முன்னால் இவ்வளவு பூசணிக்காய்களை ஒன்றாகப் பார்த்ததில்லை.

வங்கியில் வேலை செய்கிறான். எல்லா ஊழியர்களும் இவனுக்கு வேறாகப்படுகிறார்கள். இவனைத் தவிர அனைத்து ஊழியர்களும் 'பாயின்ட் டு பாயின்ட்' பஸ் மாதிரியும், ஒருவரின் உறவு போலவும், கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்பவர்களாயும் காணப்படுகிறார்கள். கோடு போட்ட தாளில் எழுதுவது மாதிரி கோடு போட்ட எல்லைக்குட்பட்ட, பாத்திகட்டியஉறவு, நட்பு, வாழ்க்கையாக இருக்கிறது.

நகரில் உதடுகள் மட்டுமே பேசக் கண்டவனுக்கு, சிரிக்கக் கண்டவனுக்கு இந்த'அவுன்ஸ் கிளாஸ்' வாழ்க்கையை உள்வாங்கிக் கொள்ளச் சிரமமாயிருக்கிறது.

நகரத்திலிருக்கும் வங்கிக்குள் வாடிக்கையாளர் காத்திருக்கும் நேரம் அதிகம் பணியாளர்கள் எதிரேநிற்கும் வாடிக்கையாளர்களை ஒரு பொருட்டாகக் கூட மதிப்பதில்லை. ஆனால் இவன் அப்படியில்லாமல், எதிரே நிற்பவரின் தேவையுணர்ந்தும், என்ன? ஏது? என உடனே கேட்டு விசாரித்தும் விரைவாகச் செயல்படுகிறான். பிற ஊழியர்கள் அவனை ஏளனமாகப் பார்த்து நகைக்கின்றனர்.

அனைவரும் பவுடர் காப்பி அருந்த, இவன் அதிலிருந்தும் வேறுபட்டு: வெளியே ஃபில்டர் காபி அருந்துவான். அப்படி இவன் காபிஅருந்தித் திரும்பும் வழியில் காய்கறிக் கடையருகே ஒருவன் பல பூசணிக்காய்களில் மிரட்டல் உருவங்கள் வரைந்துகொண்டிருந்தான். அவை'திருஷ்டிப் பூசணிக்காயகள்'என்பது தெரியாமல் வியப்பாகப் பார்த்தான்.

அலுவலகம் வந்த பின்பும் அவன் அந்தப் பூசணிக்காய் ஓவியங்களை நினைத்து ஆச்சர்யம் தாளாமல் "என்ன அழகா பூசணிக்காய்லபடம் வரைஞ்சிருக்காரு! என்று அருகே உள்ள ஊழியரிடம் சொலகிறான். இவன் அதையே நினைத்துக் மனதில் புலம்பிக் கொண்டிருக்க அருகே பணி புரிபவர் ஏதோக் கேட்க! அதைக் கவனிக்காமல் திடுக்கிட்டு நினைவுலகத்திற்குத் திரும்பிய இவன் மேசை ட்ராவிலிருந்து 'அட்வைஸ் வவுச்சரை' எடுத்துநீட்டுகிறான்.

பின் அலுவலக நேரம் முடிந்தவுடன் கடை வீதியான பிரதான சாலையில் வங்கியிலிருந்து வீட்டிற்குச் செல்லும் வழியில் மெஸ்ஸிலிருந்து பெரிய பெரிய துணிக்கடை, நகைக்கடைகள் வரை பெரும்பாலானகடைகளின் 'திருஷ்டி'கள் நடுவீதிகளில் சிதறுண்ட பூசணிக்காய் வடிவில் இவனுக்கு வேடிக்கை விளையாட்டுக் காண்பித்தன. பின்னால் வரும் வண்டி ஒலியெழுப்ப இவன் ஓரம் ஒதுங்க இடமில்லாமல் ஓட்டத் தடுமாறும் போதுசைக்கிள் சிறுவன் ஒருவன் குறுக்கே வேகமாய்ப் பாய்த்தான். இவன் பிரேக் போட, மண் தரையில் தடுமாறிவண்டி இவன் மேலே விழ இவனும் விழுந்தான். வழியில் உள்ளவர்கள் அவனுக்குஉதவினர்.

இவன் பணிபுரியும் வங்கியில் கணக்குவைத்திருக்கும் ஒரு உணவக முதலாளி காபி கொடுத்துக் குடிக்கச் சொல்லி, வண்டியைப் பழுதுபார்க்கவும் ஏற்பாடுசெய்கிறார். மேலும், அவரை ஆட்டோவில் அழைத்துச் செல்ல ஏற்பாடும் செய்கிறார்.

காயமுற்ற கைகளைக் கூட பொருட்படுத்தாமல் அவன் எதிர்த்திசையில் உடைக்கப்பட்ட திருஷ்டிப் பூசணிக் காயிலிருந்து விழுந்த சில்லறைகளைத் துழாவிக் கண்டெடுத்துமுகம் மலர்ந்த பாதையோரக் கிழவியின் வறுமையை எண்ணி வருந்துகிறான். பின்புதான் அவன் தன் கை முறிவேற்ற வலியினை மெதுவாக உணருகிறான். தன் வலியைக் கூட பொருட்படுத்தாமல் அவன் சமூகத்தைக் காண்கிறான். நகரத்தைக் கண்டுவியப்புறுகிறான்.

## 12.6. கதைக்கரு

கிராமத்தில் வாழ்ந்தவனுக்கு நகர வாழ்க்கை ஒரு புது அனுபவமாகியும் இருக்கிறது. வியப்பாகவும் இருக்கிறது. திருஷ்டிப் பூசணிக்காய்களைக் கூட எதற்கு மிரட்டல் அலங்காரத்துடன் வியாபாரத்துக்கு வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாத 'அறியாமையாய்' வளர்ந்தவனாக இருக்கிறான்.

வங்கிஊழியனான தன்னுடைய வேலையில் நேர்மைக்குணம் உடையனாக இருக்கிறான்.

‘திருஷ்டிப் பூசணிக்காய்களைச் சாலையின் நடுவில் உடைப்பதால் தான் சாலைவிபத்துகள் நிறையநடக்கின்றன. என்பதும்,அறியாமைக் குணமும், மிக்க நேர்மைக்குணமும் மிக்க இக்கதைத் தலைவன் அடிப்பட்டு விழுந்த போதும் அதன் வலியைஉணராது,வழியில் திருஷ்டிப் பரிகாரத்திற்காக உடைக்கப்பட்ட பூசணிக்காயிலிருந்த சில்லறைகளைஎடுக்கும் மூதாட்டியின் வறுமையைநினைத்து இரங்குகிறான் என்பதும் இதற்குக் கதைக்கருவாகஅமைகிறது.

## 12.7. தலைப்புப் பொருத்தம்

திருஷ்டிப் பரிகாரத்துக்காக வைக்கப்பட்ட பூசணிக்காய்களையே பார்த்துக் கண் வைத்த கதைத் தலைவன் அந்தப் பூசணிக்காய்களாலே விழுந்துத் தன்கைகளைத் திருஷ்டிப் பூசணிக்காய் போல உடைத்துக் கொண்டான். அந்தப் பூசணிக்காயிலிருந்து வழியும் வண்ணச் சாயம் போல இவனது உடலிலிருந்து இரத்தம் வழிகிறது.

திருஷ்டிப் பரிகாரத்துக்கான பூசணிக்காயை மையமாகக் கொண்டதால் இக்கதைக்கு ‘திருஷ்டிப் பரிகாரம்’ என்ற தலைப்புப் பொருத்தமாக அமைகிறது.

### வீட்டின் மூலையில் சமையலறை

**- அம்பை**

## 12.8. அம்பை

இன்றைய சமூக அமைப்பின் ஒடுக்கப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட கருத்தமைவுகளைப் படைப்பாக்கங்களாகக் கொண்டு வருவதில் இன்றைய படைப்பாளர்கள் முன்னிற்கின்றனர். அந்த வகையில் பெண்ணியம், தலித்தியம், ஆகியவை படைப்புப் பொருண்மைகளாக அமைந்துள்ளன. குடும்பம் என்பது சமூக அமைப்பின் அடிப்படை அலகாகச் செயல்படுகின்றது. இச்சமூகம் தொடர்ந்து தன்னை மறு உற்பத்தி செய்து கொண்டு நிலை பெறுவதற்குக் குடும்பம் என்ற நிறுவனம் அவசியமாகின்றது. தந்தை வழிச் சமூகத்தின் அதிகார அமைப்புக்குள் அடங்கிய புனிதத்தன்மை வாய்ந்த நிறுவனம் குடும்பமாகும். மரபு ரீதியான கருத்தாக்கங்கள் ஆணாதிக்கச் சமூக அமைப்பில்

பெண்கள் தான் ஓர் ஒடுக்கப்படுகின்ற ஜீவியாக இருப்பதை உணராமல் தடுக்கின்ற திரைகளாக அமைகின்றன.

பெண்கள் வாழ்வில் சமையலறை பெறும் இடம் - ஆர். சூடாமணி, அம்பை, திலகவதி, வாஸந்தி, தமயந்தி ஆகிய பெண் எழுத்தாளர்களால் சிறுகதைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இதில் அம்பையில் 'வெளிப்பாடு', 'ஒரு வீட்டின் மூலையில் சமைலயறை' ஆகிய சிறுகதைகள் 'சமையலறை' என்னும் தளத்தையே அடிப்படையாகக் கொண்டு கதைகள் அமைந்துள்ளது. இக்கதைக் கருவினையே மற்றொரு பார்வையில், வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, கதையில் கூட்டுக்குடும்ப வாழ்வில் பெண்கள் சமையலறையில் முடங்கிக் கிடக்கும் நிலையை இக்கதை விளக்குகின்றது. பெண்கள் சமையலறையில் ஆதிக்கம் செலுத்துவதையே பெருமையாகக் கருதுகின்றனர். கூட்டுக்குடும்ப வாழ்வில் பெண்களின் அதிகாரம் சமையலறையில் நிலவுவதாகக் கருதும் பெண்களின் அறியாமை நிலை, தலைமுறை தலைமுறையாக அடிமைப்படுத்தப்படும் பெண்கள் நிலை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அம்பை என்கிற சி.எஸ். லெட்சுமி 1960-களின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். பெண் நிலை நோக்கினை வெளிப்படுத்தும் வகையில் உள்ள தமிழ் சிறுகதைகளின் முன்னோடி. உறவு, காதல், திருமணம், அரசியல், இசை என்று பல்வேறு பரிமாணங்களைத் தொட்டவர். சுயச் சிந்தனை கொண்ட பெண்களைத் தன்னுடைய படைப்புகளில் இயல்பாக படைத்தவர். இவரது கதைகளில் பெண்களின் உறவுச்சிக்கல்கள், பிரச்சனைகள், குழப்பங்கள், கோபதாபங்கள் யாவும் வெளிப்படுகின்றன. தமிழ், ஆங்கிலம், இந்தி மற்றும் கன்னடம் மொழிகளில் புலமைப் பெற்றவர்.

தங்கராஜ் எங்கே? என்ற சிறுவர் திரைப்படத்திற்கு வசனம் எழுதியுள்ளார். முதல் அத்தியாயம் என்ற சிறுகதையைத் திரைப்படமாகத் தயார்படுத்தியுள்ளார்.

## 12.9. வீட்டின் மூலையில் ஒரு சமயலறை சிறுகதையின் நோக்கும் போக்கும்

பெண்களின் உழைப்பு சுரண்டப்படுதல், அவர்களுடைய உரிமைகளும், உணர்வுகளும் ஒடுக்கப்படுதல் போன்ற எண்ணங்களையும் உணர்வுகளையும்

வெளிப்படுத்துதலே அம்பையின் நோக்கமாகும். ஆண் ஆதிக்கத்திற்கும் பெண்கள் அந்த ஆதிக்கத்தின் கீழ் அடங்குவதற்கும் உரிய காரணங்களை உளவியல் ரீதியில் சிறுகதைகளில் வெளிப்படுத்துகிறார்.

உலகில் பிறந்தவர்கள் இயல்பாக இருப்பதே அவர்கள் சுதந்திரம், அவர்களை அவ்வாறு இருக்க விடுவதும் சுதந்திரம் என்றும், ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணுக்கு ஏற்படும் அறியாமையையும் பதிவு செய்வதாக அமைந்துள்ளது.

ஒரு சதுர கஜம் எட்டரை விலைக்கு நிலம் வாங்கி வீடு கட்டினாராம் கிஷனின் அப்பா. ரயில்பெட்டித் தொடர் மாதிரி வரிசையாய் அறைகள். எல்லா அறைகளும் முடிந்தபின் போனால் போகிறது என்று ஒட்டவைத்தாற்போல் ஒரு சமையலறை. இரு ஜன்னல்கள். ஒரு ஜன்னலின் கீழ், குழாய் வைத்த தொட்டி, ஒரு தட்டுக்கூட வைக்க வகையில்லாமல் குறுகியது. கீழே, செங்கல் தடுப்பு இல்லாத சாக்கடை முற்றம். மேலே குழாயைத் திறந்ததும் கீழே பாதங்கள் குறுகுறுக்கும். பத்து நிமிடங்களில் ஒரு சிறு வெள்ளக்காடு காலடியில். அதில் நின்று அடிப்பாதம் எல்லாம் வெடிப்புக் கீறல்கள். சமையலறையில் அடிவைத்து, முதல்நாள் சமைத்து, கைக்குத் தங்க வளையல் போட்ட உடனேயே வெடிப்புக்குத் தடவ ஒரு மெழுகுக் களிம்பு தந்து விடுவாள். ஜீஜி என்று எல்லோரும் கூப்பிடும் கிஷனின் அம்மா.

சமையலறையின் கிழக்குப்புறம் பார்த்த ஜன்னல் வழியே பச்சை மலைகள். மேலே ஒரு வெள்ளைப் பொட்டுக் கோயில். பிள்ளையார் கோயில். அந்த ஜன்னலின் கீழேதான் சமைக்கும் மேடை. வெடிப்புப் பாதங்கள் பச்சை மலையில் உறுத்தாமல் இருந்திருக்கலாம். ஆனால் அந்த ஜன்னல் வெளியேதான் துணி உலர்த்தும் கொடி. கால்சராய், சட்டை, பைஜாமா, புடவை, பாவாடை விரிந்து ஜன்னலை மறைக்கும்.

கொத்தமல்லிப் பொடி, காரப் பொடி, கரம் மசாலாப் பொடி தூவி, அரைத்த பசு மஞ்சளும், இஞ்சியும் தடவப்பட்டுத் தயிரில் ஊறிய மாமிசத் துண்டங்களைக் கிளறி நிமிர்பவர்களை எதிர்கொள்வது ஒரு நாடா தொங்கும் பைஜாமாக இருக்கலாம்.'. இதில் யாருக்கும் ஆட்சேபணை இருப்பதாகத்

தெரியவில்லை. அவர்கள் வாழும் பாங்கு சமையலறையைச் சுற்றியே இருந்தது. சமையலறை என்ற தத்துவத்தை ஒட்டி, சாப்பாட்டுப் பிரியர்கள் - மதுப் பிரியர்கள் என்றே பெயரெடுத்த வம்சம். அனுபவிப்பவர்கள். உல்லாசிகள். பார்க்கப் போனால் இவர்கள் கல்யாணத்தில் அஜ்மீர் உறவினர்களுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காத விஷயம் யாருக்கும் எந்தவித மதுபானமும் குடிக்கத் தரவில்லை என்பதுதான்.

குலதெய்வம் அம்பேவுக்குக்கூட மதுதான் பிரஸாதம். ஸ்காட்சலிருந்து நாட்டுச் சரக்குவரை எதைத் திறந்தாலும் சுவரில் தெளித்து “ஜெய் அம்பே” சொல்லிவிட்டுத்தான் குடிப்பது. பிறந்த குழந்தையின் வாயில் முதலில் மதுவில் முக்கிய வரலைத் தான் இடுவது. அப்படி இருக்கும்போது இப்படிக் கலயாணம் செய்துகொண்டால்? சரி. ரம், ஜின், விஸ்கி வேண்டாம். அஜ்மீரிலேயே தயாராகும் ஆரஞ்சு வண்ணக் கேஸர் கஸ்தூரி இல்லையா? மண்டையைப் போய் ஒரு உதை உதைக்குமே? சே சே. இது என்ன இப்படிக் கல்யாணம் செய்துகொண்டாய் என்றார்கள் அவனிடம். வீரனுக்கு லட்சணமான குதிரையும் மதுவும் இல்லாமல் ஒரு கல்யாணமா? ராட்சஸப் பூக்கள் வரைந்த கடும் செம்மண், பச்சை, ஆரஞ்சு, சிவப்பு வண்ணப் பாவாடைகள் இடுப்பிலிருந்து உப்பிப் பருத்த பிருடங்களின்மேல் மடங்கி மடங்கிச் சரிய, வெள்ளி நிறச் சரிகைகள் இட்ட முக்காடுகளைத் தூக்கி வயதான பெண்கள் அவனிடம் கேட்டார்கள்: குடிக்க ஒன்றுமில்லையா?

ஜீஜி நடமாடிக்கொண்டிருந்தபோது டாணென்று மாலை ஏழு மணிக்கு அப்பளம் சுட ஆரம்பித்துவிடுவாள். பப்பாஜி வெளியறை முக்காலியில் மற்ற விஷயங்களை வைத்துவிட்டுத் தயாராக இருப்பார். ஜீஜி கார அப்பளம் தட்டில் அடுக்கி வைத்து வருவாள். கார அப்பளம் தீர்ந்ததும் நாக்கில் சுள்ளென்று உறைக்கும் பிகானீர் ஸேவ். அது அலுத்தால் சோளப் பக்கோடா. அல்லது மிளகாயும் கடலை மாவும் தடவிப் பொரித்த நிலக்கடலை. எதிரெதிரே அமர்ந்து ‘ஜெய் அம்பே’ என்று விட்டு ஆரம்பிப்பார்கள். பிள்ளைகளும் பெண்களும் இருந்தால் குடும்பத்தோடு சிரித்துகொண்டு. ஜீஜி நாட்டுப் பாடல்கள் பாடுவாள் - ‘சந்தைக்குப் போனால் எனக்கொரு குஞ்சலம் வாங்கி வா..... நல்ல வண்ணத் தாவணி வாங்கி வா’..... ‘இன்னமுமா ஆசை?’ என்று பப்பாஜி சிரிப்பார்.

சமையலறை மூலையில் ஒரு கும்மட்டி அடுப்பில் சாய் செய்யத் தண்ணீர் கொதித்தவாறே இருக்கும். சாப்பிடும் சமயத்தில் வீட்டு வாசலில் யாராவது தெரிந்தவர் வந்துவிட்டால் முதலில் 'ஜில்'லென்று தண்ணீர்.

"சாப்பிடுங்களேன். சாச்சாவுக்கு ஒரு தட்டு கொடு" என்று ஆரம்பிப்பார் பப்பாஜி.

"இல்லை சும்மா இப்படி வந்தேன்."

"சரி, சாய் குடிக்க என்ன வந்தது?"

"வேண்டாமே."

"கா.ஃ.பி?"

"தண்ணி போதும்."

"அதெப்படி வெறும் தண்ணி. கொஞ்சம் '\ர்பத் போட்டுக் குடியுங்கள்."

"சரி."

ஜீஜி எழுந்தருப்பாள்.

"அப்படியே ஒரு தட்டில் ரெண்டு கபாப் கொடு."

ஜீஜி சமையலறையை உருட்டுமுன் காலையில் செய்த வெந்தயக் கீரை பரோட்டா பப்பாஜிக்கு நினைவு வரும். "ஸீனியேஜி" என்று மனைவியை விளிப்பார். "அந்த மேதி பரோட்டாவும் ரெண்டு சூடாக்கி எண்ணெய் தடவி கொண்டு வா. சாச்சா ருசி பார்க்கட்டும்" என்பார்.

வந்தவர் தோல்வியை ஒப்புகொள்வார்.

"நான் சாப்பிட்டே விடுகிறேன்."

ஜீஜி எப்படியும் சமையலறைக்கு போவாள். இரண்டு முட்டைகள் மிளகும் உப்பும் தூவிப் பொரிக்க, ஒருவேளை, சாப்பாட்டு அளவில் ஏதாவது குறைந்துவிட்டால்?

ஆனால் சமையலறை என்ற பௌதிக விவரம் அவர்களைப் பாதிக்கவில்லை. அப்படிப்பட்ட ஒன்று இல்லாததுபோல் இருந்தார்கள். அவர்கள்

கூட்டுக் குடும்ப வீடுகளில் பரந்த கல்தரை முற்றம், கூடம் இவற்றைத் தாண்டிய இருள் மூலை சமையலறை. பூஜ்ய வாட் விளக்கு எரியும் அங்கு. முக்காடு அணிந்து, அழுத்தமான வண்ணப் பாவாடைகள் இருளை ஒட்டியே இருக்க, பெண்கள் நிழல்களாய்த் தெரிவார்கள் அந்த அறையில். அறைந்து அறைந்து சாப்பாத்தி மாவு பிசைந்து கொண்டோ, அடுப்படியில் கும்மென்று மணக்கும் மஸாலா பருப்பைக் கிளறியவாறோ. சமையலறை ஒரு இடம் இல்லை. ஒரு கோட்பாடு மட்டுமே. அத்தனை ருசியனெ, நாக்கை அடிமைப்படுத்தும் சாப்பாடு மாயக் கம்பளத்தில் வந்ததுபோல் அலட்டிக்கொள்ளாமல் இருந்தார்கள்.

மீனாட்சிதான் ஒரு முறை சாப்பிடும் நேரத்தில் அந்த விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தாள், பப்பாஜி அப்போது கீழே இருந்த கார் 'ஷெட்டின் மேல் ஒரு அறை கட்டிக்கொண்டிருந்தார்.

'பப்பாஜி, சமையலறைக்கு வெளியே உள்ள தாழ்வாரத்தைப் பெரிதுபண்ணிவிடுங்களேன். அதை நீங்கள் அகலமாக்கினால் நாற்காலி போட்டு உட்காரலாம். இடது பக்கம் ஒரு பாத்ரூம் கட்டினால் அதில் பெரிய தொட்டி போடலாம். பாத்திரம் தேய்க்க. பாத்ரூமுக்கு வெளியே துணி உலர்த்த அலுமினியக் கம்பி போட்டு விடலாம்."

பப்பாஜி இந்த அபிப்ராயத்தால் தாக்கப்பட்டவர்போல் பார்த்தார்.

ஜீஜியும் வியப்படைந்தவள்போல் அவரைப் பார்த்தாள். மருமகள்கள் இதுவரை இப்படிப்பட்ட அபிப்ராயங்களை முன்வைத்ததில்லை. ராதா பாபிஜி, தட்டை வெறித்துப் பார்த்தாள். குஸீமா தலை முக்காட்டைச் சரி செய்துகொண்டாள், அவள் படபடப்பை மறைக்க. பப்பாஜி கிஷனை நோக்கினார். அவன் நிதானமாகச் சாப்பிட்டவாறிருந்தான்.

பப்பாஜி தொண்டையைச் செருமிக்கொண்டு, 'எதற்காக?" என்றார்.

'இந்த சமையலறைத் தொட்டி ரொம்பச் சின்னது. தண்ணி வேறு சரியாகப் போவதில்லை. வேலைக்காரி அங்கேயே பாத்திரம் தேய்த்தால் சமையலறை முழுவதும் தண்ணீர். நிற்க முடியவில்லை. ஜன்னலுக்கு வெள்யில் துணி தொங்கினால் மலையை மறைக்கிறது பப்பாஜி."

கிஷனைப் பார்த்தார் மீண்டும். அந்தக் கட்டடக் கலை நிபுணன் தன் மனைவியோடு உடன்பட்டான்.

‘அவள் சொலவது சரிதான் பப்பாஜி. அப்படியே செய்து விடலாம்.”

‘நீ எங்கே சமையலறைப் பக்கம் போனாய்?”

‘அவள் மைசூர் சமையல் செய்யும்போது இவன்தான் மிளகாய், வெங்காயம் அரிந்தான்”; என்றாள் ஜீஜி.

‘பேசாமல் உனக்கே தங்க வளையல் போடலாம் போலிருக்கிறதே.”

‘தங்கவளை எதற்கு பப்பாஜி. மோதிரம் போடுங்கள்.”

பப்பாஜி சிரித்தார்.

அறை கட்டி முடித்தாகிவிட்டது. சமையலறை நிலவரம் மாற்றப்படவில்லை. துணி உவர்த்த இன்னும் இரண்டு நைலான் கயிறுகள் கட்டப்பட்டன, ஜன்னல் எதிரே. பப்பாஜியின் மௌனச் சவால்: பெண்ணே, மைசூர்ப் பெண்ணே, இங்கே நிரந்தரமாக வாழாத உனக்கு மலை எதற்கு? அதன் பச்சை எதற்கு? ராஜஸ்தானத்து சமையல் பண்பாட்டுக்கும் ஜன்னலுக்கும், பாத்திரம் அலம்பும் தொட்டிக்கும், என்ன சம்பந்தம் பெண்ணே. கறுத்த நிறமுடைய, முக்காடு அணிய மறுக்கும், என் பையனை வசியப்படுத்திய, நிறையப் பேசும் பெண்ணே......

பின்னிரவு மூன்று மணி வாக்கில் மயில்கள் அகவ ஆரம்பித்தன. ஒன்றன்பின் ஒன்றாக. கா்ண கடூரமாக குரல் இழந்த சாதகம். ஐந்தரை மணிக்கு அவளும் கிஷனும் மொட்டை மாடி போனபோது எதிரே மரத்தில் சிவன் விரித்த ஜடையாய் மயில் வால் தொங்கியது. கஜ நீலமும், மென் பச்சையும், தீக்கப் பச்சையும் பளீரிடத் திரும்பியது. எதிா்பாராதபோது பறந்து மொட்டைமாடிச் சுவரில் அமா்ந்து வாலை நீட்டிப்போட்டது. பிறகு, இரண்டு மொட்டை வால் மயில்கள். திரும்புவதற்குள் இன்னும் இரண்டு, சாட்டை வால்களுடன். வயிற்றினுள் ஒரு மென் தன்மை இதமாய்ப் பரவியது. காலைக்கடன்களை முடித்ததும் வயிற்றுக் கனம் அகலும் இதம். அந்தக் கருநீலப் பச்சை ஐஸ் துகள் சிலீருடன் எல்லா அடங்காச் சூட்டையும் தணித்தது. கிஷனின் உதடுகளில்

ஒரு முறை நாக்கால் தடவி மென்மையாக முத்தமிட்டாள். பனித்துளி ஒட்டிய, அடித்தளச் சூட்டை இனம் காட்டிய முத்தம்.

மொட்டை மாடிக் கதவு கிர்ரிட்டது. படி ஜீஜி (பெரிய ஜீஜி) எழுந்தாயிற்று. கதவருகே இருந்த பெரிய ட்ரம்மிலிருந்து கரி எடுக்க வந்திருப்பாள். கும்மட்டி அடுப்புப் பற்றவைக்க. படி ஜீஜி பப்பாஜியின் சிறிய தாயார். பப்பாஜிக்கு பதினேழு வயதாகும்போது அவருடைய தந்தை இன்னோரு திருமணம் செய்து கொண்டார் ஒரு பதினேழு வயதுப் பெண்ணை. ஐந்து பெண்கள் பெற்றாள். பப்பாஜிதான் ஈதரவு. அவளுக்கும் ஜீஜிக்கும் இடையே இரண்டே வயதுதான் வித்தியாஸம். பொக்கை வாய். பொய்ப் பல் வேண்டாம் என்று விட்டாள். மாமிஸம் சாப்பிடுவதை விட்ட பின்னர் எதற்குப் பல் என்று கூறிவிட்டாள்.

காலில் அணிந்த கனத்த வெள்ளித் தண்டை படியில் இடிக்க, போய்விட்டாள் படி ஜீஜி.

'சாய் கொண்டு வரட்டுமா மீனா?"

'ம்."

கிஷன் போனதும் மாடி இரும்புத் தொடடிக் குழாயைத் திறந்து முகம் கழுவி, பல் தேய்த்தாள்.

தொப்பியால் மூடிய கெட்டிலில் சாய் கொண்டுவந்தான் கிஷன். கீழே வைத்து இரு கோப்பைகளில் சாய ஊற்றியபோது இஞ்சி, துளசி மணம் பரவியது. ஒரு காலை நட்சத்திரம் மினுக்கியது. மயில் நீலப் பச்சையில் தெறித்தது. சாய் தொண்டையில் சூடாய் இறங்கியது.

கீழே போனபோது சமையலறை மூலையில் பெரிய பித்தளை டம்ளரில் கிஷன் ஊற்றித் தந்திருந்த சாயை முக்காட்டுத் தாவணித் துணியால் பிடித்தவாறு அமர்ந்து, ஊதிக் குடித்துக்கொணடிருந்தகள் படி ஜீஜி. ராதா பாபிஜி இன்னோரு பெரிய கெட்டிலில் சாய்த தூளைப் போட்டுச் சுடுதண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

'நாஸ்தாவுக்கு மாவு பிசையட்டுமா?" என்றாள் படி ஜீஜி.

'பப்பாஜி உலவப் போயிருக்கிறார். சமோசாவும் ஜிலேபியும் வாங்கி வருவார். ரொட்டி வாட்டினால் போதும், அதை நான் வெளியில் டோஸ்ட்

செய்துகொள்கிறேன். இன்றைக்கு என்ன நம் சமையலா, இல்லை மைசூர் சமையலா?”

‘அவளும் கினுமாள் நேற்று காய்கறியும் தேய்காயும் வாங்கி வந்தார்கள;.”

‘என்ன தேங்காய் சமையல் சப்புச்சப்பென்று? நீங்கள் ஒன்று செய்யுங்கள், படி ஜீஜி. மஞ்சளும் இஞ்சியும் அரைத்துவிடுங்கள். மட்டன் புலாவ் செய்துவிடலாம். சுரைக்காய் துருவிவைத்து விடுங்கள். கோ.ஃ.ப்தா செய்துவிடலாம். சேப்பங்கிழங்கைத் தொலி சீவிவிடுங்கள். பெரிய ஏலம், மிளகு, லவங்கப்பட்டை, தனியா, லவங்கம் இடித்துவிடுங்கள். நல்லா நைஸாக. தனியாவை வேறாக எடுத்து இடியுங்கள் கொஞ்சம். ராத்திரி ஆலு கோபிக்குப் போடாலாம;.”

சமையலறைக்கு வெளியே வந்தாள் சாய கெட்டிலும் கோப்பைகளும் வைத்த தட்டை ஏந்தியவாறு.

‘என்ன மீனா. இன்றைக்கு என்ன சமைக்கப் போகிறாய;?”

‘எதுவும் இல்லை. நாங்கள் கணே மந்திர் மலையில் ஏறப்போகிறோம;.”

‘சரிதான;.”

மீனாட்சி சமையலறையில் நுழைந்தாள் இரண்டாம் ஈடு சாய் தயாரிக்க.

படி ஜீஜி பொக்கை வாய் திறந்து சிரித்தாள். தன் பித்தளை டம்ளரை நீட்டினாள்.

“எனக்கும் சாய்.”

“இஞ்சி போடவா படி ஜீஜி?”

“ம். போடு. எனக்கு, நீ போடும் சாய் பிடிக்கும்.”

“சமோசாவும் ஜிலேபியும் வாங்கி வந்திருக்கிறேன். கொஞ்சம் ஜிலேபியைப் பாலில் போடுங்கள்” என்று ஒரு பொது உத்தரவு வெளியிலிருந்து வந்தது. மீனாட்சி ஜிலேபிப் பொட்டலத்தைச் சமையலறைக்குக் கொண்டுவந்து பிரித்தாள்.

“உ”... இதோ… இதோ…”

மீனாட்சி திரும்பினாள். "எனக்கு நாலு குடு" என்றாள் படி ஜீஜி.

அது ஒரு உணவுப் போர். நிதர்சனமாகப் பங்குபெறுவோர். ஜீஜி, படி ஜீஜி. தாத்தா உயிருடன் இருந்தபோது படி ஜீஜி கொடுங்கோல். ஆட்சி செய்தாள். மலை மலையாய்ச் சாப்பாத்தி மாவு பிசைந்தாள் ஜீஜி. கூடை கூடையாய் வெங்காயம் அரிந்து கிலோ கணக்கில் மாமிசம் சமைத்தாள். மாலை வேளையில் படி ஜீஜி கேஸர் கஸ்தூரி குடித்தபோது அப்பளம் சுட்டாள். பக்கோடா செய்தாள். குடல் பொரித்தாள். தாத்தா இறந்தார். பத்து நாட்களில் சமையலறையில் ஜீஜிக்குப் பதவிப் பிரமாணம் நடந்தது. குங்குமம், வெற்றிலை, மது, மாமிசம் இவற்றுடன் படி ஜீஜியின் மற்ற சாப்பாடும் பறிக்கப்பட்டது. நிதம் நிதம் மாமிசம் சமைக்கப்பட்டது. மரக்கறி உணவு உண்பவர்களுக்கு (படி ஜீஜி மாத்திரம்தான்) ஜனநாயக உணர்வுடன் உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது. படி ஜீஜி இரவெல்லாம் ஏப்பம் விட்டுக் கொண்டும் கக்கூஸில் 'உம் ஆ' என்று முனகியவாறும் தன் போர்க்களத் தோல்வியைக் கொண்டாடிக்கொண்டிருந்தாள். மீண்டும் தாக்கப்படும்முன் அவள் இரண்டாம் போர்முனை ஒன்றைத் துவக்கினாள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை படி ஜுஜிமேல் அம்பா வர ஆரம்பித்தாள்.

ஜீஜியும் பப்பாஜியும் அவரவர் பானங்கள், சுட்ட அப்பளங்கள் இவற்றுடன் அமரும் மாலை வேளைகளை அம்பா தேர்ந்தெடுத்தாள். முதலில் அறையிலிருந்து 'ஹே' என்று குரல் கொடுத்தாள் அடி வயிற்றிலிருந்து, பதறி ஓடி வந்ததும் "என்னை மறந்தாயா?" என்று சீறினாள். தாழ்ந்து வணங்கி "உத்தரவிடுங்கள் அம்பே" என்று ஜீஜி சொன்னதும்,"எனக்கான பானத்தைத் தா, கேஸர் கஸ்தூரி வேண்டும். ஒரு கிலோ பர்பி வேண்டும். வறுத்த இறைச்சி வேண்டும்... அ... ஆ..." என்று கட்டளையிட்டாள். எல்லாம் தரப்பட்டதும் அம்பா "போங்கள் எல்லோரும்" என்று உத்தரவிடுங்கள். படி ஜீஜியின் அறையில் ஆரவாரம் கேட்கும் சற்று நாழிகை.

மறுநாள் காலை மதுவால் கனத்த கண் இமைகளைக் கடப்பட்டுத் திறந்து சமையலறையில் ஒரு பொக்கைவாய்ப் புன்னகையுடன் காட்சியளிப்பாள்

படி ஜீஜி. “அம்பா கடப்படுத்திவிட்டாள்” என்பாள். படி ஜீஜியை வம்புக்கு இழுக்கலாம், அம்பாவைக் கேள்வி கேட்கும் தைரியம் ஜீஜிக்கு வரவில்லை.

“ஜிலேபி தா” என்றாள் படி ஜீஜி.

நாலு ஜிலேபிகளைத் தந்தாள் மீனாட்சி. வீட்டில் எல்லோருக்குமாக ஜிலேபி பிரிக்கப்படும்போது படி ஜீஜிக்கு அவள் பங்கு கிடைக்கும். இது ஆசையினால், ஆரம்பத்தில் இவற்றை அவள் எங்கேதான் வைக்கிறாள் என்று நினைத்தாள் மீனாட்சி. பிறகுதான் தெரிந்தது பல மடிப்புகள் தைத்த நாலு கஜப் பாவாடையினுள் அவள் இரு ஜேபிகள் தைத்திருந்தாள். அவற்றை மீனாட்சிக்குக் காட்டியிருக்கிறாள்.

தொப்பியால் சாய் கெட்டிலை மூடினாள்.

“மசாலா சாமான்களைத் தந்துவிட்டுப் போயேன்” என்றாள் படி ஜீஜி. “நெய்யும் வேணும், மட்டன் புலாவ் செய்ய,”

இது சமீபத்தில் எழுந்த ஒரு புதுக்களம். ஜீஜியின் ஆஸ்த்மாவும், ரத்த அழுத்தமும் அவள் நடமாட்டத்தைக் குறைத்துவிட்டன. அவள் படுக்கை அருகே உள்ள மர பீரோவில் லவங்கம், குங்குமப்பூ, லவங்கப்பட்டை, மிளகு, திராட்சை, பெரிய ஏலம், ஏலக்காய், சர்க்கரை, நெய், முந்திரி எல்லாம் இருக்கும். அவளைத் தாண்டாமல் பீரோவை எட்ட முடியாது. அதை அடையும்முன் ஒரு கேள்விப் பட்டியல் நீட்டப்படும். எதற்காக நெய்? நேற்றுத் தந்தது என்ன ஆயிற்று? சப்பாத்திக்குத் தடவினதில் மீதி அரைக் கிண்ணம் இருந்தால் இப்போதைக்குக் கால் கிண்ணம் போதுமே? மசாலா சாமான்களைக் காட்டிவிட்டு எடுத்துப்போ. காமீரத்திலிருந்து வரவழைத்த குங்குமப்பூ. அதைப் புலவில் கொட்ட வேண்டாம். மரக்கறி சாப்பிடுபவர்களுக்கு என்ன காய்கறி? நேற்று சமைத்தது ஏதும் மீறவில்லையா அவர்களுக்கு? சாப்பிட்டுச் சாப்பிட்டுக் கக்கூஸ் போனால் யாருக்கு என்ன பணன்?

ஒளியற்ற, ஜன்னல் குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து, கடலில் வசிக்கும் ஆக்டபஸ் ஐந்துவின் எண்கால்போல் ஆதிக்கக்கரங்கள் நீண்டு வளைத்துப்போட்டன. கால்கள் இறுக இறுகக் கட்டுண்டு கிடந்தனா் ஆனந்தமாக.

அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச் சுற்றினால் கொலுசு என்றும், தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர் பெண்கள். நாலாபுறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்துகொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திரும்பிப் போடும் முடிவுகளை எடுத்தனர். பேடி அதிகாரம்.

ஜன்னலைத் திறந்து மலையையும், பச்சையையும், ஆகாசத்தையும், நீலத்தையும் உள்ளே இழுத்ததும் பலம் உறிஞ்சப்பட்டாற்போல் இளைத்தனர். வீணா மோஸியைப்போல், கிஷனின் சித்தி, ஐம்பது வயது. பதினைந்து வயதில் விதவை. ஒரு கிராமத்தில் டீச்சராக இருந்தாள். பள்ளிச் சொந்தக்காரர் வீட்டுத் தோட்டத்து மூலையில் ஒரு அறையும் சமையலறையும் அசோகமரம் வாசலில், சமையலறை பின்னால் சம்பக் மரம்.. வெள்ளைப் பூக்களும் மஞ்சள் தண்டுமாய், ஜன்னலை ஒட்டிய பூங்கொடிகள் உள்ளே நுழைந்துவிடும் சுதந்திரமாய். பசித்தால் சமையல், மாலையில் பக்கத்திலுள்ள குழந்தைகள் வந்துவிடும். டீச்சரைப் பார்க்க இல்லாவிட்டால் அசோகமரத்துக் குயில் பாட்டு. ஆனால் வீணா மோஸி "நான் அதிகாரமற்றுப் போனேன்" என்பாள். 'டீச்சர், டீச்சர்' என்று சுற்றிக்கொள்ளும் குழந்தைகள். பள்ளியின் ஆரம்பக் கல்வியின் பூரணப் பொறுப்பு. நினைத்தால் வீசு நடை பஜார் வரை. நார்க்கட்டிலை அசோக மரத்தின் கீழே இழுத்துப்போட்டு கக்ஹு கக்ஹு என்று தாகம் தீரும்வரை குயில் தோழமை. காலையில் பின்கதவைத் திறந்ததும் தொடும் தூரத்தில் வெள்ளை மலர்கள், இருந்தும், வீணா மோஸிக்கு மூச்சு முட்டியது. வெட்ட வெளியில் எம்பியதும் மண்ணுக்காக வீறிட்டாள், யோனியும், கருப்பையும், மார்க்காம்புகளும் கல்லாகின. கனம், இழுப்பு, கீழ் நோக்கி விழுந்து விழுந்து, விழுந்து விழுந்து, மண்ணில் சரண், பாதங்களைப் புதைத்து அசைவற்று நிற்க.

ஏரியின் மூலையிலிருந்து வெள்ளை இறக்கைகள் நளினமாய்த் தாழ்ந்தும், உயர்ந்தும், சாய்ந்தும் நகர ஆரம்பித்தன. கண்ணில்பட்ட முதல் கணம் ஒரு சிறு வியப்பு மீனாட்சியினுள் சிதறியது. ஏரியின் முழு வீச்சிலும் சுழன்று நீரில் மிதக்கும் போது அந்தச் சிவப்பு அலகுகள் தூரத்தில் ஒளிர்ந்தன. பிறகு மீண்டும் எழும்பி வெள்ளை இறக்கைகளைச் சரேலெனப் பிரித்து இடமும்

வலமும் சாய்ந்தும் எழுந்தும்.... வெகு அருகே, முகத்தின் அருகே இறக்கை வீச்சு, பவழ அலகு தட்டையாய் நீண்டு, ரீயப் பறவைகள். ஆனா சாகர் ஏரியில் சில மாதங்கள் வரும் திடீர் விருந்தினராய்.

அதற்கு முந்தைய இரவுதான் ஏரிப் பயணம் தீர்மானிக்கப்பட்டது. எல்லா உறவினர்களுடனும் ஏரியைப் பார்க்கும் திட்டம். இருபது பேர்களுக்கு நூறு ஏரி, உருளைக்கிழங்கு ஸப்ஜி, தக்காளிச் சட்னி, ஸாண்ட்விச் நூறு, நொறுக்குத் தீனி, குழந்தைகளுக்கு நிரப்பப்பட்ட பால் புட்டிகள், ஃப்ளாஸ்க்கில் வெந்நீர். மாலையில் சூடாகப் பக்கோடா சாப்பிட ஒரு ஸ்டவ், ஒரு பாட்டிலில் எண்ணெய், கடலை மாவு, வெங்காயம், மிளகாய்ப் பொடி, உப்பு, பெரிய மிளகாய் பஜ்ஜி போட - இத்யாதி, விடிகாலை நான்கு மணிக்குச் சமையலறை விளக்கு எரிந்தது. ஒரு பெரிய தாம்பளத்தில் கோதுமை மாவைப் போட்டுப் பிசைய ஆரம்பத்தில் ஜீஜி. குஸுமா வாணலியில் எண்ணெயை விட்டு, பிசைந்த மாவை இட்டுப் பொரிக்கத் துவங்கினாள். பாபிஜி ரொட்டியில் வெண்ணெயும் சட்னியும் தடவ ஆரம்பித்தாள். ரொட்டிப் பொட்டலங்கள் அவளைச் சுற்றி, படி ஜீஜி நொறுக்குத் தீனிகளைப் ப்ளாஸ்டிக் பொட்டலங்களில் போட்டு ரப்பர் வளையத்தால் இறுக்கினாள். ஏரிப் பயணத்தின் இந்த அம்சத்தைப் பற்றி மீனா யோசித்திருக்கவில்லை.

“மீனா எழுந்துவிட்டாயா?” என்றாள் ராதா பாபிஜி. கூந்தல் வியர்வையில் ஒட்டிக்கொண்டிருந்தது. “சாய் போடுகிறாயா?”

மீனா இவர்கள் எல்லோருக்கும் சாய் போட ஆரம்பித்தாள். துளசி இலையைப் போட்டாள் வெந்நீரில், பல் தேய்த்துவிட்டு வந்த கிஷன் கோப்பைகளைத் தட்டில் வைத்தான்.

ராதா பாபிஜி தனக்குத் தானே பேசிக்கொண்டிருந்தாள். “குழந்தைகளைக் குளிப்பாட்ட வேண்டும். ப்ளாஸ்டிக் பையில் ரெண்டு, மூணு ஜட்டி அதிகப்படியாய் எடுத்துக்கொள்ள வேண்டும். ப்ரியா சில சமயம் சொல்லாமலே போய்விடுவாள். புல்லில் விரிக்க ஐந்தாறு கம்பளங்களாவது சுருட்டி வைக்க வேண்டும். எத்தனை கைக்குழந்தைக்கு மொத்தம்? நாலு, பால்டப்பா, க்ளாக்ஸோ மீனாவுக்கு. அர்ச்சனா குழந்தைக்கு லாக்டோஜன் மறக்காமல் பிஸ்கட் பொட்டலம். இதுக்கு உப்புதான்

பிடிக்கும். இல்லாவிட்டால் வழியில் வாங்க வேண்டும். அழுது தொலைக்கும் இல்லாவிட்டால் இவருக்குப் பிடிக்காது. சர்க்கரை, ஸ்பூன் மறக்காமல், பரிமாறக் கரண்டி, தட்டுகள், குஸுமா, அந்த சோப் பாட்டிலை எடுத்துக்கொள், தட்டுக்கழுவ, அங்கே குழாய் உண்டு. படிஜீஜி, வெங்காயம் ஒரு பத்து பதினைந்து அறிந்துவிடுங்கள். ப்ளாஸ்டிக் பொட்டலத்தில் போட்டுக்கொண்டு போனால் நிமிஷமாய் பக்கோடா, மீனா, ப்ளீஸ், குழந்தைகளைக் குளிப்பாட்டுகிறாயா?"

"பாபிஜி, ஆறு மணிதான் ஆகிறது. அழும் எழுப்பினால், கோபால் பாய் சாஹப் குளிப்பாட்டட்டுமே அப்புறமாய்",

ஆமாம், அவர் குளிப்பாட்டுவார், நினைத்துக்கொண்டு இரு."

மீனா சாய் கோப்பையை நீட்டினாள். பித்தளை டம்ளரில் படிஜீஜிக்கு விட்டுத் தந்தாள். ராதா பாபிஜி சலிப்புடன் பேசியது அவளுக்குப் புரிந்தது. ராதா பாபிஜி கணக்கில் புலி. அதில் மேல்படிப்பு மேற்கொள்ள வீட்டில் அனுமதிக்காததால் ஒரு வங்கியில் பெரிய பதவியில் இருந்தாள். வங்கியில் அவளுக்கு சகுந்தலாதேவி என்றே பெயர். சில மாதங்களுக்குமுன் அவளும் கோபால்பாய் ஸாஹிபும் கினையும் மீனாட்சியையும் ஜோத்பூருக்கு வந்து சில நாட்கள் தங்கும்படி அழைத்திருந்தனர். அங்குள்ள ஆஸ்பத்திரியில் கோபால்பாய் சாஹிப் டாக்டர். நல்ல வெய்யில் காலம், மத்தியானச் சாப்பாடு இன்னும் ஆகவில்லை.

"இந்த ஊர் வெய்யில் எரிந்துவிடும். ஒன்றும் செய்ய முடியாது. ராதா பாங்க் வேலைக்காக இரண்டு நாட்கள் போனாள். தவித்துவிட்டேன். சமையலறையில் நிற்க முடியவில்லை. இங்கே வேலைக்கு ஆளும் கிடைக்கமாட்டார்கள். ஒரு டீ போடக்கூட சமையலறையில் நிற்க முடியவில்லை என்றால் பார்த்துக்கொள் கிஷன்,"

கிஷன் மெள்ளச் சொன்னான்: "பாங்கில் பெரிய வேலை பார்க்கும் ராதா பாபிஜி இப்போது அதே சமையலறையில்தானே சமைத்துக்கொண்டிருக்கிறாள்?"

"ஆமாம் அதற்கென்ன? பெண்களுக்கு அதெல்லாம் சகஜம்தானே?"

கோபால்பாய் சாஹிப் விடுதலைக்கு வந்த வேளையில் சீக்கிரம் எழுந்து குழந்தைகளைக் குளிப்பாட்டுவார் என்று எதிர்பார்க்க முடியாதுதான்.

"ராதா பாபிஜி, எந்தப் புடவை கட்டிக்கொள்ளப்போகிறீர்கள்?" என்றாள் குஸுமா.

"அந்தச் சிவப்பு ஸில்க்தான். ராத்திரியே இஸ்திரி போட்டாகிவிட்டது. அவருடையது அப்புறம் குழந்தைகளுடைய சட்டைகளுக்கும் போட்டுவிட்டேன்".

"நான் அந்தக் கறுப்புப் பொட்டுப் போட்ட வெள்ளைப் புடவை கட்டலாம் என்று நினைத்தேன். ரவிக்கை இஸ்திரி போடவில்லை. மீனா, என் கறுப்பு ரவிக்கை தருகிறாயா?"

:எடுத்துக்கொள்ளேன். ஆனால் அது ஸ்லீவ்லெஸ்".

"அடடா! அப்படியானால் என் ரவிக்கையை இஸ்திரி போடுகிறாயா மீனா? நான் ஸ்லீவ்லெஸ் போடமுடியாது. ஏன் கை சுத்தமாயில்லை".

"தலைப்பால் போர்த்திக்கொண்டு விடு பேசாமல், நீளத் தலைப்பு உன் கைக்கு அடியில் யார் வந்து பார்க்கப்போகிறார்கள்?"

"இதோ பார் மீனா. தமாஷ்

பண்ணாதே, இஸ்திரி போடுகிறாயா?"

"சரி. சரி."

மெதுவாகச் சுவரைப் பிடித்து நடந்து வந்து ஜீஜி ஊறுகாய் பரணியைத் திறந்தாள்.

"என்ன செய்கிறீர்கள் ஜீஜி, போய்ப் படுங்கள் பேசாமல்" என்று அதட்டினாள் ராதா பாபிஜி.

"ஊறுகாய் பிடிக்குமே எல்லோருக்கும், எடுத்து வைக்கிறேன்".

"அங்கே சமையலறையில் என்ன சத்தம், தூங்கவிடாமல்?" என்று குரல் கேட்டது.

நச்சென்று மௌனம்.

ரகசியக் குரலில், மீனா, சாய் அடுப்பில் உருளைக்கிழங்கை வேகப்போடுகிறாயா?"

"ராதா பாபிஜி, தாளித்து ப்ரஷர் குக்கரில் போடலாமே? வேகவிட்டு உரிக்கவேண்டாம்" குஸுமா கிசுகிசுத்தாள்.

"நீ செய் அதை. மீதிப் பூரி படிஜீஜி பொரிக்கட்டும்".

எட்டு மணி அளவில் கழுத்து, அக்குள் எல்லாம் வியர்வை மழை. ரவிக்கை ஒட்டிக்கொண்டது. எண்ணெய்ப் புகை கண்ணில், முழுத்தூக்கம் இல்லாமல் கனம் ஏறிய இமைகள், பப்பாஜி சமையலறையில் எட்டிப் பார்த்தார்.

"ஏரிக்குப் போகலாம் என்றதுமே உற்சாகம் பொத்துக் கொண்டு விடுமே உங்களுக்கு?" என்றார்.

அஹ்ஹா என்று சிரித்தார்.

சிறு சிறு பறவைகள் கக்ளக் என்றபடி நீரில் மிதந்தன கறுப்பும் மஞ்சளுமாய். திடீரென்று வெள்ளை இறக்கை வீச்சு. பவழ நிழலுடன்.

கம்பளங்களில் சீட்டுக் குலுக்கல். சிலவற்றில் பெண்கள். "மம்மீஜி, டட்டி" என்று பின்பாகத்தைப் பிடித்துக்கொண்டு குழந்தை சொல்லும்வரை. பழைய பேப்பரைக் கையில் ஏந்தியபின், கக்கூஸ் பயணம். குழந்தை தலையில் ஒரு குட்டு. வலிக்க வலிக்க, அம்மாக்கள் ஒழித்த இடத்தில் கன்னிப் பெண்கள். இடையிடையே சீட்டை வைத்துவிட்டு எழுந்து தண்ணீர் உபசாரம்.

சாப்பிட்டு தட்டுகளை குஸுமாவும் ராதா பாபிஜியும் கழுவியாயிற்று.

ஸ்டவ் ஏற்றல், பக்கோடா போட ஆரம்பித்தனர்.

"அரே என்ன வாசனை? எனக்கு இரண்டு வெறும் மிளகாயுடன்"

இடையில் குழந்தைகளுடன் பேச்சு.

"ராஜு, நீ என்ன செய்வாய் பெரியவன் ஆனதும்?"

"பைலட், ஸுய்ங்கென்று".

"நீ, ப்ரியா?"

"நானு... நானு... நானு... வந்து... தப்பாத்தி தெய்வேன் எங்க வீட்டுலே".

"என்ன சமத்தாய்ப் பேசுகிறது?" ஜீஜி சிரித்தாள்.

"அஜ்மீரைச் சுற்றியுள்ள அத்தனை மலைகளிலும் நாள் ஏறியிருக்கிறேன்" என்றார் பப்பாஜி.

"ஜீஜி, நீங்கள்?" என்றாள் மீனாட்சி.

"அவர் மலை ஏறினபோதெல்லாம் எனக்கு வயிற்றில் குழந்தை" என்றாள் ஜீஜி. சிரித்தாள் வாய்விட்டு எல்லோரும் சிரித்தனர். ஜீஜி பதினாலு குழந்தைகள் பெற்றாள்.

எல்லாவற்றையும் வாரிக்கொண்டு, இன்னொரு முறை 'டட்டி' போகலாமா என்று யோசித்த குழந்தைகளின் மனதைத் திசை திருப்பிவிட்டு கிளம்பினர்.

குஸுமா பின் தங்கினாள். "மீனா, மெள்ள நடவேன். இன்னும் நான் பறவைகளைச் சரியாகப் பார்க்கவில்லை".

"ஸதீஷைக் கூப்பிடவா?"

"இல்லை, இல்லை, அவர் போகட்டும், கலாட்டா ஆகிவிடும் அவரைக் கூப்பிட்டால்."

மெதுவாக நடந்தார்கள்.

"பத்து நாள் தள்ளிப்போயிற்று, லேடி டாக்டரிடம் போகணும் என்று நினைப்பதற்குள் வந்துவிட்டது".

"தயாராய்த்தான் வந்தேன். இருந்தாலும் வெள்ளைப் புடவை கொஞ்சம் பின்னால் பார்".

"இல்லை, ஒன்றும் ஆகவில்லை."

"வேகமாக நடப்போமா? ஏரிபக்கம் உட்கார நேரம் இல்லை, ராத்தரி சமையலுக்குப் பூண்டு உரிக்க வேண்டும்."

"வா நீ பேசாமல்."

ஏரி அருகே குஸுமாவை உட்கார்த்தி மௌனித்தாள்.

ஜீஜியிடம் ஒரு முறை "உங்கள் மூன்றாம் பிள்ளைக்கு எப்படிப்பட்ட மருமகள் வேண்டும்?" என்றபோது சடாரென்று பதிலளித்தாள் ஜீஜி – படித்தவள். வெளுப்பானவள், பேசாதவள் என்று "சரியாகச் சொன்னாய்" என்றார் பப்பாஜி. அப்படி ஒரு பெண் இருப்பாள் என்று மீனாட்சி நம்ப மறுத்தாள். ஜீஜியின் பதில் அன்று மத்தியானம் நடந்திருந்த சம்பவத்தின் நீட்சி என்று நினைத்தாள். தியானம் பப்பாஜியின் நண்பர் வந்திருந்தார். சரும நோய் நிபுணர், அப்போது மீனாட்சிக்குக் கையில் சில வெள்ளைத் திட்டுக்கள் வந்திருந்தன. கொஞ்சம் அரிப்புடன். சரும நோய் நிபுணரிடம் பப்பாஜி அறிமுகப்படுத்தினார்: இவள் கிஷனின் மனைவி. ஓயாமல் ஊர் சுற்றுகிறாள். சுதா கையில் புத்தகம். வாயாடி, இவள் கையைப் பாருங்கள்.

நிபுணர் உபதேசம் : நீ வீட்டில் இரு. மற்ற பெண்கள் மாதிரி, எல்லாம் சரியாகிவிடும். அவரவர் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட மாதிரி இருந்துவிட்டால் ஏது நோய்?

"ஆஹா" என்றார் பப்பாஜி.

ஜீஜி கூறியது அதை ஒட்டிய □ாஸ்யம் என்று நினைத்தாள். ஆனால் ஜீஜியின் விளக்கத்துக்கு உரை போட்டாற்போல் கிடைத்தாள் குஸுமா.

அரசியலில் எம்.ஏ. ஃப்ரெஞ்சில் டிப்ளோமா, எதற்காக ஃப்ரெஞ்ச் படித்தாள் என்று தெரியவில்லை. திருமணத்திற்காகக் காத்திருக்கும் போது ஏதாவது மொழியில் டிப்ளோமோ வாங்குவது காத்திருத்தலின் ஒரு அம்சம் என்று தெரிந்தது. வெளியூரில் வேலை செய்யும் மாப்பிள்ளையானால் வெளிநாட்டு மொழி உபயோகமாக இருக்குமாம். பூ வேலை செய்த குஷன்கள், தலையணை உறைகள், கை வேலைப் பொருட்கள், பூ வேலையும் லேஸ் வேலையும் செய்த புடவைகள் எல்லாம் செய்திருந்தாள் குஸுமா அந்தச் சமயத்தில், பூ

அலங்கார வகுப்புகள், பேக்கரி வகுப்புகள், தையல் வகுப்புகள், ஜாம், ஜீஸ், ஊறுகாய் வகுப்புகள் எதையும் அவள் விட்டுவைக்கவில்லை. எல்லா வித்தைகளையும் கற்றிருந்தாள். பூரணமான மருமகள்.

வெகு தூரத்திற்குப் போய் விட்டிருந்த வெள்ளைக் கூட்டம் நினைத்துக்கொண்டாற்போல் உயிரே எழும்பி வட்டம் சுற்றி இடப்பக்கம் வந்தது. மிதமான வேகத்தில் மிதந்தாற்போல் வந்து சுழன்றது .

குஸுமா அழ ஆரம்பித்தாள்.

“அந்த அலகு… என்ன சிவப்பு,..” ஏ்ன்று விசித்தாள்.

மெல்லச் சிவந்தத் தொடங்கய மாலையில் பவழம் மிதந்தது இறக்கைகளுடன்.

உரிக்காத பூண்டு… இறக்கைகள் திறந்தன மறுவட்டம் அடிக்க.

உருவாகாத கரு… ஒயிலாக நீரின்மேல் ஒன்று ,இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று சறுக்கி இறங்கி மிதந்தன.

விசும்பல் ஒலி.

மேலும் முழு கதைகளையும் படிக்க பார்வை நூல் - வீட்டின் மூலையில் ஒரு சமையலறை (சிறுகதைத் தொகுப்பு) – க்ரியா பதிப்பகம், அம்பை சிறுகதைகள் 1972 -2000) – காலச்சுவடு பதிப்பகம்.

### 12.10. கதைச் சுருக்கம்

உயிர் வாழ உணவு தேவைதான். அந்த உணவைத் தயாரிக்க ஒரு சமையலறையும் தேவைதான். ஆனால் அந்தத் தேவையே பெண்களை முடக்கும் இடமாக அமைகிறது.

ஒளியற்ற, ஜன்னல் அற்ற குறுகிய அந்தச் சமையலறையிலிருந்து கடலில் வசிக்கும் ஆக்டபஸ் ஜந்துவின் எண்கால் போல், ஆதிக்கக் கரங்கள் நீண்டு வளைத்துப் போட்டன. கால்கள் இறுக்க இறுக்க கட்டுண்டு கிடந்தனர். அவை இடுப்பை இறுக்கினால் ஒட்டியாணம் என்றும், காலைச் சுற்றினால்

கொலுசு என்றும், தலையில் பட்டால் கிரீடம் என்றும் நினைத்துக் கொண்டனர். பெண்கள் நாலா புறமும் கம்பிகள் எழும்பிய உலகில் புகுந்துகொண்டு அதை ராஜ்யம் என்று நினைத்து அரசோச்சினர். இன்று மட்டன் புலவு, நாளை பூரி மசாலா என்று பூமியைத் திருப்பிப் போடும் முடிவுகள் எடுத்தனர்.

திருமணமான புதிதில் முப்பது பேர் வீட்டில் 5 கிலோ ஆட்டா மாவு பிசைவதாகக் கூறுகிறாள். 300 சப்பத்தி சுடுவதாகக் கூறுகியாள் ஜீஜி. முதல் தடவை இரண்டு உள்ளங்கையும் இரத்தம் கட்டி நீலமாய் இருந்தது. அவளைப் பார்த்து பப்பாஜி, 'நல்ல உழைப்பாளி தான் நீ ' என்று கூறுகிறாள்.

சமையலறையில் உள்ள சிந்தனைகளே பெண்ணின் மனதை முழுவதும் நிறைந்திருக்கிறது. அந்தப் பெண்களால் உலக அறிவும், விழிப்புணர்வும் பெற இயலாமல் போய் விட்டதை பதிவுசெய்கிறார் ஆசிரியர்.

நான்கு நாட்களுக்கு ஒருமுறை ஸ்டவ் திரியை இழுத்து விட வேண்டும். மண்ணெண்ணெய் கிடைக்கும் போது வாங்க வேண்டும். மழைக் காலத்தில் கவலை, அரிசி பருப்பில் பூச்சி, மாங்காய்க் காலத்தில் ஊறுகாய், வெயில் காலத்தில் அப்பளம், பழங்கள் வரும் காலத்தில் சர்பத், ஜாம். சமையலறை முற்றத்திற்கு சுண்ணாம்பு, மாதவிடாய் தள்ளிப் போகாவிட்டால் கவலை என்று பெண்களின் மனம் முழுவதும் சமயலறையை நோக்கியே என்று ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

பப்பாஜி குடும்பத் தலைவர், ஆணாதிக்கம் நிறைந்தவர், ராதா பாபிஜி, குஷீமா இருவரும் படித்த மருமகள்கள், திருமணம் ஆனதால் வேலையை விட்டுவிட்டு வீட்டில் உள்ளனர். மீனாட்சி புதுமை சிந்தனைகள் படைத்த மூன்றாவது மருமகள். கிஷனின் மனைவி. ஜீஜியிடம் தான வீட்டின் சமயலறை அதிகாரம் இருந்தது. படிஜீஜி பப்பாஜியின் இளைய தாயார். அவளின் கணவர் இறந்ததும் சமையலறை பொறுப்பு கைமாறியது.

சமையலறையை மட்டுமே உலகமாகவும் பெரியதாகவும் எண்ணும் மாமியாருக்கு புதுமைப் பெண்ணான மீனா அறிவுறுத்தியது ஆசிரியரின் பெண்ணியத்தை வெள்ப்படுத்துகிறது.

நகைகளால் அலங்காரம் செய்து மிடுக்கான் பட்டுபுடவை அணிந்து, சமையலறைச் சாவியை இடுப்பில் சொருகுவதுதான் பெண்மையின் அதிகாரம், அதுதான் மதிப்பு என்று எண்ணி அதிகாரம் நெய்த மாமியார் படுக்கையில் கிடந்தும் உயிர்போகும் நேரத்திலும் அவற்றோடு மகிழ்கிறாள். மீனாவின் பாத்திரம் அதை உடைப்பதாக அமைகிறது. ஒரு வேளை இந்தச் சமையலறை இல்லாமல் இருந்தால் 'புதுக்கண்டங்களைக் கண்டு பிடித்திருக்கலாம், காவியம் எழுதியிருக்கலாம், புகைக்குள் ஓவியம் தீட்டியிருக்கலாம்' என்று பெண்ணின் உழைப்பும் குறுகிய வட்டமே உலகம் என்று எண்ணச் செய்துவிட்டதே என்று கூறுகியாள் மீனா.

## 12.11. கதைக்கரு

இன்றைய சமூக அமைப்பில் பெண்களை அடிமைப்படுத்துவதற்கு முதன்மையாகப் பயன்படுவது குடும்பம் என்ற அமைப்பு. காலம் காலமாகக் குடும்பச் சூழலில் சிக்கி வீட்டு வேலைகளில் உழன்று கொண்டிருக்கும் ஒவ்வொரு பெண்ணும், அதிலிருந்து விடுபட முடியாதபடி பொருளாதார உரிமையின்மை, சமூக ஒழுக்கம் என்று பெண்கள் தன்னெழுச்சி பெறுவதை அனுமதிக்காத சாதிய குடும்ப அமைப்பு காரணமாக பெண்ணின் சுய அறிவும், இயல்பும், ஆளுமை பெறாத வண்ணம் அமைகின்றன. பிள்ளை பெறுதல், ஆக்கிப்போடல் என்பதே பெண்களின் வாழ்வியல் கடமை என்று சமூகத்தால் விதிக்கப்பட்டுவிட்டது. இதில் ஆக்கிப்போடுதல் என்பது சமயலறையை பெண்களின் இருப்பிடமாகக் கருதுகின்றனர்.

இக்கதையில், கூட்டுக்குடும்ப வாழ்வில் பெண்கள் சமையலறையில் முடங்கிக் கிடக்கும் நிலையையும், பெண்கள் சமையலறையில் ஆதிக்கம் செலுத்துவதையே பெருமையாகக் கருதுகின்றனர். கூட்டுக் குடும்பத்தில் பெண்களின் அதிகாரம் சமையலறையில் நிலவுவதாக கருதும் பெண்களின் அறியாமை நிலை, தலைமுறை தலைமுறையாக அடிமைப்படுத்தப்படும் பெண்கள் நிலையைப் பதிவுசெயவதாக இச்சிறுகதை அமைகிறது.

**மேலும் பயில்வதற்கான நூல்கள்**

1. சிறுகதை நூல்கள், தமிழ் மின் நூல்கள், தமிழகம் மின் வெளியீடுகள்.

# கூறு – 13

## காந்தியோடு பேசுவேன்

எஸ். இராமகிருஷ்ணன்

13.1. எஸ். ராமகிருஷ்ணன்

13.2. தலைப்புப்பொருத்தம்

13.3. கதை மாந்தர்கள்

13.4. கதைச்சுருக்கம்

13.5. கதைக்கரு

13.6. நனவோடை உத்தி

13.7. வினா விடை உத்தி

13.8. ஆங்கிலச் சொற்பயன்பாடு

13.9. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## காந்தியோடு பேசுவேன்

**எஸ். இராமகிருஷ்ணன்**

### 13.1. எஸ். ராமகிருஷ்ணன்

13.04.1966 ஆம் ஆண்டு விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு என்ற ஊரில் பிறந்தவர். தற்கால தமிழ் எழுத்தாளர் புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், குழந்தைகளுக்கான ஆக்கங்கள், திரைகதை, திரைப்பட உரையாடல்கள் உள்ளிட்ட பல்வேறு படைப்புச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருபவர். 1984 ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கிய இவரது எழுத்துக்கள் 50 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் நல்லவடிவம் பெற்றுள்ளன. இவரது சிறுகதைகள் ஆங்கிலம்,பிரெஞ்சு, கன்னடம், மலையாளம்,வங்காளம், இந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ்ச் சமூகம் இவருக்கு

பல்வேறு விருதுகளை அளித்து கௌரவித்திருக்கிறது கரிசல் மண்ணில் நாதஸ்வர கலையின் சிறப்புகள், நாதஸ்வர கலைஞர்களின் சாதியச் சூழல் ஆகியவற்றைப் பற்றி எழுதியுள்ள சஞ்சாரம் என்ற நாவலுக்கு 2018 ம் ஆண்டுக்கான சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.

## 13.2. தலைப்புப்பொருத்தம்

காந்தியோடு பேசுவேன் என்ற சிறுகதையின் தலைப்புப் பொருத்தமானது. கதை மாந்தர்கள் காந்தி பற்றிய பல்வேறு புரிதல்களோடும், அவரது கொள்கையில் அதீத பற்று மிக்கவராகவும் திகழக்கூடிய ஒரு பெண்மணியின் செயல்பாடுகளைக் கண்டு அவரது மகன் காந்தியோடு பேச முற்படுவதை இக்கதையின் தலைப்புப் பொருத்தமாகும்.

## 13.3. கதை மாந்தர்கள்

லட்சுமணன், ராகேல், நீலம்மை, சீனுவாசன், ஜெபமேரி, தாவீது, மனோகர் ஜி திவான், சியாம்லால், மகாதேவ் தேசாய், மீராபென் ஆகியோர் ஆவார்கள்.

## 13.4. கதைச்சுருக்கம்

காந்தியோடு பேசுவேன் சிறுகதையானது சிறுகதையில் இடம்பெற்றுள்ள லட்சுமணன் என்ற கதாப்பாத்திரம் கதையைக் கூறிச் செல்வது போன்று அமைந்துள்ளது. லட்சுமணனின் தாய் மிகுந்த காந்தியப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். சாதாரண குடும்ப பெண்ணான தன் அம்மா தன் தந்தையை எதிர்த்து வார்தாவில் உள்ள காந்தி ஆசிரமத்திற்கு இரண்டரை மாதம் தங்கியிருந்தார். அங்கு தொழுநோயாளிகளுக்குத் தொண்டு செய்வது பல சமூகத் தொண்டு முதலியவற்றை மேற்கொண்டு வந்தாள். அதனை அறிந்த லட்சுமணனின் அப்பா அவளை வீட்டிற்கு அழைத்து வந்து அவளது கையை முறித்துவிட்டார். தன் கணவரின் காம இச்சைக்கு மட்டுமே தான் பயன்படுவதாகவும், தன்னுடைய உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் எந்த ஒரு மதிப்பும் இல்லை என்பதை உணர்ந்து துன்பத்திற்கு ஆளாகிறாள். தன் கணவரின் இறப்பிற்குப் பிறகு லண்டனில் வசிக்கும் தன் மகனைக் காண்பதற்குத் தனியாகவே செல்கிறாள். அங்கு காந்திஜி பயின்ற சட்டகல்லூரி, உணவு

விடுதி, நூல் நிலையம் போன்றவற்றை தானே தேடிச் சென்று அறியும் ஆவல் மிக்கவளாக இருப்பதை உணர்ந்த இலட்சுமணன் தன் தாயிடமிருக்கக் கூடிய காந்திஜியின் பற்றினை அறிய ஆவல்மிக்கவனாகத் தானும் தன் தாயுடன் காந்திஜி பற்றிய நூலகத்தில் புத்தகங்களை வாசிக்க முயல்கின்றான் தன் மகனின் இத்தகைய மாற்றத்தைக் கண்டு தாய் மனமகிழ்ச்சி கொள்கிறாள். மேலும் இலட்சுமணனின் மனைவி ராகேல் காந்திபற்றிய தெளிந்த சிந்தனை மிக்கவளாக இருந்தாள். தன் தாயின் மறைவிற்குப் பின்பு லட்சுமணன், ராகேல் வார்தா ஆசிரமத்திற்குச் சென்று காந்தியின் சிறப்பினை அறிய முற்படுகின்றனர்.

## 13.5. கதைக்கரு

ஏதேனும் ஒரு பொருள் மட்டுமே சிறுகதையில் இடம் பெற வேண்டும். ஒரு நிகழ்ச்சி, ஓர் உணர்வு மட்டுமே இடம்பெற வேண்டும் என்று கூறுவர் அதனை மையமாகக் கொண்டு காந்தியோடு பேசுவேன் என்ற சிறுகதையில் இடம்பெற்றுள்ள ஒரு பெண் தன்னுடைய காந்திப் பற்றிய தேடலுக்கு வடிகாலாக அமைந்த வார்தா காந்திஜி ஆசிரமத்தில் தங்கி பல்வேறு சமூகத் தொண்டுகள், அறங்கள் மேற்கொண்டு வந்தார் அதோடுமட்டுமின்றி தன்னுடைய மகனுக்கும் காந்திப் பற்றி அறிய வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் விதமாக திகழ்வதை மையமாகக் கொண்டு இக்கதைக் கரு அமைந்துள்ளது.

.ஒருவன் தன் வாழ்நாளில் கடந்து வந்த பாதையைப் பின்னோக்கி நகர்த்திப் பார்ப்பது நனவோடை ஆகும். லட்சுமணன் தன் தந்தை இறப்பிற்குப் பிறகு தயாரின் மாறுதல்களை நினைவு கூர்ந்து பார்ப்பதை, அப்பா இறந்துபோன கடந்த பத்து வருஷங்களாக அம்மா நாள் முழுவதும் படித்துக் கொண்டேயிருக்கிறாள், தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் மாறி மாறி படிக்கிறாள்,............ அவள் தன்னைச் சுற்றித் தானே ஒரு அரூபவலையை பின்னிக் கொண்டுவிட்டாள்.இவ்வரிகள் மூலமாக நனவோடை உத்தியை ஆசிரியர் பின்பற்றி இருப்பதை அறிய முடிகிறது.

## 13.7. வினா விடை உத்தி

ஒருவர் கேட்கும் கேள்விக்கு மற்றொருவர் விடை அளிப்பது வினா விடை உத்தியாகும். இதனை,

> **அன்றிரவு படுக்கையில் ராகேலிடம் கேட்டேன்**
>
> **உனக்கு காந்தியை பிடிக்குமா.**
>
> **இந்தியர்கள் காரணம் இல்லாமலே வெறுக்கிறீர்கள்,**
>
> **அது ஒரு சிண்ட்ரோம், காந்தியை பல நேரங்களில்**
>
> **ஒரு டஸ்ட்பின் போல உபயோகிக்கிறீர்கள், அது**
>
> **எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது என்றாள்.**

என்னும் இவ்வரிகள் காந்திஜி பற்றி புரிதல்களை அறிந்து கொள்ளும் விதமாக அமைகின்றது.

## 13.8. ஆங்கிலச் சொற்பயன்பாடு

படைப்பாளி தன்னுடைய சிறுகதையின் தேவைக்கு ஏற்ப ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். அதனை,□ இஸ் இம்பாசிபிள், எப்படி சொல்வது என்று தெரியவில்லை, □ இஸ் ப்யூர், □ டச் அவர் □ாட் என்ற இவர்கள் வாயிலாக ஆங்கிலச் சொல் பயன்பாட்டை அறிய முடிகின்றது.

## 13.9. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. எஸ். இராமகிருஷ்ணன்-தேசாந்திரி-விகடன் பிரசுரம்.

## கூறு – 14 : புதினம்

### அளம் : சு. தமிழ்ச்செல்வி

14.1. சு. தமிழ்ச்செல்வி

14.2. கதைக்கரு

14.3. அளம் - கதைக்களம்

14.4. கதை சுருக்கம்

14.5. தலைப்புப் பொருத்தம்

14.6. கதாப்பாத்திரங்கள்

14.6.1. முதன்மை கதாப்பாத்திரங்கள்

14.6.2. துணைமை கதாப்பாத்திரங்கள்

14.7. சமுதாயச் சிந்தனைகள்

14.8. புராணச் செய்திகள்

14.10. தொகுத்துக்காண்போம்

14.11. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்

14.11. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

14.12. மேலும் பயில்வதற்கான நூல்கள்

**அளம் - -சு. தமிழ்ச்செல்வி**

## 14.3. சு. தமிழ்ச்செல்வி

திருத்துறைப்பூண்டியில் பிறந்து ஆசிரியராக பணியாற்றிவரும் தமிழகத்தில் சிறந்த எழுத்தாளர் வரிசையில் இடம்பெற்றிருப்பவர். திருவாரூர் மாவட்டம் கற்பக நாதர் குளத்தில் 4.05.1971 ஆம் ஆண்டு பிறந்தவர். எழுதுவதற்கு சாதகமான காரணிகள் இல்லாத குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர். வாசிப்பு வேட்கையின் மூலம் இலக்கியத்தின் மேல் ஈடுபாட்டினை ஏற்படுத்திக் கொண்டவர். முதலில் தனது கவிதைகளில் இருந்து எழுத்துப் பயணத்தைத் தொடங்கியவர் பின் சிறுகதைகளை எழுதி அதுவே நாவலுக்கான பாதையாகவும் மாறிப் போனது. மனித வாழ்விலுள்ள பல சிக்கல்களை வெளிப்படுத்தும் படைப்புகளாக இவரது நாவல்கள் அமைந்திருக்கின்றன.

சு. தமிழ்ச்செல்வியின் அனைத்து நாவல்களில் பொதுமைப் பண்பாக அமைந்திருப்பது திருமணமான பெண்களின் துயரங்களே. பெற்றோர் செய்து

வைக்கும் திருமணமானாலும் சரி, தானே தேர்ந்தெடுத்துக் கொண்ட வாழ்க்கையானாலும் சரி பலபாடுகளை எதிர்கொள்ள வேண்டிருக்கிறது. குடிப்பழக்கம்; சீட்டாடுதல் ; பிற பெண்களோடு தொடர்பு மனைவியை விடுத்து வேறு திருமணம் செய்து கொள்ளுதல்; சொல்லிக் கொள்ளாமல் ஊரை விட்டு ஓடிவிடுதல்; குடும்பத்தைப் பற்றிய எண்ணமின்றி அலட்சியப்படுத்துதல்; வேலை செய்யாமலிருந்து கொண்டு உண்ணுதல்; தான் தவறுசெய்து கொண்டே தன் மனைவி மீது சந்தேகப்படல் போன்ற கணவனின் செயல்களையும் மாமியார், நாத்தி, மாமனார் செய்யும் இடர்ப்பாடுகளையும் அனுபவித்துப் பல நிலைகளில் குடும்பத்தைத் தாங்கிப்பிடிக்கும் சூழல் பெண்ணின் கடமையாக்கப்பட்டுள்ளது.

## 14.4. கதைக்கரு

கடலோரத்தில் வாழும் மக்களின் வாழ்வினை எடுத்துரைக்கிறது. குறிப்பாகப் பெண்களின் பிரச்சனைகளையும் கூறும் வகையில் இக்கதைக் கரு அமைகிறது.

## 14.5 அளம் - கதைக்களம்

தமிழ் நாவல்களிலே அதிகம் பதிவு செய்யப்படாத “பெண் உழைப்பை” அழுத்தமாக விவரித்திருக்கும் நாவல். ஏறத்தாழ முப்பது வருடத்தைக் கதைக்களத்திற்குள் உள்ளடக்கியிருக்கிறது.

கிராமப்பொருளாதாரத்திலும், ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்திலும் பெண்களின் உழைப்பு மிக முக்கியமானது. பெரும்பாலான குடும்பங்கள் பெண்களின் உழைப்பின் காரணமாகக் கிடைக்கும் வருவாயைக் கொண்டே தங்கள் வாழ்வியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். நகரம் சார்ந்த நடுத்தர வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்து வரும் பலருக்குப் பெண்களின் உழைப்பு என்பது அதிகம் அறிந்திடாத ஒன்றாகும். கிராமப்புறங்களில் இருப்போருக்கு இதை நேரில் கண்டுணர வாய்ப்பு கிடைத்திருக்கும்.

அளம் என்று குறிப்பிடப்படுவது உப்பளங்களே, தமிழன் பண்பாட்டில் உப்பு மிக முக்கியமானதொரு இடத்தைப் பிடித்திருந்தது.

## 14.6. கதை சுருக்கம்

சுப்பையன் வேலை வெட்டி இல்லாமல் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான். மூன்று பெண் பிள்ளைகள் இருந்தும் அவன் சரியாக வேலைக்குப் போவது இல்லை. ஒரு பெண்பிள்ளை பிறந்து 40 நாட்களே ஆகின்றன. தினமும் சுப்பையனுக்கும், சுந்தராம்பாளுக்கும் சண்டை மட்டுமே தான்.

அன்றும் சண்டை போட்டுக் கொண்டு காலையில் குடிக்கக் கொடுத்த பழைய சோற்றை தூக்கி எறிந்து விட்டு போயவிட்டான். கப்பல் காரராமய்யா கப்பலில் சிங்கப்பூர் சென்று அந்த ஊரில் பல குடும்பங்களை வாழவைத்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் ராமய்யா ஊருக்கு வந்து போகும் போது 4 விசாக்களுடன் வருவார். அந்த ஊரில் கஷ்டப்படும் குடும்பத்தின் தலைவனைச் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று வேலைக்கு அமர்த்துவர்.

இந்த முறை அவர் வந்த போது சுந்தராம்பாள் கஷ்டப்படுவதைப் பார்த்து சுப்பையனை அழைத்துச் செல்ல சுந்தராம்பாளிடம் கேட்டுவரச் சொன்னார். சுப்பையன் போவது சரியாகப் பட்டாலும் சுந்தராம்பாளால் சுப்பையனைப் பிரிந்து வாழ வேண்டுமே என்று எண்ணி கவலையுற்றார். இருப்பினும் சுப்பையனின் ஆசை அதுவாகவே இருந்தது. சுப்பையன் ராமய்யாவுடன் சிங்கப்பூர் செல்வதை எண்ணி மகிழ்ந்தார். தினமும் தனது மூத்த மகளைத் திட்டி வந்த சுப்பையன் அனறு வடிவம்பாளுடன் மகிழ்ச்சியாகப் பேசினார். வடிவம்பாள் கருப்பாக இருப்பதையே சொல்லிச் சொல்லித் திட்டி வந்தவர் திடிரென்று மகிழ்ச்சியாகப் பேசுவதை எண்ணி வடிவு மகிழ்ந்தாள். ஊருக்குப் போய் தனக்கும் தனது தங்கைகளான ராசாம்பாள் மற்றும் ஐஞ்சாம்பாளுக்கும் வேண்டிய துணிகளை வாங்கி வருவார் என்று வடிவு மகிழ்ச்சியில் இருந்தாள்.

சுப்பையன் நான்கு வருடத்தில் திரும்பி வருவதாகச் சொல்லி விட்டு சென்றான். 8 வருடங்கள் ஆகின சுப்பையன் வரவில்லை. இடையில் ராமய்யன் வந்தார். சுந்தராம்பாள் தனது பிள்ளைகளுடன் அவரைப் பார்க்கச் சென்றாள். சுப்பையன் வராததைப் பற்றிக் கேட்டாள். சுப்பையனை ஒரு தோட்ட வேலைக்கு அமர்த்தினார். மூன்று மாதம் கழித்து சுப்பையனைப் பார்க்க அவன் வேலைச் செய்யும் இடத்திற்குப் போனார் ராமய்யா. அங்கு சுப்பையனைக் காணவில்லை அதிர்ந்து போனார் ராமய்யா அனைத்து இடங்களிலும் தேடினார். சுப்பையனைக்

கண்டுபிடிக்க முடியவில்லை. அதனாலே போன வருடம் வரவேண்டியதைத் தள்ளிவைத்து இந்த வருடம் வந்தேன். அடுத்த முறை வரும் போது நிச்சயம் சுப்பையனோடு தான் வருவேன் என வேதனையோடு கூறினார். அதைக் கேட்ட சுந்தராம்பாளும் மகள்களும் அதிர்ந்து போயினர். அடுத்த முறை ராமய்யன் வந்தார். உனது குடும்பத்தைக் கெடுத்து விட்டேன் எனச் சொல்லி வருந்தினார். அதை கேட்டுவிட்டு சென்று விட்டாள் சுந்தராம்பாள்.

தனது குலதெய்வமான நொடிவீரன் கோவிலுக்கு சென்று குறிகேட்டாள் 6 மாதத்தில் உன் புருஷன் வருவான் இல்லை என்றாள் வரமாட்டான் என்று கூறியது சாமி. 1 வருடம் ஆகியும் சுப்பையன் வரவில்லை. கிடைக்கும் வேலைகளைச் செய்து பிள்ளைகளைக் காப்பாற்றி வந்தாள்.

வடிவம்பாளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்தாள் சுந்தராம்பாள். யாரும் பெண் கேட்டு வரவேயில்லை. வடிவம்பாளின் பெரியப்பா கணேஷனும் பல முயற்சிகள் செய்து பார்த்தார். பெண் கருப்பாக இருப்பதால் யாரும் மாப்பிள்ளை தரவில்லை. ஒரு முறை வடிவிற்கு காலரா தொற்றிக் கொண்டது வடிவின் உயிரைக் காப்பாற்ற கணேஷன் பலபாடுபட்டார். பல இன்னல்களுக்கு நடுவில் வடிவின் உயிரைக் காப்பாற்றினார்.

வடிவும் சுந்தராம்பாளும் கோயிலுக்கு சென்று வடிவின் திருமணத்தைப் பற்றி விசாரித்தனர். வடிவிற்கு நாக தோஷம் இருப்பதால் சில பரிகாரங்கள செய்ய வேண்டியிருந்தது. அதனால் இருவரும் கோயிலுக்குச் சென்று பரிகாரங்களை முடித்தனர்.

சுந்தராம்பாள் தன்னிடமுள்ள பணத்தை வைத்து தனது நிலத்தில் நெல் பயரிட்டாள். வடிவு தன் அம்மாவிற்கு உதவியாக இருந்தாள். தீடிரென மழை பெய்யத் துவங்கியது. கடலோரத்தில் இவ்வூர் இருப்பதால் புயல் வரும்போல் காட்சியளித்தது. அந்த ஊர் மக்கள் பயிரிட்ட அனைத்தும் வீணானது வீட்டை விட்டு வெளியேற முடியாத நிலையில் இருந்தனர். இரவு தங்க இடமில்லாமல் தவித்தனர். கணேஷன் தன் குடும்பத்துடன் வந்து வேறு ஏதாவது இடத்திற்குச் செல்லலாம் என்று கூறி சுந்தராம்பாளையும் அவள் மகள்களையும்

அழைத்துச் சென்றார். இரவில் செல்ல வழி தெரியவில்லை. காற்று பலமாக வீசியது. அனைத்து இடங்களிலும் வெள்ளம் போனது.

ஒவ்வொரு வரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு சென்றனர். தூரத்தில் ராமய்யன் வீட்டில் வெளிச்சம் தெரிந்தது, ராமைய்யன் வீடு மட்டுமே காற்றுக்கு இரையாகாமல் இருந்தது. ஊரில் அனைவரும் அங்கேயே தங்கினர். காலை விடிந்ததும் அனைவரும் அவரவர் வீட்டிற்குச் சென்றனர். ஊரே வெள்ளமாகக் காட்சியளித்தது. வீடுகளும், மரங்களும் காற்றினால் சாய்ந்து கிடந்தன. அவரவர் வீட்டைச் சரி செய்தனர்.

முருகைய்யன் தனது கூரைகளைப் போட கணேஷனை அழைத்தார். உடன் இருவரும் வந்தனர். முருகைய்யன் அருணாச்சலத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்.அரசால் கொடுக்கப்படும் பொருட்களை அருணாச்சலம் இவர்களுக்குக் கொடுக்காமல் அவர் சொந்தங்களுக்குக் கொடுத்து விடுவார்.

கப்பலில் வணிகம் செய்ய வரும் வியாபாரிகளைத் தன் இடத்திற்கு அழைத்து பொருட்களை வாங்குவது போல் பேசி அவர்களைக் கொன்று அங்கேயே புதைத்து விடுவார். அந்தப் பொருட்களைத் தனது என்று எடுத்துக்கொள்வார். இதன் மூலம் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தார்.

ஒரு முறை முருகைய்யன் விற்பனை முடித்து திரும்ப வந்த பொழுது எதிரில் வந்த அருணாச்சலம் முருகையய்யனின் வண்டியையும், மாடுகளையும் பிடிங்கிக் கொண்டார். முருகய்யன் உயிர்தப்பினால் போதும் என்று எதுவும் செய்ய முடியாமல் வந்துவிட்டார். ஊர் மக்கள் அனைவரையும் திரட்டி அருணாச்சலத்திடம் கேள்வி கேட்க முடிவு செய்தார்கள். அருணாச்சலத்திடம் அரசால் கொடுக்கப்படும் நிதி உதவியும், பொருட்களும் எங்கள் ஊருக்கு வந்து சேர வேண்டும் என்று கூறினார். ஊரே திரண்டு வந்ததைப் பார்த்து அதிர்ந்து போன அருணாச்சலம் அவர்கள் கோரிக்கையை ஒப்புக் கொண்டார்.

கணேசன் திருத்துறைபூண்டிக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு சென்றார். ஒரு வாரம் கழித்து வந்து அனைவரையும் அங்கு செல்லலாம் என்று கூறினார். ஆனால் சுந்தராம்பாள் ஒப்புக்கொள்ளவில்லை. வடிவுக்கு அங்கு போய் வேலைப் பாக்கலாம் என்று தோன்றியது. ஆனால் சுந்தராம்பாள் மறுத்துவிட்டார்.

கணேசனும் அவர் குடும்பமும் சென்று விட்டன. அதனை நினைத்து வடிவு தினமும் அழுவாள். யாருக்கும் தெரியாமல் நண்பன் பூச்சியுடன் வேலைக்குச் சென்றாள். புயலுக்குப் பிறகு ஊர் மக்கள் உப்பளம் தொழிலையே நம்பினர். உப்புக் கம்பெனிக்கு வேலைக்குச் சென்றனர். சுந்தராம்பாளும் மகள்களும் காட்டு வேலைக்கே சென்றனர். சிறிது காலம் பலாப்பழம் விற்று பிழைத்தனர்.

வடிவாம்பாளின் பிடிவாதத்தால் நெல் பயரிட்டனர். சில மாதங்களில் மழை பெய்யத் துவங்கியது போன வருடம் போல புயல் வரும் என்று ஊர் மக்கள் ஊரை விட்டு வெளியே சென்றனர். இந்த முறையும் வடிவு கூறி வீணாக போனதை எண்ணி வருந்தினான் மழை நின்றபின் ஊருக்குத் திரும்பினர். அப்போது கணேசன் வந்து பார்த்துவிட்டு சென்றார். ஊர் மக்கள் பலர் ஊரை விட்டு வேறு ஊர் சென்றனர். சுந்தராம்பாளும், மகள்களும் உப்பளம் செனறு வேலை செய்ய ஆரம்பித்தனர். அதில வரும் பணத்தைக் கொண்டு ஒரு வேலை உணவு உண்டு வந்தனர்.

சில நாட்களுக்குப் பிறகு கணேசன் வந்தார் வடிவிற்கு மாப்பிள்ளை பார்த்திருந்தார். மாப்பிள்ளை வீட்டில் ஒப்புக் கொண்டனர். அதன் பிறகு இரண்டாவது மகள் இராசாம்பாளையும் பெண் கேட்டு வந்தனர். இருவரின் திருமணமும் முடிந்தது. வடிவை பொண்ணையன் நன்றாகப் பார்த்துக் கொண்டாள். ஒரு மாதம் ஆனது வடிவிற்குத் தன் அம்மாவையும், தங்கையும் பார்க்க வேண்டும் போல் இருந்தது. பொன்னையன் அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தான்.

திடீரென்று பொன்னையன் மண்டையில் தேங்காய் விழுந்தது. ஒரு மாதம் பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தான். பின் இறந்தான். பொன்னையன் இறந்த பிறகு வடிவை வீட்டை விட்டு துரத்தினர். வடிவு கண்ணீருடன் அவர்களிடம் கெஞ்சினாள். ஆனால் அவளை வீட்டை விட்டு விரட்டினர்.

ராசம்பாள் வேதப்பனுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தாள். அவ்வப்போது இருவரும் வந்து வீட்டிற்கு வேண்டியதைச் செய்து விட்டு ஆறுதல் கூறிச் செல்வர். பூச்சி ஊரைவிட்டு சென்ற பிறகும் அவ்வபோது வருவான். ஐஞ்சாம்பாள் சென்று குளக்கரையில் சென்று சந்திப்பாள். பூச்சியின் அப்பா விசக்கடியால்

இறந்துவிட பூச்சியின் அண்ணன் திருமணம் முடிந்து பூச்சியும் அம்மாவும் அவ்வூருக்கே வந்தனர். ஒவ்வொரு ஊருக்கும் தனியாக அளம் இருந்தது அதனைச் சரிசெய்து அங்கு பூச்சியும் அவ்வூர் ஆண்களும் தனக்கென ஒரு இடம் பிடித்து வேலை செய்தனர். சுந்தராம்பாள் குப்புசாமியின் அளத்தில் வேலை செய்தாள். திடிரென்று குப்புசாமி உடல்நிலை சரியில்லாததால் அளத்தை விற்க முடிவு செய்தார். சுந்தராம்பாள் வடிவின் பேச்சை கேட்டு கணேசனிடம் கூறி அளத்தை வாங்கினாள்.

வேதப்பன், கணேசன் வீட்டிற்குச் சென்று வடிவிற்கு இரண்டாவது திருமணம் செய்வது பற்றி கூறினான் முதலில் ஒப்புக்கொள்ளாத கணேசன் பின் ஒரு மனதாக ஒப்புக் கொண்டான். சுந்தராம்பாளிடமும், வடிவிடமும் இது பற்றி பேசினர். வடிவு ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு வழி மிரட்டி ஒப்புக் கொள்ள வைத்தனர். திருமணமும் முடிந்தது. வடிவின் கணவனான முத்தையனுக்கு வலிப்பு இருந்தது கட்டாய கல்யாணம் என்பதால் வடிவு யாரிடமும் பேசுவதில்லை.

ராசாம்பாளுக்கு மூனறு குழந்தை பிறந்தது. முதலில் இரண்டு பெண்பிள்ளைகள் மூன்றாவது ஆண்பிள்ளை பிறந்திருக்கிறது என்ற செய்தியைக் கேட்ட சுந்தராம்பாள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடினாள் பிள்ளையைச் சென்று பார்த்துவிட்டு வந்தாள். வரும் போது மூத்த பிள்ளைகள் இருவரையும் உடன் அழைத்து வந்துவிட்டாள்.

வடிவு சிறிது சிறிதாக முத்தையனிடம் பேச ஆரம்பித்தாள். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழத் தொடங்கினார்கள். ஒரு நாள் அளத்தில வேலை முடித்து விட்டு சுந்தராம்பாளும், ஐஞ்சாம்பாளும் வீட்டிற்கு வந்தனர். வீடு திறந்திருப்பதைப் பார்த்து யார் வீட்டிற்கு வந்துள்ளனர் என்று ஆர்வத்துடன் வந்து பார்த்தனர். ராசாம்பாள் தன் குழந்தையுடன் வீட்டில் இருந்தாள். ராசாம்பாள் அவர்களைப் பார்த்தவுடன் அழத்தொடங்கினாள். நான் திரும்ப அங்கே செல்லப்போவதில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டாள். இருவரும் அதிர்ந்து போயினர். வேதப்பன் புதிதாக ஒரு வீடு கட்டி அங்கு ராசாம்பாளுக்குத் தெரியாமல் ஒரு பெண்ணுடன் வாழ்நது வந்திருக்கிறார்.

இதை ராசரம்பாள் கண்ணாலேயே கண்டிருக்கிறார். வேதப்பனிடம் கேட்ட போது வேலைக்கு வேண்டுமென்று அழைத்து வந்தேன் என்றிருக்கிறார். இதனைத் தாங்க முடியாமல் தாலியை அறுத்து கோயில் உண்டியலில் போட்டுவிட்டு வந்துவிட்டேன் என்று கூறி முடித்ததும் சுந்தராம்பாள் அழத்தொடங்கினாள் தன் இரண்டாவது மகளுக்கும் இந்தநிலை வந்ததை எண்ணி மிகவும் வருந்தினாள்.

வடிவும் முத்தையனும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்ந்தனர். முத்தய்யனுக்கு வலிப்பு இருப்பதால் தண்ணீருக்குள் விடாமலேயே பார்த்து வந்தாள். ஒரு நாள் மாடு வீட்டைத்தேடி வந்து விட்டது. தண்ணீர் தாகத்தில் வந்து விட்டது என்று வடிவு நினைத்தாள். தண்ணீர் குடிக்காமல் இழுத்துக் கொண்டே சென்றது. வடிவாள் மாட்டை இழுத்து கட்ட முடியவில்லை. அது இழுத்த இழுப்பிற்கு சென்றாள். குலக்கரைக்கு அது இழுத்து சென்றது. முத்தய்யன் குலத்தில் ஒரு மாட்டை கழுவி கட்டியிருந்தான். முத்தய்யனை காணவில்லை. மாடு குலத்திற்கு ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது. வெகு நேரம் கழித்தே வடிவிற்கு புரிந்தது. வடிவு கத்திக் கூப்பாடு போட்டால் அங்கு வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் வந்தனர். வந்தவர்களுக்கு ஒரு வழியாகப் புரிந்தது. வடிவு அவர்கள் வருவதற்குள் மயங்கி விழுந்து விட்டாள் வெகு நேரம் குலத்தில் முத்தய்யனைத் தேடினர். பின பாசியில் மூழ்கியிருப்பதைப் பார்த்து கண்டுகொண்டனர். வடிவின் இரண்டாவது கணவனையும் இழந்தாள். இதை அறிந்து சுந்தராம்பாள் அடித்துக் கொண்டு அழுதாள். இருமகள்களின் வாழ்வும் முடிந்ததை எண்ணி எண்ண செய்வது என்று தெரியாமல் தவித்தாள்.

பூச்சி நல்ல வேலை செய்து வீடு கட்டினான். ஓரளவு பணம் இருந்தது. நல்ல நிலையில் இருந்தான். ஐஞ்சாம்பாளை திருமணம் செய்வது பற்றித் தன் தாயிடம் பேசினான் ஆனால் பூச்சியின் தாய் அந்த குடும்பமே கணவளை இழந்த குடும்பம் என்று மறுத்து விட்டாள். அதனால் திருமணம் வேண்டாம் என்று பூச்சி கூறி விட்டான். இதனால் ஐஞசாம்பாள் மீது பூச்சியின் தாய்க்கு கோபம் உண்டானது. ஊரில் அனைவரிடமும் சொல்லி சுந்தராம்பாளைத் திட்டினாள். நேரில் ஒரு முறை சுந்தராம்பாளைப் பார்த்துத் திட்டித்தீர்த்து

விட்டாள். இதை வந்து ஐஞசாம்பாளை கேட்டு வீட்டில் அடித்து விட்டாள். இவை அனைத்தும் பூச்சிக்குத் தெரிய வந்தது.

ஒரு நாள் சுந்தராம்பாளும், இரு மகள்களும் அதிகாலையில் எடுத்து அளத்திற்குச் சென்று விட்டனர். ஐஞ்சாம்பாளுக்குத் தூக்கம் வரவில்லை. எழுந்து கொண்டாள் தனது வேலையை முடித்து விட்டு அளத்திற்குச் செல்லலாம் என்றிருந்தாள். நிலவு வெளிச்சத்தில் யாரோ நிற்பது போல் இருந்தது. திரும்பிப் பார்த்தால் பூச்சி நின்றிருந்தான். ஐஞ்சாம்பாளிடம் பூச்சி வா ஊரை விட்டு போய்விடலாம் என்று அழைத்தான். ஐஞ்சாம்பாள் ஒரு வார்த்தையும் பேசாமல் தூங்கிக் கொண்டிருந்த குழந்தையை எடுத்துக் கொண்டு அளத்திற்குச் சென்று விட்டாள்.

## 14.7. தலைப்புப் பொருத்தம்

அளம் என்பது உப்பளம். உப்பு விளையும் களம் எனப்படும். கடல் சார்நத பூமியில் உப்பு விற்பனை நடைபெறும் இடம் அளம் என்பதை களர்நிலம், செறிவு என்றும் குறிக்கப்படும். அளம் என்னும் நாவலில் உப்பளம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கடலோர மக்கள் உப்பு விளையும் களத்தில் தன் தொழிலைச் செய்கின்றனர். உப்பு விளையும் களத்தில் கதை பயணிப்பதால் இக்கதைக்கு அளம் என்னும் தலைப்புப் பொருந்தும்.

## 14.8. கதாப்பாத்திரங்கள்

### 14.8.1. முதன்மை கதாப்பாத்திரங்கள்

சுந்தராம்பாள்

வடிவம்பாள்

ராசாம்பாள்

ஐஞ்சாம்பாள்

### 14.8.2. துணைமை கதாப்பாத்திரங்கள்

கணேசன்

முத்தப்பன்

வேதப்பன்

அருணாச்சலம்

## 14.9. சமுதாயச் சிந்தனைகள்

ஒரு குடும்பத்தில் கணவன் இல்லாத ஒரு பெண் தன் மூன்று மகள்களையும் வளர்க்கப்படும் கஷ்டங்களையும், அந்த பெண்கள் ஒரு வேலை உணவுக்காகத் திண்டாடும் நிலையையும், கடலோர மக்கள் படும் துயரங்களையும் இக்கதை மூலம் சமுதாயத்தில் பெண்களின் துயரம் குறித்தும் கணவனை இழந்த பெண்களின் நிலைக் குறித்தும் காட்டப்பட்டுள்ளது.

## 14.10. புராணச் செய்திகள்

கைலாய மலையில் நடைபெற்ற சிவன் பார்வதி திருமணம் குறித்த செய்தியும், அகத்தியரால் தென்திசையில் இருந்தே நேரலையாகப் பார்த்த காட்சியையும், இராமன் பாதம் குறித்த புராணச் செய்தியும் நொண்டி வீரனின் சிறப்பும் இக்கதையில் கூறப்பட்டுள்ளது.

**தொகுத்துக்காண்போம்**

- கதைப் பொருள், நிகழ்வுப் பின்னல், கதை சொலல்லும் முறையினை அறிந்து கொண்டீர்கள்
- சிறுகதை உத்திகள் குறித்துத் தெரிந்து கொண்டீர்கள்
- புதின உத்திகள் குறித்துப் புரிந்து கொண்டீர்கள்
- சமூகக் கதைகள் பற்றி உணர்ந்து கொண்டீர்கள்

**முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்கள்**

1. 'திருஷ்டிப் பரிகாரம்' கதைத் தலைப்பு எதனைக் குறிக்கிறது?

   ________________________________________

2. 'அம்பை' எத்தகைய படைப்புகளை வழங்கிவருபவர்?

3. 'ஒரு வீட்டின் மூலையில் சமையலறை' கதையின் முக்கியப் பாத்திரங்கள் யாவர்?

4. 'காந்தியோடு பேசுவேன்' கூறும் காந்தியக் கருத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

5. 'அளம்' கதைக்களம் என்ன?

**பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்**

1. 'திருஷ்டிப் பரிகாரம்' கதைச் சுருக்கத்தினை விளக்குக.
2. 'ஒரு வீட்டின் மூலையில் சமையலறை' மையப்படுத்தும் கருப்பொருளை வரையறுக்க.
3. 'காந்தியோடு பேசுவேன்' வழி நீங்கள் அறிவது யாது?
4. 'அளம்' வழி அறியலாகும் உழைப்பாளன் வாழ்வு முறை எத்தகையது?
5. புனைகதை இலக்கியத்தின் வழி சமூக நடப்புகள் எவ்விதம் வெளிப்படுகின்றன?

**மேலும் பயில்வதற்கான நூல்கள்**

1. சு. தமிழ்ச்செல்வி, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் 2013.

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

**தொலைநிலைக் கல்வி இயக்கம்**

# பி.ஏ., (தமிழ்)

**முதற்பருவம்**

**இக்கால இலக்கியம்**

**மாதிரி வினாத்தாள் - 1**

**பகுதி – அ**

மதிப்பெண்:75

நேரம்: 3 மணி

(10 x 2 =20)

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.**

1. புதுமைப்பித்தனின் இரு படைப்புகளைக் குறிப்பிடுக.
2. ‘குயில்பாட்டு’ கூறும் பொருள் யாது?
3. பாரதிதாசன் தமிழை எவ்வாறு உணருகிறார்.
4. கண்ணதாசனின் மாங்கனி கூறும் வரலாற்றுச் செய்தியாது.
5. கவிஞர் மீரா பற்றி சிறுகுறிப்பு வரைக.
6. கைக்கூ கவிதை வடிவம் எத்தகையது.
7. புகழ்பெற்ற இரு சிறுகதைகளைக் கூறுக.
8. ‘ஞாயிற்றுக்கிழமைப் பள்ளிக்கூடம்’ கூறும் ஒரு கவிதையைக் கூறுக.
9. அகிலன் கண்ணன் பற்றிக் குறிப்பு வரைக.
10. ‘என் பண்டிகையின் நாட் குறிப்பிலிருந்து எக்கருத்தை வெளிப்படுத்துகிறது.

**பகுதி – ஆ**

(5x5=25)

**ஒரு பக்க அளவில் விடை தருக.**

11.(அ). பாரதியார் பற்றி குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் தமிழ் உணர்வு பற்றி எழுதுக.

12. (அ) கண்ணதாசனின் 'மாங்கனி' யில் அடலேறு பாத்திரம் பற்றிக் கூறுக.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதையின் அமைப்புப் பற்றி எடுத்துரைக்க.

13. (அ) கவிஞர் ஆ. வெண்ணிலாவின் யுத்தம் பற்றிக் கவிதை எதனைக் கூறுகிறது.

(அல்லது)

(ஆ) தேனம்மை லட்சுமணன்'சூலும் சூலமும்' கவிப் பொருளை எடுத்துரைக்க.

14. (அ) 'அய்க்கண்' பற்றிக் குறிப்பு வரைக

(அல்லது)

(ஆ) அம்பையின் 'ஒரு வீட்டின் சமையலறையில் ' கதையின் பெண்ணியச் சிந்தனைகள் பற்றி எடுத்து விளக்குக.

15. (அ) தங்கம் மூர்த்தி கவிதைகளில் கூறப்படும் கருத்துக்கள் என்ன?

(அல்லது)

(ஆ) 'நீ எழுத மறுக்கும் எனதழகு' கவிதையில் இளம்பிறை கூறுவது யாது?

**பகுதி - இ**

(3x10=30)

**எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.**

16. கட்டுரை வடிவில் அழகியலை விளக்குக.

17. பாரதிதாசனின் தமிழ் குறித்த கவிதைகள் பற்றி கட்டுரை வரைக.

18. கைக்கூ கவிதைகள் வழி சமூக நிலையைக் கூறுக.

19. 'காந்தியோடு பேசுவேன்' எடுத்துரைக்கும் பொருள் யாது?

20. இராஜம் கிருஷ்ணனின் பகுத்தறிவுக் கருத்துக்களை அவர்தம் சிறுகதை வழிநின்று விளக்குக.

**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**

**தொலைநிலைக் கல்வி இயக்கம்**

பி.ஏ., (தமிழ்) முதற்பருவம்

**இக்கால இலக்கியம்**

**மாதிரி வினாத்தாள் - 2**

**பகுதி – அ**

மதிப்பெண்:75

நேரம்: 3 மணி

(10 x 2 =20)

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்ததைகளில் விடையளிக்க.**

1. குயில் பாடிய காதல் பாடலை கூறுக.

2. பாரதியின் படைப்புகளின் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக.

3. மாங்கனியில் பயிலும் உவமை ஒன்றினை எடுத்துரைக்க.

4. தமிழக அரசின் முதல் பரிசுப் பெற்ற மு. மேத்தாவின் நூல் எது?

5. கைக்கூ கவிதை இரண்டினை எடுத்துரைக்க.

6. சிறுகதை என்றால் என்ன?

7. இராஜம் கிருஷ்ணனின் படைப்புகள் பெரும்பான்மையும் விளக்கும் கருத்து யாது?

8. எஸ். ராம கிருஷ்ணன் பற்றி குறிப்பு வரைக.

9. அம்பை எத்தகைய எழுத்தாளா?.

10. ‘ நீ எழுத மறுக்கும் எனதழகு’ கவிதை கூறும் கருத்து யாது?

**பகுதி – ஆ**

(5x5=25)

**ஒரு பக்க அளவில் விடை தருக.**

11. (அ). பாரதிதாசன் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ). பாரதியின் குயில் பாட்டு எக்கருத்தை வலியுறுத்துகிறது.

12. (அ) கண்ணதாசனின் மாங்கனியில் மாங்கனி பாத்திரம் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் அமைப்பு பற்றி எடுத்துரைக்க.

13. (அ) கவிஞர் மீரா பற்றி குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) கவிஞர் மு. மேத்தா பற்றி குறிப்பு வரைக.

14. (அ) கவிஞர் சீராளன் ஜெயந்தன் கூறும் இடைவேளை கவிதை எப்பொருளை கூறுகிறது?

(அல்லது)

(ஆ) இன்னொரு காந்திக்காக நாடகத்தின் மையப் பொருள் யாது?

15. (அ) வண்ணதாசன் சிறுகதைகளில் சொல்லப்படும் கருத்துக்கள் யாவை?

(அல்லது)

(ஆ) வ. சுப. மாணிக்கனாரின் கவிதைத்திறன் பற்றி எழுதுக.



**பகுதி - இ**

(3x10=30)

**ஏதேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.**

16. குயில் பாட்டு கூறும் தத்துவக் கருத்துகளை கூறுக.

17. மீராவின் ஊசிகள் கவிதைகள் குறித்து கட்டுரை வரைக.

18. புதுமைப்பித்தனின் பொன்னகரம் கதை விளக்கும் சமூக அவலத்தை எடுத்துரைக்க.

19. சு. தமிழ்ச்செல்வியின் 'அளம்' புதினத்தின் கட்டமைப்பினை விளக்குக.

20. இராஜம் கிருஷ்ணனின் 'களம்' வழி அறியலாகும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.